

ராஜீவ்காந்தி படுகொலை

# தூக்குக் கயிற்றில் நிஜம்

திருச்சி வேலுசாமி

தொகுப்பு: பா. ஏகலைவன்

யாழ் பதிப்பகம்

# தூக்குக் கயிற்றில் நிஜம்

## ராஜீவ்காந்தி படுகொலை

திருச்சி வேலுசாமி
தொகுப்பு: பா.ஏகலைவன்

**யாழ் பதிப்பகம்**

ராஜீவ்காந்தி படுகொலை

# தூக்குக் கயிற்றில் நிஜம்

**திருச்சி வேலுசாமி**

தொகுப்பு: **பா. ஏகலைவன்**

யாழ் பதிப்பகம்

எண்: 10/61, 7வது தெரு, கம்பர் நகர்,
கொளத்தூர், சென்னை-600 082

பேச: 893989913
yaazhpathippakam@gmail.com

# எச்சரிக்கை

**தமிழின அழிப்பின் பின்னணிச் சதியைக் கடக்க இருக்கிறோம்... கவனம்...**


எச்சரிக்கை
தமிழின அழிப்பின்
பின்னணிச் சதியைக்
கடக்க இருக்கிறோம்...
கவனம்...



பதிப்புரிமை © 2020 திருச்சி வேலுசாமி

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

இந்தப் புத்தகத்தின் எந்தப் பகுதியையும் வெளியீட்டாளரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி மறுஉருவாக்கம் செய்யவோ, அல்லது மீட்டெடுக்கும் முறைமையில் சேமிக்கவோ அல்லது வேறு ஏதேனும் வடிவம் அல்லது வகையில் மின்னணு, இயந்திரம், புகைப்பட நகலிடல், பதிவு செய்தல் மூலமாகவோ அல்லது வேறுவிதமாக அனுப்பவோக்கூடாது.

ராஜீவ் படுகொலை: தூக்குக் கயிற்றில் நிஜம்

திருச்சி வேலுசாமி
தொகுப்பு: பா. ஏகலைவன்

**பதிப்பாளர்:** பா. ஏகலைவன்

**வெளியீடு:** யாழ் பதிப்பகம்
எண்: 10/61, 7வது தெரு, கம்பர் நகர்,
கொளத்தூர், சென்னை-82.
yaazhpathippakam@gmail.com,
Mobile: 8939899113

**வடிவமைப்பு:** இரா. செந்தில் குமார், ரெட்டிக் சொலியூசன்ஸ், சென்னை-600 044

*தன் இறுதி மூச்சு அடங்கும்வரை என் நினைவுகளையே சுவாசமாக நினைத்து வாழ்ந்து மறைந்த என் தாய் மாமன் ஜே.கே. ராமசாமி அவர்களுக்கு...*

# உள்ளடக்கங்கள்


தலைப்புப் பக்கம்

எச்சரிக்கை

பதிப்புரிமை

அர்ப்பணிப்பு

அணிந்துரை

திறவாத விழிகளையும் திறக்க வைக்கும்..!

எண்ணற்ற வினாக்களை எழுப்பும் மதிப்புமிக்க நூல்!

நிஜங்களின் அணிவகுப்புகளாக...

என்னுரை

சதிவலையை அறுத்தெறிவோம்!

தொகுப்புரை

இரத்தமும் சதையுமான வரலாற்றுப் பதிவு இது!

விடை தேடுவதற்கு முன்பாக

எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு...

என்னைச் சந்தித்த கருணாநிதியின் ஆள்...

ஜெயலலிதாவின் திருப்புமுனை...

கருணாநிதிக்கு அதிர்ச்சி வைத்தியம்

பெருந்தலைவரின் ஜனநாயகப் பண்பு...

தி.மு.க. ஆட்சி டிஸ்மிஸ்...

நவீன கண்ணன் அவதாரம்...

1991 மே-19 அந்த நாள்...

1991 மே-20 காத்திருந்த அதிர்ச்சி

1991 மே-21 காலைவேளை...

தேசமே அதிர்ந்த மரணம்...

உறைந்து நின்ற அந்த நிமிடங்கள்...

செத்து பிழைத்த தா.பாண்டியன்...

என்னை நான் மறந்தேன்...

ஜெயலலிதாவை ஒழிக்க சதி...

வாழப்பாடி ராமமூர்த்தி.. நீயுமா..?

சி.பி.ஐ.யின் விசாரனைப் போக்கு...

மீண்டும் ஜெயலலிதா சந்திப்பு...

சோனியா காந்தியைச் சந்தித்தேன்...

என் மனு மீதான விசாரணை..

முகத்திரை கிழிந்து தொங்கியது...

இடைக்கால அறிக்கையும் எரிச்சலும்...

இது அதிமுக்கிய இரகசியம்...

மிரட்டிய அட்டைக்கத்தி விசாரணை...

உயிரைத் திருப்பித் தருமா உச்ச நீதிமன்றம்?

தகிக்கும் பொய்கள், தவிக்கும் உண்மைகள்!

முன்னாள் மத்திய அமைச்சர் பிரபு...

கம்யூனிஸ்டுகளின் பெருந்தன்மை...

மறக்க முடியாத மனிதர்..

டெல்லியில் இருந்து வைகோ!

நேர்மைக்கும் உண்மைக்கும் மிரட்டல்!

யார் இந்த சந்திராசாமி?

யார் இந்த சுப்ரமணியசாமி?

வாழப்பாடி ராமமூர்த்தி?

எம்.கே. நாராயணன்?

வாய்மையை வென்ற கார்த்திகேயன்?

இறுதியாக ஒன்று!

ஆசிரியர் அறிமுகம்

# அணிந்துரை

# திறவாத விழிகளையும் திறக்க வைக்கும்..!



'ராஜீவ் படுகொலை: தூக்குக் கயிற்றில் நிஜம்'என்னும் தலைப்பில் நண்பர் திருச்சி வேலுசாமி எழுதியுள்ள நூல், தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தப்போகும் நூலாகும். ஏற்கெனவே தமிழகமெங்கும் பல நூறு கூட்டங்களில் அவர் தெரிவித்த உண்மைகளையே இப்போது நூலாக பதிவு செய்திருக்கிறார்.

ராஜீவ் படுகொலையில் பல உண்மைகள் மறைக்கப் பட்டுள்ளன. இந்தக் கொலையின் பின்னணியில் இருந்த சதிகாரர்கள் இன்னமும் நாட்டில் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். நீதி, நேர்மை, உண்மை ஆகியவை முற்றிலுமாக மறைக்கப் பட்டுவிட்டன. ராஜீவ் கொலை வழக்கு புலன்விசாரணையில் தொடங்கி, வழக்கு நடத்தப்பட்ட விதமும் தீர்ப்பு அளிக்கப்பட்ட வரையிலும் பல உண்மைகள் ஆழக்குழித்தோண்டி புதைக்கப்பட்டுள்ளன. தேசத் தந்தை மகாத்மா காந்தி அவர்களின் கொலை வழக்கு விசாரணையும் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி கொலைவழக்கு விசாரணையும் பகிரங்கமாகத்தான் நடத்தப்பட்டன. ஆனால், ராஜீவ் கொலை வழக்கு விசாரணை தடா நீதிமன்றத்தில் நடத்தப்பட்டபோது இரகசியமாக நடத்தப்பட்டது. அது பற்றிய விவரங்கள் நாட்டு மக்களுக்குத் தெரியாமல் மறைக்கப்பட்டன. உண்மைக் குற்றவாளிகளை மறைக்கும் நோக்கத்தில்தான் தொடக்கத்திலிருந்து எல்லாமே நடத்தப்பட்டன.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தாக்கம் தமிழகத்தில் பரவிவிடாமல் தடுக்கும் கருவியாக ராஜீவ் கொலை வழக்கை தில்லி பயன்படுத்தியது. அதனால்தான் இந்தக் கொலை வழக்கில் குற்றம்

சாட்டப்பட்ட **26** பேரில் **13** பேர் தமிழ்நாட்டுத் தமிழர். **13** பேர் ஈழத் தமிழர்கள். சரிசமமான எண்ணிக்கை என்பது தற்செயலானது அல்ல. ஆழமான உள்நோக்கத்துடன் இவ்வாறு செய்யப்பட்டது. வளர்ந்து வரும் தமிழ்த் தேசிய உணர்வைச் சிதைப்பதற்காக இந்தச் சதி வகுக்கப்பட்டது. இந்த உள்நோக்கத்துடனே சி.பி.ஐ. சிறப்பு புலனாய்வுக்குழு தனது புலன்விசாரணையை நடத்தியது.

அகில இந்திய ஜனதா கட்சியின் தலைவர் சுப்ரமணியசாமி. அகில இந்திய செயலாளராக திருச்சி வேலுசாமி பதவி வகித்தார். சுப்ரமணியசாமி தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்யும் போதெல்லாம் உடன் பயணம் செய்பவர் வேலுசாமி ஆவார். சு.சாமியின் நம்பிக்கைக்குரிய மிகநெருங்கிய தோழராகத் திகழ்ந்தார்.

**1991** மே **21** ஆம் தேதி ராஜீவ் படுகொலை செய்யப்பட்ட நாளிலும், அதற்கு முன்பாக **2** நாட்களும் தமிழ்நாட்டில் சுப்ரமணியசாமி சுற்றுப்பயணம் செய்தார். அப்போது அவர் நடந்துகொண்ட விதம், பேசிய பேச்சுக்கள் உடனிருந்த வேலுச்சாமியின் உள் மனதில் சந்தேக அலைகளை எழுப்புகின்றன. அதுபற்றி விரிவாக இந்நூலில் அவர் பதிவு செய்திருக்கிறார். பிறகு நன்கு விசாரித்து சுப்ரமணியசாமிக்கு இந்தக் கொலையில் தொடர்பிருப்பதை அறிந்துகொண்ட வேலுசாமி முதலில் திடுக்கிட்ட போதிலும் உண்மைக் குற்றவாளிகளை அம்பலப்படுத்த வேண்டும் என முடிவு செய்து ஜெயின் கமிசன் முன் அறிக்கை அளிக்கிறார். சோனியா காந்தியைச் சந்தித்துத் தானறிந்த உண்மைகளைக் கூறுகிறார்.

தனது உயிரைப் பற்றி கவலைப்படாமல் தான் கண்டறிந்த உண்மைகளைத் தமிழ்நாடெங்கும் கூட்டங்கள் போட்டுக் கூறுகிறார்.

இடையில் மிரட்டல்கள், உருட்டல்கள், ஆசை வார்த்தைகளைச் சந்திக்க நேர்ந்த போதிலும், அஞ்சாமல் தனது பணிகளைத் தொடர்கிறார். சந்திராசாமி, சுப்ரமணியசாமி ஆகியோர் மீது பகிரங்கமாக அவர் குற்றம் சாட்டியும்கூட புலன் விசாரணைக் குழுவினர் அவற்றைச் சட்டை செய்யாமல் புலிகளை மையமாகக் கொண்டே செயல்பட்டனர்.

*உலகம் உண்மையை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் செயல்பட்ட விதத்தை, நூல் நெடுகிலும் வேலுசாமி விவரிக்கிறார். யாருக்கும் அஞ்சாமல் யாருக்கும்*

*விலை போகாமல் அவர் ஆற்றிய பணி பாராட்டுக்குறியது. வேலுசாமி விடுத்த அடுக்கடுக்கான கேள்விகளுக்கு விடை இன்னமும் கிடைத்தபாடில்லை.*

அதுமட்டுமல்ல, ராஜீவ் கொலை குறித்த பல கேள்விகளுக்கும் விடை அளிக்கப்படவில்லை. அவற்றுள் சில:

1. ராஜீவ் கொலை குறித்து விசாரிப்பதற்காக, நீதிபதி ஜே.எஸ்.வர்மா தலைமையில் விசாரணைக் குழு ஒன்றை அப்போதைய பிரதமர் சந்திரசேகர் ஆட்சி அமைத்தது. ராஜீவ்காந்திக்குச் செய்யப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் குறை இருந்ததா? என்பதைப் பற்றித்தான் இந்த கமிசன் விசாரிக்கும் என்றும் இந்தக் கொலைக்கான சதியின் பின்னணி குறித்து கமிசன் ஆராயாது என்றும் திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டது. இந்த வரம்புக்கு உட்பட்டு விசாரணை நடத்திய ஜே.எஸ்.வர்மா தனது அறிக்கையை 1992-ம் ஆண்டு சூன் மாதம் மத்திய அரசிடம் அளித்தார். ஆனால் ஐந்தாண்டு காலமாக இந்த கமிசன் அளித்தப் பரிந்துரைகள் எதுவும் அமலாக்கப் படவில்லை. ஆனால் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பின் காரணமாக இந்தப் பரிந்துரைகளை செயல்படுத்த வேண்டிய கட்டாயம் பிரதமர் நரசிம்மராவ் அரசுக்கு ஏற்பட்டது. சில மூத்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கமிசன் செய்த முக்கியமான பரிந்துரை குறிப்பிடத்தக்கதாகும்.

முன்னாள் அமைச்சரவைச் செயலாளர் வினோத் பாண்டே, உளவுத்துறை தலைவர் எம்.கே. நாராயணன், உள்துறைச் செயலாளர் சிரோன்மணி சர்மா, பாதுகாப்புச் செயலாளர் ஜி.எஸ். வாஜ்பாய் ஆகியோர் மீது எப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொன்னால், இந்த நால்வரும் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகே இவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டது. உடனடியாக அந்த நான்கு பேரும் மத்திய நிர்வாக மன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். ஓய்வு பெற்ற பிறகு அவர்களிடம் விளக்கம் கேட்பது முறையற்றது என அது ஆணையிட்டது. இதன் மூலம் மேற்கண்ட அதிகாரிகள் திட்டமிட்டு பாதுகாக்கப்பட்டனர். இதன் பின்னணியில் இருந்த சூத்ரதாரிகள் யார்? இந்தக் கேள்விக்கு இதுவரை விடையளிக்கப் படவில்லை.

2. ராஜீவ் காந்தியின் உயிருக்கு ஆபத்து வரக்கூடும் என்பதை முன்கூட்டியே உணர்ந்து எச்சரிக்கை செய்திருந்தார் பாலஸ்தீன விடுதலை

இயக்கத்தின் தலைவர் யாசர் அராபத். கொலை நடப்பதற்கு நான்கு மாதங்களுக்கு முன்பே, யாசர் அராபத்தின் பிரதிநிதி ராஜீவைச் சந்தித்து சுட்டிக்காட்டி எச்சரித்தார். ஆனால் புலன்விசாரணைக் குழு யாசர் அராபத்தைச் சந்தித்து, எந்த அடிப்படையில் அவர் எச்சரிக்கைச் செய்தார் என இறுதிவரை விசாரிக்கவேயில்லை. இது ஏன்?

**3.** ராஜீவ் கொலை பின்னணி குறித்து விசாரிப்பதற்கு அமைக்கப்பட்ட நீதிபதி ஜெயின் கமிசன் முன் ஆஜராகும்படி தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கி.வீரமணி, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, கோவை கு.ராமகிருட்டிணன் ஆகியோர் அழைக்கப்பட்டனர். ஆனால் ஜெயின் கமிசன் தனது இடைக்கால அறிக்கையை அளித்த பிறகு இவர்களை கமிசன் அழைத்தது என்பது மட்டுமல்ல, இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணை மட்டும் இரகசிய விசாரணையாக நடத்தப்பட்டது. ஏனெனில் இந்த நால்வரும் புலிகளின் ஆதரவாளர்கள். எனவே இவர்கள் கூறும் தகவல்கள் வெளியில் தெரிந்துவிடக்கூடாது என்பதற்காக இரகசிய விசாரணை என்று திட்டமிட்டுச் செய்தார்கள்.

**4.** இந்திராகாந்தி கொலை குறித்து விசாரிப்பதற்கு அமைக்கப்பட்ட தக்கர் கமிசன் தனது அறிக்கையில், இந்திரா கொலையில் அவர்களது இல்லத்துக்குள்ளேயே சதிகள் உருவாக்கப்பட்டன. இக்கொலையில் இந்திராவின் தனி உதவியாளர் ஆர்.கே. தவான் மீது சந்தேகம் எழுகிறது. இவரையும் விசாரணைக்குட்படுத்த வேண்டும் என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளது. ஆனால் தவான் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது ஏன்? இந்திராவின் அலுவலகத்தில் சாதாரண வேலையில் இருந்த ஆர்.கே. தவான், இந்திராவின் மறைவுக்குப் பிறகு காங்கிரஸ் தலைவராக திடீரென்று உயர்ந்தது எப்படி? சீதாராம் கேசரி காங்கிரஸ் தலைவராக இருந்த போது காங்கிரஸ் பொதுச் செயலாளர்களில் ஒருவராகவும், காங்கிரஸ் செயற்குழு உறுப்பினராகவும் ஆர்.கே. தவான் நியமிக்கப்பட்டார். 1998-ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில், தில்லி தொகுதி ஒன்றில் போட்டியிடுவதற்கு காங்கிரஸ் வேட்பாளராகவும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த அளவுக்கு அவர் செல்வாக்குப் பெற்றதற்கு யார் காரணம்? சோனியாவின் தயவினால்தான் இவருக்குப் பெரும் பதவிகள் கிடைத்தன. தனது மாமியின் படுகொலையில் சம்பந்தப்பட்டவர் என்று குற்றம் சாட்டப்பட்டவருக்கு சோனியா உதவி செய்ததின் மர்மம் என்ன?

இந்திராவின் இல்லத்திற்குள்ளேயே சதிகள் உருவாக்கப்பட்டன என தக்கர் கமிசன் சாட்டிய குற்றச்சாட்டின் பின்னணி என்ன? இந்திரா குடும்பத்தைச் சேர்ந்த சிலரே இக்கொலையில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பது அதன் பொருள். இந்திரா குடும்பத்தில் ராஜீவ்காந்தி, சோனியா, சஞ்சய் காந்தியின் மனைவியான மேனகா ஆகிய மூவரும் இருந்தனர். இந்திரா உயிரோடு இருந்த காலத்திலேயே அவருடைய வெறுப்புக்கு ஆளாகி மேனகா வெளியேற்றப்பட்டார். எஞ்சியுள்ள ராஜீவ், சோனியா ஆகிய இருவரோ இருவரில் ஒருவரோ இந்தச் சதியில் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். அப்படிச் சம்பந்தப்பட்டவர் யார் என்பது? ஆர்,கே,தவானுக்கு முழுமையாக தெரிந்திருக்க வேண்டும். அல்லது இந்தச் சூழ்ச்சியில் அவருக்கும் பங்கு இருக்க வேண்டும்? கொலைச் சதியில் குற்றம் சாட்டப்பட்டவர் அதிலிருந்து மீளுவதற்கும்., காங்கிரஸ் கட்சியில் பெரும் பதவிகளை அடுக்கடுக்காக வழங்கியும் உதவவேண்டிய கட்டாயம் என்ன? உதவாவிட்டால் சூழ்ச்சிகள் அம்பலமாகிவிடும் என்ற அச்சம் காரணமா? இந்தக் கேள்விகளுக்கு இதுவரையில் விடை இல்லை.

5. பிரதமர் நரசிம்மராவின் அலுவலகத்திலிருந்து முக்கியமான கோப்புகள் மறைக்கப்பட்டு அழிக்கப்பட்டன என புது தில்லியில் இருந்து வெளிவரும் அவுட்லுக் வார ஏடு (24.11.97) ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டியது. காணாமல் போன கோப்புகளில் என்ன இருந்தது? ராஜீவ் கொலை நடந்த அன்று சந்திராசாமியும் சுப்ரமணியசாமியும் எங்கே போனார்கள் என்ன செய்தார்கள் என்ற விவரங்கள் இருந்தன. கொலையாளிகளுக்குத் தேவையான பணத்தை சந்திராசாமியே கொடுத்தார் என்பதற்கான ஆவணங்கள் இருந்தன என அவுட்லுக் ஏடு குற்றம் சாட்டியது. இதற்கு அரசுத்தரப்பில் இருந்து இதுவரை எவ்வித மறுப்பும் தெரிவிக்கப்படவில்லை. இது ஏன்?

6. திருப்பெரும்புதூர் கூட்டத்திற்கு ராஜீவ்காந்தியை கட்டாயப்படுத்தி வரவழைத்த மரகதம் சந்திரசேகர் குறித்து பல புகார்கள் எழுந்தன. எத்தகைய சூழலில் ராஜீவை இக்கூட்டத்திற்கு அவர் வரவழைத்தார் என்பது குறித்தோ அல்லது இந்தப் படுகொலை குறித்தோ மரகதம் சந்திரசேகரிடம் இதுவரை சிறப்புப் புலனாய்வுக்குழு விசாரணை நடத்தாதது ஏன்?

7. இலங்கை அதிபராக இருந்த பிரேமதாசாவுக்கு ராஜீவ் கொலை வழக்கில் பங்கு இருக்கலாம் என்ற குற்றச்சாட்டு எழுந்தபோது, இந்தக் கோணத்தில் புலன் விசாரணை நடத்தப்படாதது ஏன்? என்ற கேள்வி

எழுகிறது. சிங்களத் தலைவர்களான காமினி திசநாயகா, அதுலத் முதலி, விக்கிரமசிங்கே போன்றவர்கள் படுகொலை செய்யப்பட்டதன் பின்னணியில் பிரேமதாசா இருந்தார் என்பது பின்னர் நிரூபிக்கப்பட்டது. இந்தியப் படையைத் திரும்பப் பெறுவதற்கு ராஜீவ் மறுத்த காரணத்தினால் கடுங்கோபம் அடைந்திருந்த பிரேமதாசா ஏன் இந்தக் கொலையை செய்திருக்கக்கூடாது என்ற கேள்விக்குரிய பதிலை புலன் விசாரணைக்குழு அறிவதற்கு எத்தகைய முயற்சியும் செய்யாதது ஏன்?

**8.** ராஜீவ் கொலை வழக்கு விசாரணை தொடர்பாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட சி.பி.ஐ. அதிகாரியான ஸ்ரீகுமார் என்பவர், இலண்டன் வழியாக இந்தியா திரும்பும்போது லண்டன் ஹீத்திரு விமான நிலையத்தில், இந்த வழக்குத் தொடர்பான கோப்புகள் அடங்கிய அவரது கைப்பெட்டி காணாமல் போய்விட்டதாக அந்த விமான நிலைய காவல் நிலையத்தில் ஒரு புகாரைப் பதிவு செய்துவிட்டு இந்தியா திரும்பிவிட்டார். முக்கியக் கோப்புகளைத் தொலைத்த அந்த அதிகாரி மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? காணாமல் போன கோப்புகளை திரும்பப்பெற ஏன் மேற்கொண்டு முயற்சிகள் எடுக்கப்படவில்லை? இந்தக் கேள்விகளுக்கு இதுவரை விடையில்லை.

இதுபோன்ற பல உண்மையான சந்தேகங்களுக்கு, அரசுத் தரப்பிலிருந்தோ அல்லது சி.பி.ஐ. தரப்பிலிருந்தோ எத்தகைய விளக்கமும் அளிக்கப்படவில்லை. புலன் விசாரணையின் தொடக்கக் கட்டத்திலிருந்தே விடுதலைப் புலிகள்தான் இந்தக் கொலையைச் செய்தவர்கள் என தீர்மானித்துக்கொண்டு அந்த அடிப்படையில் விசாரணையும் பிறகு வழக்கும் நடத்தப்பட்டதே தவிர உண்மையை அறியும் நோக்கத்தில் நடத்தப்படவில்லை.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் தடா நீதிமன்றத்தில் அவர்களது வழக்கறிஞர்கள் எழுப்பிய கேள்விகளுக்குச் சரியான பதில் கூற முடியாமல் சி.பி.ஐ. தரப்பு திணறிய விவரங்கள் வெளிவராமல் மறைக்கப்பட்டன. இதற்காகத்தான் இந்த விசாரணை இரகசியமாக நடத்தப்பட்டது.

**26** பேரின் வழக்கை உச்சநீதிமன்றம் எடுத்துச்சென்று நடத்திய குழுவின் தலைவர் என்ற முறையில், நான் இதைக் கூறுகிறேன். தடாச்சட்டத்தின் அடிப்படையில் இந்த வழக்கு தொடுக்கப்பட்டது செல்லாது என எங்கள் தரப்பு வழக்கறிஞர் என்.நடராஜன் வாதாடியபோது **3** நீதிபதிகளும் திகைப்புடன் அவர் கூறியதற்குச் செவிமடுத்தார்கள்.

சி.பி.ஐ. தரப்போ பதறியது. இறுதியாக எங்கள் வழக்கறிஞரின் வாதம் வென்றது. தடா சட்டத்தின் அடிப்படையில் இந்த வழக்கு தொடுக்கப்பட்டது செல்லாது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும் 19 பேரை குற்றம் அற்றவர்கள் என விடுதலை செய்தது.

அப்படியானால், தடா சட்டத்தின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அளித்த ஒப்புதல் வாக்குமூலம் செல்லாததுதானே. அப்படி பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில்தானே மூவர் இன்னமும் தூக்கு மேடையின் நிழலில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள். (இப்போது ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது)

மேலே நான் குறிப்பிட்ட கேள்விகளுக்குரிய விடைகள் முழுமையாக வெளிவந்தால் இந்த மூவரும், இன்னும் ஆயுள் தண்டனை பெற்றிருக்கிற நான்கு பேரும் குற்றம் அற்றவர்களாக வெளிவரத்தானே செய்வார்கள்.

சி.பி.ஐ. புலன்விசாரணைக் குழுவின் தலைமை அதிகாரியாக செயல்பட்ட ராகோத்தமன் எழுதிய நூலில், புலன்விசாரணை உண்மையாகவும் முழுமையாகவும் நடைபெறவில்லை என ஒப்புக்கொண்டுள்ளாரே? அதற்கு முன்னால் அதே புலன்விசாரணைக் குழுவில் ஆய்வாளராகப் பணியாற்றிய மோகன்ராஜ் பல உண்மைகள் மறைக்கப்பட்டுவிட்டன என பகிரங்கமாகக் குற்றம்சாட்டிவிட்டு தனது பதவியில் இருந்து விலகினாரே? ஏன்? அடுக்கடுக்கான இந்த வினாக்களுக்கு இதுவரை விடை இல்லை.

மாணவர் காங்கிரசின் துடிப்புமிக்க இளைஞராக வேலுசாமி இயங்கிய காலத்திலிருந்து நான் அவரை அறிவேன். தலைவர் காமராசர் மீது அளவற்ற பக்தி கொண்டு அவரது தொண்டராக அன்றும் இன்றும் விளங்கி வருகிறார். அதனால்தான் உண்மைக்காக போராடும் துணிவும், சத்திய ஆவேசமும் அவரிடம் குடிகொண்டிருக்கின்றன. இந்த உணர்வுகளால் உந்தித் தள்ளப்பட்டு, தான் அறிந்த உண்மைகளை இந்நூலில் பதிவு செய்திருக்கிறார். இதற்காக அவரை மனமாறப் பாராட்டுகிறேன்.

சந்திராசாமிக்கும், சுப்ரமணியசாமிக்கும் ராஜீவ் படுகொலையில் நிச்சயமாக பங்கு உண்டு என்பதை பல்லாண்டு காலமாக ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டிவரும் நண்பர் வேலுசாமியின் இந்த நூல் திறவாத

விழிகளையும் திறக்க வைக்கும். சிந்திக்காதவர்களையும் சிந்திக்கவைக்கும் என நம்புகிறேன்.

- பழ. நெடுமாறன்

# எண்ணற்ற வினாக்களை எழுப்பும் மதிப்புமிக்க நூல்!



முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தி கொலை தமிழ்நாட்டின் அரசியலையும், ஈழத்தின் நம் சொந்தங்கள் நடத்திய நியாயமான, தீரமிக்க விடுதலைப் போராட்டத்தையும் பெரிதும் பாதித்த ஒரு நிகழ்வாகும். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமே இராஜீவ் காந்தியை கொல்வதற்கு சதித்திட்டம் தீட்டி, அதை இந்திய மண்ணில் நிறைவேற்றியது என்று இராஜீவ் கொலையை புலனாய்வு செய்த மத்திய புலனாய்வுக் கழகம் கூறியது, அதனை நீதிமன்றங்கள் ஏற்று தீர்ப்பும் அளித்தன. அதன் விளைவே நமது தம்பிகள் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோர் தூக்குக் கயிற்றை எதிர்நோக்கி கடந்த 21 ஆண்டுகளாக சிறைக்கொட்டடிகளில் வாடிக்கொண்டிருக்கின்றனர்.

இராஜீவ் காந்தியை உண்மையில் சதித்திட்டம் தீட்டி கொன்றவர்கள் யார்? ஏன் கொன்றார்கள்? அதனால் அவர்கள் அடைந்த இலாபம் என்ன? என்கிற கோணத்தில் சிந்தித்தவர்களுக்கெல்லாம் எட்டாத பல உண்மைகளை, தான் பெற்ற நேர்முகமான அனுபவங்களின் வாயிலாக, அன்றிலிருந்து இன்று வரை தமிழக மக்களிடம் துணிச்சலாக எடுத்துக் கூறி வருபவர் அண்ணன் திருச்சி வேலுசாமி அவர்கள்.

*இராஜீவ் காந்தியின் கொலை பற்றியும், அதன் பின்னுள்ள அரசியலைப் பற்றியும், சதியைப் பற்றியும் பேசுவதற்கே பலரும் அஞ்சிய காலகட்டத்தில், இராஜீவ் கொலையில் தொடர்புடைய சந்தேகத்திற்குரிய நபர்களின் முகங்களை தமிழ்நாட்டின் மக்கள் மன்றத்தில் தோலுரித்துக் காட்டியுள்ளார்.*

இராஜீவ் கொலையின் முக்கிய சூத்திரதாரிகளான சந்திராசாமி, அரசியல் தரகர் சுப்ரமணியசாமி ஆகியோரின் பங்கு பற்றி இந்தியாவின் பல நாளிதழ்களும் ஊடகங்களும் அவ்வப்போது எழுதினாலும், அண்ணன் வேலுசாமி மட்டுமே அதனை தொடர்ச்சியாக, உண்மையின் குரலாக மக்களிடம் பேசிவந்தார். ஜனதா கட்சியின் தலைவராகவும் மத்திய அமைச்சராகவும், இந்திய அரசியலில் சக்திமிக்க அரசியல்வாதியாகவும் திகழ்ந்த சுப்ரமணியசாமியுடன் நெருங்கிப் பழகி, அவருடைய நம்பிக்கையை பெற்றவராக இருந்தும், இராஜீவ் கொலையில் சாமிக்குத் தொடர்பு இருக்குமோ என்ற சந்தேகம் முளைவிட்ட நாள் முதல், அவருடன் தனக்கு இருந்த நெருக்கத்தைப் பயன்படுத்திக்கொண்டு, தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தை அண்ணன் வேலுசாமி விலை பேசியிருப்பாரேயானால், இன்றைக்கு வியத்தகு நிலையில் மிகுந்த அதிகாரமிக்க மத்திய அமைச்சராகவே உலா வந்திருப்பார். ஆனால், தனது வாழ்விற்கே அச்சுறுத்தலாகும் அளவிற்கு ஆபத்து நிறைந்த அந்தக் கொலைச் சதியைப் பற்றி, தான் அறிந்த உண்மைகள் அனைத்தையும் மக்கள் மத்தியில் சொல்வது என்று முடிவெடுத்து, தமிழ்நாட்டின் ஒவ்வொரு நகரமாகச் சென்று விரிவாக பேசியது மட்டுமின்றி, ஜெயின் ஆணையத்தின் முன் வாக்குமூலம் தாக்கல் செய்து உண்மையை உலகிற்குப் பறைசாற்றினார்.

ஜெயின் ஆணையத்தில் வேலுசாமி அவர்களின் வாக்குமூலமும் சுப்ரமணிய சுவாமியை அவர் குறுக்கு விசாரணை செய்ததும் அவருடைய வினாக்களுக்கு பதிலளிக்க முடியாமல், வியர்வை மழையில் சுப்ரமணியசாமி நனைந்து நின்றதும், இராஜீவ் கொலையில் சதித் திட்டம் தீட்டியவர்கள் யாரென்பதை உலகம் உணர உதவியது. சுப்ரமணிய சாமிக்காக பேரம் பேசிய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்த வாழப்பாடி இராமமூர்த்தி, சந்திராசாமியும், சுப்ரமணியசாமியும் இராஜீவை கொல்ல சதித்திட்டம் தீட்டியது ஜெயின் ஆணைய விசாரணையில் வெளிப்பட்ட பின்னரும் அவர்களை விசாரிக்க மத்திய புலனாய்வுக் கழகத்தின் சிறப்பு புலனாய்வுக் குழுத் தலைவர் டி.ஆர். கார்த்திகேயனின் உண்மை முகத்தை அன்றைக்கே கிழித்தெறிந்தவர் அண்ணன் வேலுசாமி அவர்கள்.

'ராஜீவ் படுகொலை : தூக்குக் கயிற்றில் நிஜம்' என்ற இந்தப் புத்தகத்தை படித்து முடித்தபோது எனக்கு ஏற்பட்ட அனுபவம் வித்தியாசமானது. இந்தியாவைப் போன்றதொரு ஜனநாயக நாட்டில், அதன் முன்னாள் பிரதமரை, இந்த நாட்டிற்குள் இருந்தே சதி செய்து

கொன்றுவிட்டு, இன்றுவரை இந்திய அரசியலில் கம்பீரமாக வலம் வர முடியும் என்றால், இந்த நாட்டின் அரசியலும் அதிகாரமும் யாரால் இயக்கப்படுகிறது? சுப்ரமணியசாமியை அண்ணன் வேலுசாமி குறுக்கு விசாரணை செய்தபோது, அவர் வியர்வை மழையில் நனைந்த காட்சியை நேரில் பார்த்த இராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா காந்தி முகம் சிவந்தார் என்று எழுதியுள்ளார்.

ஆனால் பின்னாளில் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தபோது, சுப்ரமணியசாமி மீது ஏன் வழக்குத் தொடரப்படவில்லை, இராஜீவ் கொலையில் அந்நிய சதி குறித்து ஆராய அமைக்கப்பட்ட பல்நோக்கு விசாரணை அமைப்பு ஏன் அவரை விசாரணைக்கு உட்படுத்தவில்லை? தமிழீழத்தின் மீது சிங்கள இனவெறியன் இராஜபக்ச தொடுத்த இனப் படுகொலைப் போருக்கு எல்லாவிதத்திலும் உதவி, ஒன்றே முக்கால் இலட்சம் தமிழர்களை கொன்று குவிக்கக் காரணமாகயிருந்த, இந்தியாவின் ஆட்சி அதிகாரத்தைத் தனது காலடியில் வைத்திருக்கும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, தனது கணவரை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியவர்கள் சந்திராசாமியும், சுப்ரமணியசாமியும்தான் என்று தெளிவாக தெரிந்த பின்னரும், அவர்களின் மீது தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி விசாரணைக்கு உத்தரவிடாதது ஏன்? என்ற கேள்வியும் எழுகிறது.

இப்படி எண்ணற்ற வினாக்களை எழுப்புகிறது அண்ணன் வேலுசாமி அவர்களின் இந்த மதிப்புமிக்க நூல். இப்படிப்பட்ட ஒரு நூலை வழங்கியதற்காக அண்ணன் வேலுசாமிக்கு தமிழினம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கும். எப்போதும் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய என் தாய்த்தமிழ் உறவுகள் அனைவரும் இந்தப் புத்தகத்தை தவறாது வாங்கிப்படிக்க வேண்டுகிறேன்.

- செந்தமிழன் சீமான்

# நிஜங்களின் அணிவகுப்புகளாக...



'ராஜீவ் படுகொலை : தூக்கு கயிற்றில் நிஜம்' என்ற நூலை சகோதரர் திருச்சி வேலுசாமி அவர்கள் என்னிடம் அணிந்துரைக்காக வழங்கியபோது சில நிமிடங்ககள் திகைத்து விட்டேன், காரணம் இந்த நூலில் பக்கங்கள் அதிகம். தொடர்ச்சியான வேலை பளுவிற்கு இடையிலும் இதனை உடனடியாக, முழுமையாக படித்து அணிந்துரை வழங்க முடியுமா? என்று எண்ணினேன்

ஆனால் கையில் எடுத்தேன், கீழே வைக்க முடியவில்லை. நிகழ்வுகளின் நிதர்சனமாக நிஜங்களின் அணிவகுப்புகளாக இந்நூல் விளங்குகிறது என்றால் அது மிகையல்ல. பொதுவாக அரசியல் ஆளுமை கொண்டவர்களை சிங்கம் என்றும் புலி என்றும் சிறுத்தை என்றும் வர்ணிக்கப்படுவது வாடிக்கை. ஆனால் என் சகோதரர் திருச்சி வேலுசாமி அவர்களை வெண்கலக் கடைக்குள் புகுந்த யானை என்று அழைத்தால் அது பொருத்தமாக இருக்கும்.

ஆம். அதிரடிகளும், சர வெடிகளும் நிறைந்த இந்நூல் உண்மை விரும்பிகளுக்கு விருந்தாகவே அமையும் என எதிர்பார்க்கலாம். தமிழக அரசியல் தளத்தில் முக்கிய தலைவர்களின் பன்முகங்களை படம்பிடித்துக் காட்டுகிறார் திருச்சியார். அந்தத் தலைவர்களின் பலவீனங்களை மட்டும் இன்றி பலங்களையும் குறிப்பிட்டு தனது பெருந்தன்மையை நிரூபிக்கிறார்.

*தேசமே துயரத்தில் ஆழ்ந்த நிகழ்வான ராஜீவ்காந்தி படுகொலையில் இந்தியாவின் மனசாட்சியை தட்டியெழுப்ப*

*தனது எழுத்தாயுதத்தால் பாடுபடும் திருச்சி வேலுசாமியின் பணி பிரமிக்கத்தக்கது.*

தான் அறிந்த உண்மைகளை உலகுக்குச் சொல்லவேண்டும் என்ற சிறந்த நோக்கம் இருட்டு மனம் படைத்த சில போலிகளின் முகத்திரையை சமரசமின்றி நேரடியாகக் குத்திக் கிழிக்கிறது இவரது பேனா முனை. .மொத்தத்தில் இவரது பேனாவில் அஞ்சாமை எனும் மை ஊற்றி எழுதி இருப்பதை புரிந்து கொள்ளமுடிகிறது. 'ராஜீவ் படுகொலை : தூக்குக் கயிற்றில் நிஜம்' என்ற நூல் விற்பனையிலும் உண்மை கருத்தியல் பரப்புதலிலும் சிகரம் தொடும் என்பது திண்ணம். சகோதரர் திருச்சி வேலுசாமி அவர்களுக்கு வாழ்த்துகள்.

அன்புடன்
ஜவாஹிருல்லாஹ்

# என்னுரை

# சதிவலையை அறுத்தெறிவோம்!



தமிழ்ச் சொந்தங்களுக்கு வணக்கம்.

யார் இட்ட சாபமோ தெரியவில்லை. இந்த உலக வரலாற்றில் எந்த ஒரு இனமும் சந்தித்திராத பேரழிவை நம் சமுதாயம் சந்தித்துவிட்டது. லட்சக்கணக்கானோர் சாம்பலாகி மண்ணோடு மண்ணாகிக் கலந்து வீர வரலாற்றுக்குத் தங்களை உரமாக்கிக்கொண்டார்கள்.

பல்லாயிரக் கணக்கானோர் கை கால்களை இழந்து ஊனமுற்றார்கள். ஆயிரக்கணக்கான நம் சகோதரிகள் வாழ்க்கைத் துணை இழந்து கைம்பெண்ணாகி நிற்கதியாக நிற்கின்றார்கள். எண்ணிலடங்கா மழலையர் தங்கள் பெற்றோரை இழந்து அனாதைகளாக்கப்பட்டு நிற்கிறார்கள். பல லட்சம் சொந்தங்கள், சொந்த மண்ணை இழந்து உலகின் பல்வேறு பகுதிகளில் ஏதிலிகளாக பிழைப்பை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

சொந்த மண்ணான ஈழத்தில் வாழவும் வகையின்றி சாகவும் முடியாமல் நடைபிணங்களாக உலவுகின்றவர்கள் பல லட்சம் பேர். மிகப் பாரிய இழப்புகளை நாம் சந்தித்திருந்தாலும், வீரத்திலும் விவேகத்திலும் உலகத்திலேயே தமிழினத்திற்கு இணையாக வேறு ஒரு இனம் இல்லை என்கிற வரலாற்றை நம் ஈழத்துச் சொந்தங்கள், குறிப்பாக தேசியத் தலைவர் பிரபாகரனும் அவரது தோழர் களும் உருவாக்கியிருக்கிறார்கள் என்பதனை எவராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

ஈடுசெய்ய முடியாத இந்த இழப்பை நியாயப் படுத்த நம் இனப் பகைவர்களால் கையாளப்பட்ட தந்திரங்களில் ஒன்றுதான் முன்னாள்

பிரதமர் ராஜீவ்காந்தியின் படுகொலை. ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தாய்த் தமிழகத்தில் எப்போதெல்லாம் மக்கள் பெருமளவு திறள்கிறார்களோ, அப்போதெல்லாம் அந்த சக்தியை பலவீனப்படுத்த ராஜிவ் கொலையைப் பயன்படுத்துவது வாடிக்கையாகி விட்டது. அதனால்தான் ராஜீவ் படுகொலையின் சந்தேகங்களை தெளிவு படுத்தினால்தான் நம் இன ஒற்றுமையை பலப்படுத்த முடியும் என்பதனை நான் நன்கு உணர்ந்திருக்கிறேன்.

இந்தப் படுகொலையில் புதைந்துள்ள மர்மங்களை அவிழ்க்கின்ற வகையில் ஒரு புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டும் என்கின்ற பொறுப்பும் கடமையும் எனக்கிருப் பதை பதினைந்தாண்டுகளுக்கு முன்பிருந்தே என்னை வற்புறுத்தியவர் தம்பி நக்கீரன் காமராஜ். அவரைத் தொடர்ந்து பலரும் பல நேரங்களில் என்னிடம் வேண்டுகோள் விடுத்தார்கள். என்ன காரணத்தினாலோ என் முயற்சி தள்ளிக்கொண்டே போனது.

இப்போதும் இந்தப் புத்தகம் உங்கள் கரங்களில் தவழ, நான் காரணம் என்றால் அது தவறு. இதற்கு முழுமுதற் காரணமாக இருந்தவர் பத்திரிகையாளர், தம்பி பா.ஏகலைவன் என்றால் அது மிகையாகாது. அவர்மீது எனக்கிருந்த அன்பிற்கும் மரியாதைக்கும் நான் தந்திருக்கிற விலைதான் இந்தப் புத்தகம். ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக எதையாவது செய்து சாதிக்க வேண்டும் என்கின்ற தீராத தாகம், வெறி இவரைப்போல வேறு ஒருவருக்கு இருக்குமா? சந்தேகமே. இவரின் இனப்பற்றுக்கு எனது தலைதாழ்ந்த வணக்கங்கள்.

இங்கே இன்னொன்றையும் பதிவு செய்தாக வேண்டும்.

கடந்த காலங்களில் எத்தனையோ சோகங்களை நான் தாங்கியிருக்கிறேன். ஆனால் ஒரு சம்பவம் மட்டும் என் இறுதி மூச்சு அடங்கும்வரை நெஞ்சத்தில் நெருஞ்சி முட்களாக குத்திக்கொண்டேயிருக்கும்.

கடந்த 2009-ம் ஆண்டு மே மாதம் 3-ம் தேதி குமுதம் இணையதளம் என்னிடத்தில் ஒரு நேர்காணல் எடுத்தது. பேட்டி கண்டவர் தம்பி பா.ஏகலைவன். அந்த பேட்டியில் "இன்னும் பத்து நாட்களில் ஈழத்தின் சில பகுதிகளில் மனிதர்கள் இருக்க மாட்டார்கள். மண்மேடுகள் மட்டுமே இருக்கும்" என்று ஒரு அபாய எச்சரிக்கையை விடுத்தேன். உலகின் ஏதாவது ஒரு மூலையில், சம்பந்தப்பட்டவர்களில் யாராவது

அதைப்பார்த்து "மாற்று வியூகம்" வாயிலாக அந்தப் பேரழிவை தடுப்பார்கள் என்கின்ற பேராசை இருந்தது. ஆனால் நடந்தது என்ன? நினைத்தாலே நெஞ்சம் நடுங்குகிறது. நான் குறித்த கெடுவிலிருந்து நான்கு நாட்கள் கழித்து மே 18ல் முள்ளிவாய்க்காலில் பேரழிவு நடந்தேறியது. இந்த உலகம் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அங்கு ஒரு இன அழிப்பு சிலமணி நேரங்களில் முடிந்துபோனது. வரலாற்றின் கறுப்புப் பக்கங்களாக மாறிவிட்ட அந்தச் சம்பவத்தை நடக்காமல் தவிர்க்க முடியாத என் கையாலாகாத்தனத்தை எப்படி மறக்க முடியும்.?

பதவி, பணம் இந்த இலக்குகளை நோக்கி பயணத்தைத் தொடர்வதுதான் அரசியல்வாதிகளின் பொதுவான இலக்கணம். ஆனால் அந்த இரண்டையும் நினைக்காமல் உயிரைப் பணயம் வைத்து உலகத்தை உலுக்கிய தலைவர் ராஜீவ்காந்தியின் படுகொலை விசாரணையில் என்னை நானே உட்படுத்திக் கொண்டதற்கு மூன்று காரணங்கள் உண்டு.

1. நூற்று இருபது கோடி மக்கள் வாழ்கின்ற, உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவின் புகழ்பெற்ற ஒரு தலைவரின் படுகொலையில் உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதியின் முன்னால் நிறுத்தாவிட்டால் அது இந்த தேசத்திற்கே பெரிய அவமானம் என்று நான் நினைத்தது.

2. மனிதர்களையும் விலங்குகளையும் மட்டுமல்லாது மரம் செடி கொடிகளையும் நேசிக்கத் தெரிந்த வள்ளலார், பாரதி ஆகியோரின் வாரிசுகளாகிய தமிழர்களின் மீது, சில சதிகாரர்களால் திட்டமிட்டு சுமத்தப்பட்ட களங்கத்தைத் துடைக்கவேண்டும் என்கின்ற கடமை உணர்வு.

3. சுதந்திரம் எனது பிறப்புரிமை என்று கர்ஜித்த பாலகங்காதர திலகர் உலவிய காங்கிரஸ் கட்சி, சுதந்திரப் போராளிகளுக்கு எதிராக இருந்தது என்கிற ஒரு சந்தேக நிழல் கூட காங்கிரஸ் கட்சியின் மீது விழுந்துவிடக்கூடாது என காந்தி, காமராஜர் வாழ்க்கைகளைப் பார்த்து அந்தக் கட்சியை நேசிக்கின்ற எனக்குள் உருவான எண்ணம்.

தவிர இந்தப் புத்தகத்தை எழுதியதற்கு ஒரே ஒரு காரணம் மட்டுமே உண்டு. கடந்த இருபது ஆண்டுகளாக என் மனதை அழுத்திக்கொண்டிருந்த சுமையை இந்த புத்தகத்தின் வாயிலாக இளைஞர்களின் தோளில் இறக்கிவைத்துள்ளேன். இதில் உள்ள செய்திகளை ஊடகங்கள் தமிழ் இளைஞர்களிடம் சேர்க்கும் என

நம்புகிறேன். இந்த இளைஞர்களின் மனதில் இந்த நினைவுகள் தீக்கனலாக உருவாகும். அந்த கனல் ஒருநாள் ஊழித்தீயாக மாறும். அந்த தீ ஜுவாலையில் தமிழினத்தின் மீது வீசப்பட்ட "கொலைப்பழி" என்ற மாயவலை அறுத்தெரியப்பட வேண்டும். தமிழ் ஈழம் எனும் நாடு பிறக்கும். அந்த நாளைக் கண்டு நான் பேரானந்தப்பட இறைவன் என்னை நலமோடு வாழ அனுமதிக்க வேண்டும். இதுவே அந்தக் காரணம். எனது ஆசை.

புத்தகத்தின் மேலட்டையையும் உள் பக்கங்களையும் வடிவமைப்பதை வணிகமாக நினைக்காமல் முழு ஈடுபாட்டோடு செய்து தந்த சகோதரர் விஜயனுக்கு நன்றி என்ற ஒற்றைச் சொல்லைத் தவிர வேறென்ன சொல்வது புரியவில்லை. அண்ணன் பழ. நெடுமாறன், பெரியவர் ஆர்.நல்லகண்ணு தம்பி சீமான், பேரா. ஜவாகிருல்லாஹ் இவர்களோடு நண்பர் தராசு ஷ்யாம் ஆகியோரும் படித்து பெரிதும் பாராட்டினார்கள், அதே நேரத்தில் 'இந்தப் புத்தகம் பத்தாண்டுகளுக்கு முன் வந்திருந்தால்'... என்று ஏக்கத்தோடு சொன்னபோது என் மனதை ஏதோ பிசைந்தது. உங்கள் கைகளில் தவழும் இதைப் படிப்பதோடு பலபேருடன் விவாதிக்கப் போகின்ற உங்களுக்கு எனது கோடானுகோடி நன்றிகளை சமர்ப்பிக்கின்றேன்.

நிறையன்புடன்
திருச்சி வேலுசாமி

# தொகுப்புரை

# இரத்தமும் சதையுமான வரலாற்றுப் பதிவு இது!



ராஜீவ்காந்தி படுகொலை, அதன் பின்னணி, சதி வலைகள் என அனைத்தையும் தேடிப் படித்தேன். இந்தப் படுகொலையில் இன்னும் அவிழ்க்கப்படாத பல மர்மங்கள் இருக்கிறது. ஆனால் அந்தப் பதிவு தமிழகத்தில் ஒரு ஆவணப் பதிவாக இல்லை. பலரது குரலில் மேடைப்பேச்சோடு காற்றில் கரைந்து போய்க்கொண்டிருந்தது. சம்பந்தப்பட்ட திருச்சி வேலுசாமி அவர்கள் ஏன் இதை புத்தகமாக பதிவு செய்யவில்லை என்று சிலரிடம் பேசியபோது “அவர் ஒரு மாதிரி. சம்பாதிச்சிட்டார். கொஞ்சம் முரட்டு ஆள்” என்ற விதமான பதிலே கிடைத்தது.

இப்படியான சூழ்நிலையில் எனக்கும் திருச்சி வேலுசாமி அவர்களுக்குமான தொடர்பு 2007 தொடக்கத்தில் ஏற்பட்டது. ஒரு நாள் தொலைபேசி அழைப்பு. சந்திக்க வேண்டும், வாருங்கள் என்றார். எழும்பூர் இம்பாலா ஓட்டலில் இருந்த அவரை தேடிச் சென்றேன். சுற்றி வளைக்காமல் “என்ன கேட்கனுமோ, அதை என்னிடமே கேளுங்கள், மற்றவர்களிடம் விசாரிப்பானேன்?” என்றவர் நேரடியாகவே விஷயத்திற்கு வந்தார்.

“எனக்கு இவ்வளவு சொத்துக்கள் இருக்கு. இந்த தேதி வரை வங்கி கணக்கே இல்லை. என் தந்தை எனக்கு தந்த சொத்துக்களில் 60 சதவீத சொத்துக்களை நான் விற்றிருக்கிறேன். இவற்றையெல்லாம் பார்த்து மனம் நொந்துபோன என் தாய் மாமன் ஜே.கே. ராமசாமி, அவருடைய சொத்துக்களை என் பெயருக்கு மாற்றிவிட்டு மறைந்து போனார். நான்

வாழ்ந்த இந்த அறுபத்தி நான்கு ஆண்டுகளில் புதியதாக எந்த சொத்துக்களையும் வாங்கவில்லை. விற்றுதான் இருக்கிறேன். இதைத் தவிர என் பெயரிலோ அல்லது பினாமி பெயரிலோ புதிய சொத்துக்கள் ஏதேனும் வாங்கியிருந்தால் சொல்லுங்கள். உங்களுக்கே கொடுத்துவிடுகிறேன்" என்றபடியே பத்திரங்களை எடுத்து போட்டார். இங்கே அவரது 'சம்பாதிப்பு' ரகசியம் உடைந்து போனது. முதல் சந்திப்பு இதுதான்.

தொடர்ந்த சந்திப்புகளில் ராஜீவ் படுகொலை பற்றி நீங்கள் அறிந்ததை ஏன் புத்தகமாக கொண்டு வரக்கூடாது என்றேன். அப்போது எனக்கு முன்பாக பலரும் அப்படி கேட்டு ஓய்ந்திருக்கிறார்கள் என்றுகூறி சிரிப்பார். தொடர்ந்து வற்புறுத்தி வந்தேன். நான் எழுதத் தயார். அதையெல்லாம் ஒழுங்குபடுத்தி செய்ய நேரமில்லையே, என்ன செய்வது என்றார். அந்த நேரத்தைத்தான் நான் எடுத்துக்கொண்டேன் என்பதைவிட, இந்த வரலாற்றுப் பதிவில் எனக்கான வாய்ப்பைக் கொடுத்தார் என்றே கூறவேண்டும்.

இந்த இடத்தில் 'முரட்டு மனிதர்' திருச்சி வேலுசாமி அவர்கள் பற்றி ஒன்றை கூறவேண்டும். ஒரு கட்டத்தில் ஒரு வாரம் முழுதுமாக மற்ற தொடர்புகளை எல்லாம் அறுத்துக்கொண்டு ஓர் இடத்தில் அமர்ந்தோம். நடந்த ஒவ்வொரு சம்பவத்தையும் விவரித்தபடியே வந்தார். ஓரிடத்தில் முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோரை பார்க்க வேலூர் சிறைச்சாலைக்குள் சென்றதை விவரித்தார். பத்தொன்பது ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முதலாக அவர்களை சந்தித்த இடம் அது. விவரித்துக் கொண்டிருந்த பொழுது மனமுடைந்து வார்த்தைகள் தடுமாறியது. குரல் கம்மியது. நிமிர்ந்து அவர் முகத்தை பார்த்தேன். கண்ணீர்... குழந்தையைப் போன்று தேம்பிக்கொண்டிருந்தார்.

மகள் ஒரு நாட்டில். மனைவி ஒரு சிறையில். காதல் குடும்பமாக உருவான முருகனின் வாழ்க்கை... கடந்த 19 ஆண்டுகளாக மகனை விடுவிக்க மக்களின் ஆதரவைத் தேடி ஊர்தோறும் தெருத்தெருவாக அலைந்து திரியும் பேரறிவாளனின் அம்மாவைப் பற்றி... சிறைபட்ட நாள் முதல் உறவென்று சொல்லி ஒருவருமே வந்து பார்த்திராத சாந்தனின் தனிமையை பற்றி... சொல்லிச் சொல்லி தேம்பிய அந்த நிமிடத்தில் 'முரட்டு மனிதர்' என்ற அந்த பார்வையும் சிதைந்து போனதை பார்த்தேன். அன்று முழுக்க அவரும் சகஜ நிலைக்கு வரவில்லை. என்னாலும் தொடர முடியவில்லை.

இப்படியான வலிகளின் பின்னணிதான் இந்த புத்தகம். இதில் நூற்றுக்கும் அதிகமான பக்கங்களை நீக்கியிருக்கிறேன். அவையனைத்தும் அரிய தகவல்தான். ஆனாலும் தேவை கருதி வேண்டியதை மட்டும் எடுத்துக்கொண்டேன். புத்தகம் எழுதத் தொடங்கி முடிப்பதற்குள்ளான காலகட்டத்தில் பல நாட்கள் திருச்சி வேலுசாமி அவர்கள் வேதனையாலும் வலியாலும் துடித்ததை பார்த்திருக்கின்றேன். எல்லாமும் முடிந்து. சில அத்தியாங்களை அனுபவம் வாய்ந்த சிலரிடம் வாசிக்க கொடுத்தோம். நன்றாக இருக்கிறது. இரத்தமும் சதையுமான வரலாற்றுப பதிவு இது. ஆனால் இந்த படுகொலையைப் பற்றி முழுதும் அறிந்தவர்களால் மட்டுமே இதனுள் நுழைந்து வெளிவர முடியும் என்ற கருத்தைச் சொன்னார்கள். பிறகுதான் சாதாரணமானவர்களும் படிக்ககூடிய எளிய நடைக்கு மாற்றப்பட்டது.

இந்தப் படுகொலையில் நடந்த சதித்திட்டங்கள் என்ன என்பதை அறிந்துகொள்ள வேண்டும். இதை நம் இளம் தலைமுறை நிச்சயம் கேள்வி கேட்கும் என்று அடிக்கடி ஆதங்கத்தோடு சொன்னபடியே இருந்தார். இப்படியாக முடிந்த புத்தகத்தின் முதல் படிவத்தை அவரிடம் வாசிக்க கொடுத்தேன். வாசித்து முடித்துவிட்டு வழக்கம்போல் மாற்றம் ஏதும் சொல்லாமல் அப்படியே வெறித்தபடியே அமர்ந்திருந்தார். நீண்ட நேரம்...


விடை தேடுவதற்கு முன்பாகஜயா சொல்லுங்கள்... என்றபோது தன்நிலைக்கு மாறியவர் "ஓராண்டா, இரண்டாண்டா, எத்தனை வருடம்?. கடந்த 21 ஆண்டுகளாக என் மனதிற்குள் இருந்து என்னை வதைத்துக் கொண்டிருந்ததை இப்போது இளைஞர்களின் தோளில் இறக்கி வைத்து விட்டேன். அவர்கள் பார்த்துக் கொள்வார்கள். இனி நான் செத்துப் போனாலும் கவலையில்லை" என்றபோது முகத்தில் அப்படி ஒரு ஒளி. அதே நேரத்தில் கண்களின் ஓரம் கண்ணீர்.

ஒரு இனத்தின் மீது வலிய திணிக்கப்பட்ட சதியின் கண்ணீர்... இந்த புத்தகத்தின் வாயிலாக உங்களிடம். பங்கெடுத்துக்கொள்ள வாய்ப்பளித்த திருச்சி வேலுசாமி அவர்களுக்கு நன்றி

நட்புடன்
பா. ஏகலைவன்

# விடை தேடுவதற்கு முன்பாக

*குற்றம் சாட்டியவர்களும் சாட்டப்பட்டவர்களும் அரசியலில் கைகோர்த்து ஆதாயத்தை அனுபவிக்க, காரணமேயின்றி ஒரு இயக்கமும் இனமும் அழிக்கப்பட நிஜத்துக்கு முன்னால் அந்தப் படுகொலை எப்படி நடந்தது. இதில் புதைந்து கிடக்கும் மர்மங்கள்தான் என்ன? என்ன?...*



குழந்தையின் சிரிப்பு, குரும்புப் பார்வை, அழகிய அதரங்கள், ஆப்பிள் கன்னம், எடுப்பான நாசி, மிடுக்கான நடை, சங்குக் கழுத்து, சந்தனமேனி, சராசரி உயரம், மொத்தத்தில் பார்ப்போரின் மனதில் ஒட்டிக்கொள்ளும் உருவம். அவர்தான் முன்னாள் பாரத பிரதமர் ராஜீவ்காந்தி. சர்வதேச அரங்கில் விஞ்ஞான ரீதியாக வளர்ந்த நாடுகளுக்கு இணையாக இந்தியாவை அழைத்துச் செல்ல அல்லும் பகலும் உழைத்த பாரதத்தாயின் பெருமைமிகு புத்திரன். 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் நாள் இரவு 10.15 மணி அளவில் மனித வெடிகுண்டால் சிதைத்து சின்னா பின்னமாக்கப்பட்டு தமிழ் மண்ணில் உயிர்நீத்தார் ராஜீவ்காந்தி. அந்த மரணத்தைத் தொடர்ந்து இந்திய அரசியலில், குறிப்பாக தமிழக அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள் சொல்லில் அடங்காது. அந்த சம்பவத்தினால் தமிழ் இனத்தின்மீது சுமத்தப்பட்ட களங்கம் சோகத்தின் சிகரம்.

அந்த கோரக் கொலைக்குக் காரணம் புலிகளும் தி.மு.க.-வும்தான் என்று அப்போது காங்கிரஸால் குற்றம் சாட்டப்பட்டது. அதையே காரணம்காட்டி ஐ.கே. குஜ்ரால் அரசு கவிழ்க்கப்பட்டது. ஆனால், பிறகு வந்த 2004-ம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸும் தி.மு.க.-வும் இணைபிரியாத நண்பர்கள். கூட்டணி அமைத்துக்கொண்டு வெற்றி பெற்றார்கள். ஆட்சியை அமைத்தார்கள். புலிகளின் ஏஜென்ட் என்று காங்கிரஸாலும் தி.மு.க.வாலும் வர்ணிக்கப்பட்ட திரு. வைகோ-வின் தலைமையில் செயல்படும் ம.தி.மு.க.-வும் அந்தக் கூட்டணியில் இருந்தது. ஆட்சியிலும் அங்கம் வகித்தது.



ராஜீவ் படுகொலையில் அ.தி.மு.க.-வின் தலைவி செல்வி ஜெயலலிதாவுக்கும் பங்கு உண்டு. எனவே அவரையும் அழைத்து விசாரிக்க வேண்டும் என்று ஜெயின் கமிஷனில் சுப்பிரமணியசாமி புகார் மனு கொடுத்தார். டெல்லி முதல் தமிழகம் வரை ஜெயலலிதாவை தாக்கிப் பேசினார். அடுத்து வந்த தேர்தலில் அவர்கள் இருவரும் கூட்டணி வைத்துப் போட்டியிட்டார்கள். அந்தக் கோரப் படுகொலையில் தி.மு.க.வின் தலைவர் கருணாநிதிக்கும் பங்கு உண்டு, தொடர்பு உண்டு என பகிரங்கமாக குற்றம் சாட்டியவர் வாழப்பாடி ராமமூர்த்தி. அப்போது அவர் தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர். பின்னாளில் அந்த வாழப்பாடியும் கருணாநிதியும் ஒரே மேடையில் காட்சி அளித்ததோடு, கூட்டாகவே சென்று மக்களிடத்தில் வாக்குக் கேட்டதை நம்மால் மறக்க முடியாது.

**1996-** தேர்தல் பிரச்சாரத்தின்போது ஒரு விசித்திரம். ராஜீவ்காந்தி படுகொலையில் திரு. மூப்பனாருக்கு பங்கு உண்டு என்று செல்வி ஜெயலலிதா கடுமையான குற்றச்சாட்டினைச் சுமத்தினார். மேடைதோறும்

பேசினார். ஆனால் அதே இரண்டு பேரும் 2001- தேர்தலில் ஒன்றாக கூட்டணி வைத்துக்கொண்டு ஒரே மேடையில் நின்றார்கள். மக்களிடம் வாக்குகேட்டுச் சென்றார்கள். வெற்றியும் பெற்றார்கள். உலகத்தையே உலுக்கிய அந்தத் தலைவரின் கொலையை வைத்து தேர்தலில் வாக்குகளைப் பெற நம் தலைவர்கள் நடத்திய திருவிளையாடல்கள் அந்தக் கொலையைச் செய்த கொலைகாரர்களின் செயலைவிடக் கொடூரமானவை.

அந்தக் கொலைக்குக் காரணமான உண்மைக் குற்றவாளிகளைப் பிடித்து தண்டிப்பதற்கு பதிலாக அப்பாவிகள் சிலரைப் பிடித்து தூக்கில் தொங்கவிட்டு வழக்கை மூடிவிட நினைக்கின்ற ஒரு கூட்டத்தின் செயல் மன்னிக்க முடியாதது. மனித குலத்திற்கே இழுக்கைத் தேடித்தருவதாகும்.

இப்படி சில சுயநலமிக்க பதவி வெறியர்களின் பேராசை அரசியலுக்கு பலியான தமிழ்ச் சொந்தங்களின் எண்ணிக்கை பல லட்சங்களைத் தாண்டிவிட்டது. கை கால்களை இழந்து முடமாகி, வாழ்க்கையை தொலைத்தவர்கள் பல ஆயிரம்பேர். வாழ்க்கைத் துணையை இழந்து விதவைகளாகி அனாதைகளைப் போல் நின்றவர்கள் அறுபதாயிரத்திற்கும் மேல். சொந்த மண்ணை இழந்து ஏதிலிகளாக, உலகின் பல்வேறு நாடுகளிலும் வாழ்பவர்கள் பல லட்சம் பேர். அத்தனைக்கும் காரணம் இந்த ஒற்றைச் சம்பவம்தான். அது தலைவர் ராஜீவ்காந்தி படுகொலை.

அந்தப் படுகொலையை வைத்துதான் ஈழத் தமிழர்களின் மீதும், அந்த மக்களுக்காக போராடி மண்ணில் விதைகளாகி புதைந்த விடுதலைப் புலிகள் மீதும் பழி சுமத்தப்பட்டது. அந்தப் படுகொலையை வைத்துதான் உலக அரங்கில் இருந்து ஈழத்தையும் போராளிகளையும் ‘தடை’ என்கிற பெயரில் அன்னியப்படுத்தி வைத்தது.

மண்கேட்டு விடுதலைப் போராட்டம் நடத்திய போராளிகளை தீவிரவாதிகளாக முத்திரை குத்தவைத்ததும் அந்த ஒரு படுகொலையை வைத்துதான். கடைசியாக உலக நாடுகள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே, ஈழ மண்ணில் பச்சை இன அழிப்பை நடத்தி முடித்தார்களே... அதற்கு மையக் காரணமும் ராஜீவ்காந்தி படு கொலைதான். குற்றம் சாட்டியவர்களும் சாட்டப்பட்டவர்களும் அரசியலில் கைகோர்த்து ஆதாயத்தை அனுபவிக்க, காரணமேயின்றி ஒரு இயக்கமும் இனமும் அழிக்கப்பட்ட நிஜத்துக்கு முன்னால்...

அந்தப் படுகொலை எப்படி நடந்தது.

இதில் புதைந்து கிடக்கும் மர்மங்கள்தான் என்ன? என்ன?..

விடை தேடும் முன்பாக இவைகளை கடந்து செல்வோம்.

# எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு...

*“இப்படி ஒரு தரம்கெட்ட, கேவலமான பிரச்சாரம் தேவையா? தனிநபரைத் தாக்கும் பிரச்சாரம் நல்ல அரசியலா”?*



அது **1989**ல் நடந்த தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கு சற்று முந்தைய காலகட்டம். நாங்கள் தமிழக ஜனதா கட்சி என்று தனித்து இயங்கத் தொடங்கியிருந்தோம். எங்களுக்கு மக்களை நேரடியாக சந்தித்தாக வேண்டும் என்ற முனைப்பு. அதன்படி மக்களை ஏமாற்றுவதில் பெரிதும் கெட்டிக்காரர் யார் என்ற பட்டிமன்றத்தை நடத்தத் தொடங்கினோம்.

அந்தப் பட்டிமன்றத்திற்கு நடுவர் தமிழருவி மணியன் அவர்கள். ஒரு கட்சி வெற்றிபெற்று ஆட்சியைப் பிடிக்கின்றபோது அந்தக் கட்சியில் தங்களை இணைத்துக்கொள்ள இளைஞர்கள் விரும்புவது இயற்கை. 1967ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ், குறிப்பாக பெருந்தலைவர் காமராசர் தோல்வி அடைந்தார் என்ற செய்தி கேட்டு அதிர்ந்துபோன பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள், தங்களை காங்கிரஸ் கட்சியில் இணைத்துக்கொண்டார்கள். அப்படி இணைந்துகொண்டு காமராசர் வழியில் நடைபோடத் தொடங்கிய இளைஞர்களில் நானும் மணியனும் உண்டு.

பேச்சுத் திறமையாலும் நடுநிலை தவறாத சொற்போராலும் நடுவர் பதவிக்கு ஆற்றலைக் கூட்டியிருந்தார். மக்களை ஏமாற்றுவதில் பெரிதும் கெட்டிக்காரரர் கருணாநிதியா? எம்.ஜி.ஆரா? என்பது தான் பட்டிமன்றத் தலைப்பு. ஏமாற்றுவதில் கெட்டிக்காரரர் கருணாநிதியே என்ற அணிக்கு நான்தான் தலைமை. சரியான காரண காரியங்களோடு தி.மு.க.வையும் அதன் தலைவர் கருணாநிதியையும் மிகக் கடுமையாகத் தாக்கி வாதங்களை முன்வைப்பேன். எதிர் அணியும் விட்டுக்கொடுக்காமல் விவாதம் செய்யும். இறுதியாக நடுவர் தமிழருவி மணியன் அவர்கள் கொடுக்கும் தீர்ப்பில் மக்கள் கூட்டம் ஆர்ப்பரிக்கும்.

மோகன் பாலசுப்ரமணியன், சைதை தமிழ்ச்செல்வன், நெல்லை சாமி, வேங்கை சந்திரசேகர், நிஜவீரப்பா, எஸ்.எஸ் மணி, சிதம்பர பாரதி ஆகியோர் அந்தப் பட்டிமன்றத்தில் பெரும் ஆரவாரத்தைக் கிளப்பிய பேச்சாளர்கள். தமிழகம் எங்கும் 90 இடங்களில் அப்படி நடத்தினோம். மக்களிடையே அதற்கு பெரிய வரவேற்பு. நாம் தனித்து இயங்குவோம் என்ற நம்பிக்கைக்கு இந்தவிதப் பட்டிமன்றமும் மக்கள் ஆதரவுமே காரணம்.

இந்த சூழலில்தான் தமிழக மக்களின் மனதில் என்றும் கதாநாயகனாக இருந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள் மறைவும், அதனையொட்டி அந்தக் கட்சி ஜா.-அணி ஜெ.-.அணி என்று இரண்டாக பிரிந்ததும் நடந்தேறியது.

அந்த சமயத்தில் யாரை ஆதரிப்பது என்ற நிலைப்பாடு எங்களது தமிழக ஜனதா கட்சியினருக்கு மட்டுமல்ல, தி.மு.க.வைத் தவிர்த்த மற்ற கட்சியினருக்கும் இருந்தது. நாங்கள் செல்வி ஜெயலலிதாவை ஆதரிப்பது என்ற முடிவுக்கு வந்தோம். அதற்குக் காரணம் கருணாநிதி போன்றவர்களை எதிர்த்து அரசியல் நடத்தக்கூடிய துணிவும் அறிவும்

அவருக்குத்தான் இருக்கிறது என்பதே. அப்படியானவருக்கு ஆதரவுக்கரம் நீட்டுவதே சரியாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. ஜானகி அவர்கள் கருணாநிதியை எதிர்க்கும் துணிவு கொண்டவராகப் படவில்லை. அரசியலில் தாக்குப்பிடிப்பாரா என்பதும் சந்தேகம்.. எனது இந்தக் கருத்தை தமிழக ஜனதா கட்சியும் ஏற்றுக்கொண்டது. அப்போது எங்களுக்குத் தலைவராக இருந்தவர் பொன். விஜயராகவன் அவர்கள்.

அப்படி இருக்கும் போதுதான் 1989 தமிழக சட்டமன்றத் தேர்தல் வருகிறது. செல்வி ஜெயலலிதா தலைமையிலான கட்சி எங்களின் தமிழக ஜனதா கட்சியோடு தேர்தல் கூட்டணி வைத்துக்கொள்ள பேச்சு வார்த்தை நடத்தியது.. எஸ்.டி.எஸ், திருநாவுக்கரசு, கே.கே.எ.ஸ்.எ.ஸ்.ஆர்.ஆர், சேலம் கண்ணன், குழந்தைவேலு ஆகியோருடன் தலைமைக் கழகத்தில் தொகுதிப் பங்கீடு பேச்சு வார்த்தை நடந்தது. அந்தப் பேச்சுவார்த்தையில் பொன். விஜயராகவனும் நானும் கலந்துகொண்டோம்.

இத்தனை தொகுதிகள் என்பதில் சிக்கல் இல்லை. நல்லபடியே முடிந்தது. ஆனால் ஒரே ஒரு விஷயத்தில் முடிவெடுக்க மட்டும் இரண்டு மணி நேரத்திற்கும் மேலானது. அதற்குக் காரணம். என்னை திருச்சி-2 தொகுதியில் நிற்கச் சொன்னதுதான். என்னால் முடியாது என்றேன். இல்லை நீங்கள்தான் போட்டியிட வேண்டும் என்றார்கள். எங்கள் கட்சியின் தலைவரான விஜயராகவனும் “வேலுசாமி, தனி நபராக இருந்து செய்யும் செயலைவிட ஒரு அரசியல் அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டு செய்யும் செயல் இன்னும் வீரியமானது. நீங்கள் சுயநலத்திற்காக ஏதும் செய்ய மாட்டீர்கள். பொதுநலனுக்காகவே இருப்பவர், அதனால் ஒப்புக்கொள்ளுங்கள்” என்றார்.

அதன் பிறகும் எனக்கு திருப்தியில்லை, ”திருச்சி-2 தொகுதியில் காங்கிரஸ் கட்சிக்கும் பலம் இல்லை. எங்களின் ஜனதா கட்சிக்கும் செல்வாக்கு இல்லை. பிறகு எந்த நம்பிக்கையில் போட்டியிடுவது? வேறு தொகுதியை ஒதுக்கி வேறு வேட்பாளரை நிறுத்தும் முடிவுக்கு வந்து, இந்த தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தையை முடித்துக் கொள்வதுதான் சிறப்பு” என்றேன். அப்போது கே.கே.எஸ்.எஸ்.ஆர்ஆரும் திருநாவுக்கரசரும் என்னை தனியே அழைத்துச் சென்றார்கள். “உங்களை திருச்சி-2 தொகுதியில் போட்டியிட வேண்டும் என்று சொல்வதற்குக் காரணம் இருக்கிறது. பக்கத்தில் உள்ள ஸ்ரீரங்கம் தொகுதியில்தான் அம்மா போட்டியிட இருக்கிறார்கள். அதை ஒட்டிய தொகுதிதான் உங்களுடையது. அம்மா அவர்களுக்கான பிரச்சாரத்தின் தாக்கமும்

வீச்சும் அந்தத் தொகுதியில் இருக்கும். பக்கத்துத் தொகுதி என்பதால் மேடமும் உங்களுக்கு பிரச்சாரம் செய்ய வந்துபோக வசதியாக இருக்கும்" என்ற பின்னணியைச் சொன்னார்கள்.

அதுமட்டுமல்ல. "ஸ்ரீரங்கம் தொகுதியில் இருந்துகொண்டு நான் அடிக்கடி கட்டாயம் வந்து போகிறேன்" என்றார் திருநாவுக்கரசு. "பணத்தைப் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். நான் அதற்கான ஒருங்கிணைப்பைச் செய்கின்றேன்" என்றார் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர். அதனால் வேறு வழியின்றி நான் சம்மதித்தேன்.

இறுதியாக எங்கள் கட்சிக்கு 19 சட்டமன்றத் தொகுதிகள் ஒதுக்கப்பட்டது. கூட்டணிக் கட்சித் தலைவியான செல்வி ஜெயலலிதா அவர்கள் அதை அதிகாரபூர்வமாக அறிவித்தார். தேர்தல் பிரச்சாரம் அனல் பறந்தது. கடுமையான பிரச்சார போட்டி. திருச்சி-2 தொகுதியில் எனக்கு எதிர் வேட்பாளர், தி.மு.க.-வின் அன்பில் பொய்யாமொழி. எங்கள் இருவருக்கும் சளைக்காத பிரச்சார போட்டி என்று பத்திரிகைகளும் எழுதியது. ஆனாலும் நான் தோல்வியைத் தழுவினேன். அன்பில் பொய்யாமொழி வெற்றி பெற்றார்.

நான் சோர்ந்து போகவில்லை. அடுத்த இரண்டாவது நாளே தோல்விக்கு நன்றி கூறி ஒரு பொதுக்கூட்டத்திற்கு எற்பாடு செய்தேன். இரண்டரை மணிநேரம் பேசிய அந்தப் பொதுக்கூட்டத்தில் கருணாநிதியை மிகக் கடுமையாகத் தாக்கிப் பேசினேன். அடுத்த ஆட்சி அவர்களுடையதுதான். முதல்வர் பதவியில் கருணாநிதிதான் என்ற நிலையிலும் நான் என் பேச்சையோ அரசியல் போக்கையோ மாற்றிக் கொள்ளவில்லை. சொல்லிவைத்தார் போன்று அதன் பலனையும் அனுபவிக்கத் தொடங்கினேன். முதல்வர் பதவியில் அவர் உட்கார்ந்தவுடனேயே என்மீது பல பொய் வழக்குகளை போட்டு. நீதிமன்றத்திற்கு அலைய விட்டார்கள்.

பொதுக்கூட்டத்திற்குத் தலைமைதாங்கியவர், மைக் வைத்தவர், போஸ்டர் ஒட்டியவர் என என்னோடு பலர்மீது வழக்குகள் பாய்ந்தன. சிதறு தேங்காயைப் போன்று என் நிலை. அதற்கான முக்கிய காரணத்தை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அந்தத் தேர்தல் பிரச்சாரத்தில் என் தொகுதியில் ஒருவர் தி.மு.க. மேடையில் பேசினார். "எதிர்க்கட்சியின் முதல்வர் வேட்பாளர் யார்? அவர் ஒரு நடிகை. பாக்கெட்டில் 500 ரூபாய் இருந்தால் அவர் இன்று உன்னோடு. நாளை என் பாக்கெட்டில் அந்தப்

பணம் இருந்தால் அவர் என்னோடு..." என்று தொடங்கி மிக கேவலமாக பேசினார் அந்த பிரச்சார பீரங்கி.

அவர் அப்படி பேசியதை டேப் ரெக்கார்டரில் பதிவு செய்து, அதையே தேர்தல் பிரச்சாரமாக பாவித்தது தி.மு.க.. கட்சியின் கொள்கைகளை, மக்கள் நலத்திட்டங்களை கூறி வாக்கு கேட்பதை விட்டுவிட்டு இப்படி தரம்கெட்ட பிரச்சார உத்தியை அறிமுகம் செய்தது தி.மு.க.தான். அப்படியான கொச்சைப் பிரச்சாரம் பற்றி எல்லோரும் வந்து என்னிடம் கூறினார்கள். அப்போது தி.மு.க.-வில் எனக்குத் தெரிந்த நகர அவைத்தலைவரான அரு. ஆதீமூலம் பெரியவரின் வீட்டிற்குச் சென்றேன். "இப்படி ஒரு தரம்கெட்ட, கேவலமான பிரச்சாரம் தேவையா? தனிநபரைத் தாக்கும் பிரச்சாரம் நல்ல அரசியலா"? என்று கேட்டுவிட்டு, "நாளை மாலை நான்கு மணிவரை நேரம் தருகிறேன். நிறுத்தவில்லை என்றால் பிறகு என் பதிலைக் கூறுகிறேன். அன்பில் பொய்யாமொழி வேட்பாளர் என்றாலும் அவரது அப்பா அன்பில் தர்மலிங்கம்தான் இந்தத் தேர்தல் பிரச்சார வேலைகளை எல்லாம் செய்துவருகிறார். நீங்கள் அன்பில் தர்மலிங்கத்திடம் கூறுங்கள்" என்றேன். நல்ல மனிதரான அவரும் அப்படிப்பட்ட பிரச்சாரத்திற்கு வருந்தியதோடு, அவசியம் மேல்மட்டத்தில் பேசுகிறேன் என்றார். அடுத்த நாள் அவரே தொடர்புகொண்டார். "மன்னிகனும் தம்பி. பிரச்சாரத்தை நிறுத்த முடியாதுன்னு சொல்றாங்க. என்ன செய்வது" என்றுகூறி வருந்தினார்.

இதற்குமேல் வைத்தியம் செய்தே ஆகவேண்டும் என்று ஒற்றை நபராக பிரச்சார ஆட்டோவை எடுத்தேன். திருச்சி தெப்பக்குளம் அருகே உள்ள ஆண்டாள் தெருவில் உள்ள தர்மலிங்கத்தின் இரண்டாவது வீட்டிற்கு எதிரே நின்றேன். நட்டநடு வீதியில் சின்னதாய் நாற்காலி போட்டு, அதன்மீது ஏறி நின்று அவரது பெயரை உரக்கக்கூறி 'இப்போது நீர் எந்த வீட்டில் படுத்துக் கொண்டிருக்கிறாய்' என்று தொடங்கி கடுமையாக தாக்கினேன். அவர் அலறிப் போனார். போலீஸுக்குத் தகவல் பறந்தது. போலீஸும் வந்தது. பிரச்சாரத்திற்கு முறைப்படி அனுமதி வாங்கியிருக்கிறேன். தடுக்க உரிமையில்லை என்று எதிர்த்தேன். அன்பில் தர்மலிங்கத்தோடு இருந்த அந்த அம்மா வாசலுக்கு ஓடிவந்து கதறியது. அவர் வெளியே வரவில்லை. அதன் பிறகு போனால் போகிறது எனத் திரும்பினேன். என்னோடு யாரையும் வைத்துக்கொள்ளவில்லை. எது வந்தாலும் எதிர்கொள்வது என முடிவெடுத்தே அப்படிச் சென்றேன்.

அதன் பிறகுதான் நாங்கள் கூட்டணி வைத்த முதல்வர் வேட்பாளர் பற்றிய அந்த பிரச்சாரம் நின்றது.

அதுசரி. அன்று தி.மு.க.வின் மேடையில் அப்படிப் பேசியவர் வேறுயாருமல்ல. பின்னாளில் அதே கட்சியில் இணைந்து முழுநேரமும் அம்மா புகழ் பாடிய நடிகர் ராதாரவிதான். அவரது பிரச்சாரத்தை முடக்கிய காரணத்தாலும், பதிலுக்கு அன்பில் தர்மலிங்கத்தை தாக்கிப் பேசியதற்காகவும்தான் பொய் வழக்காக போட்டார்கள். அதன் காரணமாகவும் எனக்கு தி.மு.க.-வின் மீது மேலும் கோபம் ஏற்பட்டது. அசராமல் எதிர்ப்புக்கூட்டி சுற்றிச் சுழன்றேன்.

# என்னைச் சந்தித்த கருணாநிதியின் ஆள்...

*“அந்தம்மா விரும்பல. எனக்கென்னமோ அவா சரிப்பட்டு வரமாட்டா. சந்திக்கறதே வேஸ்ட். நடிகைய எல்லாம் வச்சுகிட்டு ஒண்ணும் அரசியல் செய்ய முடியாது. எனக்கு விரக்தியாயிடுத்து”*



அப்போது எங்கள் கட்சியின் பொதுக்குழு திருப்பூரில் கூடியது. பின்னாளில் பாரதிய ஜனதா கட்சியின் தமிழகத் தலைவராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த சி.பி. ராதாகிருஷ்ணன்தான் அன்று பொதுக்குழுவை முன்னின்று நடத்தினார். அந்தப் பொதுக்குழு கூட்ட ஆலோசனையில் முதல்வர் கருணாநிதியை எதிர்ப்பது கடினம், எதிர்த்து அரசியல் செய்ய முடியாது. பொய்வழக்குகளாகவே போட்டு பழி தீர்த்துவிடுவார். சமாளித்து நிற்பது

எளிதல்ல என்ற போக்கில் விவாதம் நடந்தது. முடிவாக அகில இந்திய ஜனதா தளம் கட்சியோடு சேர்ந்து செயல்படுவது என்ற முடிவுக்கு வந்தார்கள். ஜனதா தளம் கட்சியின் அகில இந்திய தலைவராக வி.பி.சிங் இருந்தார். எங்களுக்கு அது பாதுகாப்பாக இருக்கும் என்றும் முடிவானது.. நான் உள்ளிட்ட சிலருக்கு அதில் கொஞ்சம் முரண்பாடு. மற்றவர்களின் முடிவுக்கு ஒத்துப்போக முடியவில்லை. தனித்துவிடப்பட்டேன். இந்த சமயத்தில்தான் நாடே பார்த்து அதிர்ந்த அந்தச் சம்பவம் நடந்தது. இந்தியாவின் எந்த மாநில சட்ட மன்றத்திலும் அப்படி ஒரு மோசமான நிகழ்வு நடந்ததில்லை. தமிழகச் சட்டமன்ற வரலாற்றில் அது ஒரு கறுப்பு நாள். அன்றுதான் செல்வி ஜெயலலிதா அவர்களை தி.மு.க.-வினர் அவமானப்படுத்தினார்கள். தலைவிரி கோலமாக அவர் வெளியேறிய அந்தக் காட்சி அனைவரையும் உலுக்கியது. ‘அது மாந்தகுலம் வெட்கித் தலைகுனியக்கூடிய அவமானம்’ என்று கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்திருந்தேன். மக்களின் கருத்தும் அதுவாகத்தான் இருந்தது..

இது நடந்து ஒரு வாரத்திற்குப் பிறகு....

சென்னை ராஜரத்தினம் ஸ்டேடியத்திற்கு அருகில் இருக்கும் குரு ஓட்டலில் நான் தங்கியிருந்தேன். அப்போதுதான் டாக்டர் சுப்பிரமணியசாமி என்னோடு தொலைபேசியில் பேசினார். நேரில் சந்திக்க வேண்டுமே என்றார். தாராளமாக சந்திக்கலாமே என்றேன். 1977-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்காக, சுப்பிரமணியசாமி முதன் முதலாக தமிழகத்திற்கு வந்தார். அப்போது அவரை கவனித்துக் கொள்ளும் பொறுப்பை அப்போதைய மத்திய அமைச்சர் பா. ராமச்சந்திரன் என்னிடம் ஒப்படைத்திருந்தார். அந்த நட்பு நீடித்து இருந்தது. சொன்னபடி அடுத்த நாள் டெல்லியில் இருந்து சென்னை வந்து, நான் தங்கியிருந்த விடுதிக்கு வந்தார் சுப்ரமணியசாமி. தி.மு.க.விற்கு எதிராக நான் செயல்படுவது குறித்துப் பேசிக்கொண்டிருந்தார்.

இறுதியாக “நாம் இருவரும் சேர்ந்து செயல்படுவோமே. இன்னும் சிறப்பாக இருக்குமே” என்றார். எனக்கு வியப்பு மட்டுமல்ல, சற்று அதிர்ச்சியாகவும் இருந்தது. “என்ன சார் சொல்கிறீர். கருணாநிதிக்கு எதிராகவா?. எப்படி? நீங்கள் கருணாநிதியின் தீவிர ஆதரவாளர். நானோ எதிர்ப்பாளன். எப்படி ஒன்று சேர முடியும்? எனக்கு நம்பிக்கையில்லை” என்றேன், வெளிப்படையாக. நான் அப்படி பேசியதற்குக் காரணம் உண்டு. டாக்டர் சுப்பிரமணியசாமி தொடக்கத்திலிருந்தே கருணாநிதியின்

ஆள். எமர்ஜென்ஸி காலகட்டத்தில் கருணாநிதியோடு கைகோர்த்து நின்றவர். அவருக்கு ஆதரவாக, உதவியாக பல காரியங்களை வெளிப்படையாகவும், ரகசியமாகவும் செய்தவர். கருணாநிதி ஏற்பாடு செய்து மதுரையில் நடத்திய தமிழீழ விடுதலை ஆதரவு மாநாட்டிற்கு (டெசோ) பல டெல்லி பிரமுகர்களை எல்லாம் திரட்டியவர். சாமியும், முரசொலி மாறனும் நெருங்கிய நண்பர்கள் வேறு. இவர்கள் இருவரும் இணைந்து செய்த விஷயங்கள் என்னென்ன என்பதும் எனக்குத் தெரியும். அதனால்தான் நீங்கள் கருணாநிதியின் ஆள். எப்படி நம்பமுடியும் என்று கேட்டேன்.

“உங்கள் கேள்வி நியாயமானதுதான் வேலுசாமி. நான் எந்தளவுக்கு அவருக்கு சப்போர்ட் பண்ணியிருக்கேன், ஆதரவாயிருந்திருக்கேன் என்று உங்களுக்குத் தெரியும். அவாளுக்கு எவ்வளவோ செய்திருக்கேன். அதையெல்லாம் மறந்துட்டு நன்றிகெட்டத்தனமா நடந்துகொண்டார். என் மனதை ரொம்ப காயப்படுத்திட்டார்” என்று மௌனமாக இருந்தார். “ஏன் என்ன நடந்தது. எப்படி அவமானப்படுத்தினார்”? என்றேன். “அவர் சட்டமன்றத்துக்குள் வச்சி ஜெயலலிதாவை அவமானப்படுத்தினா இல்லையா. அப்போ டெல்லியிலே இருந்தவா எல்லாம் ரொம்ப அசிங்கமா பேசினா. என்கிட்டயே கேட்டார்கள்’. பொம்மணாட்டியை இப்படியெல்லாமா செய்வா? என்ன உங்க தமிழ்நாட்டு நாகரிகம்’னு கேட்டுட்டா.

கருணாநிதி பேர்ல அப்படியெல்லாம் பேசுவதை சகிச்சுக்க முடியல. அதனால அவருக்கு போன் பண்ணி ‘என்னா இப்படி நடந்திருக்கு. கொஞ்சம் பார்த்து ஹாண்டில் பண்ணியிருக்கலாமே’ன்னு, கேட்டு முடிக்கிறதுக்குள்ள ‘என்னய்யா. கடைசியா உங்க சாதி புத்தியை காட்டுறீங்களே. போனை வைங்கோ’ன்னு அவமானப்படுத்திட்டார். அதுக்கு முன்னாடி நான் அவரோட ஆதரவாளராக இருந்தபோது எல்லாம் என் சாதி தெரியாதா? என்ன இப்படி நடந்துகிட்டீங்கன்னு கேட்டவுடனேதான் அவருக்கு என் சாதி நினைப்பு வந்து அவமானப்படுத்துறார். அந்த மாதிரியான ஆளை விடவே கூடாது. மோசமான நச்சுப்பாம்பு. இப்படியானவர் அரசியலில் இருக்கவே கூடாது. அதான் இந்த முடிவுக்கு வந்தேன்’’ என்று மனமுடைந்து உண்மையைக் கூறினார். எனக்கு ஒன்றும் புரியாத வியப்பு.

சரி, இணைந்தே செயல்படுவோம் என்றதும் என் கைகளைப் பிடித்துக் குலுக்கினார். முகத்தில் அப்படி ஒரு மகிழ்ச்சி அவருக்கு. சரி

இந்த ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டுமே. அதற்காக ஒரு கூட்டத்தை திருச்சியில் எற்பாடு செய்தேன். அதில் நானும் சுவாமியும் ஒன்றாக மேடையில் பேசினோம். தி.மு.க. ஆட்சியை கடுமையாக விமர்சித்தோம். விமர்சனத்துக்கான காரண காரியங்களை அடுக்கினோம். அங்கிருந்த உடன் பிறப்புகளுக்கு பொறுக்க முடியவில்லை.

சும்மாவே குதிப்பவர்கள் கையில் ஆட்சி அதிகாரம் இருந்தால் விடுவார்களா? அந்த முதல் கூட்டத்திலேயே அடிதடி ரகளை என்று பெரும் கலவரத்தை உருவாக்கினார்கள். என்னைத் தாக்குவதற்கும் பெரு முயற்சி செய்து தோற்றுப்போனார்கள். அது ஊடகத்தின் மூலமாக தமிழகம் முழுக்க சென்றடைந்து பரபரப்பை ஏற்படுத்தியது. அவர்களின் மிரட்டலுக்கெல்லாம் பயப்படாமல் தொடர்ந்து பல ஊர்களிலும் பொதுக்கூட்டத்தை நடத்தினோம்.

அப்படியொரு நாள் மதுரையில் பொதுக்கூட்டத்தை முடித்துக்கொண்டு ரயிலில் திரும்பினோம். அப்போது கருணாநிதிக்கு எதிரான ஒரு தலைமை வேண்டும். அவரது ஆட்சியை தூக்கி எறிய வேண்டும். அப்படி எதிர்த்து அரசியல் செய்ய இங்கு யார் யார் எல்லாம் சரியாக வருவார்கள் என்ற பேச்சு எழுந்து நீடித்து சென்னை வரையிலும் வந்தது. நாம் அரசியல் ரீதியாக கருணாநிதியை வீழ்த்த வேண்டுமானால், செல்வி ஜெயலலிதாவை நம் அணியில் இணைத்துக் கொண்டால்தான் முடியும் என்ற கருத்தை டாக்டர் சாமியிடம் அழுத்தமாக பலமுறை சொன்னேன். இன்று இருக்கக்கூடிய அரசியல் சூழ்நிலை யதார்த்தம் அதுதான் என்று சொன்னதோடு, அதற்கான விளக்கத்தையும் கொடுத்தேன். அடுத்த நாள் காலையில் சிந்தூரி ஓட்டலில் தங்கினோம். குளித்து முடித்தவுடன் காலை டிபனுக்காக உட்கார்ந்தோம். அதற்குள் நண்பர் சோவும் வந்துவிட்டார்.

சாப்பிட்டபடியே அரசியல் பேச்சு ஓடியது. திரும்பவும் கருணாநிதிக்கு எதிரான ஒரு கூட்டணியைப் பற்றி பேச்சு வந்தது. நான், “அந்தக் கூட்டணிக்குள் ஜெயலலிதா இருப்பதை பற்றி யோசித்துப் பாருங்கள் சாமி” என்றேன். “அதற்கு வழியே இல்லை. நானும் நிறைய முயற்சித்துப் பார்த்துட்டேன். அந்தம்மாவிடம் இருந்து பதிலே வரவில்லை என்னதான் செய்வது” என்றார் சாமி.

“அவரிடம் கேட்டீர்களா? நீங்கள் யாராவது நேரில் அப்ரோச் பண்ணீங்களா. முடிவைத் தெரிந்துகொள்ளாமலேயே நாம் ஒரு முடிவுக்கு

வரக்கூடாது” என்றேன்.

“இதோ இருக்காரே. இவரை வைத்துதான் முயற்சி பண்ணோம். ஏதும் நடக்கலையே” என்று சாமி சொல்ல,

“ஆமாம். நானும் எப்படியெல்லாமோ ட்ரைப்பண்ணி பார்த்துட்டேன். அவா சந்திக்கவே நேரம் கொடுக்கல. அந்தம்மா விரும்பல. எனக்கென்னமோ அவா சரிப்பட்டு வரமாட்டா. சந்திக்கறதே வேஸ்ட். நடிகைய எல்லாம் வச்சுகிட்டு ஒன்றும் அரசியல் செய்ய முடியாது. எனக்கு விரக்தியாயிடுச்சு” என்று நண்பர் சோ முயற்சித்ததை பற்றிச் சொன்னார்.

உடனே “நான் வேண்டுமானால் சந்திக்கட்டுமா? முயற்சிக்கின்றேனே. நேரில் கேட்டால் போகிறது” என்றவுடன் ‘சோ’ ராமசாமி, “அதெல்லாம் முடியாது, ட்ரைப் பண்றதே வேஸ்ட். அவா என்னையே சந்திக்க நேரம் கொடுக்கல” என்று அழுத்தமாக மறுத்தார். “இருங்கள் மிஸ்டர் சோ. வேலுசாமி சொல்றார். அவர் முயற்சிக்கட்டுமே. நாம எதற்குத் தடுக்கனும். வாய்ப்பிருந்தால் நல்லதுதானே” என்ற சுப்பிரமணியசாமி என்னைப் பார்த்து “நீங்கபோய் பாருங்கள். சந்தித்தால் முடிவைச் சொல்லுங்கள். பிறகு என்னாகிறது என்று பார்ப்போம்” என முடிவாக சொன்னவர் “அங்கே எப்போது செல்வதாக உத்தேசம்” என்றார். “இப்போதே போகிறேன். நாட்களையும் நேரத்தையும் எதற்கு ஒத்திப்போட வேண்டும்” என்று கை கழுவியபடியே எழுந்தேன். “எதுக்குப் போகிறீர். அவா பார்க்கவே மாட்டா”. என்று மீண்டும் தன் நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தினார் சோ. நான் ஓட்டலைவிட்டு வெளியே வந்து ஒரு ஆட்டோவை அழைத்தபடி நின்றேன்.

அதற்குள் சோ “வேலுசாமி கொஞ்சம் இருங்கோ. நானும் அந்தப் பக்கம்தான் போகிறேன். உங்களையும் இறக்கிவிட்டுட்டுப் போகிறேன்” என்றபடி விறுவிறுவென்று இறங்கி வந்ததோடு அவரது காரிலேயே என்னை ஏற்றிக்கொண்டார். வாகனத்தை அவரே ஓட்டினார். சொன்னபடியே போயஸ் கார்டனில் இருக்கும் ஜெயலலிதாவின் வீட்டின் வாசலில் இறக்கி விட்டார். திரும்பி வீட்டிற்குப் போவதாக சென்றவர் சற்று தூரத்தில், திருப்பத்தின் போது நான் உள்ளேதான் போகிறேனா என்று பார்த்தபடியே சென்றார். அதையும் கவனித்தபடியே நான் உள்ளே

நுழைந்தேன். நண்பர் ம. நடராஜன் உதவியுடன் நான் சந்திக்க விரும்புவதை சொல்லி அனுப்பினேன். உள்ளே அழைத்தார்கள்.

# ஜெயலலிதாவின் திருப்புமுனை...

*ஒரு முக்கிய சந்திப்பு இருக்கிறது. சந்தேகம் இருந்தால் போயஸ் கார்டன் வீட்டின் அருகே காத்திருங்கள். காலை பத்து மணிவாக்கில் நாங்கள் உள்ளே போகிறோம் என்று ரகசியமாக ஒரு தகவலை தூர்தர்ஷன் செய்தியாளர் திருநாவுக்கரசுக்கு கூறிவைத்திருந்தேன்.*



செல்வி ஜெயலலிதா அவர்கள் என்னை சிரித்த முகத்தோடு வரவேற்று வணக்கம் கூறி அமரச்சொன்னார். அவரது காலில் அடிபட்டிருந்தது பற்றிக் கேட்டு நலன் விசாரித்தேன். அவரும் என்னைப் பற்றி விசாரித்து நலன் அறிந்தார். அதற்குள் இருவருக்குமாகச் சேர்ந்து பழரசம் வந்தது. பழரசத்தை பருகியபடியே பொதுவான விஷயங்களை பற்றிப் பேசிவிட்டு தயங்கினேன். “என்ன வேலுசாமி சொல்லுங்கள். என்ன வேண்டும்?”

என்றார் “எனக்கு ஒரு உதவி. அதை நீங்கள்தான் செய்ய வேண்டும். உங்களால் முடியும்” என்றேன்.

“உதவியா? நானா? நான் எப்படி உங்களுக்கு உதவமுடியும். என் வாழ்க்கையே டேஞ்ஜராக இருக்கிறது.” என்றபடியே விரக்தியாக சிரித்தார்.

“அப்படியா, சரி, செத்துப் போறதுக்கு முன்பாக ஒரு நாலு பேருக்கு நல்லதை செய்துட்டு போகலாம் அல்லவா. அப்படி யோசிச்சுப் பாருங்க மேடம்” என்றதும், சற்று நிமிர்ந்து உட்கார்ந்தார்.

“ஆமாங்க எல்லோரும் சாகப் போகிறவர்கள்தான். அதற்கு முன்பாக ஒரு நல்ல காரியத்தைச் செய்யலாம். செய்வதற்கு முயற்சிக்கலாம் இல்லையா. அதன் மூலமா மக்களுக்கு, தன்னை நம்பியவர்களுக்கு ஒரு நல்லது கிடைக்கிறது என்றால் நாம் வாழ்ந்ததற்கு அர்த்தமாகுமில்லையா. நீங்கள் இப்படி யோசிச்சுப் பாருங்களேன்” என்றதும், ஆச்சரியப்பட்டு “என்ன சொல்கிறீர்கள் வேலுசாமி” என்றார்.

அப்போதுதான், அவர் அரசியலுக்குத் தீவிரமாக வரவேண்டும் என்றும், அதற்கான அவசியம் என்ன, கருணாநிதிக்கு எதிரான அரசியல் வெற்றிடம் எப்படி இருக்கிறது என்பதையெல்லாம் எடுத்து முன்வைத்தேன். மேலும் என்னைப்போல் பலபேர் கருணாநிதியால் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தனித் தனியாக மட்டுமல்ல, ஒன்றாகச் சேர்ந்தால்கூட எதிர்த்து அரசியல் செய்துவிட முடியாது. நீங்களும் வந்து ஒன்று சேர்ந்தால்தான் வெற்றியாக மாறும். டெல்லி அரசியலிலும் நிறைய மாற்றங்கள் இருக்கிறது. அங்கே நமக்கும் தெரிந்த ஒருவர் அதிகார மையத்தில் இருக்கிறார். அதுவும் நமக்கு சாதகமாகவே இருக்கும்,என்ற அரசியல் பின்னணி எல்லாம் விளக்கினேன்.

“யார் அந்த டெல்லி நண்பர்” என்றார்.?

“டாக்டர் சுப்பிரமணியசாமிதான்” என்றேன்.

“அவர் வருவாரா? நமக்கு ஆதரவாக இருப்பாரா? சந்திக்க முடியுமா?” என்றார்.

“ஒருநாள் அவகாசம் கொடுங்கள். அவருடன் பேசிவிட்டு வருகின்றேன். சந்திப்புக்கு நான் பொறுப்பு” என்றேன். போயஸ் கார்டன் வீட்டிலிருந்து விடைபெற்றுக்கொண்டு சுப்பிரமணியசாமியின் கட்சி அலுவலகம் சென்றேன். சைதாப்பேட்டையில் ஒரு நிகழ்ச்சி, அங்கு

புறப்பட்டுச் சென்றார் என்ற தகவல், சைதை சென்றேன். அங்கிருந்து பல்லாவரம் கிளம்பிவிட்டதாகச் சொல்ல, அங்கு சென்றேன். அப்படியே பின்தொடர்ந்து விசாரித்தபடியே சென்னை விமான நிலையத்திற்குச் சென்றுவிட்டேன். மாலை விமானத்தில் டெல்லி செல்ல இருந்த சாமி, அங்கு வி.ஐ.பி. லாபியில் உட்கார்ந்திருந்தார். அவரோடு சோ உள்ளிட்ட சிலரும் இருந்தார்கள். நான் அந்தக் கதவைத் திறந்து நுழைந்தவுடனே என்ன ஆச்சு என்பதைப் போல் அவர் பார்க்க, நான் கட்டை விரலை உயர்த்திக் காட்டியபடியே நடக்க, சீட்டைவிட்டு எழுந்து வேகமாக நடந்து வந்தார். சோ-வும் கூடவே வந்தார். நான் சாமியை தனியே அழைத்துச் சென்று நடந்ததை எல்லாம் விவரித்தேன்.

“என்ன வேலுசாமி. ஏன் நாளை மறுநாள்னு சொன்னே. இப்பவே போய்ப் பார்த்துடலாமே. நான் ப்ளைட் டிக்கெட்டை கேன்சல் செய்துடறேன். என்ன சொல்கிறீர்கள்” என்றார்.

“அது சரியாக வராது. இப்போது நீங்கள் டெல்லிக்குக் கிளம்புங்கள். நாளை மறுநாள் காலை விமானத்தில் வந்தால் போதும். பத்து மணிக்கெல்லாம் அவரை சந்திக்கலாம். எதற்கு இப்போது அவசரம் அவசரமாக சென்று சந்திக்க வேண்டும்” என்று கூறினேன். அதுவும் சரிதான் என்றபடியே அவர் டெல்லி புறப்பட்டார்.

36 மணி நேரம் நகர்ந்தது.

காலை நேரம்.

நான் சென்னை விமான நிலையத்தில் காத்திருந்தேன். ஒன்பது மணியளவில் சுவாமி வந்திறங்கினார். அங்கிருந்து நேராக போயஸ் கார்டனுக்குச் சென்றோம். எங்களுடன் ராஜ்குமார் என்ற சென்னை மாவட்ட நிர்வாகி மட்டுமே இருந்தார். வேறு யாரையும் அழைத்துக்கொள்ளவில்லை. செல்வி ஜெயலலிதாவின் போயஸ் கார்டன் வீட்டிற்குள்ளாக காரை நிறுத்தினோம். வாசலிலேயே நின்று வியப்போடவே எங்களை வரவேற்று அழைத்துச் சென்றார் ஜெயலலிதா.

வழக்கமான நலன் விசாரிப்புக்குப் பிறகு பேச்சு நீண்டது. தமிழக அரசியல், டெல்லி அரசியல் நிலவரம் குறித்தெல்லாம் பேசினோம். எல்லாவற்றையும் விவரமாக கேட்டுக்கொண்டபடியே நிறைய சந்தேகங்களையும் கேட்டறிந்தார். ஒரு கட்டத்தில் நான் அங்கே இருக்க விரும்பவில்லை. செல்வி ஜெயலலிதா அவர்கள் தயக்கமின்றி

சந்தேகங்களை கேட்டுக்கொள்ள வாய்ப்பாக வெளியே வந்து ஹாலில் உட்கார்ந்தேன். அதற்குள்ளாகவே சாமி அழைத்தார். "எதற்கு வெளியே போனீர்கள். சும்மா உள்ளேவந்து உட்காருங்கள்" என கடிந்துகொண்டார். "நீங்கள் உள்ளே இருப்பதில் எனக்கு எந்த சங்கடமும் இல்லை" என்றார் ஜெயலலிதா.

ஒரு வழியாக அந்த சந்திப்பு வெற்றிகரமாகவே முடிந்தது. அதே நேரத்தில் "இப்படியான முக்கிய சந்திப்பு எதாவது ஒரு மீடியாவில் வந்தால் நன்றாக இருக்குமே" என்ற விருப்பத்தைச் சொன்னேன். "ஆமாம் முன்கூட்டியே தெரிவித்திருந்தால் அதற்கு ஏற்பாடு செய்திருக்கலாம். இப்போது எப்படி முடியும்" என்றார் ஜெயலலிதா. "நீங்கள் சரி என்கிறீர்களா? அதைச் சொல்லுங்கள்" "என்றேன். எனக்கு சரிதான்" என்றார் சிரித்தபடியே.

ஒரு நிமிடம் இருங்கள் என்று கூறிவிட்டு வெளியே வந்தேன்.

அதற்கு முன்பாக,

"ஒரு முக்கிய சந்திப்பு இருக்கிறது. சந்தேகம் இருந்தால் போயஸ் கார்டன் வீட்டின் அருகே காத்திருங்கள். காலை பத்து மணிவாக்கில் நாங்கள் உள்ளே போகிறோம்" என்று ரகசியமாக ஒரு தகவலை தூர்தர்ஷன் செய்தியாளர் திருநாவுக்கரசுக்கு கூறிவைத்திருந்தேன்.

அவரும் வந்து காத்திருந்தார். காலையில் நாங்கள் உள்ளே நுழைவதற்கு முன்பாக, கார் கண்ணாடியை இறக்கி அவருக்குக் கையசைத்து விட்டுதான் வந்திருந்தேன். அவரும் காத்திருந்தார். அதற்குள் ஒன்று நடந்திருக்கிறது. அப்போது பிரபலமாக வந்துகொண்டிருந்த ஜூனியர் போஸ்ட் மாலை நாளேட்டு புகைப்படக்காரர் அந்தப் பக்கமாக வந்திருக்கிறார். திருநாவுக்கரசைப் பார்த்து. 'என்ன இங்கே' என்று கேட்டிருக்கிறார். யாரோ வந்திருக்கிறார்கள், முக்கியமான சந்திப்பு என்றார்கள். அதான் காத்திருக்கிறேன் என்றுகூற, அவரும் அங்கே நின்றுகொண்டிருந்தார். நான் அவர்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு உள்ளே சென்றேன். பார்த்ததும் செல்வி ஜெயலலிதா அவர்கள் சிரித்தார்கள்.

சுவாமி, செல்வி ஜெயலலிதா, நான் மூன்றுபேரும் ஒன்றாக நிற்பது போன்ற புகைப்படம், வீடியோ. அன்று மாலை தூர்தர்ஷன் செய்தியில் எங்களின் சந்திப்பு முதன்மையான இடத்தில் இருந்தது. தலைப்புச்

செய்தியே அதுதான். அடுத்து, ஊடகங்கள் எல்லாம் அந்தச் சந்திப்பையும், அதன் பின்னணியில் உள்ள அரசியல் பற்றியும் எழுதித் தீர்த்தது. நாங்கள் எதிர்பார்த்ததைப் போல கருணாநிதி கலக்கமடைந்து கவனிக்கத் தொடங்கினார்.

# கருணாநிதிக்கு அதிர்ச்சி வைத்தியம்

*வாழப்பாடிக்கும் கருணாநிதிக்கும் சுத்தமாக ஆகாது. சட்டமன்றத்தில் வைத்து ஜெயலலிதா அவர்களை அப்படி நடத்தியதிலிருந்து ராமமூர்த்திக்கும் ஒரு அச்சம்.*



காலம் உருண்டு ஓடியது. இந்தியாவின் பிரதமராக சந்திரசேகரும், சட்டம் மற்றும் வர்த்த்தகத்துறை அமைச்சராக சுப்ரமணியசாமியும் பதவி ஏற்றார்கள். பிரதமரான பிறகு சந்திரசேகர் அவர்கள் முதன் முதலாக தமிழகம் வரப்போகிறார் என்ற செய்தி வந்தது. ஒரு நாள் பயணமாக சென்னை வந்து இறங்கி அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலமாக காஞ்சிபுரம் சென்று, ஜெயேந்திரரைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்ற கையோடு சென்னை திரும்பி, மீண்டும் விமானத்தில் டெல்லி செல்வதாக

திட்டம். அதற்கு ஒரு வாரம் முன்பாக சென்னை வந்திருந்த சுப்பிரமணியசாமியிடம் பேசிக்கொண்டிருந்தபோது “சார்...யோசிச்சுப் பாருங்க, இந்த சந்தர்ப்பத்தை வைத்துக்கொண்டு கருணாநிதிக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம் செய்தால் எப்படி இருக்கும்” என்றேன்.

‘புரியலையே’ என்றார்.

“இதுவரை பிரதமர் சந்திரசேகரும் செல்வி ஜெயலலிதா அவர்களும் சந்தித்துக்கொண்டதே இல்லை. ஒருவருக்கு ஒருவர் பழக்கமும் கிடையாது. பிரதமர் காஞ்சிபுரம் வரும் இந்த சந்தர்ப்பத்தை வைத்து, இருவரையும் சந்திக்க வைத்துவிட்டால் எப்படி இருக்கும்” என்றேன். பலமாக சிரித்தபடியே “அப்படி நடந்தால் நன்றாகத்தான் இருக்கும்” என்றார்.

“ஆமாம் சார் அந்த சந்திப்பு விமான நிலையத்தில் நடந்தால் நன்றாக இருக்கும். பிரதமர் வரும்போது முதல்வரும் வந்து வரவேற்க வேண்டும். அதாவது கருணாநிதியும் அங்கே இருப்பார். அது சரியாக இருக்கும். ஆனால் ஒரு சிக்கல். சட்டமன்றத்திலேயே ரகளை செய்து அந்தம்மாவை அவமானப்படுத்தியவர்கள், விமான நிலையத்திலும் அப்படி செய்வார்களோ என்ற அச்சமிருக்கிறது. காரணம் ‘போலீஸ் எல்லாம் அவர்கள் கட்டுப்பாட்டில்தான் இருக்கும். வீட்டிலோ அல்லது எங்காவது ஓட்டலிலோகூட சந்திக்க வைத்தாலும் பரவாயில்லை” என்று கூறினேன்.

ஆமாம் என்று யோசித்த சாமி, அந்த விஷயத்தை விடுங்கள், நான் பார்த்துக்கொள்கிறேன், பிறகு சொல்கிறேன் என்று கூறி அதற்கு முற்றுப்புள்ளி வைத்தார். அடுத்த நாள் டெல்லி புறப்பட்டுப் போனார். ஓரிரு நாளில் டெல்லியில் இருந்தபடியே அழைத்தார் சாமி. சந்தோஷமாக சிரித்தபடியே “வேலுசாமி நீங்க சொன்னபடியே சந்திப்புக்கு ஏற்பாடு செய்தாச்சு. மற்ற விவரங்களை நேரில் வந்து சொல்கிறேன்” என்றார். தகவல் என் மூலமாக ஜெயலலிதாவுக்குப் போனது.

ஏற்பாட்டின்படி பிரதமர் சென்னை வரும் நாளும் வந்தது. அதற்கு முன்நாள் இரவில் வாழப்பாடி ராமமூர்த்தி எனக்கு போன் செய்தார். “தலைவா. நாளைக்கு எப்படி? ஏர்போர்ட்டுக்கு வருகிறீர்கள்தானே. தனியாக போக வேண்டாம். நான் கார் அனுப்புகிறேன். வந்துவிடுங்கள். இருவருமாக சேர்ந்தே ஏர்போர்ட்டுக்குச் செல்வோம்” என்றார்.

“அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். நான் எப்படியாவது போய்விடுகிறேன்” என்றேன். “இல்லை தலைவா, வீட்டிற்கு கார் வந்துடும். நீங்க மறுக்காம வந்துடுங்க” என்றுகூறி இணைப்பைத் துண்டித்தார்.

வாழப்பாடிக்கும் கருணாநிதிக்கும் சுத்தமாக ஆகாது. சட்டமன்றத்தில் வைத்து ஜெயலலிதா அவர்களை அப்படி நடத்தியதிலிருந்து ராமமூர்த்திக்கும் ஒரு அச்சம்.

எந்த விதத்திலாவது தன்னையும் அப்படி அசிங்கப் படுத்துவார்கள் என நினைத்திருந்தார். அது எனக்கும் தெரியும். அதனால்தான் என்னையும் அழைத்தார். தனக்கு கிடைக்கப்போவதை ஒத்தையில வாங்கக்கூடாது என்ற பாலிசியோ என்னவோ, யார் கண்டது !.

அடுத்த நாள் காலையில்... முந்தைய நாள் பேசிக்கொண்டபடியே நானும் ராமமூர்த்தியும் சேர்ந்து விமான நிலையத்திற்குச் சென்றோம். வெளியே சாமியானா பந்தல் போடப்பட்டிருந்தது. அ.தி.மு.க.வின் முக்கிய நிர்வாகிகள், எம்.பி.க்கள், காங்கிரஸின் முக்கியப் பிரமுகர்கள் எல்லாம் அங்கே காத்திருந்தார்கள். அவர்களைத் தாண்டிதான் நாங்கள் போகவேண்டும். வெளியே, உள்ளே என்று பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. காரை விட்டிறங்கிய இருவரும் உள்ளே சென்றோம். போலீஸ் வளையத்தைத் தாண்டி நான் உள்ளே நுழைந்தேன். என்னை யாரும் தடுக்கவில்லை. சில அடிகள் வைத்திருப்பேன். படீரென்று சத்தம். ஓ என்ற அலறல். திரும்பிப் பார்க்கிறேன். வாழப்பாடி ராமமூர்த்தியேதான்.

அங்கே நின்றிருந்த டி.ஐ.ஜி லத்திகாசரண், ராமமூர்த்தியை உள்ளே விடமுடியாதென தடுத்தது மட்டுமின்றி, அவரது கழுத்தில் கைவைத்து அப்படியே பலம்கொண்ட மட்டும் நெக்கித் தள்ளிவிட்டார். படீரென மல்லாக்க தரையில் விழுந்த வாழப்பாடி, தடுமாறி எழுந்து அதிர்ச்சிலும் ஆதங்கத்திலும் மிரண்டு அப்படி கத்தினார். அதைப் பார்த்த நொடியில் நான் அதிர்ந்துவிட்டேன். எனக்கும் ஆத்திரம் தாங்கவில்லை. டி.ஐ.ஜி லத்திகாசரணைப் பிடித்து சகட்டுமேணிக்குப் பேசினேன். நீங்கள் யார்? யாருக்காக இப்படி நடந்துகொள்கிறீர்கள், என்பதெல்லாம் எனக்குத் தெரியும்.

இதற்கான பலனை நீங்கள் அனுபவித்தே ஆக வேண்டும். நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் என்று எச்சரிக்கும் விதமாகவே பேசினேன். அங்கிருந்த காங்கிரஸ்காரர்களோ அல்லது அ.தி.மு.க.-வினரோகூட துணைக்கு வரவில்லை என்பதைவிட அதிர்ச்சியில்

அவர்களும் நிலைகுலைந்து நின்றிருந்தார்கள் என்றுதான் கூறவேண்டும். (2006-2011 தி.மு.க. ஆட்சியில் சீனியரான நடராஜ் ஐ.பி.எஸ் போலீஸ் அதிகாரியை ஒதுக்கிவிட்டு, ஜூனியரான லத்திகாசரனுக்கு டி.ஜி.பி பதவியை கருணாநிதி கொடுத்ததற்குக் காரணம் தெரிகிறதல்லவா) லத்திகாசரனோடு நான் சண்டை போட்டுக்கொண்டிருக்கும் செய்தி உள்ளே சென்று, எல்லோரும் வெளியே வந்துவிட்டார்கள்.

அப்போது டி.ஜி.பி.யாக இருந்த துரையும் அங்கே வந்துவிட்டார். எல்லோரும் துரையைப் பிடித்து உலுக்கத் தொடங்கினார்கள். காங்கிரஸ் கட்சியின் ஸ்டேட் லீடர். எம்.பி.யாகவும் இருப்பவர். அப்படியானவரை இவ்வளவு கேவலமாக நடத்துவதற்கு என்ன காரணம். யார் தூண்டியது? எல்லாமும் தெரிந்தாக வேண்டும் என்று எகிறிக்கொண்டிருக்க டி.ஜி.பி துரைக்கு வேர்த்துக்கொட்டியது. என்ன பதில் சொல்லி சமாளிப்பது என்று தெரியவில்லை. இந்தக் களேபரத்திற்கிடையே பிரதமர் விமானம் வந்து இறங்கி விட்டது. சில வினாடிகளில் அதிலிருந்து பிரதமர் இறங்கவும் போகிறார். பிரதமர் விமானத்தில் இருந்து இறங்கியதும் அவருக்கு மாநில அரசின் சார்பில் மரியாதை செலுத்த முதல்வர் கருணாநிதியும், அவரது அமைச்சர்களும் அங்கே தயாராக நின்றிருந்தார்கள்.

நான் பிரதமர் விமானத்தை நோக்கி ஓடினேன். போலீஸ் என்னை தடுத்ததைப் பொருட்படுத்தவில்லை. தடுத்தவர்களை கையால் தட்டிவிட்டு ஓட்டமும் நடையுமாக ஓடினேன். பிரதமர் சந்திரசேகர் என்னை கவனித்தபடியே விமானப் படியில் இறங்கினார். அவரைத் தொடர்ந்து சுப்ரமணியசாமியும் வந்தார். சில அடி தூரத்தில் அவருக்கு மாலை மரியாதை செலுத்துவதற்காக முதல்வர் நின்றுகொண்டிருக்கிறார். சில அடிதூரத்தில் நான். பிரதமர் என்னைப் பார்த்து என்ன என்பதைப் போல் சைகை செய்ய 'தலைவரே நம்ம வாழப்பாடி ராமமூர்த்தியை போலீஸ் அதிகாரி அடித்து விட்டார்' என்றபடியே ஓடினேன். அதற்குள் முதல்வர் கருணாநிதி மாலையை கழுத்தில் போட நெருங்க, அதை இடது கையால் தடுத்துவிட்டு, அந்த மாலை மரியாதையை ஏற்காமலேயே என்னுடன் வந்துவிட்டார். வரவேற்புக் கூட்டத்தில் ஒரே சலசலப்பு. வாழப்பாடி விஷயமான சலசலப்புதான். என்ன ஏது என்று இரண்டு நிமிடம் விசாரித்தார். பிறகு அங்கிருந்து திட்டமிட்டிருந்தபடி வெளியேறினார்.

நான், டாக்டர் சுப்ரமணியசாமி, வாழப்பாடி ராமமூர்த்தி உள்ளிட்ட நிர்வாகிகள் எல்லாம் மீண்டும் போலீஸிடம் நியாயம் கேட்கும் குரலை உயர்த்தியிருந்தோம். டி.ஜி.பி. துரையைப் பார்த்து கடுமையாகப் பேசிய

சுப்ரமணியசாமி, அவரை எச்சரித்தார். முதல்வர் கருணாநிதி ஏதும் நடக்காதது போல் அங்கிருந்த வி.ஐ.பி. லாபி நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார். அதற்குள் பிரதமரின் கார் போயஸ்கார்டன் சென்று விட்டது. அங்கே தேநீர் அருந்திய கையோடு செல்வி ஜெயலலிதா அவர்களையும் அதே காரில் ஏற்றிக்கொண்டு விமான நிலையத்தின் உள்ளே வந்துவிட்டார். கார் கதவைத் திறந்துகொண்டு பிரதமரும், செல்வி ஜெயலலிதாவும் இறங்கினார்கள். போலீஸ் சல்யூட் அடித்தபடி நின்றது. அங்கிருந்தபடியே பார்த்துகொண்டிருந்த முதல்வரின் முகம் ஈயாடவில்லை. பிறகு கொஞ்ச நேரம் அங்கே இருந்தவர்களுடன் நலன் விசாரித்தபடி இருந்தார்.


நான், சுப்ரமணியசாமி, செல்வி ஜெயலலிதா ஆகிய மூன்றுபேர் மட்டுமே தனியாக ஒரு இடத்தில் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அனைவரும் எங்களை கவனித்தபடி இருந்தார்கள். அப்போது “நின்றுகொண்டே பேசுகிறோமே. உட்காரலாமா” என்று கேட்டார் ஜெயலலிதா. நான் “எனக்கொன்றும் ஆட்சேபனை இல்லை. அப்படி உட்காருவதென்றால் உங்கள் நண்பரைச் சந்தித்து வணக்கம் சொல்லியபடிதான் போய் உட்காரவேண்டும். பரவாயில்லையா?” என்றதும் ஜெயலலிதா அவர்கள் வாய்விட்டு சிரித்தார். அவர் அப்படி சிரித்ததை அங்கிருந்தவர்களும் கவனித்தார்கள்.

விஷயம் என்னவென்றால், நின்றுகொண்டிருந்த நாங்கள் சென்று உட்கார வேண்டும் என்றால், அங்கு ஏற்கெனவே உட்கார்ந்திருக்கும் முதல்வர் கருணாநிதி அவர்களைத் தாண்டித்தான் போய் உட்கார வேண்டும். அப்போது அவருக்கு வணக்கம் கூறத்தான் வேண்டும். பரவாயில்லையா என்றேன். அதற்குதான் செல்வி ஜெயலலிதா அவர்கள் அப்படி சிரித்தார். பிறகு சிறிது நேரத்தில் டெல்லி புறப்பட்டுச்சென்றார் பிரதமர். நாங்கள் அவரவர் இடத்திற்குத் திரும்பினோம்.

இப்படிதான் முடிந்தது அன்றைய பிரதமர் சந்திரசேகர் - ஜெயலலிதா சந்திப்பு. அடுத்தகட்ட நகர்வுகள் எல்லாமே டெல்லியில்தான் நடக்கத் தொடங்கியது. தி.மு.க. ஆட்சியை கலைத்துவிட வேண்டும் என்ற முனைப்பு தீவிரமாகியிருந்தது.

# பெருந்தலைவரின் ஜனநாயகப் பண்பு...

*ஒன்றுமில்லை சார். தி.மு.க. ஆட்சிக் கலைப்பு பற்றி இவர்கள் இருவரும் கேட்டார்கள். தடையாய் இருப்பதே உங்கள் தலைவர் ராஜீவ்காந்திதான் என்றேன். நம்ப மறுக்கிறார்கள். அதான் உங்களிடம் அழைத்து வந்தேன்.*



அப்போதெல்லாம் நான் டெல்லிக்குச் சென்றேனென்றால் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஜெயமோகனின் வீட்டில்தான் தங்குவேன். படிக்கும் காலத்திலிருந்தே நாங்களிருவரும் நண்பர்கள். அதனால் அவரது டெல்லி வீடுதான் எனக்கான அலுவலகம் போன்று இருக்கும்.

அப்படியிருக்கும் போது ஒரு நாள் வேலைகளை எல்லாம் முடித்துக்கொண்டு இரவு 11 மணிக்குதான் ஜெயமோகனின் வீட்டிற்குத் திரும்பினேன். அந்த வீட்டிற்கு எதிரேதான் வாழப்பாடி ராமூர்த்தியின் வீடு இருந்தது. நான் வீடு திரும்பி விட்டேனா. வந்தால் கூறுங்கள் என்று நான்கு முறை ஆள் அனுப்பியிருக்கிறார் ராமமூர்த்தி. சரி, அவர் வருவானேன். நாமே சென்றுவிடலாம் என்று அவரது வீட்டிற்குச் சென்றேன்.

அந்தக் கடுங்குளிர் இரவிலும் வாசல்வரை வந்து, வாங்க வாங்க என்றழைத்துச் சென்றார். “ஆமாம் அப்படி என்ன முக்கிய விஷயம். அவசரமாய் சந்திக்க வேண்டும் என்றீர்களாமே?” என்று கேட்டேன். “ஆமாம் வேறு என்ன முக்கியமாக இருக்கப் போகிறது. இந்த தி.மு.க. ஆட்சி டிஸ்மிஸ் விவகாரம் ஒன்றும் நடக்கவில்லை. எல்லாமும் தடையாகி நிற்கிறது. என்ன செய்வது” என்று அலுத்துக்கொண்டார். சரி, இதற்கு மேலும் மூடி மறைப்பதில் அர்த்தமில்லை என நினைத்து, “அதற்குக் காரணமே உங்க தலைவர் ராஜீவ்காந்திதான். அவர்தான் அப்படி ஏதும் டிஸ்மிஸ் என்று செய்துவிடாதீர்கள். என முட்டுக்கட்டையாக நிற்கிறார். தடையாக இருப்பதே அவர்தான். நாம் என்ன செய்ய முடியும்” என்றபோது ராமமூர்த்திக்கு அதிர்ச்சி, என்மீது ஆத்திரம்.

“என்ன சொல்கிறீர்கள் வேலுசாமி. எங்க தலைவரா? அவரா தடை போடுகிறார். வாய்ப்பே இல்லை. நீங்கள் தவறான தகவலைக் கூறுகிறீர்கள்” என மறுத்தார். தடுமாறினார். உண்மையை அவரால் நம்ப முடியவில்லை. அதற்குள் அங்கே அ.தி.மு.க.-வின் நாடாளுமன்ற உறுப்பினரான சேடப்பட்டி முத்தையாவும் ஒரு பெரிய சால்வையை போர்த்திக்கொண்டு அங்கே வந்துவிட்டார். நடந்தவற்றைக் கேட்டபோது அவராலும் நம்பமுடியவில்லை. நடுநடுங்கும் அந்தக் குளிரிலும் அவர்களுக்கு வியர்த்து விட்டது.

“நான் கூறுவதில் நம்பிக்கை இல்லை என்றால் இப்போதே என்னுடன் வாருங்கள். சுப்ரமணியசாமியை சந்திப்போம். அவரிடமே கேட்டுக் கொள்ளலாமே” என்றேன்.

“இந்த நள்ளிரவு 12-.மணிக்கா? சாமி தூங்கியிருப்பாரே” என்றார் வாழப்பாடி.

நான் அப்போதுதான் உத்யோக்பவனில் சாமியை சந்தித்து பேசிவிட்டுத் திரும்பியிருந்தேன். அதனால் சாமி அங்குதான் இருப்பார். அப்படியே புறப்பட்டிருந்தாலும் வீட்டில் பிடித்து விடலாம் என நினைத்து ‘நேரம் பற்றிய கவலை உங்களுக்கேன். அவரை சந்திக்க வேண்டும் என்றால் புறப்படுங்கள். பார்த்துவிடலாம்’ என்றேன்.

அந்த நள்ளிரவில், மூவருமாக கடுங்குளிரை கிழித்தபடி உத்யோக்பவன் சென்றோம். அந்த நேரம்தான் சாமி அலுவலகத்தைவிட்டு வெளியே வந்தார். என்ன வேலுசாமி இந்த நேரத்தில் என்றார்.

“ஒன்றுமில்லை சார். தி.மு.க. ஆட்சிக் கலைப்பு பற்றி இவர்கள் இருவரும் கேட்டார்கள். தடையாய் இருப்பதே உங்கள் தலைவர் ராஜீவ்காந்திதான் என்றேன். நம்ப மறுக்கிறார்கள். அதான் உங்களிடம் அழைத்து வந்தேன்.

நீங்களே கூறுங்கள்” என்றேன். நால்வரும் அங்கே இருந்த புல்வெளியில் நின்றிருந்தோம்.

“ஆமாம். தடையாய் இருப்பதே உங்கள் தலைவர்தான்” என்றவர், பிரதமர் சந்திரசேகரிடம் ராஜீவ்காந்தி பேசிவைத்திருந்ததை விளக்கினார் சாமி. அந்த இருவராலும் நம்பமுடியவில்லை. அப்படியும் ஒரு அரசியல் நடக்குமோ என்ற வியப்பு. அதை கவனித்த சுப்ரமணியசாமி..

“மிஸ்டர் ராமமூர்த்தி. காலையில் உங்கள் தலைவரிடம் நீங்கள் அப்பாயின்மெண்ட் வாங்குகிறீர்களா? அல்லது நானே வாங்கட்டுமா? ஒரே ஒரு வார்த்தைதான். “டு இட்” என்று மட்டுமே அவர் கூறட்டும். மீதியை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். அடுத்த 24-மணி நேரத்தில் அங்கே .தி.மு.க. ஆட்சி டிஸ்மிஸ் ஆகும். என்ன சொல்கிறீர்கள்” என்றார் சாமி.

வாழப்பாடி ராமமூர்த்தியும் சேடப்பட்டி முத்தையாவும் வெடவெடத்துப் போனார்கள். தலைவர் ராஜீவ்காந்தியே விரும்பவில்லை என்றான பிறகு என்ன செய்ய முடியும் என்ற .கவலை அவர்களுக்கு. மிகுந்த மன வேதனையோடு அவர்களும், லேசான மனவேதனையோடு நானும் அவரவர் இருப்பிடத்திற்குத் திரும்பினோம்.

இப்படியான காலகட்டத்தில்தான் அந்தச் சம்பவம் நடந்தது.

கும்பகோணத்தில் வேத ஆகம பாடசாலை ஒன்று இருந்தது. பெயர் பெற்றிருந்த அந்தப் பாடசாலை முன்பாக போராட்டம் நடத்திய

திராவிடர் கழகத்தினர் பெரும் ரகளையில் குதித்தார்கள். உள்ளே நுழைந்து அனைத்தையும் அடித்து நொறுக்கியதோடு வேதப் புத்தகங்களையும் கொளுத்திப் போட்டார்கள். பாடசாலை மாணவர்கள் உட்பட நிர்வாகிகளையும் தாக்கியிருக்கிறார்கள். அந்தப் படங்களும் செய்திகளும் குமுதம் வார இதழில் வந்திருந்தது. அதைக் கையோடு எடுத்துக்கெண்டேன். பிரதமர் அவர்களை சந்தித்தபோது ‘பார்த்தீர்களா’ என்று நடந்திருப்பதை விவரித்தேன். இப்படி ஒரு மோசமான தாக்குதலை நடத்தியவர்கள் மீது தி.மு.க. அரசு ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை ஏன்? என்பதையும் கூறினேன்.

பிரதமருக்கு முகம் மாறியது. எது எப்படி இருந்தாலும் இப்படியான தாக்குதலில் அவருக்கு உடன்பாடில்லை என அது காட்டியது. அதிலும் வேத ஆகம புத்தகங்களை எரித்ததில் அவருக்கு வருத்தம் தெரிந்தது. மாணவர்களும் நிர்வாகிகளும் தாக்கப்பட்டதும் சரியானதல்ல எனக் கருதினார். தாக்குதல் நடத்தியவர்கள் மீது என்ன விதமான நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதையும் பிறகு கேட்டறிந்தார். இது ஒரு முக்கிய மாற்றமாக இருந்தது.

அடுத்த சில நாட்கள் கழிந்து ஒரு மாலைப் பொழுதில் வாழப்பாடியாரின் (டெல்லி) வீட்டிற்குச் சென்றேன். பழைய டெபுடி ஸ்பீக்கர் லட்சுமணனும், தருமபுரி பொன்னுசாமி ஆகியோரும் அங்கே இருந்தார்கள். அங்கிருந்த ஷோபா சீட்டில் அமர்ந்தேன். ராமமூர்த்தி தொலைபேசியை விடாமல் சுழற்றிக்கொண்டிருந்தார். சென்னைக்கு அருகே இருக்கும் மறைமலை நகர் ரயில் நிலையத்திற்கு காமராஜரின் பெயரை வைக்கச்சொல்லி போராட்டம் நடத்துங்கள். அந்தப் போராட்டம் தமிழகம் முழுவதும் ஒரே நேரத்தில் நடத்த வேண்டும் என உத்தரவிட்டுக் கொண்டிருந்தார். எனக்கு அடுத்து என்ன நடக்கப்போகிறது என்று புரிந்தது. தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு பிரச்சனை உருவாக்கப்போகிறார் ராமமூர்த்தி எனத் தெரிந்தது. தெரிந்ததும் சிரிப்பு வந்தது. அது என்னையும் அறியாமல் வந்த சிரிப்பு. ‘என்ன தலைவரே சிரிப்பு’ என்றார் ராமமூர்த்தி. நான் என்னவென்று சொல்வது? ஒன்றுமில்லை, நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள் என்றபடி மீண்டும் சிரித்தேன்.

நான் சிரித்ததற்கான காரணம் இதுதான்.. கருணாநிதி, தி.மு.க.வை விட்டு எம்.ஜி.ஆரை நீக்கியபோது பெரும் ரகளை ஏற்பட்டது. எம்.ஜி.ஆருக்காக வேண்டி இளைஞர்களும் மாணவர்களும் அணிதிரண்டு

விட்டார்கள். அதற்குத் தொடக்கமே நான் திருச்சியில் நடத்திய போராட்டம்தான்.

பிறகு இளைஞர்கள் எழுச்சியோடு பொதுமக்களும் சேர்ந்துகொள்ள அது கருணாநிதிக்கு பெரும் நெருக்கடியாக அமைந்தது. எங்கு பார்த்தாலும் கலவரம். அந்த நேரத்தில் பெருந்தலைவர் காமராஜர், "கருணாநிதி, எம்.ஜி.ஆர் இரண்டு பேருமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்" என்று அறிக்கைவிட்டார். அந்த அறிக்கையே போராட்டத்தை பெரிதும் வளர்க்காமல் முடக்கிப் போட்டது.

அப்போது **1973-** மே மாதம் மகாபலிபுரத்தில் மாணவர் காங்கிரஸுக்கான பயிற்சி முகாம் ஒன்று பெருந்தலைவர் காமராஜர் முன்னிலையில் நடந்தது. தனுஷ்கோடி ஆதித்தன், ஜெயமோகன், பட்டுக்கோட்டை ராமசாமி, முனைவர் பாஷா, வக்கீலாக இருந்த பட்டுக்கோட்டை ராஜேந்திரன் ஆகியோர் உட்பட பலர் பங்கேற்ற அரசியல் வகுப்பு. அப்போது பட்டுக்கோட்டை ராஜேந்திரன்தான் "ஏய் வேலுசாமி, எல்லோர்கிட்டேயும் கேள்விகேட்ப இல்ல. இப்ப தலைவர்கிட்ட கேளேன் பார்ப்போம்" என கிண்டலடித்துக் கொண்டிருந்தார். "ஏண்டா, சந்தேகம் என்றால் கேட்டுதான் ஆகவேண்டும். இதில் என்ன தயக்கம் வேண்டியிருக்கு" என்றபடியே கூட்டத்தில் இருந்து எழுந்தேன்.

"ஐயா, எனக்கு ஒரு சந்தேகம். நாம இப்போது கருணாநிதியை ஆதரிக்கின்றோமா? எதிர்க்கின்றோமா? விளக்கம் வேண்டும்" என்றேன்.

அப்போது பெருந்தலைவர், "ஆமாம் பெரிய சந்தேகம். உட்காருன்னேன்" என்றபடி கையமர்த்தினார். அதைக்கேட்டதும் எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். நானும் பேசாமல் உட்கார்ந்து விட்டேன்.

சில நொடிகளுக்குப் பிறகு என்ன நினைத்தாரோ தெரியவில்லை, "ஏய் எழுந்திரு. நீ என்ன கேள்விய கேட்டேன்னேன். திரும்பச் சொல்லு" என்றார், "இல்லை ஐயா, இப்போ தி..மு.க.விற்கு எதிராக ஒரே நெருக்கடி. எங்க பார்த்தாலும் கலவரம். இந்த நேரத்தில் நீங்க பேசாம இருந்திருந்தாலே கருணாநிதிக்கு மேலும் பெரிய நெருக்கடி வந்திருக்கும். அவர் ஆட்சியை இழந்திருப்பார். ரெண்டு பேரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைன்னு பொதுவா சொன்னதால கருணாநிதிக்கான எதிர்ப்பு


குறைஞ்சிருக்கு. நமக்கு எதிரான தி.மு.க. ஆட்சி தப்பியிருக்கு. அதனாலதான் நீங்க கருணாநிதியை ஆதரிக்கிறீர்களா, நம்ம நிலைப்பாடு என்ன என்று கேட்கிறேன்." என்று விளக்கமாக கேட்டேன்.

பட்டென்று கோபப்பட்ட பெருந்தலைவர், "பைத்தியக்காரா பைத்தியக்காரா. நீ என்ன மாதிரி யோசிக்குறேன்னேன். அது நல்லதான்னேன். நாளைக்கு நீயே ஒரு முதல்வரா வந்துடறேன்னு வச்சுக்கோ. அப்போ உன்னை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்களா? நாலுபேர் எதிர்க்கச் செய்வார்கள்தானே. பிடிக்காதவர்களும் ஆகாதவர்களும் இருப்பார்கள்தானே. அப்படி பிடிக்காதவர்கள் எல்லாம் உனக்கு எதிரா, கலகம் கலவரம்னு செய்து ஆட்சியைவிட்டு உன்னை இறக்குறது சரியான்னேன். ஜனநாயகமான்னேன். ஒரு கட்சியைப் பிடிக்கவில்லை என்று வன்முறையில் இறங்குறது தப்புன்னேன். பொதுமக்களோட அமைதிய கெடுக்கிறது சரியில்லன்னேன். அவர் செய்தது தப்பு என்றால் மக்களிடம் போங்கன்னேன். பிரச்சாரம் பண்ணுங்கன்னேன். அடுத்த தேர்தலில் ஓட்டுப் போட்டு அவரை மாற்றுவதற்கு வழி செய்யனும்னேன். அதைவிட்டுவிட்டு இப்படி கலவரத்தின் மூலம் ஆட்சிக் கவிழ்ப்பு செய்யனும்னு குறுக்கு வழியில் யோசிக்கக் கூடாதுன்னேன். அப்படி யோசிக்கிற மாதிரியான ஆட்கள் இந்தக் கட்சிக்கே வேண்டாம். கட்சியைவிட்டே ஓடிப்போயிடுங்கன்னேன்" என்று கடுமையாகக் கூறி விளக்கம் அளித்தார்.

ஆனால் இன்று? அதே காங்கிரஸ் கட்சி. அதே தி.மு.க. அன்று காமராஜர் தலைமையில் இருந்த காங்கிரஸ், இன்று வாழப்பாடி ராமமூர்த்தி தலைமையில். எப்படி மாறியிருக்கிறது என்று நினைத்தேன். சிரித்தேன்.

# தி.மு.க. ஆட்சி டிஸ்மிஸ்...

*உங்களின் தி.மு.க. ஆட்சி டிஸ்மிஸ் ஆவது உறுதி. ஆண்டவனாலும் அதைத் தடுக்க முடியாது. காப்பாற்றவும் முடியாது. வேண்டுமானால் மற்ற பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துகொள்ளுங்கள். அதைத்தான் என்னால் சொல்ல முடியும்*



இப்படியான சூழலில்தான் ஒருநாள் மாலை எனக்கு அந்தத் தொலைபேசி அழைப்பு வந்தது. எனது நெருங்கிய நண்பராகவும் அப்போது தி.மு.க.வின் எம்.பி.யாகவும் இருந்த காளிமுத்துவின் குரல். சென்னையில் இருந்து முக்கியமான விஷயம். அவசரமா சந்திச்சாகணும் எனக் கேட்டார். நாங்கள் இருவரும் அடிக்கடி சந்தித்து நாட்டு நடப்புகளைப் பற்றி பேசிக்கொள்வதுண்டு. அப்படியொரு சந்திப்புக்காகத்தான் இருக்கும் என நினைத்தபடியே “அதற்கென்ன,

பார்த்துட்டா போச்சு. இப்ப டெல்லியில் இருக்கேன். நாளை காலையில் சென்னை வந்துவிடுவேன். உங்களை சந்தித்த பிறகு திருச்சி போகிறேனே" என்றேன். "வேண்டாம், வேண்டாம். சென்னையில் வேண்டாம். டெல்லியிலேயே இருங்கள். காலையில் உங்களை அங்கு வந்து சந்திக்கின்றேன்" எனக்கூறி படபடத்தார். எனக்கு ஏதும் புரியவில்லை. "சரி" என்று கூறி காத்திருந்தேன்.

சொன்னபடியே அடுத்த நாள் வந்தார் காளிமுத்து. மற்ற விஷயங்கள் பற்றி ஒரு ஐந்து நிமிடம் பேசினோம். பொறுமையிழந்து "அப்படி என்னய்யா முக்கிய தகவல்" என்று கேட்டேன்.

"வேலுசாமி, நான் உன் நண்பனாக சந்திக்க வரவில்லை. எங்கள் தலைவர் சொன்னதின் பேரில்தான் சந்திக்க வந்திருக்கின்றேன்" என்றார். உங்கள் தலைவரால் கடும் விமர்சனத்துக்கு ஆளாகாதவர்களே எவரும் இல்லை. தேசப்பிதா காந்தி, மனிதப் புனிதர் காமராசர் மட்டுமல்ல தந்தை பெரியார் கூட அவரிடமிருந்து தப்பியதில்லை. எனக்கு விவரம் தெரிந்த நாள்முதல் அவர் மீது நெருப்பு வார்த்தைகளால் வெறுப்பை மட்டுமே உமிழ்ந்திருக்கிறேன். ஒரே மேடையில் நேருக்கு நேராக கேலிபேசி இருக்கின்றேன். ஆனால் என் மீது மட்டும் அவர் கோபம் கொண்டதே இல்லை. நான் என் குணத்தை இன்று வரை மாற்றிக்கொண்டதே இல்லை. அப்படி ஒரு விசித்திர பந்தம் எங்களுக்குள். அவரா என்னைப் பார்க்கச் சொன்னார். "புரியவில்லையே என்னயா சொல்கிறீர்கள்" என்றேன்.

"ஆமாம் வேலுசாமி, என் தலைவரின் உத்தரவுபடிதான் சந்திக்க வந்தேன். எங்கள் தி.மு.க. ஆட்சி டிஸ்மிஸ் என்ற பேச்சு வலுவாக அடிபடுகிறது. இன்று நாளை, இந்த வாரம், அடுத்த வாரம் என்ற வதந்தியிலேயே நாள் ஓடுகிறது. நம்ம நாஞ்சில் மனோகரனுக்கு பிரதமர் சந்திரசேகர் நண்பர். அந்தப் பழக்கத்தில் சந்தித்திருக்கிறார். ஆட்சிக் கலைப்பு பற்றி கேட்டிருக்கிறார். அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. அப்படி நடக்காது என்று தெரிவித்ததாக தலைவரிடம் கூறியிருக்கிறார். தலைவருக்கு அதில் நம்பிக்கையில்லை.

என்னை அழைத்து, 'திருச்சி வேலுசாமி உனக்கு நண்பர்தானே. அந்தத் தம்பிக்கு எல்லாமும் தெரியும். நடக்கும் உண்மை என்ன என்பதை அறிந்து வா. அதோடு டிஸ்மிஸ் என்பதைத் தடுப்பதற்கான வழிமுறை எதுவென்றாலும் அதை செய்யச் சொல்லுங்கள். என்ன தேவையோ அதைத் தாராளமாகச் செய்துவிடலாம்' என்று அனுப்பி

வைத்திருக்கிறார். அது விஷயமாகத்தான் வந்திருக்கிறேன் வேலுசாமி. வேண்டும்ங்கிறதைச் சொல்லுப்பா. தாராளமா செய்யக் காத்துக்கிட்டிருக்காரு. யாருக்கு என்ன செய்யனும்னாலும் சரிங்கிறார்" என்றார். நண்பர் காளிமுத்துவைப் பார்த்து சிரித்தபடியே, "என்ன கொடுப்பீர்கள்? எம்.ஜி,ஆர். பற்றி உங்களுக்குத் தெரியும்தானே. அவரைவிட வள்ளல் யாராவது இருக்கிறார்களா? வாரிக்கொடுக்கத் தயங்காத அந்த மனிதர் கேட்டேபோதே நான் வேண்டாம் என்று உதறிவிட்டு வந்தவன். அவரைவிட உங்களின் தலைவர் அள்ளிக் கொடுப்பவரா?" என்று கிண்டலடித்தேன். வேலுசாமி இது விளையாடும் நேரமில்லை என்று சீரியஸானார். என்ன செய்யவேண்டும் சொல் என்றார்..

நான் அவரது முகத்தை உற்றுப் பார்த்தபடியே, "நீங்கள் எனது நண்பர். அதனால் பொய் சொல்ல விரும்பவில்லை. உண்மை என்னவோ அதைச் சொல்கிறேன்.

உங்களின் தி.மு.க. ஆட்சி டிஸ்மிஸ் ஆவது உறுதி. ஆண்டவனாலும் அதைத் தடுக்க முடியாது. காப்பாற்றவும் முடியாது. வேண்டுமானால் மற்ற பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துகொள்ளுங்கள். அதைத்தான் என்னால் சொல்ல முடியும்"

என்றேன். காளிமுத்துவின் முகம் மாறிப்போனது. இதைத் தவிர்த்து வேறு வழியில்லை என்பதை தெளிவாக கூறியதோடு, 'எதையாவது எடுத்துக்கொண்டு வந்து' யாரிடமாவது கொடுத்து தடுக்க நினைத்தாலும் நடக்காது. கொடுத்து ஏமாந்து போகாதீர்கள் என்றேன். நீண்டகால நண்பர் என்பதால் காளிமுத்துவிற்கு என் சுபாவம் தெரியும். இல்லாததை சொல்லமாட்டேன். உண்மை என்னவோ அதைத்தான் சொல்வேன் என்பதை அறிந்தவர். இதற்கு மேல் என்ன செய்யமுடியும். நடப்பது நடக்கட்டும் என விட்டுவிட வேண்டியதுதான். பார்க்கலாம் என்று பேச்சு தொடர்ந்தது. அப்போது உங்கள் தலைவர் கருணாநிதி ஆட்சியை காப்பாற்றிக்கொள்ளவேண்டி வள்ளலாக மாறியிருக்கிறார் பார்த்தீரா? என்று கிண்டலடித்தேன். "ஆமாம்பா எல்லாரும் உன்னை மாதிரி கிறுக்கனா இருப்பான்னு நினைக்கிறே. கொடுக்க வந்த தெய்வம் எம்.ஜி.ஆர். கொடுக்க முன்வந்ததையும் வேண்டாம்னு உதறியிருப்பாயா?" என்றார் காளிமுத்து. அது என்ன விஷயம் என்பதை இங்கே கூறித்தான் ஆக வேண்டும்.

**1972-** ம் ஆண்டு.

அதுவரை தி.மு.க.-வின் நட்சத்திர நாயகனாக இருந்த எம்.ஜி.ஆர். அவர்களை கட்சியைவிட்டே நீக்கினார் கருணாநிதி. அது மக்களிடையே பெரும் அதிர்ப்தியை எற்படுத்தியது. சலசலப்பு முனுமுனுப்புமாக இருந்ததே ஒழிய அதைத்தாண்டி ஒன்றும் நடக்கவில்லை. அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் எம்.ஜி.ஆர். அவர்களும் தவிப்போடு நின்ற நேரம். ஒரு எதிர்பாராத அதிர்ச்சி தாக்குதல் நடந்தேறும்போது யாராலும் அப்படித்தான் இருக்கமுடியும். தி.மு.க.-விற்காக, கருணாநிதிக்காக எம்.ஜி.ஆர். அவர்கள் உழைத்த உழைப்பு கொஞ்சநஞ்சமல்ல. கட்சியைவிட்டு நீக்கியபிறகு அதிர்ச்சி இருக்கத்தானே செய்யும்.

அது நடந்த நான்காவது நாள். மாணவர் காங்கிரஸ் தலைவராக இருந்த நண்பர் குப்புசாமியை பார்ப்பதற்காக மோட்டார் பைக் எடுத்துக்கொண்டு ஸ்ரீரங்கம் சென்றேன். அவர் வீட்டில் இல்லை. ஆற்றில் குளித்துக் கொண்டிருப்பதாக அவரது அம்மா சொன்னார். அதனால் காவிரி ஆற்றுக்குச் சென்றேன். அங்கு மேலும் இரண்டு நண்பர்களோடு நீரில் குதித்து விளையாடிக்கொண்டிருந்தார். என்னைப் பார்த்ததும் அடடே..வா..வா..நீயும் வந்துடு. சேர்ந்து விளையாடலாம் என வலியுறுத்தினார்கள். வேறு வழியின்றி அந்தக் குளியல் ஜோதியில் நானும் குதித்தேன்.

அப்படி குளித்துக்கொண்டிருந்த போதுதான் “ஏன்யா குப்பா, கருணாநிதி எம்.ஜி.ஆரை கட்சியைவிட்டு நீக்கியிருக்காரே. அது தப்பில்லையா”-என்றேன். “ஆமாம். தப்புதான். அதற்கு நாம என்ன செய்வது” என்றான்.

“இல்லைடா. அதைவச்சு நாம ஏதாவது அரசியல் பண்ணலாமே” என்றேன். “என்னடா நீ...நாம காங்கிரஸ் ஆளுங்க. அவர்கள் தி.மு.க. அந்த கட்சிக்குள்ளாக நடந்த விஷயத்தை வச்சு, நாம என்னடா அரசியல் செய்யமுடியும்” என்றான்.

“அடப்போடா..ஏன் கருணாநிதிக்கு எதிரா நெருக்கடியை கொடுக்கலாமில்ல. அப்படி யோசிச்சுப்பாரேன்” என்றதும் “அட ஆமாம். ஆனால் நாம எப்படி செய்யமுடியும். காங்கிரஸ் ஆளாயிருக்கோமே” என்றான்.

“நம்ம முகத்தை ஏன் காட்டனும் ?. யாரையாவது விட்டு செய்யவைப்போம். அவர்களுக்குப் பின்னால் நாம் இருப்போம். நம்ம

கட்சியை காட்டாம அவர்களை வழிநடத்துவோம். நாம் நேரடியாக இல்லாமல் பார்த்துக்கொண்டால் போகிறது" என்றேன். "ஆமாம் இந்த யோசனை நன்றாகத்தான் இருக்கு" என்றான். அதன் பிறகு பிஷப் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த கணபதி, செயின்ட் ஜோசப் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த பேட்ரிக் ஆகிய இருவரும் நண்பர்கள். அவர்களையும் சேர்த்துக்கொண்டு ஒரு முடிவுக்கு வந்தேன்.

இறுதியாக அந்த இரண்டு நண்பர்களை முன்வைத்து 'எம்.ஜி.ஆர். அவர்களை தி.மு.க-.வை விட்டு நீக்கியதைக் கண்டித்து, 'கல்லூரி மாணவர்கள் மாபெரும் கண்டனப் பேரணி' என்று என் கைப்பட ஒரு அறிக்கை எழுதினேன். அவர்களையும் உடன் அழைத்துக்கொண்டு திருச்சி மாலைமுரசு நாளேட்டின் அலுவலகத்திற்குச் சென்று கொடுத்தேன். நினைத்ததைவிட முக்கிய செய்தியாக போட்டிருந்தார்கள்.

அந்தச் செய்தி அறிக்கையைப் பார்த்த போலீஸ், ஆண்டாள் தெருவிலிருந்த கணபதியின் வீட்டைத்தேடிப் போனது. யார் நடத்துகிறார்கள். எத்தனைபேர் கலந்துகொள்கிறார்கள் என்று துளைத்தெடுத்ததோடு போலீஸ் அனுமதியில்லாமல் நடத்தக்கூடாது. அப்படி நடத்தவும் விடமாட்டோம். முன்கூட்டியே கைது செய்யவேண்டியிருக்கும், என்றெல்லாம் கணபதியை மிரட்ட, அவர் பயந்துபோய் என்னிடம் ஓடிவந்தார்.

இதற்கு ஏனப்பா பயப்படவேண்டும், போலீஸ் அனுமதி வாங்கவேண்டும். அது யார் பெயரில், யார் தலைமையில் என்பதுதானே பிரச்சனை. விடுங்கள் அதை நான் பார்த்துக்கொள்கிறேன் என்றதோடு நில்லாமல் என்னுடைய பெயரிலேயே எனது தலைமையிலேயே மாணவர் ஊர்வலம் என்று விண்ணப்பம் எழுதினேன். திருச்சிக்கு அப்போது டி.எஸ்.பி.தான் கண்ட்ரோல். அவர்தான் உயர் அதிகாரி. அவரிடம் நேரில் சென்று முறைப்படி மனுவைக்கொடுத்து அனுமதியை வாங்கினேன். இனி எந்த பிரச்சனையும் இல்லை என்றானது.

ஆனால் மாணவர்கள் கூட்டம் வருமா என்ற சந்தேகம்.

ஆனாலும் நான் மற்றும் குப்புசாமி மா.பாலன், நிஜவீரப்பா, ஷரீப் உட்பட ஒரு முப்பத்தைந்து மாணவர்கள் ஒன்றுகூடி நின்றிருந்தோம். ஊர்வலம் புறப்படவேண்டிய கல்லூரி வாசல்முன்பாக பார்த்தால் இரண்டே இரண்டு மாணவர்கள் மட்டுமே நின்றிருந்தார்கள். அந்த இரண்டுபேரில் ஒருவர் திருநாவுக்கரசுடன் நண்பராக இருந்த சந்திரன். மற்றொருவர்

சுப்ரமணியன். இரண்டுபேருமே தீவிர எம்.ஜி.ஆர் ரசிகர்கள். மற்ற மாணவர்கள் எல்லோரும் கல்லூரிக்கு உள்ளாக நின்று வேடிக்கை பார்த்தபடியே நின்றார்கள். யாரும் வெளியே வரவில்லை. தயக்கம் காட்டினார்கள்.

சந்திரன் நாங்கள் நின்றிருந்த இடத்திற்கு வந்து “பயமா இருக்கண்ணே. ஒருத்தரும் வரலே” என்று புலம்பி அழுதார். “கவலைப்படாதேப்பா எல்லாம் சரியாக நடக்கும். நீ வா” என்றபடியே என்னுடன் இருந்த 35 மாணவர்களோடு சென்று கல்லூரி வாசல் முன்பாக நின்றோம். கருணாநிதிக்கு எதிரான முழக்கத்தை எழுப்பினோம்.

அந்த நேரத்தில் எங்களின் பாதுகாப்பிற்காக வந்திருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் அருகில் வந்து “கொடுத்த நேரம் முடியப்போகிறது. சீக்கிரம் புறப்படுங்கள். இல்லையென்றால் கலைத்துவிடுவேன்” என்று மிரட்டும்விதமாக பேசினார். அந்த இன்ஸ்பெக்டர் பெயரும் வேலுசாமிதான்.

எனக்கு எதிர்பார்த்த மாணவர்கள் இல்லையே என்ற எரிச்சல் ஒருபுறம். போலீஸின் மிரட்டல் மறுபுறம். இதையே ஒரு வாய்ப்பாக மாற்றினால் என்ன? மனதிற்குள் மின்னலாய் ஒரு திட்டம். அந்த போலீஸ் இன்ஸ்பெக்டருடன் மோதிவிடுவது. அதைப் பார்த்தாவது கல்லூரி உள்ளேயே இருக்கும் மாணவர்கள் வெளியே வரமாட்டார்களா என்ற கணிப்பு.

இதற்குள் அந்த இன்ஸ்பெக்டரின் மிரட்டலோடு அவருடன் இருந்த போலீஸின் அதட்டலும் அதிகரித்தது. எனக்கும் கோபம் எகிறியது. ‘இதோ பாருங்கள். ஊர்வலத்திற்கு அனுமதி, பாதுகாப்பு. அதுதான் உங்களிடம் கேட்டிருந்தோம். பேசாமல் ஒதுங்கிநின்று பாதுகாப்பைக் கொடுங்கள். அதுமட்டுமே உங்கள் வேலை. அதை விட்டுவிட்டு இந்த நொடியில் இந்த நிமிடத்தில் என்று நேரம்கொடுத்து விரட்டுவது உங்கள் வேலையல்ல’ என்று சத்தமிட, பதிலுக்கு போலீஸ் எகிறிக்குதிக்க அது வாக்குவாதமாகி தள்ளுமுள்ளு என்றளவிற்குப் போனது.

அவ்வளவுதான். இதைப் பார்த்துக் கொதித்துப்போய் கல்லூரிக்கு உள்ளே நின்ற மாணவர்கள் எகிறிப் பாய்ந்தபடி வெளியேவந்து எங்களோடு நின்றுகொண்டார்கள். அப்போது கூட்டம் ஒரு 75 மாணவர்கள் என்றளவில் வந்திருந்தது.

இதுபோதும் என்று கருணாநிதிக்கு எதிராகவும், எம்.ஜி.ஆருக்கு ஆதரவாகவும் முழக்கமிட்டபடியே நகரத்தொடங்கினோம். அந்த சந்திரனும் நானும் முன்னே நடக்க மற்றவர்கள் ஒரு ஐந்தடி இடைவெளியில் பின் தொடர்ந்தார்கள். அப்போதுதான் தான் வைத்திருந்த தி.மு.க. கொடியை ஒரு கழியில் மாட்டி தூக்கிப்பிடித்தான் சந்திரன். அதைப் பார்த்ததும் எனக்கு எரிச்சல் கூடியது. "என்னப்பா இது. தி.மு.க. கருணாநிதிக்கு எதிராகத்தானே இந்தப் போராட்டம்?. அந்தக் கட்சி கொடியையே பிடித்துக்கொண்டு வந்தால் பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள். ஆதரவா எதிர்ப்பா என்ற குழப்பம்தானே வரும்" என்றேன்.

"என்னண்ணே பண்றது. வேற கொடியவா பிடிக்கமுடியும். இதைத்தானே பிடிக்கமுடியும்" என்றார் சந்திரன். கொஞ்சம் இருப்பா என்று சுற்றும் முற்றும் பார்த்தேன். பக்கத்திலே இருந்த ஒரு டீ கடையில், அண்ணா படம் போட்ட காலண்டர் மாட்டப்பட்டிருந்தது. அதைப் பார்த்தவுடனேயே ஒரு மின்னல் வெட்டியது. இரண்டு அண்ணா படத்தை எடுத்துவரச் சொன்னேன். கூடவே பின்களையும் வாங்கிவரச் சொன்னேன்.

தி.மு.க.-வின் கொடியின் மையத்தில் முன்பின் என்று இரண்டு பக்கமும் அண்ணா படத்தை வைத்து பின் குத்தினோம். அது பார்ப்பதற்கு வித்தியாசமாக தி.மு.க. -வின் கொடிக்கு எதிராக இருந்தது. அவ்வளவுதான், புறப்படுவோம். தூக்கிப்பிடிங்கப்பா கொடியை என்றபடியே நடக்கத் தொடங்கினோம். ஊர்வலம் நகர நகர மாணவர் கூட்டம் வந்து சேர்ந்தபடியே இருந்தது. அதற்குக் காரணம் இன்ஸ்பெக்டர் வேலுசாமியோடு செய்த தகராறுதான். அது அப்படியே எல்லா கல்லூரிகளுக்கும் பரவி மாணவர்கள் கூட்டம் வந்து சேர்ந்தபடியே இருந்தது

கடைசியாக திருச்சி ஜங்ஷனை வந்தடைந்தபோது இரண்டாயிரத்துக்கும் மேலான மாணவர்கள் திரண்டுவிட்டிருந்தார்கள். வழிநெடுகிலும் கருணாநிதிக்கு எதிரான கண்டனக் குரல்தான் அதிர்ந்தபடி இருந்தது. அந்தப் பேரணியின் முடிவில்...

முதல்வர் கருணாநிதியே. கள்ளச் சாராயத்தை ஒழிக்கமுடியாது. அதனால்தான் அரசு சாராயக்கடையை திறந்தேன் என்கிறாயே. திருட்டைக்கூடத்தான் ஒழிக்க முடியவில்லை. அதனால் திருடுவது சட்டப்படி குற்றம் இல்லை என்பாயா? விபச்சாரத்தைக்கூட ஒழிக்க

முடியவில்லை. அதனால் அரசு விபச்சார விடுதியை திறந்துவிடுவாயா என்று தொடங்கி எம்.ஜி.ஆருக்கு ஆதரவாக முதல்வர் கருணாநிதிக்கு எதிராக பேசியது எல்லாம் மாணவர்களிடையே கொந்தளிப்பு அலையாக எழுந்தது. தமிழகத்தில் மட்டுமல்ல உலகிலேயே எம்.ஜி.அருக்கான முதல் ஆதரவுப் போராட்டம் அதுதான்.

திருச்சி மாணவர்களின் அந்த எழுச்சிமிகு பேரணி போராட்டப் படங்களும் செய்தியும் அடுத்தநாள் தினமலர் நாளேட்டில் பெரிய அளவில் போட்டிருந்தார்கள். அது தமிழகம் முழுவதும் மாணவர்களிடையே காட்டுத் தீயாக பரவியது.

அந்த செய்திப்படங்களைப் பார்த்துவிட்டு அடுத்தநாள் விருத்தாசலத்தில் கூடிய கல்லூரி மாணவர்கள் எம்.ஜி.ஆருக்கு ஆதரவாக தி.மு.க.வை கண்டித்து பெரும் ஊர்வலமாக புறப்பட்டார்கள். அவர்களோடு மற்ற இளைஞர்களும் சேர்ந்துகொள்ள, எழுச்சிப் பேரணியாக மாறியது. அது கருணாநிதிக்கும் அவரது போலீசுக்கும் தாங்கமுடியவில்லை. திருச்சியில் நடந்ததைப்போல் விட்டுவிடக்கூடாது என்று தடியடியில் இறங்கியது போலீஸ். அது முற்றி துப்பாக்கிச் சூடுவரை போனது. குண்டடிப்பட்டு இரண்டு மாணவர்கள் இறந்துபோனார்கள். தமிழகமே பற்றி எரிந்தது. அதிலிருந்துதான் எம்.ஜி.ஆரின் எழுச்சி அலை எழுந்தது.

அந்த சம்பவத்திற்குப் பிறகு சென்னையில் சட்டக்கல்லூரி மாணவர்களாக இருந்த ராஜன் செல்லப்பா, நாஞ்சில் வின்சென்ட், ஆத்துர் வெள்ளைசாமி, பட்டுக்கோட்டை ராமச்சந்திரன், அரியலூர் புருஷோத்தமன் ஆகியோர் எம்.ஜி.ஆர். அவர்களை சென்று சந்தித்திருக்கிறார்கள். அவரோடு பேசியிருக்கிறார்கள்.

அப்போது எம்.ஜி.ஆர். அவர்கள், “திருச்சியில் வேலுசாமி என்பவர் இருக்கிறார். அவர்தான் இந்த மாணவர்கள் எழுச்சிப் போராட்டத்தின் துவக்கம். அவரை சந்தித்துப்பேசி அழைத்து வாருங்கள். சரியாக இருக்கும்” என்று தெரிவித்துள்ளார். அதனையடுத்து அந்த மாணவர் அணி, திருச்சி வந்தது. அப்போது மார்டன் லாட்ஜில் தங்கியிருந்தேன். நேரில்வந்து சந்தித்தார்கள். எம்.ஜி,ஆர். அவர்களின் விருப்பத்தைச் சொல்லி என்னை அழைத்துவரச் சொன்னதாக பேசினார்கள்.

“அட என்னப்பா நீங்கள்?. நான் காங்கிரஸ்காரன். காமராஜரின் தொண்டன். நான் எப்படி உங்களோடு வரமுடியும். நான் கருணாநிதிக்கு எதிராக ஒரு போராட்டத்தை நடத்தவேண்டும் என்றுதான் மாணவர் போராட்டத்தை நடத்தினேன். அது உங்களுக்குப் பயன்பட்டிருக்கிறதென்றால் ரொம்ப சந்தோசம். என்னால் பெருந்தலைவரை விட்டு வரமுடியாது. அதுதான் உண்மை. அண்ணனிடம் (எம்.ஜி.ஆர்) இதைத் தெரிவித்துவிடுங்கள். என்னை தவறாக நினைக்க வேண்டாம்” என்றுகூறி மறுத்து அனுப்பினேன். அவர்களும் அதை அப்படியே அண்ணன் எம்.ஜி.ஆர் அவர்களிடம் தெரிவித்திருக்கிறார்கள்..

பிறகு நான் அந்தச் சம்பவத்தை மறந்தேபோனேன். தமிழகத்தில் சுற்றிச் சுழன்று களமாடிய எம்.ஜி.ஆர் அவர்கள், அடுத்து ஐந்தே ஆண்டுகளில் **1977** ஜூன் **30-**ம் தேதி தமிழக முதல்வராக அமர்ந்தார். எமர்ஜென்ஸி காலத்தில் பெருந்தலைவர் காமராசரும் இயற்கை எய்தினார். அப்போது முதல் முறையாக திருச்சிக்குப் பயணம் செய்தார் எம்.ஜி.ஆர். அவர்கள்.

அதற்கு முந்தைய நாள் ஸ்ரீரங்கம் சௌந்திரராஜன் என்னைத் தேடி, நான் தங்கியிருந்த மாடர்ன் லாட்ஜிக்கு வந்தார். புதிய அமைச்சரவையில் அவர் மந்திரியாகியிருந்தார். அப்படியானவர் தேடி வருகிறாரே என்ற வியப்பு. என்னவென்று கேட்டேன். “ஒன்றுமில்லை வேலுசாமி, தலைவர் நாளைக்கு திருச்சி வருகிறார் தெரியும்தானே. அப்போது உங்களை கட்டாயம் சந்தித்தாக வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார். தயவுசெய்து எதையாவது சொல்லி தவிர்க்காதே.” என்றார். என் மனதிற்குள் குழப்பம். ஆனாலும் வருவதாக சம்மதித்தேன்.

அடுத்தநாள் காலையிலேயே வந்துவிட்டார் ஸ்ரீரங்கம் சௌந்திரராஜன். அவரது காரிலேயே ஏற்றிக்கொண்டு திருச்சி ஜங்ஷன் ரயில் நிலையத்திற்குச் சென்றார். மக்கள்கூட்டமோ கட்டுக்கடங்காமல் இருந்தது. பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

அங்கே அமைச்சர் ஸ்ரீரங்கம் சௌந்திரராஜன், நான், மாவட்டச் செயலாளர் சந்திரராஜன் ஆகிய மூன்றுபேரை மட்டும் ப்ளாட்பாரத்தில், முதல்வர் வந்திறங்கும் ரயில்பெட்டிக்கு நேராக நிறுத்தி சுற்றி போலீஸ் வளையத்தை அமைத்தார்கள்.

ரயில் வந்து நின்றது. முதல்வர் எம்.ஜி.ஆர். பெட்டியைவிட்டு இறங்கி எதிரே பார்த்தார். மற்ற இருவரும் அவருக்கு ஏற்கெனவே

தெரியும். புதியவனான நான்தான் வேலுசாமி என்பதை நொடிப்பொழுதில் உணர்ந்து கையெடுத்துக் கும்பிட்டபடியே என்முன் வந்து நின்றார். பதிலுக்கு நானும் கும்பிட்டபடியே நின்றேன். அருகில் நின்ற எம்.ஜி.ஆர். என் தோள்மீது கைபோட்டு “என்ன வேலுசாமி நலமா” என்றார். “நலமா இருக்கேண்ணே” என்றேன்.

அந்த தெய்வீக சிரிப்போடு “வேலுசாமி அப்போ (1972-ல்) கூப்பிட்டப்போ நான் ஐயாவின் தொண்டன். அவரைவிட்டு வரமாட்டேன் என்றாய். நானும் ஐயாவோட தொண்டன்தான். இப்போதுதான் ஐயா (பெருந்தலைவர் காமராஜர்) இல்லையே. என்கூட வந்திடுங்க. நாம எல்லாம் ஐயாவின் பாதையில் போவோம். என் ஆசை அதுதான். உங்களை கௌரவமாக நடத்துவேன் வேலுசாமி. வந்துடுங்க” என்று என் முகத்தைப் பார்த்தபடியே கேட்டார். ஆனாலும் நான் “இல்லைங்கண்ணே. நீங்க என்மேல காட்ற அன்புக்கு நன்றிங்கண்ணே. நான் இப்படியே இருந்து விடுகிறேன். ஐயாவை மறந்துவிட்டு என்னால் ஒரு முடிவையும் எடுக்கமுடியவில்லை. நான் கதர்ச்சட்டைக்காரனாகவே இருந்துவிட விரும்புகிறேன். மன்னிக்கனும்ணா” என்று கூறியதும் என்தோளை தட்டிக்கொடுத்து “இல்லை வேலுசாமி. நீங்க என்கூட வாங்க. இப்போ இல்லேன்னாகூட உங்களுக்கு எப்போ தோனுதோ அப்போ வாங்க. நான் காத்திருக்கிறேன். எந்த சமயத்தில் என்ன உதவியென்றாலும் கேளுங்க” என்றுகூறி மீண்டும் என் தோளை தட்டிக் கொடுத்தபடியே மற்ற வி.ஐ.பி. பிரமுகர்கள் இருந்த பகுதியை நோக்கி நடந்தார். அங்கே ஆயிரக்கணக்கில் கூடியிருந்த மக்களும் தொண்டர்களும் இந்தக் காட்சியை பார்த்தபடியே இருந்தார்கள்.


கொடுப்பதில் அந்த வள்ளலுக்கு இணை வேறுயாருமில்லை என்பதை நாடு அறியும். அடுத்த பதினோரு ஆண்டுகள், அவர் மறையும் வரையிலும் ஒரு சக்திமிக்க தலைவராகவே இருந்தார். ஒரு வார்த்தை, எனக்கு இது வேண்டும் என்று கேட்டிருந்தால் போதும். பணமாக இருந்தாலும் சரி. பதவியாக இருந்தாலும்சரி. வாரிக்கொடுக்கத் தயங்கியிருக்கமாட்டார். ஆனால் கடைசிவரை அந்த மாமனிதரை தூரநின்றே பார்த்து வியந்தவனாக இருந்தேன் என்பதில் இன்றளவும் மகிழ்ச்யோடு நினைக்கிறேன்.

போகட்டும். தி.மு.க.ஆட்சிக்கு என்ன நடந்தது என்ற விஷயத்திற்கு வருகிறேன். வேறு என்னென்ன வழிகளில் ஆட்சிக்

கலைப்பைத் தடுக்க முடியும் என்று தி.மு.க. முயன்றபடி இருந்தது. எங்கள் தரப்போ, அவர்களுக்கு எதிராக தீவிரமாக வேலை செய்தது. கடைசியாக நண்பர் காளிமுத்துவிடம் நான் சொன்னபடி சில நாட்களில் **1991-**ம் ஆண்டு ஜனவரி முப்பதாம் நாள் தி.மு.க. ஆட்சி இங்கே டிஸ்மிஸ் செய்யப்பட்டது. அந்த ஆட்சிக் கலைப்பிற்கான காரணம்தான் வேடிக்கையானது. கருணாநிதியின் ஆட்சியைக் கலைத்தாக வேண்டும் என்று முடிவு செய்தாகிவிட்ட பிறகு ஒரு செட்டப் காரணம் தேவைப்பட்டது. அதற்கு விடுதலைப் புலிகளை பற்றி பிரதமர் சந்திரசேகர் சொன்ன ஒரு ரகசியத்தை கருணாநிதி புலிகளிடம் கூறி விட்டார் என்று கூறப்பட்டது. உண்மையில் அப்படி ஏதும் நடக்கவேயில்லை. ஆட்சிக் கலைப்பு பற்றி பிரதமர் சந்திரசேகருக்கும் விருப்பமில்லை. எங்களின் கூட்டு முயற்சி நெருக்கடிதான் அதற்குக் காரணமாயிற்று.

# நவீன கண்ணன் அவதாரம்...

*செல்வி. ஜெயலலிதாவின் சேலையை உருவியவர் துரைமுருகன். அதை செய்யச் சொல்லி வேடிக்கை பார்த்து சிரித்து மகிழ்ந்தவர் கருணாநிதி.*



தி.மு.க. ஆட்சி டிஸ்மிஸ் செய்யப்பட்டதும் ஒரு கொந்தளிப்பான நிலை. அந்தக் கட்சியினரிடையே குமுறல். எரிமலையாய் தகித்தது. அன்றிலிருந்து மூன்றாவது நாள்.

நான் சத்தியமூர்த்தி பவன் அருகே இருந்த சர்மானி ஓட்டாலில் தங்கியிருந்தேன். எனது அறைக்கு கட்சி பிரமுகர்கள் நிறைய பேர் வந்து சென்றபடி இருந்தார்கள். கூட்டம் இருந்தபடியே இருந்தது. அந்தக்

கூட்டத்தோடு ஒருவராக நண்பர் காளிமுத்துவின் உதவியாளர் அசோகன் நின்றிருந்தார். அழைத்து என்னவென்று கேட்டேன். ‘அண்ணன் உங்களை சந்திக்க வேண்டும் என்கிறார். எங்கு வைத்து சந்திக்கலாம்’ என்று கேட்டுவரச் சொன்னார் என காதில் கிசுகிசுத்தார்.

“என்னய்யா... இது எப்படிப்பட்ட நேரம். ஆட்சிக் கலைப்பிற்கு நானும் ஒரு காரணம் என்ற கோபம் உங்கள் ஆட்களுக்கு இருக்கு. அவர்கள் பார்த்தார்கள் என்றால் எவ்வளவு பெரிய பிரச்சனை வரும் தெரியுமா? அதெல்லாம் வேண்டாம். நான் நாளை திருச்சிக்குச் செல்கிறேன். ஒரு வாரத்திற்குப் பிறகு வருகிறேன். அப்போது சந்திக்கலாம் என்று கூறுங்கள்” என்றேன். அப்போது சென்ற அசோகன் மீண்டும் மாலை திரும்பி வந்தார். என்னவென்றேன்.

“அண்ணே. நீங்க திருச்சிக்குப் போகும்போதே சந்திக்கலாம்னு சொல்லிட்டார். உங்களுக்கான விமான டிக்கெட்டையும் வாங்கியாச்சு. காலையில நீங்கள் வழக்கம் போல் விமான நிலையம் வந்துவிடுங்கள். நான் வெளியே வாசலில் டிக்கெட்டை வைத்துக்கொண்டிருக்கிறேன்”என்று தெரிவித்தார். “அப்படியே ஆகட்டும் பிரச்சனையில்லை” என்றேன்.

அடுத்தநாள் காலையில் விமான நிலையத்தின் வெளியே, வாசலில் காத்திருந்த உதவியாளர் அசோகனிடம் டிக்கெட்டை வாங்கிக்கொண்டு உள்ளே சென்றேன். எதேச்சையாக பார்ப்பதை போல் “அடடே என்ன வேலுசாமி. திருச்சிக்குப் பயணமா” என்றார் காளிமுத்து. நானும் ஒன்றும் அறியாதது போல் ஆமாம் என்றபடியே அங்கு உட்கார்ந்து கொண்டேன். மேற்கொண்டு ஏதும் பேசிக்கொள்ளவில்லை. விமானத்தில் அமர்ந்து அது பறக்கத் தொடங்கிய பிறகுதான் என்ன விஷயம் என்றேன்.

“வேலுசாமி, இப்போதுகூட நான் உன் நண்பனாக வரவில்லை. என் தலைவர் சொன்னதன் பேரிலேயே சந்திக்க வந்திருக்கின்றேன்.” என்றார். எனக்கு அதிர்ச்சி. “என்னய்யா சொல்கிறீர். தி.மு.க.-ஆட்சிக் கலைப்பிற்கு நானும் ஒரு காரணம் என்று உங்கள் தலைவர் கோபத்தில் இருப்பாரே. என்னை ஏன் சந்திக்கச் சொல்கிறார். புரியவில்லையே” என்றேன்.

“ஆமாம்யா. எனக்கும் அப்படித்தான் தோன்றியது. திடீரென்று அழைத்தார். அந்த தம்பி வேலுசாமியை பார்த்து என் சார்பா நன்றியை சொல்லுங்க. அவசியமா சொல்லிடுங்கன்னு” சொன்னார். ‘எதற்காக’ என்று தயக்கத்தோடவே கேட்டேன்.

‘ஆமாம்யா. அந்த தம்பிகிட்ட ஒரு நாணயம் இருக்கு. என்ன வேண்டுமானாலும் கொடுக்கலாம், செய்யலாம் என்று சொன்ன பிறகும் நடக்கப் போறது இதுதான், யாராலும் தடுக்க முடியாதுன்னு உண்மைய சொன்னாரே அதற்குதான். வேறு யாராக இருந்தாலும் நமது நெருக்கடி நிலைமைய புரிந்துகொண்டு தேவை இல்லாத வேலையை செய்திருப்பார்கள். நாடகமாடியிருப்பார்கள். ‘கொண்டு போனதும் போயிருக்கும்’. அந்த தம்பி உண்மைய சொன்னார். அதைப் பாராட்டனும். போய் என் சார்பான நன்றியை சொல்லுங்கனு, கருணாநிதி சொன்னதை விவரித்தார் காளிமுத்து.

எனக்கு ஆச்சரியம். முழுக்க முழுக்க குடும்ப நலன். வாழ்க்கை எல்லாம் வஞ்சகபுத்தி என்று நான் கணித்து வைத்திருக்கும் கருணாநிதியிடம் இப்படியும் ஒரு நல்ல பண்பாடா என்று வியந்து போனேன். வாழ்நாள் முழுதும் என்னால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட அந்த மனிதர்மீது கசப்பையும் மீறி ஒருவித மரியாதை ஏற்பட்டது என்பது நிதர்சனமான உண்மை. எப்படியோ அவரது ஆட்சி கலைக்கப்பட்டது. சில நாட்களில் அதற்கான முனுமுனுப்பும் பதட்டமும் தனிந்திருந்தது. அப்போது நான் சென்னை கன்னிமாரா ஓட்டலில் தங்கியிருந்தேன். அ.தி.மு.க.-விலிருந்து செங்கோட்டையன் சந்திக்க வந்திருந்தார். உட்காருங்கள் என்று கூறியும் தயங்கியபடியே நின்றிருந்தார். வலியுறுத்தி உட்காரச் சொன்ன பிறகு மரியாதை நிமித்தம் நாற்காலியின் முனையில் உட்கார்ந்தார். என்னவென்றேன்.

“பிப்ரவரி 24-ம் தேதி, (அதாவது தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட 24-வது நாளில்) அம்மா-வின் பிறந்த நாள் வருகிறது. அதற்காக வேண்டி திருவல்லிக்கேணியில் ஒரே ஒரு பொதுக்கூட்டத்தை நடத்துகிறோம். அந்தக் கூட்டத்தில் நீங்கள் கலந்துகொண்டால் நன்றாக இருக்கும் என்று மேடம் நினைக்கிறார்கள். அதான் கேட்டுவிட்டுப் போகலாம் என்று வந்தேன்” என்றார். “சரி எனக்கொன்றும் இல்லை. தாராளமாக வருகிறேன்” என்றேன். மீண்டும் தயங்கியபடி “இல்லண்ணே.. அப்படியே டாக்டர் சுப்ரமணியசாமியும் வந்தால் நன்றாக இருக்கும். மேடம் சொல்லச் சொன்னார்கள்” என்றார். “சரி அவரும் வருகிறார். வருவார். வேற என்ன?” என்றேன். “அதில்லண்ணே. சுப்ரமணியசாமிகிட்ட ஒரு வார்த்தை கேட்டுட்டு உறுதியா சொன்னா பத்திரிகையில் பேர் போட வசதியாயிடும்” என்று இழுத்தார்.

அந்த கவலை வேண்டாம். சாமி கட்டாயம் வருகிறார். நீங்கள் உங்கள் மேலிடத்துக்குச் சொல்லிடுங்க. நம்பிக்கையா இருக்கச் சொல்லுங்க" என்றேன். அவர் சந்தோஷமாக புறப்பட்டுச் சென்றார். அதே கையோடு அந்தத் தகவலை டெல்லியில் இருந்த சாமிக்குத் தெரியப்படுத்திவிட்டேன். அவரும் சரி என்று சம்மதித்தார். சொன்னபடி அந்த திருவல்லிக்கேணி பொதுக்கூட்டம் நடந்தது. நானும் டாக்டர் சுவாமியும் கலந்து கொண்டோம். அந்தப் பொதுக்கூட்டத்தில்....

"இங்கே நடப்பது நவீன மகாபாரதப் போர். அந்த பாரதத்தில் பாஞ்சாலியை அரசவை மண்டபத்தில் வைத்து துச்சாதணன் துகிலுறிந்தான். அதை செய்யச்சொல்லி வேடிக்கை பார்த்து சிரித்தவன் துரியோதணன். நிராயுதபாணியாக, நிற்கதியாக நின்ற பாஞ்சாலியைக் காப்பாற்ற அன்று கறுப்பு கண்ணன் வந்து நின்றான். அதே போன்று நவீன மகாபாரதத்தில் சட்டமன்றத்தில் வைத்து செல்வி. ஜெயலலிதாவின் சேலையை உருவியவர் துரைமுருகன். அதை செய்யச் சொல்லி வேடிக்கை பார்த்து சிரித்து மகிழ்ந்தவர் கருணாநிதி. மகாபாரதத்தில் வந்த கண்ணன் போல் இங்கே சுப்ரமணியசாமி சிகப்பு கண்ணனாய் வந்து நிற்கிறார்" என்று பேசினேன். அ.தி.மு.க. - உடன் பிறப்புகள் மட்டுமின்றி, கட்சி நிர்வாகிகளும் கரகோஷம் எழுப்பினார்கள். இந்த நவீன கண்ணன் சுப்ரமணியசாமிக்கு அ.தி.மு.க.-வின் மகளிரணியினர் பின்னாளில் எப்படிப்பட்ட 'கறுப்புக்கொடி' ஆர்ப்பாட்ட மரியாதைக்கு ஆளாக்கினார்கள் என்பதெல்லாம் வேறு. இதனுள்ளாக நாம் அதையும் பார்த்துச்செல்லப் போகிறோம் என்பது வேறு விஷயம்.

தமிழகத்தில் இந்தப் பரபரப்பு இப்படி இருக்க, டெல்லியில் வேறு ஒரு பரபரப்பு, திருப்புமுனை. தலைவர் ராஜீவ்காந்தி பாராளுமன்றக் கூட்டத்தில் வைத்தே 'என் வீட்டை உளவுப்பிரிவு போலீஸ் கண்காணித்து வருகிறது என்ற பகீர் குற்றச்சாட்டை வீசினார். ஒரு முன்னாள் பிரதமர் வீட்டை போலீஸை வைத்துக் கண்காணிக்க வைக்கலாமா? அதுவும் காங்கிரஸ் கட்சியின் ஆதரவில் ஆட்சியை நடத்தும் பிரதமர் சந்திரசேகர் இப்படி செய்யலாமா? என்று பெரும் சர்ச்சையாகிப்போனது. பிரதமர் சந்திரசேகர் அப்படிப்பட்டவர் அல்ல. அப்படி ஒரு செயலை நான் செய்யவில்லை என்று அவர் வலுவாக மறுத்தார். "இல்லாத வீண்பழியை சுமந்துகொண்டு பிரதமர் பதவியில் இருக்க விரும்பவில்லை. பதவியை ராஜினாமா செய்கிறேன்" என அறிவித்தார். அது மேலும் சிக்கலானது. அந்த நேரத்தில் மத்திய அரசுக்கான தேர்தலைச் சந்திக்க யாருமே

விரும்பவில்லை. சந்திரசேகர் அவர்களே பிரதமராக நீடிக்கட்டும் என்பது ராஜீவ்காந்தியின் விருப்பம். ஒரு கட்டத்தில் தான் சொன்ன குற்றச்சாட்டை திரும்பப் பெற்றுக்கொள்வதாகக்கூட ராஜீவ்காந்தி கூறிப்பார்த்தார். ஆனால் சந்திரசேகர் ஏற்கவில்லை. சொன்னபடியே பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார். அதனால் **1991**-மார்ச் **24**-ம் தேதி அன்று பிரதமர் பதவி விலகல் உறுதி செய்யப்பட்டது.

அடுத்த ஓரிரு நாளுக்குப் பிறகு இரவு **11** மணி அளவில், டெல்லி உத்யோக்பவன் புல்தரையில் நானும் சுப்ரமணியசாமியும் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அங்குவந்த டி.என். சேஷன் பதற்றமாகவும் கோபமாகவும் இருந்தார். அவருக்கு ஜாதகத்தில் அதிக நம்பிக்கை. அதை வைத்து 'முட்டாள் பயல், மடப்பயல். இந்த ராஜீவ் ஏன் இப்படிப் பண்ணினான் என்றே தெரியவில்லை. நான் எவ்வளவோ சொன்னேன். 'ஜாதகரீதியாக உனக்கு மோசமான நேரம். இப்ப இருக்கின்ற நிலையில் தேர்தல் வேண்டாம். அது உனக்கு சரியாக இல்லை. சிக்கலும் ஆபத்துமாக முடியும் என்று கூறினேன். என் பேச்சைக் கேட்கவே இல்லை. இப்போது பாருங்கள், பிரதமருக்கான தேர்தல் நடக்கப் போகிறது. இனி என்னவெல்லாம் நடக்கப்போகிறதோ?' என்று ஆதங்கப்பட்டார்.

இப்படியான பின்னணியில்தான் **1991** மே **25**ஆம் தேதி நாடாளுமன்றத்திற்கு பொதுத்தேர்தல் என்ற அறிவிப்பு வெளியானது.

# 1991 மே-19 அந்த நாள்...



1991 மே மாதம். நாடாளுமன்றத்திற்கான பொதுத்தேர்தல். தமிழகத்திலும் சட்டமன்றத்திற்கான பொதுத்தேர்தல். அரசியல் கட்சிகளுக்கிடையே வாழ்வா, சாவா என்ற பிரச்சார போராட்டம். சித்திரை மாத அக்னி நட்சத்திர வெயிலைவிட உச்சமாக வீசியது. ஏற்கனவே இருந்த ஆட்சி கலைக்கப்பட்டதே என்ற ஆதங்கம் தி.மு.க.விற்கு இந்த வாய்ப்பை விட்டுவிடக்கூடாது என்ற துடிப்பு அ.தி.மு.க.விற்கு செல்வி ஜெயலலிதாவோடு கூட்டணி வைத்திருந்த தேசிய கட்சியான அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கும் இந்த முறை ஆட்சியை பிடித்துவிட வேண்டும் என்ற வேகம். முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி ஒருமுறை தமிழக பிரச்சாரத்திற்கும் வந்து போயாயிற்று. தேர்தல் வாக்குப்பதிவு நாள் மே 25. இதற்குள் மீண்டும் ஒரு முறை தமிழகம் வந்து செல்ல திட்டமிட்டிருந்தார் ராஜீவ்காந்தி. அந்தத் திட்ட ஏற்பாடே திடீரென நடந்ததுதான்.



பரபரப்பான அந்த சூழ்நிலையில் நான் திருச்சியில், ஜனதா கட்சி வேட்பாளர்களுக்கான பிரச்சார வியூகத்தோடு இருக்கின்றேன். மே.18.ம் தேதி மதியம் இரண்டு மணிக்கு வீட்டுத் தொலைபேசி ஒலித்தது. மறுமுனையில் டாக்டர் சுப்பிரமணியசாமி. அப்போது நான் ஜனதா கட்சியின் அகில இந்திய செயலாளர். டாக்டர். சாமி அகில இந்திய தலைவர். என்னவென்று கேட்டேன். நாளை 19ஆம் தேதி சென்னை விமான நிலையத்திற்கு வாருங்கள். நேரில் பேசுவோம் என்கிறார். மேற்கொண்டு ஏதும் பேசவில்லை.

தேர்தலுக்கு இன்னும் ஒரு சில நாட்களே இருக்கிறது. ஜனதா கட்சி சார்பாக போட்டியிடும் வேட்பாளர்களுக்கு செலவுத் தொகை ஏதும் வந்து

சேர்ந்தபாடில்லை. ஒரு வேளை அதற்காகத்தான் வரச்சொல்கிறாரோ என்று நினைத்துக்கொண்டேன். சொன்னபடி வாடகை கார் ஒன்றை அமர்த்திக்கொண்டு சென்னை விமான நிலையத்திற்கு 19ம் தேதி காலையிலேயே வந்து சேர்ந்தேன். அங்கேயே குளித்து உடை மாற்றிக்கொண்டு முக்கிய பிரமுகர்களுக்கான வளாகத்தில் காத்திருந்தேன். அங்கே ஜனதா கட்சியின் சென்னை மாவட்டத்தின் பொறுப்பாளரான ராஜ்குமாரும் வந்து சேர்கிறார். இந்த ராஜ்குமார் மோதிலால் என்பவரின் தம்பி. டாக்டர் சுவாமியின் மனைவி ரொக்ஷானாவும், மோதிலாலின் மனைவியும் மும்பையில் ஒன்றாகப் படித்த தோழிகள். அந்த வகையில் நண்பர்களாக இருந்தார்கள். ராஜ்குமார் தவிர காஞ்சி ஏகாம்பரம், ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட மேலும் சிலபேர் அங்கே காத்திருந்தார்கள்.

சுமார் 9.30. மணிக்கு டாக்டர் சாமி விமானத்திலிருந்து இறங்கி வந்து. வி.ஐ.பி. லாபியிலே உட்கார்ந்து விடுகிறார். மற்ற நிர்வாகிகளோடு தேர்தல் பேச்சு ஓடியது. முடிந்த பிறகு நான் “சொல்லுங்கள் சார், வேற என்ன முக்கிய விஷயம், நான் திருச்சிக்குக் கிளம்பனும். தேர்தல் வேலை இருக்கிறது” என்றேன்.

பட்டென்று என்னை நோக்கினார். “என்ன அப்படி சொல்றேள், நீங்க என் கூடதான் இருக்கனும். தேர்தல் பிரச்சாரம் இருக்கில்ல”என்றார். எனக்கு குழப்பம். “பிரச்சாரமா? எங்கெங்கே, யார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்” என்றேன்.

“இன்னைக்கு 19ஆம் தேதி மாலை காஞ்சிபுரத்தில் பொதுக்கூட்டம். முடிந்தவுடன் பள்ளிப்பட்டு போகிறோம், அங்கு கூட்டம் முடிந்ததும் அப்படியே வேலூரில் இரவு பொதுக்கூட்டம், அதை முடித்துவிட்டு அடுத்த நாள் 20-ம் தேதி காலை சேலம் புறநகர் பகுதியில் பிரச்சாரம், அன்று மாலையே சேலத்தில் பொதுக்கூட்டம். அது முடிந்த கையோடு ஆத்தூர் கூட்டத்தில் பேசனும். 21ம் தேதி விடிய விடிய நான் சென்னை விமான நிலையத்திற்கு வந்து டெல்லி போயாகனும்” என்கிற விவரத்தைச் சொன்னார்.

எனக்கு தலை சுற்றியது.

“என்ன சார் இது, காஞ்சிபுரம் எங்க இருக்கு, பள்ளிப்பட்டு எங்க இருக்கு, இங்கே கூட்டத்தை முடித்துவிட்டு பள்ளிப்பட்டுக்கு எப்படிப் போக முடியும். அங்கிருந்து வேலூர் எப்படி போகமுடியும்.

சாத்தியமில்லையே, யார் ஏற்பாடு இது” என்றேன். சாமிக்கு அதிர்ச்சி! முடியாதா? கஷ்டமா? “எல்லாமும் ராஜ்குமார் செய்த ஏற்பாடு தான்” என்கிறார். “சரி, போதிய அனுபவமில்லாமல் போட்ட ஏற்பாடு. பேசிப் பலனில்லை. எப்படியும் சமாளித்தாக வேண்டும். பார்க்கலாம் வாங்க” என்றபடியே கிளம்பினோம்.

டாக்டர் சுப்ரமணியசாமியின் வாகனத்தில் நானும் காஞ்சி ஏகாம்பரம் தவிர, மத்திய உளவுத்துறையான ஐ.பி.யைச் சேர்ந்த மணி என்ற அதிகாரி நான்கு பேர் மட்டுமே உட்கார்ந்து கொள்கிறோம். மற்ற நிர்வாகிகள் எல்லாம் அடுத்தடுத்த காரில் பின் தொடர்ந்தார்கள். காஞ்சிபுரத்தை நோக்கிப் பயணம்.

சாமி பயணித்த வாகனம் தமிழ்நாடு டூரிசத்திற்குச் சொந்தமானது. கனகராஜ் என்ற ஓட்டுநர் வாகனத்தை ஓட்டிக்கொண்டிருந்தார். வெளியே அனல் தகித்துக்கொண்டிருந்தது.

ஸ்ரீபெரும்புதூரில் அந்த இடத்தை நெருங்கும்போது காலை 11.10

மத்திய உளவுத்துறை அதிகாரியான மணி அடர்ந்த முள்செடிகளும் பனைமரங்களும் நிறைந்திருந்த அந்தப் பகுதியை காட்டியபடி, “சாமி, நாளைய மறுநாள் இங்கதான் பொதுக்கூட்டம், ராஜீவ்காந்தி கலந்துக்கப் போகிறார்”, எனக் கூறியபோது எனக்கு குழப்பம்.

“என்னங்க இது, பைத்தியக்காரத்தனமா இருக்கு. இந்தக் காட்டுலயா பொதுக்கூட்டம்?. பனைமரங்களும் முள்வேலி செடிகளுமாக இருக்கிறதே. எந்த ஏற்பாட்டையுமே காணலையே” என்றேன்.

சுப்ரமணியசாமி மெலிதாய் சிரித்தபடி, “அவா சொல்றது உண்மைதான். இன்னும் ஒரு நாள் இருக்கில்ல. எல்லாம் ஏற்பாடு செய்திடுவா” என தலையாட்டினார். எப்படி சாத்தியம்?, தகவல் உண்மையா என்று நான் கேள்விமேல் கேள்வி கேட்டும் சாமியிடம் இருந்து மௌனமே பதிலாக வந்தது. எப்போதும் ஒரு விஷயத்தைப் பற்றி ஏதாவது கருத்துச் சொல்லக்கூடியவர், அன்று ஏதும் பேசாமல் வந்தது ஆச்சரிமாக இருந்தது.


பிறகு அந்த இடத்தையும் நிகழ்ச்சியையும் பற்றி மறந்துபோனோம். எங்கள் பிரச்சாரத்தை வெற்றிகரமாக முடிக்க வேண்டும் என்பதில் கவனம் ஓடியது. மதியம் காஞ்சிபுரம் சென்றுவிட்டோம். காஞ்சிபுரம் நிர்வாகியான

செல்லப்பா வீட்டில் மதியம் உணவு. சிறிது நேர ஓய்வுக்குப் பிறகு பிரச்சாரத்திற்குப் புறப்பட்டோம்.

முதலில் வாலாஜாபேட் என்ற இடம். ஜனதா கட்சி சார்பில் மனோகரன் என்பவர் போட்டியிடுகிறார். அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் முதலில் அங்கே சென்றோம். மாலை நான்கு மணி இருக்கும். தெருமுனைக் கூட்டம்தான். அதை முடித்துக்கொண்டு காஞ்சிபுரம் சென்றோம். அங்கு பெரிய பொதுக்கூட்டம். சுமார் ஐந்தாயிரம் பேர் திரண்டிருந்தார்கள். அப்போதெல்லாம் டாக்டர் சாமிக்கு தமிழ் பேச வராது. பேசுவதை புரிந்து கொள்வார். அதனால் சாமியின் உரைக்கு, நான்தான் தமிழில் மொழிபெயர்த்துக் கூறி வந்தேன். காஞ்சிபுரம் கூட்டம் முடிந்தவுடன் விழுந்தடித்துக்கொண்டு பள்ளிப்பட்டுக்குப் பறந்தோம். இரவு பத்துமணியாகிவிட்டது. அங்கும் நல்லகூட்டம். அரை மணி நேரம்தான் அங்கு பேசினோம். அந்தக் கூட்டத்தை அவசரகதியில் முடித்துக்கொண்டு வேலூருக்கு ஓடவேண்டியதாயிற்று.

# 1991 மே-20 காத்திருந்த அதிர்ச்சி

*இல்லே வேலுசாமி. டெல்லியில் எனக்கு முக்கியமான வேலை இருக்கு. நீங்க திருச்சி போங்க. நான் அவசர வேலையை முடிச்சுண்டு...*



வேலூரில் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. டாக்டர் சாமி இதோ வந்து விடுவார் அதோ வந்துவிடுவார் என நேரத்தைக் கடத்தி மற்ற பேச்சாளர்களை பேசவிட்டபடியே இருந்தார்கள். நாங்கள் நள்ளிரவு ஒரு மணிக்கு போய்ச் சேர்ந்தோம். 20ம் தேதி தொடங்கிவிட்டிருந்தது. சரியான களைப்பு. அதனால் ஒரு இருபது நிமிடங்கள் வரைதான் சாமி பேசினார். வழக்கம் போல நான் மொழிபெயர்த்தேன். முடித்துக்கொண்டு டிராவல்ஸ் பங்களாவிற்கு வந்தோம். வேலூரின் நிகழ்ச்சி ஏற்பாட்டாளரான

நாட்ராம்பள்ளி அசோகந்தான் உணவு கொண்டுவந்து கொடுத்தார். இட்லிதான். ஏதோ அவசரத்திற்கு சாப்பிட்டோம்.

"அடுத்து என்ன ப்ரோகிராம் சார்" என்று சாமியிடம் கேட்டேன்.

"அப்படியே தூங்கி எழுந்துட்டு காலையில் சேலம் போறோம்" என்றார். காலை 9 மணிக்கு மேல் சேலம் புறநகர் பகுதியில் பிரச்சாரம்.

எனக்கு அதிர்ச்சிதான். சார் படுத்து தூங்கிட்டுப் போகிற அளவிற்கு நேரமில்லை. சேலம் ரொம்ப தூரத்திலிருக்கிறது. இரவெல்லாம் பயணம் செய்தால்தான் காலையில் அங்கு போய்ச் சேரமுடியும். ஒன்று செய்யுங்கள், நீங்கள் பின் சீட்டில் படுத்துக்கொண்டு தூங்கியபடியே வாங்க, வேற வழியில்லை என்றேன்.

அந்த நள்ளிரவில் எங்கேயோ ஒரு கடையை திறக்கச் சொல்லி இரண்டு புதிய தலையணையை வாங்கி வந்தார் நாட்ராம்பள்ளி அசோகன்.

சாமி, பின்சீட்டில் படுத்துக்கொண்டார். நான் முன் சீட்டில் டிரைவருக்கு பக்கத்தில் உட்கார்ந்துகொண்டேன். மற்ற நிர்வாகிகள் வழக்கம்போல் வேறுவேறு கார்களில் பின்தொடர சேலத்தை நோக்கிப் பயணமானோம்.

1991 மே-20 அதிகாலை.

சேலம், தமிழ்நாடு சுற்றுலாவுக்கான பங்களாவில் நுழைந்தோம். பழைய சட்டமன்ற உறுப்பினர் ஜி.ஜி.குருமூர்த்தி, பெரியார் மாவட்டச் செயலாளர் பெருந்துறை கோபால், சேலம் மாவட்டத் தலைவர் மேட்டூர் டி. ரத்தினவேல், நாமக்கல் நரசிம்மன், தாரை மணியன், பரமத்திவேலூர் பரமசிவம் உள்ளிட்ட இருபது நிர்வாகிகள் அங்கே காத்திருந்தார்கள். பரஸ்பர விசாரிப்புக்குப் பிறகு சுப்ரமணியசாமி அரசு விருந்தினர் மாளிகை உள்ளே சென்றார்.

நான் வெளியே மரத்தடியில் நின்றபடி பல் துலக்கிக்கொண்டிருந்தேன். உள்ளே இருந்து என்னை நோக்கிப் பதற்றத்துடன் வந்த பெருந்துறை கோபால் "என்னய்யா உங்க ஆள் இப்படிச் சொல்றாரு?" என்றார்.

"என்ன"வென்றேன்.

“தேர்தலுக்கு இன்னும் நான்கு நாள்தான் இருக்கு, செலவுக்குப் பணம் வேண்டுமே, என்ன பண்றது”ன்னு கேட்டேன். அவர் பாட்டுக்கு சாவகாசமா ”தேர்தல்தானே, அது நடந்தா பார்த்துக்கலாம்கிறார்” என்று பதறினார். அந்தப் பதற்றம் எனக்கும் பற்றிக்கொண்டது. என்ன இது பைத்தியம் மாதிரி, நாலு நாள்தான் இருக்கு, பணத்துக்கு வழி சொல்லாம ஏன் இப்படிப் பேசுறார் என்றபடியே இரண்டு எட்டு நடந்தேன்.

அதற்குள் ஜி.ஜி.குருமூர்த்தியும் வெளியே ஓடிவந்து “என்னப்பா உங்க அய்யா இப்படி சொல்றாரே” என அதே விஷயத்தைச் சொல்லி பதற்றமானார்.

நேராக உள்ளே சென்ற நான், “என்ன சார், ஏன் அப்படிச் சொன்னீங்க. இருக்கிறத இழுத்துப்போட்டு செலவு பண்றாங்க. செலவுக்கு என்ன பண்ணுவாங்க?” என்று டாக்டர் சாமியை பார்த்துக் கேட்டேன்.

அவரும் அசட்டையாக “இன்னும் நாலு நாள் இருக்கில்ல. அதுக்குள்ள எதுவேணாலும் நடக்கலாம். அதுவரை பார்க்கலாம். தேர்தல் நடக்குதா என்று” என ஏதோ சொன்னார்.

“என்ன சார் இது. ஏன் இப்படிச் சொல்றீங்க. இது சரியா படலியே” என்று கேட்டபோதுதான் அவர் எதையோ உணர்ந்தார். முகம் மாறிவிட்டது. ஏதோ காரணம் சொல்லி சமாளிக்கப் பார்க்கிறார். “அதுவொன்றுமில்லை, ஏற்பாடு செய்து விட்டால் போகுது” என திக்கித்தினறி பேசினார். என்பதைவிட சொல்லக்கூடாததை சொல்லிவிட்ட மாதிரி உளறினார் என்றே கூறவேண்டும். அப்போதுதான் சாமி என் தோள் மீது கைபோட்டபடி தனியே, ஓரமாக அழைத்துச் சென்று “நான் அவசரமா வந்ததால பணத்தைக் கொண்டுவரல, வேறேதும் காரணமில்ல. நீங்க ஏதும் தப்பாக நினைத்துக் கொள்ளாதீரும்” என சமாதானப்படுத்தினார்.

சரி, பணம் கொண்டுவரவில்லை என்பதை மற்றவர்களிடம் வெளிப்படையாக சொல்வதற்குத் தயங்கியிருப்பார். அதைத் தவிர்க்கத்தான் அப்படி கூறியிருக்கிறார் என்று அந்த விவகாரத்தை மறந்துபோனோம்..

அன்று காலையில் ஏற்கெனவே திட்டமிட்டிருந்தபடி சேலம் புறநகர் பகுதியில் தேர்தல் பிரச்சாரம் நடந்தது. மதியம் 12 மணிக்குத் திரும்பினோம். மதிய உணவுக்குப் பிறகு சற்று நேரம் ஓய்வெடுத்தோம்.

பிறகு மாலையில் பொதுக்கூட்டத்திற்குப் புறப்பட்டோம். சேலம் லட்சுமி பெருமாள் கோயில் அருகில் கூட்டம். சுமார் மூன்றாயிரம் பேர் கூடியிருந்தார்கள். வழக்கம் போலவே தி.மு.க.வைக் கடுமையாக தாக்கிப் பேசினார் டாக்டர் சாமி, முடிவதற்கு இரவு 10 மணியானது, அதுவே அவசரமாக முடிக்கப்பட்ட கூட்டம்தான்.

முடித்துக்கொண்டு ஆத்தூர் நோக்கி விரைந்தோம். வழியில் உடையாம்பட்டி மெயின் ரோட்டிலேயே சின்னதாக ஒரு கூட்டம். அங்கு ஜனதா கட்சிக் கொடியை ஏற்றி வைத்துவிட்டுப் பேசினார். பத்து, 15 நிமிடத்திற்குள் ஆத்தூருக்குப் புறப்பட்டோம். ஆத்தூர் கூட்டத்தை விரைவாக முடித்துக்கொண்டு சென்னை புறப்பட்டாக வேண்டும். மே 21-ம் தேதி காலை சென்னையிலிருந்து விமானத்தில் டெல்லியை சென்றடைய வேண்டும். இதுதான் டாக்டர். சுவாமியின் திட்டம்.

“சார்...22-ம் தேதி உங்களுக்கு மதுரையில் பொதுக்கூட்டம். 23-ம் தேதி திருச்சியில் பொதுக்கூட்டம். இரண்டிற்கும் விரிவான ஏற்பாடு நடந்து வருகிறது. கடைசியில் 21- தேதி ஒரே ஒரு நாள்தான் இருக்கிறது. எதற்கு வீணாக டெல்லி போக வேண்டும்? அந்த ஒரு நாளில் அப்படி என்ன வேலை? எதற்கு அலைச்சல்? இப்போது நேரம் ஓடிக் கொண்டிருக்கிறது. தேர்தல் நாளும் நெருங்கிவிட்டது. இங்கேயே தங்கிவிடுங்கள்” என்று எவ்வளவோ எடுத்துச் சொல்லிப் பார்த்தேன்.

“இல்லே வேலுசாமி. டெல்லியில் எனக்கு முக்கியமான வேலை இருக்கு. நீங்க திருச்சி போங்க. நான் அங்கு அவசர வேலையை முடிச்சுண்டு 22-ம் தேதி காலை விமானத்தில் சென்னை வந்துடறன். அங்கிருந்து மதுரைக்கு பிளைட். அந்த ப்ளைட் திருச்சியில இறங்கி நின்று போகுமில்ல. நீங்களும் வாங்க... சேர்ந்து மதுரைக்குப் போவோம். அங்க பொதுக்கூட்டத்த முடிச்சுட்டு, அடுத்தநாள் சேர்ந்தே திருச்சிக்கு வருவோம்” என்று திட்டவட்டமாகவே கூறிவிட்டார். அதற்குமேல் என்ன செய்யமுடியும்?.

# 1991 மே-21 காலைவேளை...

*அன்று சுப்ரமணிய சாமி டெல்லியிலும் இல்லை... சென்னையிலும் இல்லை... மறைந்து கொண்டு...*




இப்படி பேசியபடியே ஆத்தூருக்குள் வந்து விட்டோம். அங்கு பொதுக்கூட்டம் முடிவதற்கு நள்ளிரவைத் தாண்டி ஒரு மணியாகிவிட்டது. அவசரமாகவே சென்னைக்குப் புறப்பட்டார் டாக்டர் சுவாமி. மற்ற நிர்வாகிகள் வேறொரு காரில் அவருடனேயே சென்றார்கள். நானும் ஆத்தூரிலிருந்து புறப்பட்டு திருச்சிக்கு வந்துவிட்டேன்.

இரவெல்லாம் பயணம் என்பதால் காலையில் சற்று தாமதமாகத்தான் எழுந்தேன். தேர்தல் நெருங்கிவிட்டது. எதை செய்வது எதை விடுவது என்ற பரபரப்பான யோசனையில் உட்காந்திருந்தேன். அப்போது காலை 9 மணி இருக்கும். வீட்டுத் தொலைபேசி ஒலித்தது. எடுத்தேன். மறுமுனையில் பெருந்துறை கோபால் சொன்னதைக் கேட்டதும் எனக்கு அதிர்ச்சி.

டாக்டர் சாமியின் வாகனத்தைப் பின் தொடர்ந்து சென்ற அவர்களின் வாகனம், அச்சிறுபாக்கம் அருகே பெரிய விபத்திற்குள்ளாகியிருக்கிறது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினரான ஜி.ஜி.குருமூர்த்திக்கு பலத்த காயம். காஞ்சிபுரம் ஏகாம்பரத்திற்கு கால் எலும்பு உடைந்துவிட்டது. மற்றவர்களுக்கு சின்னதும் பெரிதுமாக காயம். எல்லோரும் செங்கல்பட்டு அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தை எல்லாம் சொன்னார்.

"சரி, இந்த விபத்து விவரம் சாமிக்குத் தெரியுமா? உங்களை வந்து பார்த்தாரா? அவரிடம் தெரிவித்தீர்களா" என்று கேட்டேன்.

இல்லை, சாமிக்கு விபத்து நடந்ததே தெரியாது. அவரது வாகனம் முன்னே போய்விட்டது. தகவலையும் தெரிவிக்க முடியவில்லை என்றார் பெருந்துறை கோபால். எனக்கும் கவலை. (அப்போதெல்லாம் இப்படியான செல்பேசி வசதிகளோ, அதிகப்படியான தொலைபேசி வசதிகளோ கிடையாது)

சுப்ரமணியசாமிக்கு இந்த விபத்து பற்றித் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. காலையில் விமானத்தைப் பிடித்தாக வேண்டுமே என்ற வேகத்தில் சென்றவருக்கு விபத்து தெரிந்திருக்க நியாயமில்லை. ஆனால் இந்த தகவலை அவருக்குத் தெரிவித்தாக வேண்டுமே என நினைத்தேன்.

சென்னையில் விமானம் ஏறிய சாமி காலை ஒன்பது அல்லது 9.30 மணி வாக்கில்தான் டெல்லி வீட்டிற்குச் சென்றிருப்பார். அதனால் நாம் சற்று நேரம் பொறுத்திருந்து தொடர்பு கொள்ளலாம் என காத்திருந்தேன்.

சரியாக காலை 10.15 மணிக்கு டெல்லியில் உள்ள டாக்டர் சாமியின் வீட்டிற்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். மறுமுனையில் அவரது மனைவி ரொக்ஷானாதான் பேசினார்

"என்ன வேலுசாமி நலமா. உங்களுக்கு என்ன வேண்டும்?" என்றார்.

“சாமி இருக்காரா. அவருடன் பேசவேண்டும்” என்றேன்.

“தேவையில்லாம ஏன் இங்கே போன் பண்ணுகிறீர். அவர் சென்னையில்தானே இருக்கிறார். டெல்லி வரவில்லையே” என்றார் ரொக்ஷானா.

சாமி ஒருவேளை வீட்டிற்குச் சென்றிருக்க மாட்டாரோ. நேராக அமைச்சர் அலுவலகத்திற்குச் சென்றிருப்பாரோ. அதிகப்படியான வேலை நேரங்களில் அப்படி நடப்பதுண்டு என்ற நினைப்போடு, சாமியின் அமைச்சர் அலுவலகத்திற்கு தொலைபேசி எண்ணைச் சுழற்றினேன்.

அங்கிருந்தும், ‘சாமி டெல்லிக்கு வரவில்லையே, சென்னையில்தானே இருக்கின்றார்’ என்ற பதில் வந்தது. எனக்குக் குழப்பம்.

ஒருவேளை காலை விமானத்தை தவறவிட்டிருப்பாரோ அல்லது சென்னையிலேயே முக்கிய வேலை என இருந்திருப்பாரோ, அப்படியிருந்தாலும் நமக்கு தகவல் வந்திருக்குமே, என்ற குழப்பத்தோடு சென்னையிலுள்ள அவரது வீட்டிற்குத் தொடர்பு கொண்டேன்.

‘சாமி காலையிலேயே டெல்லிக்குக் கிளம்பிட்டாரே. டெல்லியில்தானே இருப்பார்’ என்ற பதில் வந்தது. எனக்கு ஒன்றும் புரியவில்லை.

சென்னையில் இருக்கும் சாமியின் நண்பரான மோதிலால் வீட்டிற்குப் பேசினேன். அவருடைய பதிலும், ‘சாமி டெல்லியில்தானே இருப்பார். சென்னையில் இல்லையே’ என்றிருந்தது.

சாமியின் மற்றொரு நண்பரான துக்ளக் சோவிற்குப் பேசினேன். அவரும் “சாமி டெல்லியில்தானே இருக்கனும்” என்றார்.

என்ன இது?. ஒன்றும் புரியலையே. ஏன் இப்படி? சென்னையிலுள்ளவர்களோ, ‘சாமி டெல்லியில்தானே இருப்பார்’ என்கிறார்கள். டெல்லியில் உள்ள அவரது மனைவி ரொக்ஷானாவோ, ‘சாமி சென்னையில்தானே இருக்கிறார்’ என உறுதியாக கூறுகிறார். அவர் எங்குதான் சென்றிருப்பார் என்ற குழப்பம் எனக்கு அதிகரித்தது.

சற்று நேரத்தில் அந்தக் குழப்பத்தை எல்லாம் ஒதுக்கி வைத்து விட்டேன். ஒருநாள் இடைவெளிதான். 23-ம் தேதி திருச்சியில் சாமியின் தலைமையிலான பெரிய பொதுக்கூட்டம் இருக்கிறது. நாம்தான்

பொறுப்பாளர். 22-ம் தேதி மதுரையில் நடக்கும் பொதுக்கூட்டத்தைக் காட்டிலும் சிறப்பாக நடத்த வேண்டுமே. அதனால் அந்த வேலையில் இறங்கி விட்டேன். திருச்சி முழுதும் எங்கெங்கே போஸ்டர்களை ஒட்டவேண்டும். மற்ற நிர்வாகிகள் என்ன செய்ய வேண்டும். கூட்டத்தை திரட்டுவதற்கான ஏற்பாடு என்ன. அருகிலுள்ள ஊர்களில் இருந்து வரும் தொண்டர்களுக்கு வாகன ஏற்பாடு செய்வதெப்படி என்கிற வேலையில் தீவிரமாகிவிட்டேன்.

காரணம். 22-ம் தேதி காலை, திருச்சி விமான நிலையத்திற்கு வரும் சாமியோடு சேர்ந்து நானும் மதுரை போகவேண்டும். அதனால் இந்த வேலைகளை முன்கூட்டியே முடிக்க வேண்டும். அதுவிஷயமாக இங்கும் அங்கும் சென்றுவந்தபடி இருந்தேன்.

மதியத்திற்கு மேல், நிர்வாகிகள் சிலர் உட்பட 15-க்கும் மேலான கட்சிக்காரர்கள் என் வீட்டில் இருந்தார்கள். போஸ்டர் ஒட்டுவதற்கான கூழை, வீட்டிற்கு கீழே வாசலில் சாய்ச்சினோம். செல்லதுரை, ஜீவகன் உள்ளிட்ட 15 கட்சிக்காரர்களிடம், சாமி தலைமையிலான பொதுக்கூட்ட நிகழ்ச்சி சுவரொட்டிகளை கொடுத்து, பகுதி வாரியாக பிரித்து அனுப்பினோம். இரவு ஒன்பது மணிக்குள்ளாக எல்லா வேலைகளும் ஓரளவு முடிந்தது. பிறகு நானும் புலமாடன் என்ற கட்சி நிர்வாகியும் மட்டுமே வீட்டில் இருந்தோம். இன்னும் என்னென்ன வேலைகள் உள்ளன. அதை எப்படி செயல்படுத்த வேண்டும் என்பது குறித்த ஆலோசனையில் இருந்தோம்.

# தேசமே அதிர்ந்த மரணம்...

*தி.மு.க.வினருடைய வீடுகள், கட்சி அலுவலகங்கள் எல்லாம் தாக்கப்பட்டது. கொடிக் கம்பங்கள் எல்லாம் நொறுக்கப்பட்டது*



**1991** மே **21.** இரவு மணி பத்து.

அந்த நேரத்திற்கு வழக்கமாக நானும், டாக்டர் சாமியும் பேசிக்கொள்வது வழக்கம். அவர் சென்னையில் இருந்தாலும் சரி, டெல்லியில் இருந்தாலும் சரி. தினசரி வழக்கமாக அந்த நேரத்திற்குப் பேசிக் கொள்வோம். பல சமயம் அவரே என்னைத் தொடர்பு கொள்வார்.

22ம் தேதி பொழுது விடிந்ததும் சாமி டெல்லியிலிருந்து புறப்படுவார். அதனால் சென்னை எப்போது வருவீர்கள். அங்கிருந்து திருச்சி வரும் நேரம் என்ன என்ற விவரங்களை எல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமே என்று நானே சாமியின் டெல்லி வீட்டிற்கு தொலைபேசி எடுத்தேன்.

ஓரிரு வினாடிகள் அழைப்பொலி சென்றது.

“ஹலோ” என்ற எனது குரலைக் கேட்ட மறுவினாடி.

“என்ன? ராஜீவ்காந்தி செத்துட்டார். அதானே சொல்ல வர்றேள்” என்றார் சுவாமி.

உடலில் மின்னல் தாக்கியதைப் போன்ற அதிர்ச்சி. எனக்கு நேரே சுவற்றில் இருந்த கடிகாரத்தின் மீது பார்வை ஓடியது. இரவு 10.25 என காட்டிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்துக் கொண்டே... “என்ன சார்... என்ன சொல்றீங்க.. ராஜீவ்காந்தியா... அவர் சென்னை பொதுக்கூட்டத்துக்கில்ல வந்திருக்கிறார்...” என பதற்றத்தோடு தடுமாறினேன்.

“ஆமாம். நீ அதைத்தானே சொல்ல வர்றேள். அதான் அவர் செத்துட்டார். குண்டுவெடிச்சதுல இறந்துட்டார்” என்றார் சாமி.

“சார்... என்ன நீங்க... நான் மதுரை பொதுக்கூட்டம் பற்றி பேசுவதற்காக எடுத்தேன். நீங்க ஏதோ சொல்கிறீர்களே” என்றேன்.

“கூட்டமெல்லாம் கிடையாது. அதான் அவா (ராஜீவ்) பப்ளிக்கூட்டதுக்குப் போன இடத்துல குண்டுவெடிச்சு செத்துட்டாளே. எங்கிருந்து கூட்டம் நடத்துறது? அது கேன்சல். இங்க நிறைய வேலை இருக்கு. நான் அதை கவனிக்கனும். மதுரை வரமுடியாது”என்றபடியே தொலைபேசியை வைத்தார்.

எனக்கு வியர்த்துப்போனது. படபடப்பு கூடியது.

ராஜீவ்காந்தி, முன்னாள் பிரதமர், இறந்துவிட்டாரா? எப்படி? தடுமாற்றமாயிருந்தது. மேற்கொண்டு தகவல் ஏதுமில்லை. எங்கே எப்படிக் கேட்பது என்பதிலும் குழப்பம், பதற்றம்.

அடுத்த நொடியே, சென்னைக்கு தொலைபேசி எடுத்தேன். ஜனதா கட்சியின் சென்னை பொறுப்பாளர் ராஜ்குமார், எல்.ஐ.சி. அருகே

அலுவலகம் வைத்திருந்தார். தொலைபேசியை சுழற்றினேன். எதிர்முனையில் நண்பர் ராஜ்குமாரே எடுத்தார். சலசலப்பான பேச்சுக்கள், சிரிப்பு என அந்த சூழல் தெரிந்தது...

"என்னப்பா... ஜாலி மூடில் இருக்கீங்க போல. அங்க ஸ்ரீபெரும்புதூர் பொதுக்கூட்டத்துல ஏதோ குண்டு வெடிச்சிருக்கு. ராஜீவ்காந்தி இறந்துட்டாராம். அந்தத் தகவல் தெரியுமா" என்றேன்.

"என்ன, விளையாடுகிறீர்களா" என்றார். "இல்லை உண்மையாகத்தான்"என்றேன். கொஞ்சம் பொறுங்கள் நானே தொடர்புக்கு வருகிறேன் என போனை வைத்தார். எனக்கு பதற்றம், படபடப்பு ஏறியபடியே இருந்தது.

அப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால், முதலில் தி.மு.க.வினருக்குத்தானே பிரச்சனை வரும் என நினைத்தேன்.

உடனே திருச்சி இரண்டாவது தொகுதியின் வேட்பாளரான பொய்யாமொழிக்கு தொலைபேசி எடுத்தேன். எனக்கும் அவருக்கும் பேச்சுவார்த்தை கிடையாது. கடந்த தேர்தலில், நானும் அவரும் எதிரெதிர் திசையில் போட்டியிட்டதிலிருந்தே பேசிக்கொள்வதில்லை. ஆனாலும் என் மனது கேட்கவில்லை. அவரது தொலைபேசி என்கேஜ்டாகவே இருந்தது.

உடனே திருச்சி ஒன்றாவது தொகுதி தி.மு.க. வேட்பாளரான மலர்மன்னனுக்கு போன் செய்தேன். மறுமுனையில் ஒரு பெண்மணியின் குரல். நான் வேலுசாமி பேசுகிறேன் என்றதும் கொஞ்சம் இருங்கள் என்றது அந்தக் குரல்.

சில வினாடிகளில் மலர்மன்னன் மூச்சு வாங்க வாங்க வந்து பேசினார். என்ன வேலுசாமி. இப்பதான் காரில் ஏறி புறப்படப் போனேன். உன் பெயரைச் சொன்னவுடன் இறங்கி வந்தேன். என்ன விசயம் என்றார். அவர் ஒரு இதய நோயாளி. அதனால் எடுத்தவுடன் செய்தியை சொல்லக்கூடாதென்று "சும்மாதாண்ணே. இந்த நேரத்துக்கு எங்க கிளம்பிட்டீங்க" என்றேன்.

"இந்த நேரத்துக்கு மேலதான முக்கியமான ஆளுங்களை பார்க்க முடியும் தேர்தல் நாள் நெருங்கிடுச்சில்லே" என்றார்.

பிறகுதான் "வெளியில் எங்கேயும் போகாதீங்க. வீட்டில் இருக்கும் கட்சிக்காரர்களை, உள்ளூராய் இருந்தால் உடனே அனுப்பிடுங்க.

வெளியூராய் இருந்தால் அனுப்பிடாதீங்க. வீட்டிலேயே தங்க வச்சுடுங்க” என்று கூறினேன்.

அதற்கு அவர், “என்னப்பா, என்ன சொல்ல வர, ஏன்? என்னாச்சு?” என்று பதட்டப்பட்டார்.

ஒன்றுமில்லைங்க. “ஸ்ரீபெரும்புதூர் ராஜீவ்காந்தி கூட்டத்தில் ஏதோ துப்பாக்கி சூடு சம்பவம் நடந்திருச்சாம். மேற்கொண்டு விவரம் ஏதும் தெரியல. ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டுமே என்றுதான் சொன்னேன். வெளியில் ஏதாவது அசம்பாவிதம் நடந்தாலும் நடக்கலாமில்ல அதற்குதான்”என்றதும்.

“தலைவர் ராஜீவ்காந்திக்கு ஏதும் ஆகலைதானே. அவர் பாதுகாப்பா இருக்காரில்ல” என படபடத்தார். “ஒன்றும் தெரியலைண்ணே. நீங்க பத்திரமா இருங்க” என்று கூறி தொலைபேசியை வைத்தேன். அந்த மலர்மன்னன் இப்போது ம.தி.மு.க.-வில் இருக்கிறார்.

மீண்டும் பொய்யாமொழி வீட்டிற்கு தொலைபேசி எண்களை சுழற்றினேன். எதிர்முனையில் ஒரு இளைஞர் எடுத்தார். நான்தான் பேசுகிறேன் என்றதும், “என்னண்ணே, நீங்களாண்ணே கொஞ்சம் இருங்கண்ணே” என பரபரப்பானார். நானும் பொய்யாமொழியும் பேசிக் கொள்வதே இல்லை. ஒருவருக்கொருவர் மனவருத்தத்தில் இருந்தோம் என்பது அவருடன் இருப்பவர்களுக்கு தெரியும். அதனால் என் குரலைக் கேட்டவுன், தொலைபேசியில் எனது அழைப்பு என்றவுடன் அந்த இளைஞர் ஆச்சரியமானார்.

உடனே பொய்யாமொழி பேசினார். எடுத்தவுடனேயே, “என்னண்ணே, இந்த நேரத்துல... சொல்லுங்கண்ணே... இப்பதான் முக்கியமானவர்களை பார்க்க காரில் ஏறப்போனேன். உங்க பெயரைச் சொன்னதும் ஓடி வந்தேன், சொல்லுங்கண்ணே. ஏதாவது முக்கியமா” என்றார். அவர் ஓடி வந்ததில் மூச்சு வாங்கியது தெரிந்தது. பொய்யாமொழி இளைஞர் என்பதால், “முக்கிய விஷயம்தான், ஸ்ரீபெரும்புதூர் கூட்டத்தில் குண்டு வெடிச்சிருக்கு. தலைவர் ராஜீவ்காந்தி இறந்துட்டதாக தகவல். வெளியில் எங்கேயும் போகாதீர்கள், வீட்டிலிருக்கும் உள்ளூர்க்காரர்களை உடனே வீட்டிற்கு போகச் சொல்லிடுங்க. வெளியூர்க்காரர்களை அனுப்பி விடாதீர்கள். பேருந்துகள்

கிடைப்பது சிரமமாகலாம். இதைச் சொல்லத்தான் கூப்பிட்டேன். எச்சரிக்கையாக இருங்கள்" என்றேன்.

"அண்ணே. ரொம்ப நன்றிண்ணே. ரொம்ப நன்றி. ஸ்ரீபெரும்புதூரில் என்ன நடந்ததாம். விவரமா தெரியுமா" என்றார். எனக்கு மேற்கொண்டு ஏதும் தெரியவில்லை என்று தொலைபேசியை வைத்தேன்.

உடனே சென்னை ஜனதா கட்சி அலுவலகத்திலிருந்து, சென்னை மாவட்ட பொறுப்பாளரான ராஜ்குமார் தொடர்புக்கு வந்தார்.

"என்னாங்கண்ணே. இப்படி பகீர்னு ஒரு குண்டை தூக்கிப் போட்டுட்டீங்க. நீங்க சொன்னதை விசாரிச்சேன். ஸ்ரீபெரும்புதூரில் அப்படி ஒரு சம்பவமே இல்லை என்கிறார்களே. நீங்க சொன்னதும் எங்களுக்கு எல்லாம் இறங்கிபோச்சு. போங்கண்ணே" என்றார்.

"இல்லை ராஜ்குமார். ஏதோ நடந்திருக்கிறது. அதைத்தான் சொன்னேன்" என தொடர்பைத் துண்டித்தேன்.

இதுவெல்லாம் அடுத்தடுத்த நிமிடங்களில் நடந்தேறுகிறது. சென்னையில் இருந்து ராஜ்குமார் சொன்னது குழப்பமாக இருந்தது.

உடனே திருச்சியின் தினமலர் பத்திரிகை அலுவலகத்திற்கு போன் செய்தேன். "ஸ்ரீபெரும்புதூர் ராஜீவ்காந்தி பொதுக்கூட்டத்திலிருந்து ஏதாவது முக்கிய தகவல் வந்ததா. ஏதோ அசம்பாவிதம். குண்டுவெடிப்பு என்கிறார்களே. செய்தி ஏதாவது உண்டா" என்று கேட்டேன்.

"அப்படி ஏதும் தகவல் வரவில்லையே. அந்தக் கூட்டம் பற்றிய செய்திக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கின்றோம். இன்னும் இரண்டு மணி நேரத்திற்குள் வந்தால் செய்தியை போடலாம். காத்திருக்கின்றோம்" என்று கூறினார்கள்.

அடுத்து, உடனே திருச்சி தினத்தந்தி பத்திரிகை அலுவலகத்திற்கு போன் போட்டேன். எடிட்டோரியல் பிரிவில்தான் எடுத்தார்கள். அவர்களிடமிருந்தும் அப்படியான தகவல் ஏதுமில்லையே என பதில் வந்தது. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. திருச்சி உளவுத்துறை போலீஸ் பிரிவில் கேட்டேன் அங்கிருந்தும் பிரச்சனை ஒன்றுமில்லையே என்ற பதில்தான்!.

சற்று நேரத்திற்குப் பிறகு, வெளியில் போஸ்டர் ஒட்டச் சென்ற எங்களது ஆட்கள் பதற்றத்தோடு திரும்பி வந்தார்கள். ராஜீவ்காந்தி கூட்டத்தில் குண்டு வெடித்து விட்டதாம். அவரு இறந்துட்டார்னு கலவரம் என்றார்கள். அவர்கள் எல்லோரையும் பத்திரமாக வீட்டிற்குப் போகும்படி அனுப்பி வைத்தேன்.

விடியும் வரை தூக்கமே வரவில்லை. என்னுடன் கட்சி நிர்வாகி புலமாடன் மட்டுமே இருந்தார். என் மனைவி இரண்டு மூன்று முறை டீ போட்டுக் கொடுத்திருந்தார். அதிகாலை ஐந்து, ஐந்தரை மணிக்கு கடைக்கு ஆள் அனுப்பி ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளேடுகளை எல்லாமும் வாங்கிவரச் சொன்னேன்.

அனைத்து நாளேடுகளிலும் ராஜீவ்காந்தி குண்டு வெடிப்பில் இறந்த செய்திதான் பிரதானமாக இருந்தது. பக்கம் பக்கமாக படங்கள். குண்டு இப்படி வெடித்தது அப்படியானது என்றான செய்திகள்.

அப்படி வந்த அனைத்து நாளேட்டுச் செய்திகளிலும் "ராஜீவ்காந்தியை விடுதலைப் புலிகள்தான் கொன்றார்கள்" என்று மத்திய சட்ட அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியசாமி சொன்னார் என்று தவறாமல் மேற்கோள் காட்டப்பட்டிருந்தது.

விடிந்ததில் இருந்து மாலை வரை, அன்று வந்த செய்திகளே ஊர் பேச்சாக இருந்தது. எங்கெங்கிலும் கலவரம். தி.மு.க.வினருடைய வீடுகள், கட்சி அலுவலகங்கள் எல்லாம் தாக்கப்பட்டது.

தி.மு.க.வினரின் கொடிக் கம்பங்கள் எல்லாம் நொறுக்கப்பட்டது. இந்த மாதிரியான கலவரச் செய்திகளைத் தாண்டி, குண்டுவெடிப்பு குறித்த மேல் விவரங்கள் ஏதுமில்லை. வதந்திகள் விதம் விதமாய் பரவிக் கொண்டிருந்தது.

# உறைந்து நின்ற அந்த நிமிடங்கள்...



மாலை நாளேடுகள் முந்திக்கொண்டு வந்திருந்தது. அனைத்து மாலை நாளேடுகளையும் வாங்கினேன். மேற்கொண்டு என்ன தகவல் என்பதை அதில்தான் பார்க்க முடியும். அப்படி ஒவ்வொரு செய்தியாக பார்த்து வந்தேன்.

அதில் ஒரு செய்தி. தனியே கட்டம் கட்டி போட்டிருந்தார்கள். தலைவர் ராஜீவ்காந்தியை முதன் முதலாக அடையாளம் காட்டிய ஜெயந்தி நடராஜனின் பேட்டி என்றிருந்தது.

இரவு பத்து மணி பத்து நிமிடத்திற்கு கூட்டம் நடக்கும் இடத்திற்கு வந்தார் ராஜீவ்காந்தி. எதிரே சாலையில் இருந்த இந்திராகாந்தி சிலைக்குச் சென்று மாலையை போட்டார். அங்கிருந்து நடந்தபடியே மேடையை நோக்கிச் சென்றார். நாங்கள் பின்னாலேயே சென்றோம். மேடைக்கு முன்பாக காத்திருந்தவர்களிடம் மாலையை பெற்றுக்கொண்டிருந்தார்.

கூட்டம் நெருக்கடி சலசலப்பாக இருந்தது. திடீரென்று பெருத்த வெடிச்சத்தம். ஒன்றும் புரியவில்லை. வரவேற்பிற்காக சரவெடி பட்டாசுகள் என்றாலும் அப்படி ஒரு வெடிச்சத்தம் இருக்காதே என நினைத்த நொடியே, அந்த இடம் இருபதடி உயரத்திற்கு நெருப்பும் புகையுமாக பெரிய அளவில் சூழ்ந்தது. ஒரே அலறல். மக்கள் இங்கும் அங்குமாக சிதறி ஓடுகிறார்கள். தூரத்தில் ஒரு வெள்ளை நிற அம்பாசிடர் கார் வேகமாக கிளம்பிப் போனது. தலைவர்தான் அதில் பாதுகாப்பாக போகிறாரோ என நினைத்தேன். அந்த குண்டு வெடிப்பு **10.10** அல்லது **10.15**க்கு நடந்தது. அதிலிருந்து நெருப்பு புகை மூட்டம் எல்லாம் சற்று அடங்கிய பிறகு அந்த இடத்தை நெருங்கி ஓடினேன். உடல்கள் இங்குமங்குமாக ரத்த வெள்ளத்தில் சிதறிக் கிடந்தது. சற்றுத் தள்ளி ஒரு கால்... கேன்வாஷ் ஷூவோடு கிடந்தது. பட்டென்று ஒரு சந்தேகம். ஏர்போர்ட்டில் பார்த்தபோது தலைவர் ராஜீவ்காந்தி அந்த மாதிரியான ஷூ போட்டிருந்ததை கவனித்தேன். "அய்யோ... அது தலைவருடையதாக இருக்குமோ" என்று அருகில் சென்று பார்த்தேன். இன்னும் கொஞ்ச தூரத்தில் ஒரு உடல் குப்புறக் கிடந்தது.

எனக்கு படபடப்பு கூடியது. சற்று தூரத்திலிருந்த மூப்பனாரை, 'ஐயா'... என்று கத்தி அழைத்தேன். அருகில் வந்தவரிடம் சந்தேகத்தைக் கூறினேன். குப்புறக்கிடந்த உடலருகில் சென்று பார்த்தோம். உச்சந்தலையில் தலைவருக்கு வழுக்கை. அதை வைத்து சந்தேகம் மேலும் கூடியது. லேசாக அதை தூக்கிச் சாய்த்தபடி பார்த்தோம். முகம் சிதைந்து போயிருந்தது. அப்படியே உடலை சாய்த்தால் குடல் சரிந்து

கிடந்தது... அந்தத் தலை, பிடரி இவற்றையெல்லாம் பார்த்தவுடன் "ஐயோ நாம மோசம் போயிட்டோமே" எனக் கதறினார் மூப்பனார் ஐயா. அந்த உடல்மீது வெள்ளைத்துண்டை எடுத்துப் போர்த்தினோம்.

அதன் பிறகுதான் அங்கிருந்த சிலரும் ஓடி வந்தார்கள். இதுவெல்லாம் ஒரு 30 நிமிடங்களாகிறது. பிறகுதான் தலைவர் இறந்துவிட்டார் என்பது உறுதியானது. மற்றவர்களுக்கும் தெரிந்தது என்ற பதிவு மாலை நாளேடுகளில் இருந்தது.

அதைப் படித்தவுடன் எனக்கு பகீரென்ற ஒரு அதிர்ச்சி. திரும்ப திரும்பத் படிக்கின்றேன். குண்டு வெடிப்போ 10.10 மணி அல்லது 10.15 மணி. அந்த நெருப்பு, புகை எல்லாம் ஓரளவு குறைந்த பிறகுதான் ஜெயந்தி நடராஜன் அங்கே பார்க்கிறார். இங்குமங்கும் ஓடி, ஒரு உடலைப் பார்த்து, சந்தேகப்பட்டு, மூப்பனாரை அழைத்து, அவரும் வந்து உடலை, தலையை புரட்டிப் பார்த்து, தலைவர் ராஜீவ்காந்திதான் இறந்தார் என தெளிவாக தெரிய 30 நிமிடம். ஆக, ஒரு 10.45 மணி அளவில்தான் அந்த உறுதியான தகவல் அந்த இடத்திலிருந்தவர்களுக்கே தெரிந்திருக்கிறது. அதன் பிறகுதான் செய்தி மற்ற இடங்களுக்குப் போகிறது. அதற்கு குறைந்த பட்சம் ஒரு ஐந்து அல்லது 10 நிமிடங்கள் ஆகும்.

ஆக, ஒரு 11.00 மணி வாக்கில்தான், சென்னை, டெல்லி மேல்மட்டத்திற்குச் சென்றிருக்கும். குறைந்தபட்சமெனப் பார்த்தாலும் முன்னிரவு 10.50 மணிக்குதான் உறுதிப்படுத்தப்பட்ட தகவல் மேலிடங்களுக்குச் சென்றிருக்கும்.

அப்படியானால், டாக்டர் சுப்ரமணியசாமிக்கு மட்டும் 10.25 மணிக்கே தெரிந்ததெப்படி?. நான் தேர்தல் பிரச்சாரத்திற்காக எப்போது வருகிறீர்கள் என டெல்லிக்கு போன் செய்த 10.25 மணிக்கே, 'ராஜீவ்காந்தி செத்துட்டா அதானே சொல்ல வர்றேள் என கேட்டாரே? அதெப்படி...? அந்தக் கேள்வியின் அதிர்ச்சி என் உடல் முழுதும் பரவி உடலை சில்லிட வைத்தது. ஏதோ ஒரு பாரம், பயம் என் மனதிலும் உடலிலும் விறுவிறுவென்று ஏறிக்கொண்டிருப்பதாக பட்டது. தாக்கிய அதிர்ச்சி. மேலும் மேலும் கேள்விகளாய் என்னை உறைய வைத்தது. குண்டு வெடிப்பு நடந்தவுடனேயே அந்த இடத்தைச் சுற்றி தமிழக போலீஸார் சீல் வைத்து விட்டார்கள். 22-ம் தேதி காலை ஒன்பது மணி வாக்கிலேயே விசாரணையை சி.பி.ஐ.யிடம் ஒப்படைக்கப்பட்டது. பிறகு மத்திய புலனாய்வு அமைப்பான சி.பி.ஐ.-க்கு மாற்றப்பட்டது. காலை

ஒன்பது மணிக்கு மேல்தான் சி.பி.ஐ. போலீஸ் விசாரணைக்கு வருகிறது. அதன் பிறகுதான் கொலையை யார் செய்தார்கள் என்ற விசாரணையே தொடங்குகிறது.

அப்படியென்றால், 22-ம் தேதி அதிகாலை வந்த நாளேடுகள் அனைத்திலும் “ராஜீவ்காந்தியை விடுதலைப் புலிகள்தான் கொலை செய்தார்கள்” என்று மத்திய சட்ட அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியசாமி சொன்னதாக செய்தி வந்ததே, அது எப்படி?

சி.பி.ஐ. பூர்வாங்க விசாரணையை தொடங்கவே இல்லை. அதற்குள்ளாக விடுதலைப் புலிகள்தான் கொன்றார்கள் என்று சாமி எப்படி கூறுகிறார்? எதை வைத்துக் கூறினார்? இரவு பதினொரு மணி அல்லது 12 மணிக்குள்ளாக கூறியிருந்தால்தான். எல்லா காலை நாளேடுகளிலும் அந்தச் செய்தி வந்திருக்க முடியும்..? சுப்ரமணியசாமிக்கு மட்டும் விடுதலைப் புலிகள்தான் செய்தார்கள் என்பது எப்படி தெரியும்? இப்படியான கேள்விகள். எனக்குள் அதிர்ச்சி அலைகளாக எழுந்தபடி இருக்கிறது. அப்போதுதான் நடந்தவற்றை ஒவ்வொன்றாக நினைத்துப் பார்க்கிறேன்.

மே 19-ம் தேதி அன்று, சென்னை விமான நிலையத்திலிருந்து காஞ்சிபுரத்தை நோக்கிச் சென்றபோது, வழியில் ராஜீவ்காந்தி பங்கேற்கும் அந்தப் பொதுக்கூட்ட இடத்தைக் கடக்கும்போது, நடந்தது. எந்த ஒரு பேச்சுக்கும், ஏதாவது ஒரு கருத்தைக் கூறும் சுப்ரமணியசாமி அந்த ‘முற்காட்டுப் பகுதியிலா கூட்டம்’ என்றபோது, எதையுமே பேசாமல் மௌனமாக தலையாட்டி ஒரு கள்ளச் சிரிப்பை சிரித்தாரே, அது ஏன்?

மே 20-ம் தேதி சேலம் டிராவல்ஸ் பங்களாவில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜி.ஜி.குருமூர்த்தியும். பெருந்துறை கோபாலும் தேர்தல் செலவுக்காக பணம் கேட்டபோது... இன்னும் நான்குநாள் இருக்கிறது. அதற்குள்ள எது வேணாலும் நடக்கலாம் என்றாரே அது ஏன்?

மே 20-ம் தேதி ஆத்தூரில் கூட்டம் முடிந்து, நள்ளிரவைத் தாண்டிய நேரத்திலும் ‘அவசர வேலை, போயே ஆகவேண்டும்’ என சென்னை விமான நிலையத்திற்கு பறந்து ஓடினாரே? அப்படி என்ன முக்கிய வேலை? அதன் பின்னணி என்ன?

அப்படி அவசர வேலை என்று போனவர், டெல்லிக்கும் போகாமல் சென்னையிலும் இல்லாமல் எங்கேயோ ஒளிந்து

கொண்டிருந்திருக்கிறாரே. அது எங்கே? எதற்கு? இப்படியான கேள்விக்கணைகளின் பதிலில் எனக்கு தலைசுற்றியது. பட்டென்று ரத்தஓட்டம் நின்றுபோனமாதிரி ஒரு உணர்வு. உடம்பு ஜில்லென மாறுவதாக நினைப்பு. உண்மையில் எனக்கு அப்படி நடந்ததா என்றும் அறிய முடியவில்லை.

ச்சே..ச்சே...சுவாமி அப்படியான ஆள் இல்லை. அவரெல்லாம் கொலைச்சதியில் ஈடுபடுவாரா, அதுவும் ஒரு பெரிய தலைவரை செய்யத் துணிவாரா? என்று என்னதான் சமாதானம் செய்துகொண்டு அதிலிருந்து விடுபட முனைந்தாலும் முடியவில்லை. சுப்ரமணியசாமி மீதே சந்தேக வலைகள் சுற்றியபடி இருந்தது.

நான் பெரிதும் மதிக்கக்கூடிய, மிக நெருக்கமாக அன்னியோன்யமாக பழகிய ஒரு அரசியல் கட்சித் தலைவர் இந்தப் படுகொலைக்கு சதிகாரராக இருப்பாரோ என்ற சந்தேகம், அதிர்ச்சி, கூச்சம் என்னை வாட்டி வதைத்தது. நான் யாரிடம் சொல்ல முடியும்? என்னவென்று சொல்ல முடியும்? உலகமே பார்த்து வியந்த ஒரு தேசத்தின் தலைவரையே படுகொலை செய்த கும்பலை நாம் சந்தேகப்படுகிறோம் என்றால், அது நம்மை விட்டுவைக்குமா என்ன? பேசாமல் மௌனமாக வீட்டிலேயே இருந்தேன். வழக்கம்போல் இரவு பத்து மணிக்கு சாமியுடன் பேசுவதை விட்டிருந்தேன். காரணம் சொல்லத் தெரியவில்லை.

அடுத்தடுத்த நாட்கள், தேசம் துயரத்தைப் போர்த்திக் கொண்டிருந்தது. வடநாட்டில் உள்ள தமிழர்கள் எல்லாம் தாக்கப்பட்டார்கள் என்ற செய்தியுடன், மேலும் பல வதந்திகளும் வெளிவந்தபடியே இருந்தது. தமிழ்நாட்டிலேயே தி.மு.க-.வினரின் நிலை அப்படித்தான் இருந்தது. தேர்தல், அரசியல் என்று எல்லாவிதத்திலும் பாதிப்பு அவர்களுக்குத்தான்.

இரண்டு நாள் போனது. மே 23-ஆம் தேதி மாலையில் என் வீட்டிற்கு போன் செய்தார் டாக்டர் சாமி. “என்ன வேலுசாமி. என்ன பண்றேள்” என்றார். நான் எதையும் காட்டிக் கொள்ளவில்லை. அவரும் எப்போதும் போலவே பேசுகிறார். “24-ஆம் தேதி காலைல நான் சென்னைக்கு வருகிறேன். நீங்க ஏர்போர்ட்டுக்கு வந்துடுங்க” என்றார்.

அப்படிங்களா. சரி வந்துவிடுகிறேன் என்பதோடு, மேற்கொண்டு ஏதும் பேசவில்லை. சொன்னபடி 23ஆம் தேதி இரவே சென்னைக்குப் புறப்பட்டேன். 24-ஆம் தேதி காலையில் சென்னை விமான நிலையத்தில்

இருந்தேன். சென்னை மாவட்டப் பொறுப்பாளரும் மற்ற சிலரும் வந்திருந்தார்கள். எனக்கு உள்ளுக்குள்ளாக ஒருவித நெருடல், பயம் என்று இனம்புரியாத நிலை. மனதை பிசைந்தபடியே இருந்தது. மனதை திடப்படுத்திக்கொண்டபடி இருந்தேன்.

சுப்ரமணியசாமி, காலை ஒன்பது மணிக்கு விமானத்தில் வந்து இறங்கினார். முன்னாள் அமைச்சர் ஹண்டேவும் வந்திருந்தார். வெளியே வந்ததும், அங்கிருந்து நேராக அப்பல்லோ மருத்துவமனைக்குப் போகவேண்டும் என்றார்.

சுவாமியும், முன்னாள் அமைச்சர் ஹண்டே, நான் மூவருமாக ஒரு வாகனத்தில் ஏறிக்கொண்டோம். மற்ற நிர்வாகிகள் வேறு வாகனத்தில் பின் தொடர்ந்தார்கள். நேராக காலை பத்துமணி வாக்கில் அப்பல்லோ மருத்துவமனைக்குள் சென்றோம். மரகதம் சந்திரசேகர் இருக்கும் அறையை நோக்கி நடந்தோம். அவர் எப்படி இருக்கின்றாரோ என்ற தவிப்பு!.

நாங்கள் உள்ளே நுழைந்ததும் அவரது பார்வை வெறித்தபடி இருந்தது. மூச்சுத்திணறல் ஏற்பட நர்ஸ் நர்ஸ் என்ற குரலோடு, பேச்சற்றுத் திணறினார். அங்கிருந்த நர்ஸ் அவசரமாக ஓடிவந்து, அருகில் நின்று கவனிக்கத் தொடங்கினார். சுப்ரமணியசாமி அவரைப் பார்த்து எப்படி இருக்கிறது என விசாரித்தார். அவரிடமிருந்து பதில் இல்லை. அப்போது அங்கே வந்த மருத்துவர் ஒருவரிடம் சுப்ரமணியசாமி விசாரித்துக்கொண்டிருந்தார்.

இந்த நேரத்தில் அங்கு இருந்த ஒரு கிராமத்துப் பெண்மணியிடம் நான் பேசினேன். அவர் மரகதம் அம்மாவிற்கு உதவியாக வந்திருந்தவர். “உடல் நலம் எப்படி இருக்கிறது” என்றேன். “அது என்னமோ தெரியலீங்க. இவ்வளவு நேரமும் நல்லாதான் பேசிக்கிட்டு இருந்தாங்க. இப்பதான் இப்படியாகியிருக்கு. ஒணணும் தெரியலையே” என்று வெள்ளந்தியாக பேசினார்.

அதற்குள் சுவாமி, “போகலாமா” என்றார். அந்த அறையைவிட்டு தாண்டியதுமே, “சார் இந்தம்மா மேல எனக்கு சந்தேகமிருக்கு. ரொம்ப நல்லா நடிக்கிறது என நினைக்கிறேன்” என்றபோது, டாக்டர் சாமி என் கையை பிடித்து அழுத்தி, ‘இங்க ஏதும் பேசாதீர்கள்’, என்பதைப் போல் சைகை செய்தார்.

வெளியே வந்ததும் காரில் ஏறினோம். எங்கள் காரில் ஏறவந்த முன்னாள் மத்திய அமைச்சர் ஹண்டேவைத் தடுத்து, அடுத்த காரில் வாருங்கள் என கைநீட்டினார் சாமி. அவரும் பின்னால் வந்த நிர்வாகிகளின் காரில் ஏறிக்கொண்டார்.

இப்போது நானும் சுவாமியும் மட்டுமே அந்த வாகனத்தில் அமர்ந்திருந்தோம். வாகனம் புறப்பட்டவுடன் "இப்போது சொல்லுங்கள். என்ன சந்தேகம் உங்களுக்கு. அந்த அம்மையார் நடிக்கின்றார் என்றீர்களே எப்படி" என்றார்.

நான் அந்த கிராமத்துப் பெண்மணி கூறியதைச் சொன்னேன்.

சுவாமி சிரித்துக்கொண்டே, "பாவம் அந்த மரகதம் அம்மாவுக்கு பணத்தாசை. சதிகாரர்கள் இந்த விவகாரத்தில் அவரை ஒரு கருவியாக பயன்படுத்திக் கொண்டார்கள். 'இந்திராவோடு இருந்தீர்கள். கட்சியில் சீனியர். அப்படியானவர் தொகுதிக்கு ஐயாவை ஒருமுறை தேர்தல் பிரச்சாரத்திற்கு கூப்பிடமுடியாதா என்ன' என்று உசுப்பேற்றியிருக்கிறார்கள். அப்போது மரகதம் 'தலைவர் ராஜீவ்காந்தியை பிரச்சாரத்திற்கு வரவழைப்பதில் பிரச்சனையே இல்லை. ஆனால் அப்படியொரு கூட்டம் போட பணம் செலவாகுமே. அது இல்லையே' என்றிருக்கிறார். அப்போ காஞ்சிபுரத்திலிருக்கிற ஜே.பி.பில்டர்ஸ் பரந்தாமன், 'பணம்தானே பத்து லட்சம் நான் தாரேன்' என்றிருக்கிறார்.

மரகதம், அது பின்னாடி இருக்கிற சூழ்ச்சி தெரியாமல் ரெண்டு மூனு லட்சம் செலவானாலும் மீதிப் பணம் கையிலிருக்குமே என்று சம்மதிச்சிருக்கு. தெரியாமலே துணை போயிட்டார். அப்படி பணத்தை வாங்கிட்டுதான் அந்தம்மா ராஜீவ்காந்தியை வரவழைச்சது என்று விலாவாரியான விவரத்தைக் கூறினார்.

அவர் சொல்லச் சொல்ல என் அடிமனது அடித்துக்கொண்டது. ஆக சுப்ரமணியசாமிக்கு எல்லா விவரமும் தெரிந்திருக்கிறது. தெரிந்தே அமைதியாக இருந்திருக்கிறார் என்றால் என்ன அர்த்தம்? மனதிற்குள் மீண்டும் கேள்வி. ஆனால் மேற்கொண்டு ஏதும் பேசிக்கொள்ளவில்லை.

# செத்து பிழைத்த
# தா.பாண்டியன்...



அடுத்து எங்களின் வாகனம் அரசு பொது மருத்துவமனைக்குள் நுழைந்தது. ராஜீவ்காந்தியின் மொழிபெயர்ப்பாளராக கூடவே நின்றிருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தா.பாண்டியன் அங்கே அனுமதிக்கப்பட்டிருந்தார். ஸ்ரீபெரும்புதூரில் தலைவர் ராஜீவ்காந்திக்கு 3 அடிகள் தூரத்திலேயே அவர் நின்றிருந்தார். இவருடன் இருந்தவர்கள், அவருக்குப் பின்னால் இருந்தவர்கள்கூட உயிர்தப்பவில்லை. தா.பாண்டியன் அவர்களும் இறந்துவிட்டார் என்றே நினைக்கப்பட்டது. அதிர்ஷ்டவசமாக பலத்த காயத்தோடு உயிர்த் தப்பியிருந்தார்.

நேராக அவரது அறைக்குள் சென்றோம். உடலின் முன் பகுதி, முகமெல்லாம் கருகிப் போயிருந்தது. குண்டுச் சிதறல் முகத்தை வீங்க வைத்திருந்தது. சற்று நேரம் அங்கிருந்தோம். உடல் நலம் குறித்து விசாரித்தோம். குண்டுச் சிதறல் காயங்களும் தீச்சுவாலை வேதனையும் என்னபாடுபடுத்தியது என்பதை அறியமுடிந்தது. ஆனாலும் மனம் தளராமல் இருந்ததையும் கவனித்தோம். விரைவில் குணமடைந்து விடுவீர்கள் என்று ஆறுதல்கூறி நம்பிக்கையளித்தோம்.

அப்போதுதான் அங்கே பெண் எஸ்.ஐ. ஒருவர் மிக மோசமான தீ காயத்தோடு அனுமதிக்கப்பட்டிருக்கிறார். பெயர் அனுசூயா. பிழைப்பதற்கு வழியே இல்லை. உடலில் எண்பது சதவீதத்திற்கு மேலான தீக்காயம். எப்படியும் இறந்துவிடுவார் என்று கூறினார்கள்.

அடடா அவர் இறந்து போவதற்கு முன்பாக, அப்படிப்பட்டவரையும் பார்த்து ஆறுதல் கூறலாமே என அங்கே சென்றோம். அவரது உடல்நிலை இருந்த சூழலைக் கருதி அனுமதிக்கவில்லை. கடைசியில் இரண்டு பேர் மட்டும் போகலாம் என்றார்கள். நானும் சுப்ரமணியசாமியும் உள்ளே சென்றோம்.

உடல் முழுவதும் பலத்த தீ காயத்தோடு நிர்வாணமாக உடம்பு. நாங்கள் வருகின்றோம் என்பதற்காக மறைவிடங்களில் மட்டும் துணி போட்டிருந்தார்கள். சுப்ரமணியசாமிக்கு தமிழ் சரளமாக பேச வராது என்றாலும் பேசுவதை புரிந்து கொள்வார். அதனால் நான்தான் ஆறுதல் கூறிப் பேசினேன்.

“உனக்கு ஒன்றும் ஆகாதும்மா. நிச்சயம் காப்பாற்றிட முடியும்னு டாக்டர்கள் கூறியிருக்கிறார்கள். நீ தைரியமா இரு. பிழைச்சிடுவே. நம்பிக்கையா இரு” என்றேன். எனக்கு மனம் கலங்கிப்போனது.

அந்தப் பெண் எஸ்-.ஐ. கண்ணீர் வடித்தார். “கவலைப்படாதீங்கம்மா. உனக்கு ஒன்றும் ஆகாது. நம்பிக்கையாயிரு என்றேன்” மீண்டும். அப்போது அவர் “சார் நான் சாவுக்காக அழல. ஒரு நிமிடம், ஒரே ஒரு நிமிடம் நான் சுதாரிச்சிருந்தா ஒரு பெரிய தலைவரை காப்பாத்தியிருக்க முடியும். அது முடியாம போச்சேன்னுதான் வருத்தம். அதனாலதான் அழறேன். நான் உயிர் பிழைத்தால்கூட என் வாழ்நாள் முழுதும் அந்தக் குற்ற உணர்ச்சி என்னை உலுக்கிக்கிட்டேயிருக்குமே” என்றழுதார்.

மோசமான நிலையில் அவரை அதிகம் பேச வைத்திடக்கூடாது என்ற கவலை எனக்கிருந்தாலும் அப்போது நான் என்ன நடந்தது என்று கேட்டேன்.

“சார் அந்தப் பெண் (தனு) ஒரு முக்கால் மணி நேரத்திற்கு முன்புதான் அங்க வந்தது. மரகதம் சந்திரசேகரோட மகன்தான் காரில் கொண்டு வந்து இறக்கிவிட்டுப் போனார். (லதா பிரியகுமார் இந்தக் கருத்தை மறுத்துள்ளார்) என்னமோ தெரியலை. முதல் பார்வையிலேயே எனக்கு அந்தப் பெண்ணைப் பிடிக்கவில்லை. அந்த இடத்திற்கு வந்த போதெல்லாம் நான் அவளை விரட்டியடித்தேன். அவளோ சிரித்தபடியே திரும்பத் திரும்ப வந்தாள். அதற்குள் தலைவர் அருகில் வந்துவிட, அந்தப் பெண்ணும் முண்டியடித்து முன்னே வந்து நின்றது. ஏன் எனக்குப் பிடிக்காமல் போனதென்று தெரியவில்லை. கடுப்புடன் அந்தப் பெண்ணின் கழுத்தில் கைவைத்து அப்படியே தள்ளினேன். இதைப் பார்த்துவிட்ட தலைவர் ராஜீவ்காந்தி என் தோள்மீது கொஞ்சம் கடுமையாக தட்டி, ‘முரட்டுத்தனமாக நடந்து கொள்ளாதே’ என ஆங்கிலத்தில் சற்று அழுத்தமாக சொன்னார்.

அதற்குள் தடுமாறி கீழே விழுந்த அந்தப் பெண் மீண்டும் எழுந்து தலைவரை நோக்கி கிட்டே வந்துவிட்டாள்.

அந்த நேரம்தான், தலைவர் மீண்டும் என் தோளை தட்டினார். நான் திரும்பினேன். முன்பு அவர் சொன்னதால் என் மனம் வருந்தியிருக்குமோ என நினைத்திருக்கிறார். அதனால் புன்னகைத்தபடியே‘பி ரிலாக்ஸ்’ என்று சிரித்தபடியே தட்டிக் கொடுத்தார்.

அந்த நொடியில்தான் அது நடந்துவிட்டது. உலுக்கியெடுத்த வெடிகுண்டு சத்தம். பிறகு ஏதும் தெரியவில்லை. கீழே கிடந்த நான் கதறினேன். கத்தினேன். ஆனால் யாருக்குமே கேட்கவில்லை. அதன்

பிறகுதான் இங்கு கொண்டு வந்து சேர்த்தார்ககள். அந்த ஒருநொடி, நான் சுதாரிச்சிருந்தாகூட தலைவரைக் காப்பாற்றியிருக்க முடியுமே" என்று தீக்காய வேதனையிலும், மரணத்தை அருகில் வைத்துக்கொண்டு குலுங்கி குலுங்கி அழுதார்.

காவல்துறை மீது என்னதான் வெறுப்பிருந்தாலும், அந்தப் பெண் எஸ்.ஐ. அனுசூயாவினால் மிகப்பெரிய மரியாதை கூடியது. இப்படியானவர்களுக்குத் தலைவணங்க வேண்டும் என தோன்றியது. எப்படியான கடமையுணர்வு?. எவ்வளவு பெரிய தியாகம்? என நினைத்தபடியே அறையை விட்டு வெளியேறினோம். அப்போது சுவாமி, 'தனக்கு ஏற்பட்ட அபாயத்தைவிட, ஒரு தலைவரைக் காப்பாற்ற முடியாமல் போனதே என்று அந்த போலீஸ் வுமன் வருந்துகிறாரே. ரியலி இட்ஸ் கிரேட்'. என்றார்.

நான் அந்த சகோதரியை திரும்பிப் பார்த்தபடியே எஸ். "ரியலி கிரேட்" தான் என்று நடந்தேன்.

அங்கிருந்து புறப்பட்டு நேராக கன்னிமாரா ஓட்டலுக்குச் சென்றோம். சாப்பாட்டு நேரம் என்பதால் மதிய உணவை அங்கேயே முடித்தோம். கொஞ்ச நேர ஓய்வுக்குப் பிறகு புறப்பட்டு விமான நிலையம் வந்தோம். அங்கிருந்து சாமியும், ஹண்டேவும் டெல்லிக்குச் சென்றார்கள். நான் திருச்சிக்கு வந்துவிட்டேன்.

# என்னை நான் மறந்தேன்...

*தலைவர் ராஜீவ்காந்தி காஷ்மீரத்து பிராமணக் குடும்பம். காஞ்சிபுரத்தில் நடந்த யாகத்தையும் சேர்த்து நினைத்தேன். தலை சுற்றியது. சுப்ரமணியசாமி ஒரு பிராமணனைக் கொன்ற பாவத்தை இப்படி யாகம் வளர்த்து போக்கியிருக்கிறார்*



ஒரு வாரம் கடந்தோடிவிட்டிருந்தது. வீட்டிலிருந்த எனக்கு மீண்டும் மீண்டும் சுப்ரமணியசாமி நினைப்பே சுழன்றது. யோசிக்க, யோசிக்க, பின்னோக்கி ஒவ்வொன்றாக நினைக்க, நினைக்க, எனக்கு அவர்மீதான சந்தேகம் வலுத்து நின்றது. வீட்டில் உட்பட யாரிடமும் எதுவும் பேச முடியாமல் முடங்கினேன்.

அப்படியே நீடித்தால் ஆபத்து என்று சென்னைக்குப் புறப்பட்டேன். மற்றவர்களை சந்திப்பதில், பேசுவதில் ஒரு மாற்றமிருக்குமே என்று. அப்போதிருந்த பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் அறை எண் 67-இல் தங்கினேன். நாகப்பட்டினத்தைச் சேர்ந்த கலைச்செல்வன் என்ற தம்பியும் அங்கே இருந்தார். விடுதியில் ஒரு இரண்டு மூன்று நாட்கள் ஓடியிருக்கும். யாருடனும் பேசிக்கொள்ளவில்லை. சாப்பிடவும் பிடிக்கவில்லை. சவரம் செய்யாத முகம். எதையோ வெறித்துப் பார்த்தபடியே இருந்ததை பார்த்து அவருக்கு பயம். எனக்கு என்னவோ ஆகிவிட்டது என்று என்னைப் பார்க்கும் போதெல்லாம் மிரண்டு ஒதுங்கினார். அந்த தம்பி பேச்சுக் கொடுத்தாலும் நான் பேசுவதில்லை. எப்படி இருந்திருக்கும்.?

அந்த கலைச்செல்வன் நக்கீரன் காமராஜூக்கு வேண்டியவர். தம்பி காமராஜ் என் ஊர்க்காரர், உறவுக்காரர். என் நிலையைப்பற்றி காமராஜிடம் சென்று கூறி ‘அண்ணனுக்கு என்னமோ தெரியவில்லை. பித்துப் பிடித்த மாதிரி இருக்கிறார்’ என பயந்திருக்கிறார்.

அன்று மாலை ஆறுமணி வாக்கில் தம்பி காமராஜ் என் அறைக்கு வந்துவிட்டார். எதிரில் அமர்ந்து சற்றுநேரம் என் முகத்தையே பார்த்திருந்தார். நான் ஏதும் பேசவில்லை. அவரும் கேட்கவில்லை. சரி வாங்கண்ணே. பீச்சுக்கா போய் வருவோம் என அழைத்தார். சம்மதித்து கீழே இறங்கி வந்து ஒரு ஆட்டோவில் ஏறி கடற்கரைக்கு இருவருமாக சென்றோம். இறங்கி நடந்தபடியே கடலோரம் சென்று உட்கார்ந்தோம். ஆனாலும் பேச்சு வரவில்லை. முடியவில்லை. ஏதோ ஒன்று என் மனதைப் போட்டு அழுத்தியபடியே இருந்தது.

மாலை ஆறரை மணிக்குச் சென்று உட்கார்ந்தோம், இரவு 9 மணிவரை அப்படியே கடந்தது. ஆனால் ஒரு வார்த்தை கூட பேசிக்கொள்ளவே இல்லை. வெறித்த பார்வை வெறித்தபடியே உட்கார்ந்திருந்தேன். பிறகுதான் காமராஜ் “அண்ணே கலைச்செல்வன் சொன்னபோது கூட நம்பவில்லை. ஆனால் இப்போ எனக்கும் அந்த பயம் வந்துடுச்சி. உங்களுக்கு என்னண்ணே ஆச்சு. என்ன பிரச்சனை. தயவு செய்து பேசுங்க. வாய் திறங்க. எதுனா பேசினாதானே தெரியும். பாரமும் குறையும். எதோ நடந்திருக்கு. சொல்ல முடியாம வச்சிருக்கீங்க. அப்படி இருக்காதீங்கண்ணே. பேசுங்கண்ணே” என்றார் பயந்தபடியே.

எனக்கு மனம் தடதடத்தது. பேசத் துடித்தாலும் குழறுகிறது. தடுமாற்றம்.

தயங்கித் தயங்கி "ராஜீவ்காந்தி கொலைக்கு யார் காரணம்"என்று நினைக்கிறீர்கள் என்றேன்.

"இலங்கை தமிழர்கள்தான். விடுதலைப் புலிகள்தான்"என்கிறார்களே என்றார்.

அதுதான் இல்லை என்று நடந்தது முழுவதையும் சொன்னேன். இந்தப் படுகொலையில் சுப்ரமணியசாமியின் பங்கு என்ன. எந்தளவிற்கு தெரிந்திருக்கிறது. சந்திராசாமி யார். இந்த இருவருக்கும் அமெரிக்காவின் சி.ஐ.ஏ.விற்கும் உள்ள தொடர்பு என்ற சந்தேகங்கள் எல்லாம் விவரித்தேன். தலைவர் ராஜீவ்காந்தி சர்வதேச அளவில் என்னவாக உயர்ந்திருக்கிறார். இந்தியா சொந்தக் காலில் நிற்கவேண்டும் என முயலும் ராஜீவின் முயற்சியை பற்றி எல்லாம் கூறினேன். அரபு நாடுகளுக்கு ஆதரவாகவும், அமெரிக்காவுக்கு எதிராகவும் பாராளுமன்றத்தில் ராஜீவ்காந்தி பேசியதையும் குறிப்பிட்டேன்.

காமராஜ் வாயடைத்துப் போய், மிரட்சியோடு என்னைப் பார்த்தபடியே இருக்கிறார். எனக்கு ஓரளவு மனபாரம் குறைந்திருந்தாலும் அச்சம் விலகவில்லை.

"தம்பி காமராஜ், நடந்தேறியது நமது சக்தியை மீறின விஷயம். யாரிடமும், ஏதும் வாய் திறந்திடாதே. தேசத்தின் ஆகப்பெரிய தலைவரையே கொன்றவர்களுக்கு நாமெல்லாம் எவ்வளவு?. எச்சரிக்கையாக இருப்போம். என்ன நடக்கிறது எனப் பார்ப்போம்" என்று கூறியபடியே எழுந்து நடந்தோம்.

விடுதிக்கு வந்து, அங்கிருந்த உணவகத்தில் சாப்பிட வைத்து, என் அறை வரை வந்து, 'ஜாக்கிரதையா இருங்கண்ணே' என விட்டுவிட்டுச் சென்றார். அதன் பிறகு நான் புறப்பட்டு திருச்சிக்கு வந்துவிட்டேன்.

சரியாக ஒரு வாரம் கழிந்திருக்கும். உலகிலேயே முதன்முதலாக ராஜீவ்காந்தி கொலையில் அமெரிக்க சி.ஐ.ஏ. சதி என்ற கட்டுரை ஒன்று நக்கீரன் வார இதழில் வெளி வந்தது. அரைப் பக்கம் அளவில், சுருக்கமான பதிவு அது. ஒரே பரபரப்பு. எனக்கோ பேரதிர்ச்சி. அதில் என்னுடைய பெயர் ஏதுமில்லை என்றாலும் அச்சம். எவ்வளவு பெரிய சதிதிட்டம் அது...

உடனே தொலைபேசியில் நக்கீரன் அலுவலகத்திற்குத் தொடர்பெடுத்து தம்பி காமராஜைப் பிடித்தேன். "எவ்வளவு பெரிய

விஷயம். அதன் பின்னணியில் இருப்பவர்கள் எல்லாம் எப்படியானவர்கள். இப்படி பைத்தியக்காரத்தனமாக செய்துவிட்டாயே" என கடுமையாக கடிந்து கொண்டேன். அவர் சொன்ன சமாதான காரணங்கள் நியாயமானவையாக இருந்தாலும் எனக்கு சரியாகப்படவில்லை.

என் கவலை எல்லாம் டாக்டர் சுப்ரமணியசாமி எச்சரிக்கையாகி விடக்கூடாது. என் பேரிலும் சந்தேகம் வந்துவிடக்கூடாது. அதுவரை என் மீது, நான் இப்படி நினைத்திருக்கிறேன். சந்தேகப்படுகிறேன் என்பதும் சாமிக்குத் தெரியாது.

அப்படியே ஒரு வாரம் போகிறது. அதற்குள் வெடிகுண்டு சம்பவம் நடந்து ஒரு மாதமாகி விடுகிறது..

இந்த நிகழ்வு நடந்தபோது எனக்குப் புரியவில்லை. புரிந்தபோது அதிர்ந்து நின்றேன். ஜுன் மாதம் என்று நினைக்கிறேன். ராஜீவ் கொலை நடந்த ஒரு மாதம் கழித்து. வழக்கம்போல் ஒரு நாள் டாக்டர் சுப்ரமணியசாமியிடம் இருந்து அழைப்பு. சென்னை வருகிறேன். அவசியம் வாருங்கள் என்றார்.

நானும் திருச்சியில் இருந்து அவசரமாக பேருந்தில் சென்றேன். குளித்து முடிந்தவிட்டு சாமியின் வீட்டிற்குச் சென்றேன். அவரது முகத்தில் ஒருவித குழப்பமும் கவலையும் இருந்தது. ஆனால் காட்டிக்கொள்ளவில்லை. அவரின் குணமும் மனமும் அறிந்தவன் என்பதால் கூறுகிறேன்.

என்னைப் பார்த்ததும், 'உங்களுக்காகத்தான் காத்துட்டிருந்தேன். புறப்படுங்கோ' என்று காரில் ஏற்றிக்கொண்டார். இருவரை தவிர யாரும் இல்லை. வாகனம் நேராக காஞ்சிபுரம் போனது. அங்கே ஒரு கல்யாண மண்டபத்திற்கு வெளியே, சாமியானா பந்தல் போட்டு வித்தியாசமான ஏற்பாடு. பெரிய அளவிலான யாகம் என்பது மட்டும் தெரிந்தது. பத்துக்கும் மேற்பட்டவர்கள் யாகத்தைச் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள். ஒரு ஓரத்தில் யாகப் பொருட்கள், அடுக்கடுக்கான பட்டுப்புடவைகள் இன்னும் நிறைய.,

காலையில் தொடங்கி மாலைவரை விடாமல் யாகம் வளர்த்தார்கள். மந்திரம் ஓதியவர்கள் ஒரு நிமிடமும் அதை நிறுத்தவில்லை. சமயத்தில் ஆள் மாறினார்களே தவிர யாகத்தையோ மந்திரத்தையோ நிறுத்தவில்லை. சாமி என்னை மட்டுமே அருகில் வைத்துகொண்டார்.

வேறு யாரும் உடனில்லை. யாகப் பொருட்களோடு புத்தம் புது பட்டுப் புடவைகளையும் போட்டு எரித்தார்கள். சற்று ஓய்வுக்காக சாமி எழுந்துகொண்டால், உடனே அந்த இடத்தில் என்னை உட்காரச் சொல்வார். அன்று முழுக்க இப்படி மாறி மாறி உட்கார்ந்தோம். எதற்காக இந்த யாகம் என்று புரியவில்லை. அப்போதே குறைந்தது ஐந்து லட்சம் ரூபாய் செலவாகியிருக்கும் என்பது என் கணிப்பு.

ஆனால், அந்த யாகத்திற்குப் பிறகு அவர் சற்று மனம் தெளிந்தவராக, ஏதோ கடனை தீர்த்தவராக நின்றிருந்தார். அந்த சமயத்தில்தான் அங்கிருந்த ஐயர் ஒருவரிடம் “எதற்காக இந்த யாகம்” என்று பேச்சுவாக்கில் கேட்டேன். “பிரம்மஹத்தி தோஷ யாகம்” என்றதோடு மேற்கொண்டு ஏதும் கூறவில்லை. நானும் கேட்கவில்லை. “ஆனால் பெரிய செலவாகுமோ, இந்தளவிற்கா யாகம் செய்யவேண்டும்”என்றேன். “இந்த யாகத்தை இப்படி நடத்தினால்தான் பலன் இருக்கும். வேறு மாதிரியாக நடத்தக் கூடாது” என்றார்.

சென்னை திரும்பினேன். தெரிந்த பிராமண நண்பர்களிடம் பேசிக்கொண்டிருக்கும்போது அவர்கள், அடிக்கடி கோபமாக திட்டுவதற்காக பயன்படுத்தும் வார்த்தையில் அந்த ‘பிரம்மஹத்தி’ என்று இருந்ததைக் கண்டேன் அவர்களிடம். “திட்டும் போதும் சபிக்கும் போதும் அந்த வார்த்தையை சொல்கிறீர். அதற்கு என்னதான் அர்த்தம்” என்று கேட்டேன். “இருப்பதிலேயே பெரிய பாவம் ஒரு பிராமணனைக் கொலை செய்வதுதான். அதனால்தான் ஒருவரை திட்டும்போது அந்த பாவத்தின் பெயரில் திட்டுவோம்” என்றார்கள். “சரி பிரம்மஹத்தி யாகம் நடத்தினால் என்ன பொருள்” என்றேன். “தெரிந்தோ தெரியாமலோ ஒரு பிராமணனைக் கொலை செய்துவிட்டால், அந்த பாவத்தைப் போக்குவதற்காக, நீக்குவதற்காக நடத்தப்படும் யாகம்” என்றார்கள். எனக்கு கொஞ்சம் மிரட்சியாகத்தான் இருந்தது. தலைவர் ராஜீவ்காந்தி காஷ்மீரத்து பிராமணக் குடும்பம். காஞ்சிபுரத்தில் நடந்த யாகத்தையும் சேர்த்து நினைத்தேன். தலை சுற்றியது. சுப்ரமணியசாமி ஒரு பிராமணனைக் கொன்ற பாவத்தை இப்படி யாகம் வளர்த்து போக்கியிருக்கிறார் என்பதும் புரிந்தது.

இதுவெல்லாம் எனக்கு அவர் மீதான சந்தேகத்தை மேலும் மேலும் வலுப்படுத்தியபடியே இருத்தது. சில நாட்கள் உருண்டோடுகிறது. சென்னையில் ஒரு நாள் மாலையில் சுப்ரமணியசாமியிடம், “சார் ஒரு

சந்தேகம். அந்த விஷயத்தை தனியாக பேசவேண்டும்" என்று கேட்டேன். ஒரு வினாடி என் முகத்தை உற்றுப் பார்க்கிறார். "ஓ.கே. இங்கேயே பேசலாமா. டெல்லி சென்று பேசலாமா" என்றார். "எப்படி வேண்டுமானாலும் செய்யுங்கள்" என்றேன்.

"சரி, வாங்கோ. டெல்லிக்குப் போனபிறகு பேசுவோம்" என கையோடு அழைத்துக் கொண்டு விமான நிலையம் சென்றார். நான் மாற்று உடைகூட இல்லாமல் அவரோடு புறப்பட்டேன்.

டெல்லி விமான நிலையத்தில் இறங்கி, சாமியின் வீட்டிற்குச் சென்றோம். அவரது மனைவி ரொக்ஷானாதான் உணவைப் பரிமாறினார். முடிந்தவுடன் படுக்கையறைக்கு வந்தேன். அவரது வீட்டில் மெத்தை விரிப்பு தரையிலேதான் இருக்கும். எனக்கு சால்வை, பெட்ஷீட் எல்லாம் கொடுத்தார். போர்த்தியபடி படுத்தேன். சுவாமியும் வந்து பக்கத்திலேயே படுத்துக் கொண்டார். அரசியல் பற்றி ஓரிரு விவரங்கள் பேசினோம். பிறகு உரையாடல் இப்படி தொடர்ந்தது...

"ஆமாம். ஏதோ முக்கிய விஷயம். சந்தேகம். பேசனும் என்றாயே என்ன?" என்றார். மெல்ல துவங்கினேன்.

"சார். எனக்குத் தெரிந்த எத்தனையோ உலக வரலாற்றைப் படித்திருக்கேன். மசில் பவர், ப்ரைன் பவர் இரண்டும் சேர்ந்து ஒருவருக்கு இருந்ததில்லை. உடல் பலம் இருந்தால் மூளை, அறிவு பலம் இருக்காது. அறிவு பலம் இருந்தால் உடல் பலம் இருக்காது. உண்மைதானே."

"ஆமாம்..."

"இந்திய வரலாற்றை எடுத்துக்கிட்டா அறிவு பலத்திற்கு சாணக்கியன். உடல் பலத்திற்கு, போர் வெற்றிக்கு சந்திரகுப்தன் என்று தனித் தனியாகவேதான் இருந்திருக்கிறார்கள். இரண்டு தகுதிகளையுமே பெற்றவர்கள் ஒருவரும் இல்லை சரிதானே சார்."

"சரிதான்."

"ஆனால் அறிவுபலத்திலும் சரி, உடல் பலத்திலும் சரி, இரண்டிலுமே விடுதலைப் புலிகள் அமைப்பு வெற்றி பெற்றவர்களாகவே இருக்கிறார்கள். போர்க் கலையிலும் சரி, திட்டமிடும் சாணக்கியத்திலும் சரி. இணையற்று நிற்கிறார்கள் சரிதானே."

“அப்கோர்ஸ் சரிதான்.”

“அப்படியான விடுதலைப் புலிகள் இயக்கம் தொலைநோக்குப் பார்வை, திட்டமிடல் இன்றி ஏதும் செய்யமாட்டார்கள். அப்படி செய்ததுமில்லை சரிதானே...”

“ஆமாம்.... நீங்க என்ன சொல்ல வர்றீங்க...”

“இல்லை சார். ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகள் கொல்லவேண்டும் என்றால்... முடிவெடுத்திருந்தால் அதற்கு எத்தனையோ வழி இருக்கு. அதைக் கையாண்டிருப்பார்கள். டெல்லி, விசாகப்பட்டிணம், பெங்களூரு என அவர்கள் தேர்தல் பிரச்சாரத்திற்குச் சென்ற இடத்தில் செய்திருக்கலாமில்லையா? திட்டமிடுவதும், அதை செய்து முடிப்பதும் புலிகளுக்கு சாத்தியமாகாததல்ல. சரிதானே சார்...

ம்...

“அப்படி இருக்கும்போது, அந்தப் படுகொலையை தமிழகத்தில் வைத்து ஏன் செய்யனும். நிச்சயம் இந்தப் படுகொலையை அவர்கள் செய்யவில்லை. செய்திருக்கமாட்டார்கள். அந்தளவிற்கு அவர்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல. சரிதானே சார்...”

“ஓ... எப்படி சொல்கிறீர்கள்...?”

“இல்லை சார். ஒரு விஷயத்தை நன்றாக யோசித்துப் பார்க்கனும். தமிழகம்தான் அவர்களுக்கு தார்மீக பலம். தமிழ் மக்களின் ஆதரவுதான் அவர்களுக்கு முக்கியம். இந்தியா ஆதரவு என்றாலும், தமிழகத்தையும், தமிழர்களையும் தாண்டி புலிகளுக்கு ஆதரவு கிடைக்காது. தமிழக மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பும்தான் அவர்களுக்கு எல்லா வகையிலும் பலம்.

அப்படியான தாய்த் தமிழக மக்களுக்கு அவப்பெயராகும்படியோ அல்லது தமிழக மக்களின் அதிர்ப்திக்கு ஆளாகும்படியோ புலிகள் எதையும் செய்யத் துணியமாட்டார்கள். அவர்களுக்கான அவசர உதவி, தொலைநோக்கு உதவி எல்லாமும் இந்த தமிழகம்தான். தமிழகத்திலிருந்துதான் அவர்களுக்கு எதுவும் போய்ச் சேர்கிறது. அப்படியான தமிழகத்தில் வைத்து ராஜீவ்காந்தியை கொலை செய்தால், அது எல்லாவகையிலும் தமது போராட்டத்திற்கு பாதிப்பை உண்டாக்கும். இந்தியா பகை நாடாகும். நினைத்த நேரத்திற்கு படகில் சென்று பல

உதவிகளை பெற்றுத் திரும்பும் தமிழகத்தின் ஆதரவை நிரந்தரமாக இழக்க நேரிடும் என்பதையெல்லாம் கணிக்காதவர்கள் அல்ல புலிகள். சரிதானே சார்.."

........(அவரிடமிருந்த பதில் இல்லை)

"அப்படியிருக்கும்போது அந்தப் படுகொலையை புலிககள் செய்திருப்பார்ககள் என்பது எவ்வளவு பெரிய அபத்தம். இதை யோசிக்கிறதுக்கு பெரிய சாணக்கியத்தனம்கூட தேவையில்லை சார். சாதாரணமா யோசிச்சாலே புரியும். தமிழகத்தில் வைத்து ராஜீவ்காந்தியை படுகொலை செய்துவிட்ட பிறகு அவர்கள் எங்கே போய் தார்மீக ஆதரவு என்று நிற்பார்கள். அதையெல்லாம் உணராமல், கணிக்காமல் செய்வதற்கு அந்த இயக்கம் ஒன்றும் முட்டாள் தனமானதல்ல சார். அவர்கள் ஆதரவையும் பலத்தையும் பெற்றுக்கொள்ளத்தான் எதையும் செய்வார்களே ஒழிய, முடங்கிப் போவதற்காக எதையும் செய்யக்கூடியவர்கள் இல்லை" என்று நான் பேசப்பேச, தலையணையில் சாய்ந்து படுத்திருந்தவர். சற்று எழுந்து சாய்ந்துகொண்டு என்னையே பார்த்தபடி "அதனால் புலிகள் செய்திருக்க மாட்டார்கள் என்கிறீர்களா?" என்றார்.

"இல்லை சார். செய்திருக்கமாட்டார்கள் என்றில்லை. புலிகள் செய்யவில்லை என்றுதான் கூறுகிறேன். ராஜீவ்காந்தியை கொலை செய்வதால் அவர்களுக்கு எவ்வித ஆதாயமும் கிடைக்காது. இழப்புகள்தான் அதிகம். அதனால் அவர்கள் செய்யவில்லை" என்றேன் உறுதியாக.

"அப்படி என்றால் வேறு யாராக இருக்குமென்று நினைக்கிறீர்கள்."

"வேறு ஏதோ சதி இருக்கிறது. அமெரிக்கா சி.ஐ.ஏ. சதியாகக்கூட இருக்கலாம். அல்லது இலங்கையும் அமெரிக்காவும் சேர்ந்த சதியாகவும் இருக்கலாம். ஆனால் புலிகள் அதை செய்யவில்லை என்பதுதான் என் எண்ணம்" என்றேன் உறுதியாக.

"இல்லை, அவாளைப்பற்றி (புலிகள்) உங்களுக்கு ஒன்றும் தெரியாது. அவா ஒரு கூலிப்படை. பணத்துக்காக என்ன வேண்டுமானாலும் செய்வா...."

“அப்படி இல்லை. புலிகள் பணத்துக்காக, கூலிப்படையாக இருப்பவர்கள் என்றால் பலம்மிக்க இந்திய ராணுவத்திற்கு எதிராக நின்றிருக்கமாட்டார்கள். எப்போதோ இந்தியாவுக்கு எதிரான நாடுகளோடு கூட்டணி அமைத்துக் கொண்டிருப்பார்கள். உலகில் அப்படி கூலிப்படையாக இருந்த எத்தனையோ இயக்கங்கள், பின்னாளில் காணாமலேயே போயிருக்கிறது. அதற்கு நிறைய உதாரணங்கள் இருக்கிறது. சற்று ஆழமாக யோசித்தால் புலிகளின் குணம் என்ன என்பது தெரியும் சார்” என்றேன்.

இதைச் சொல்லி முடித்ததும் டாக்டர் சுப்ரமணியசாமியின் முகம் இருண்டு விட்டது. சுருங்கியது. பேச வருகிறார். வார்த்தைகள் தடுமாறுகிறது. எனக்கு ஏதோ புரிகிறது. ஆனால் குழப்பம். தொடர்ந்து ஏதும் பேசிக்கொள்ளவில்லை. அப்படியே உறங்கிப்போனேன்.

காலையில் எழுந்ததிலிருந்தே சாமி எப்போதும் போல் வழக்கமான நிலையில் இல்லை. என்னிடம் மிக சகஜமாக பேசும் போக்கும் இல்லை. தவிர்க்கிறார் என்பது நன்றாகவே தெரிகிறது. உணவுக்குப் பிறகு அவரது அலுவலகத்திற்குச் சென்றோம். அங்கேயும் அப்படித்தான். ஏதும் சரியாக பேசிக்கொள்ளவில்லை. அவர் என்னை விலக்க நினைக்கிறார் என்பது நன்றாக தெரிகிறது.

ஒருவழியாக, அவரிடமிருந்து விடைபெற்றேன்.

சென்னை திரும்ப டெல்லி இந்திரா பிரகதி மைதானம் அருகே இருக்கும் மதுரா சாலையில் நடந்து வந்துகெண்டிருந்தேன். கதர் வேட்டி,. சட்டையில் நடந்து வந்துகொண்டிருந்த என்னைப் பார்த்தபடியே ஒரு சீக்கிய இளைஞர், இரண்டு சக்கர வாகனத்தில் கடந்து சென்றார். சற்று தூரம் சென்ற இளைஞர் வாகனத்தை நிறுத்திவிட்டு, ‘ஏ சாப்’ என்று கத்தி அழைத்தார். நான் சுற்றும் முற்றும் பார்த்தேன். அங்கே என்னைத் தவிர வேறு யாரும் இல்லை. என்னைத்தான் அழைக்கிறார் என்று நின்றேன். என் அருகே வந்தார். சுமார் 28 வயது இருக்கும். தாடி, டர்பன் இருந்தது. “நீங்கள் எங்கே போக வேண்டும். இப்படி நடந்து போகாதீர்கள். நான் ஆட்டோவை அழைத்து வருகிறேன்” என்று பதட்டமாக கூறினார்.

நான், ‘ராம் மனோகர் லோகியா மருத்துவமனை வரை செல்ல வேண்டும். ஆட்டோ ஏதும் கிடைக்கவில்லை. அதான் நடந்தபடியே இருக்கிறேன்’ என்றேன். எனக்கோ இந்தி தெரியாது. பேசுவதை புரிந்துகொள்ளுமளவிற்கு அரைகுறையாகத் தெரியும்.

பிறகு வாகனத்தில் ஏறி எங்கோ சென்றார். ஒரு ஆட்டோவை அழைத்து வந்தார். ஆட்டோ ஓட்டுனரைப் பார்த்து, ராம் மனோகர் லோகியா மருத்துவமனை வரை செல்ல இவ்வளவுதான் ஆகும் என்று பேசி சம்மதிக்க வைத்தார். என்னைப் பார்த்து கூடுதல் தொகை ஏதும் கொடுத்து விடாதீர்கள் என்றதோடு ஆட்டோவில் கவனமாக பத்திரமாகச் செல்லுங்கள் என்று திரும்பத் திரும்பத் கேட்டுக்கொண்டார்.

யார் இந்த சீக்கிய இளைஞர், எதற்காக நமக்கு இந்த உதவியைச் செய்கிறார் என்ற குழப்பம். அனாலும் அவருக்கு நன்றி கூறும் விதமாக 'சுக்கிரியா பாய் சாப்' என்று தோளை தட்டிக்கொடுத்த நிமிடத்தில், அந்த இளைஞர் அப்படியே என்மீது சாய்ந்து கட்டிப்பிடித்துக் கொண்டார். அவரது உடல் நடுநடுங்கியது. குலுங்கி அழுதார். குழப்பமும், பதற்றமுமாய் இருந்தது என் மனம்.

“சாப் உங்களை வேட்டிச் சட்டையில் பார்த்தவுடனேயே, ஒரு தமிழர் என அறிந்துகொண்டேன். ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டிருக்கும் இந்த சமயத்தில் உங்களை யாராவது பார்த்தால் தமிழர் எனத் தெரிந்துகொண்டு அடித்துக் கொன்று விடுவார்களோ என்ற பயம் எனக்கு. அதுதான் பதறிப்போனேன். இந்திராகாந்தி கொலை செய்யப்பட்ட போது, எங்கள் சீக்கிய இனத்து மக்களை அடித்துக் கொலை செய்ததை இன்னும் என்னால் மறக்க முடியவில்லை. எங்கள் குடும்பத்தில் என் சகோதரர்கள் இரண்டு பேர் அப்படி அடித்துக் கொலை செய்யப்பட்டார்கள். அதுவும் என் கண்ணெதிரேயே நடந்தது.

பல சீக்கிய இளைஞர்களைக் கொன்று எரித்தார்கள். அதை என் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாது. அதான் நீங்கள் 'சகோதரா' என்றதும் உடைந்து அழுது விட்டேன்” என்று கண்ணீர் சிந்தினார். மீண்டும் மீண்டும் பத்திரமாக சென்று வாருங்கள் என்றுகூறி ஆட்டோவில் அனுப்பி வைத்தார்.

என் வாழ்நாளில் எத்தனையோ சம்பவங்களை இதய கனத்தோடு இப்படி கடந்து வந்திருக்கிறேன். ஆனால் அந்த சீக்கிய இளைஞரின் எதிர்பாராத சந்திப்பு, உதவி எல்லாம் இன்றும் என் மனதை விட்டு விலகாமல் அழுத்திக்கொண்டிருக்கிறது. அந்த சீக்கிய இளைஞரின் மனித நேயம் இன்றும் என்றும் மறக்க முடியாத நினைவுகளாக...

சரி, ஊருக்குக் கிளம்புகிறேன் என்று புறப்பட்டேன். மாலையில் விமான நிலையம் வந்து சென்னையில் இறங்கினேன். அங்கிருந்து

திருச்சிக்கு, வீட்டிற்கு வந்து சேர்ந்தேன்.

# ஜெயலலிதாவை ஒழிக்க சதி...

*காஞ்சிபுரம் சேட்டு வீட்டிற்கு தலைவர் ராஜீவ் போகக்கூடாது என தடுத்தீர்களே. அந்த வீட்டில் என்ன ஆபத்து? யாரால் ஆபத்து? அது எப்படி உங்களுக்கு தெரிந்தது?...*



அதிலிருந்து வழக்கம்போல், சாமியோடு தினசரி பேசிக்கொள்ளும் முறை இல்லை. எப்போதாவது, தொலைபேசியில் வருவார். சென்னைக்கு வருவதாக கூறுவார். நானும் சென்னை சென்று அவருடன் இருந்துவிட்டு வருவேன். இதற்கிடையில் செல்வி ஜெயலலிதா தேர்தலில் வெற்றிபெற்று முதல்வராக பதவி ஏற்றார். அந்தப் பதவியேற்பு விழாவிற்கு என்னையோ சுப்ரமணியசாமியையோ அழைக்கவில்லை.

ஒருமுறை சென்னை வந்தபோது “பார்த்தேளா. அந்தம்மா (ஜெ) பதவி ஏற்பு விழாவிற்கு ஒரு அழைப்பு கூட கொடுக்கவில்லை. சரி உன்னையாவது அழைத்தார்களா” என்றார்.

“இல்லையே” என்றேன்.

“பாருங்க நன்றி இல்லாத ஜென்மம். நான் தப்பு பண்ணிட்டேன். என்னை விடுங்கள். உங்களையாவது அழைத்திருக்கலாம் இல்லையா? நீங்கதானே முயற்சி எடுத்து அந்தம்மாவைப் பார்த்துப்பேசி சந்திக்க வைத்தீர்கள். அவருக்காகத்தானே பிரதமர் சந்திரசேகரிடம் பேசினோம். தி.மு.க. ஆட்சியை கலைக்க வச்சோம். பிறகுதானே இந்த தேர்தல். வெற்றி எல்லாம்” என்று கூறி ஆதங்கப்பட்டார். அவரின் கோபம் நியாயமானது என்றே எனக்கும் தோன்றியது.

“இனிமே அவரை சும்மாவிடப் போறதில்லை” என்றார்.

அதிலிருந்து முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு எதிராக காய் நகர்த்தினார்.

அப்போது செல்வி ஜெயலலிதா அவர்களிடமிருந்து வெளியேறிய வி.வி.சாமிநாதன், ராஜாராம், பொன்னையன், பி.எச். பாண்டியன், திருநாவுக்கரசு ஆகியோர் தனித்தனியாக இருந்தார்கள். முதலில் அவர்களை எல்லாம் ஒன்று சேர்க்கிற வழியை பார்க்கனும் என்றார்.

அதன் முதல் வேலையாக, ராஜாராமை அவரது வீட்டில் நான் சந்தித்தேன். பிறகு சாமியை சந்திக்க வைத்தேன். ஒரு வழியாக திருநாவுக்கரசை தவிர மற்றவர்கள் ஒன்று சேர்ந்தார்கள். என்ன காரணமோ திருநாவுக்கரசர் சரியாக வரமாட்டார் என்று ராஜாராம் கூறிவிட்டார். ஆனால் சாமி விடவில்லை. எப்படியாவது திருநாவுக்கரசரும் இதனுள் இருக்க வேண்டும் என்றார். அதன் பேரில் திரும்பவும் திருநாவுக்கரசரை சந்தித்தேன். பேசினேன். சாமியையும் சந்திக்க வைத்தேன். ஆக ஜெ. எதிர்ப்பில் பிரிந்தவர்கள் இப்போது ஒன்று சேர்ந்துவிட்டார்கள்.

இந்த நேரத்தில்தான் வெங்கட்ராமன் என்ற வழக்கறிஞர் என்னைச் சந்தித்தார். அவர் திருச்சியில் முன்சீப்பாக இருந்த பிராமணர். பிறகுதான் வழக்கறிஞரானார். முன்பே எனக்குத் தெரிந்திருந்தவர்.

அந்த வெங்கட்ராமன், மிக முக்கியமான ஆவணங்களை எல்லாம் என்னிடம் காட்டினார். அனைத்தும் ஜெ. சொத்துக்குவித்த ஆவணங்கள். “எனக்கு ஏதாவது செய்வார்கள் என்று இருந்தேன். ஆனால் அந்தம்மா எதையும் செய்யவில்லை” என்று புலம்பினார்.

“இந்த ஆவணங்களை வைத்து என்ன செய்யப் போகிறீர்கள் வெங்கட்ராமன்... சரி வருமா” என்றேன்.

“இல்லை. நான் சுவாமிகிட்ட பேசிட்டேன். இப்படியான ஆவணங்கள் இருக்கு என்று அவுட்லைனை மட்டும் சொன்னேன். அவர், உங்ககூட வரச்சொன்னார் அதான்” என்று கூறினார். சாமியிடம் முன்பே கூறிவிட்டதாக சொன்ன பிறகு என்ன செய்வது, சரி வாருங்கள் என்று கூறினேன். அடுத்த நாள் நாங்கள் இருவரும் சாமியைச் சந்தித்தோம். வெங்கட்ராமன் கொடுத்த ஆவணங்கள் ஒவ்வொன்றாய் பார்த்த சுவாமி, சந்தோஷத்தில் ஆகாவென்று துள்ளிக்குதித்தார். இது ஒன்று போதுமே என மகிழ்ந்தார்.

அடுத்து வி.வி.சாமிநாதன், ராஜாராம், பி.எச்.பாண்டியன், திருநாவுக்கரசர், பொன்னையன் ஆகிய ஐவரையும் ஒரு இடத்திற்கு வரவைத்து சாமி சந்தித்தார். ஆவணங்களைக் கொடுத்து எப்படி செய்யவேண்டும் என்பதையும் கூறி ஆகவேண்டியதைப் பாருங்கள். மற்றவற்றை நான் கவனித்துக்கொள்கிறேன் என்றார்.

அதனையடுத்து, செல்வி ஜெயலலிதாவிற்கு எதிரான ஊழல் மற்றும் சொத்துக்குவிப்பு புகார் தயாரிக்கப்பட்டது. அதற்கான ட்ராப்ட் அனைத்தும் பி.எச்.பாண்டியன் மேற்பார்வையிட்டு கவனித்துக் கொண்டார். வி.வி.சாமிநாதனும் பொன்னையனும் முன்னின்று செய்தார்கள். இப்படி எல்லாமும் தயாரான பிறகு தமிழக ஆளுநரிடம் மனுக் கொடுக்கும் படலம் அரங்கேறியது. பின்னணியில் இருந்து இயக்கியது டாக்டர் சாமி. அந்த புகாருக்குப் பிறகு மேற்படி ஐவர் அணி ஒன்றாக சேர்ந்து ஒரு பத்திரிகையாளர் சந்திப்பையும் நடத்த ஏற்பாடானது. அதற்கான இடம் கன்னிமாரா ஓட்டல். அந்த சந்திப்பின் போது திருநாவுக்கரசர் இருப்பதாக திட்டமில்லை. ராஜாராம் வேண்டாம் என்றிருந்தார். நான்தான் திருநாவுக்கரசுக்கு தகவல் கூறி வரச் சொன்னேன். கடைசியில் அனைவரும் சேர்ந்தே செய்தியாளர்களை சந்தித்தார்கள். அந்தக் கூட்டத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் பாலா

பழனூரும் கலந்துகொண்டார். ஜெயலலிதாவின் ஊழல் மற்றும் சொத்துக் குவிப்பு வழக்கு பற்றிக் கூறினார்கள்.

அன்று தமிழக ஆளுநரிடம் ஜெயலலிதா மீது கொடுத்த ஊழல் புகாரை அடுத்து ஜெயலலிதா - சுப்ரமணியசுவாமி மோதல் உச்சமடைந்தது. சுவாமி மீது ஜெ. தரப்பு வழக்குப் போட்டு விரட்டியது. தமிழகத்தின் எல்லைக்குள் சாமியை எங்கு கண்டாலும் கைது செய்துவிடவேண்டும் என்ற வேகத்தில் இருந்தார் ஜெயலலிதா. கடைசியில் உச்ச நீதிமன்றத்தில் ஜாமீன் உத்தரவை பெற்று சென்னை உயர்நீதிமன்றத்துக்கு வந்தார். அந்த உயர்நீதி மன்றத்தில்தான் அ.தி.மு.க. மகளிரணி சாமிக்கு வரலாற்றுப் புகழ்வாய்ந்த 'கறுப்புக்கொடி' போராட்ட வரவேற்பு கொடுத்தது. நல்ல மனிதர்கள் அந்த 'கறுப்புக்கொடி' போராட்டத்தை ஏழேழு ஜென்மத்திற்கும் மறக்க மாட்டார்கள்.

அன்று ஆளுநரிடம் கொடுத்த ஊழல் புகார் மனுதான் பிறகு 1996-ல் ஆட்சிக்கு வந்த தி.மு.க. அரசு வழக்காக பதிவு செய்தது. அந்த வழக்குதான் இன்றைய காலகட்டத்தில் பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் அவர்களின் தலைக்கு மேல் தொங்கும் கத்தியாக வந்து நிற்கிறது. அது தனிக்கதை. இப்போது, அந்த வழக்கின் சூத்ரதாரியான பி.எச். பாண்டியனின் மூத்த மகன் மனோஜ் பாண்டியனின் மேற்பார்வையில்தான் பெங்களூரு வழக்கு நடைபெறுகிறது. சிரிக்காதீர்கள். இது காலத்தின் கோலம். நான் விட்ட இடத்திலிருந்து வருகிறேன்.

ஐவர் அணி தமிழக ஆளுநரிடம் ஊழல் புகார் கொடுத்தது. பிறகு சாமி மீது ஜெயலலிதா தரப்பு வழக்குப் போட்டு விரட்டியது வரையிலும் நான் சாமியுடனே இருக்கிறேன். அனைத்திலும் பங்கேற்கிறேன். என்னை முன்வைத்தும் பல காரியங்கள் நடந்தது. அவருக்கு என்னை விலக்கிவிட மனமில்லை. ஏதோ விஷயம் தெரிந்திருக்கு என விலக்கி விடாமல் வைத்துக்கொண்டார். எனக்கோ ராஜீவ்காந்தியை கொலை செய்த கூட்டம். நம்மை விட்டு வைக்குமா என்ற பயம். முழுதாய் ஒட்டிக் கொள்ளவுமில்லை. உறவை வெட்டிக்கொள்ளவும் இல்லை. புதைமணலில் இருந்து மீள்பவனின் மனநிலையில் தான் இருந்தேன். அவருடன் இருந்துகொண்டே ராஜீவ்காந்திகொலை வழக்கில் நானே பல உண்மைகளைத் தேடினேன். அதற்குள் இரண்டரை வருடங்கள் ஓடிவிட்டிருந்தது.

இதற்கிடையில், சென்னை உயர்நீதிமன்றத்தில் மகளிர் அணி முற்றுகை மரியாதை என நடந்ததையெல்லாம் வைத்து மேலும்

கோபமடைந்த சாமி ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கும் தொடர்பு இருக்கிறது. ஆகவே அவரையும் அழைத்து விசாரிக்க வேண்டும் என்று ஜெயின் கமிஷனில் அபிடவிட்டே தாக்கல் செய்துவிட்டிருந்தார்.

இந்த நேரத்தில் நானும் ஜெயின் கமிஷனில், ராஜிவ்காந்தி கொலையில் டாக்டர் சுப்ரமணியசாமிக்கு உண்டான தொடர்பு பற்றி ஒரு அபிடவிட் தாக்கல் செய்தாக வேண்டும் என்ற முடிவுக்கு வந்திருந்தேன். டெல்லியில் அதற்கான வழி என்ன. எப்படி செய்வது, அங்கு யார் உதவி செய்வார்கள் என்பது குறித்து மிக நெருங்கிய இரண்டு மூன்று பேரிடம் மட்டுமே ஆலோசித்து வந்தேன். அதிலொருவர் ராசிபுரத்தைச் சேர்ந்த மோகன் கல்யாணி. அரசியல்வாதியல்ல.

அந்த சமயத்தில் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான தண்டாயுதபாணி “ஏம்பா. வாழப்பாடி ராமமூர்த்தி உன்னை அவசியம் பார்க்கனுங்கிறார். மெட்ராஸ் போனால் அவரை சந்திக்கப் போயேன்” என்று இரண்டு முறை பேசினார். எனக்கு ஏனோ வாழப்பாடி ராமமூர்த்தியை சந்திப்பதில் நாட்டமில்லை.

அடுத்த இரண்டொரு நாளில் சென்னை சென்றேன். வழக்கமாக தங்கும் விடுதிகளில் ஒன்றான எழும்பூர் அபிராமி ஓட்டலில் தங்கியிருந்தேன். அடுத்த நாள் எனக்குத் தெரிந்த நண்பரான கோவை ரவிச்சந்திரன் பார்க்க வந்தார். பேசிக்கொண்டிருக்கும்போதே “வாழப்பாடி ராமமூர்த்தி உங்களை சந்திக்கனும் என்கிறாரே. ஏண்ணே. அவரை சந்திக்கிறதுதானே” என்றார்.

“எனக்கு வாழப்பாடி மீதே நிறைய சந்தேகமிருக்கு. அவரை என்னவென்று போய்ப் பார்ப்பது” என்றேன்.

“ஏண்ணே. பயமா. சந்தேகம்னா அதை நேரில் கேட்டுவிடுவதுதானே.” என்றார்.

“அட எனக்கென்ன பயம். நான் எதுக்கு பயப்படனும்” என்றேன்.

“சரி. பயமில்லன்னா வாங்க. நேர்ல சந்திச்சு பேசுங்க. சந்தேகத்தையும் கேட்டுடுங்க” என்றார்.

“சரி. வா போகலாம்.” என்று புறப்பட்டோம்.

நேராக அடையார் சாஸ்திரி பவன் அருகே இருந்த வாழப்பாடி ராமமூர்த்தியின் வீட்டிற்குள் நுழைகின்றோம். மகாராஜன் என்ற உதவியாளர்தான் பரபரக்க வந்து வரவேற்றார். உள்ளே ஷோபாவில் ராமமூர்த்தி உட்கார்ந்திருக்க, அவரது அருகில் போளூர் வரதன் தரையில் உட்கார்ந்திருக்க, என்னைப் பார்த்தவுடன் அடித்துப் பிடித்துக்கொண்டு எழுந்து வந்து வரவேற்ற ராமமூர்த்தி, போளூர் வரதனை உடனே வெளியேற்றி விட்டார். நேரே மாடி அறையில் சென்று இருவரும் அமர்ந்தோம்.

சாதாரணமாக சில விஷயங்களை பேசியிருந்துவிட்டு "சொல்லுங்கள் வேலுசாமி. தலைவர் கொலையில் உங்களுக்கு என்ன சந்தேகம்? சுப்ரமணியசாமி மீது என்ன சந்தேகம்" என்று நேரிடையாக விஷயத்திற்கு வந்தார்.

"எனக்கு சாமி மீது சந்தேகம் என்பது இருக்கட்டும். அதைப் பிறகு பேசுவோம். உங்கள்மீதே சந்தேகம் இருக்கிறதே, என்னசெய்வது" என்றேன். அவ்வளவுதான், முகம்மாறிப் போனவர் "என்ன.. என்ன.. என்மீது சந்தேகமா" என்று பதறினார்.

"ஆமாம், நான் நேரடியாகவே கேட்கிறேன். மே 21ஆம் தேதி கூட்டத்திற்கு தலைவர் ராஜீவ்காந்தி வருவது 20ஆம் தேதி வரையிலும் உங்களுக்குத் தெரியாது. அப்படி தெரிந்தவுடனேயே விழுந்தடித்துக் கொண்டு தமிழக ஆளுநரை சந்திக்க, கிண்டி கவர்னர் மாளிகைக்குப் போனீர்களே ஏன்? கவர்னரை சந்தித்தீர்களே எதற்கு? தலைவர் ராஜீவ்காந்திக்கு ஆபத்து இருக்கிறது. எனவே அவருக்கு மிக பலமான பாதுகாப்பு வேண்டும் என்று புகார் கொடுத்தீர்களே, என்ன பின்னணி?

அதற்கு முன்பு இங்கே தி.மு.க.வின் ஆட்சி இருந்தபோது தலைவர் ராஜீவ்காந்தி பலமுறை தமிழகம் வந்து போயிருக்கிறாரே. அப்போதெல்லாம் இல்லாத ஆபத்து, இப்போது மட்டும் எப்படி? அதுவும் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டு ஒரு விதத்தில் காங்கிரஸின் ஆட்சிதான் என்கிற அளவிற்கு ஆளுநர் ஆட்சி நீடிக்கிறபோது எப்படி ஆபத்து வரும்? நீங்கள் ஆபத்து என்று நினைக்கும்படியான தகவல் வந்திருக்கிறது என்றால் அதைச் சொன்னவர்கள் யார்? என்ன சோர்ஸ்?" என்ற கேள்விகளை அடுக்கினேன்.

அவர் பேசினாரா. குழறினாரா, பயத்தில் உளறுகிறாரா? தெரியவில்லை. “என்ன வேலுசாமி. என் மீதா சந்தேகப்படுறீங்க. இந்த வாழப்பாடி ராமமூர்த்தி மீதா சந்தேகம்” என்று இரண்டு கைகளாலும் மார்பில் அடித்துக்கொண்டு ஆவேசத்தோடு, ஆதங்கத்தோடு குமுறினார்.

“சார் இந்தக் கதையெல்லாம் வேண்டாம். நீங்கள் இப்படி செய்வதாலேயே சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவர் என்றாகிவிட முடியாது. கேள்விக்கு சரியான பதிலை மட்டும் சொல்லுங்கள்” என்றவுடன் அப்படியே மிரண்டுபோய் உட்கார்ந்தார்.

“நீங்கள் 20ஆம் தேதி கவர்னரை சந்தித்து புகார் மனு தருகிறீர்கள். அவரும் அதை பெற்றுக்கொண்டு காவல்துறைக்கு உத்தரவிடுகிறேன், கூடுதலான பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்கிறேன் என்றார்.

“நீங்களோ, அதெல்லாம் முடியாது. தமிழக காவல்துறை தலைவரை இப்போதே வரச் சொல்லுங்கள். அவருடன் பாதுகாப்பு ஏற்பாட்டை பற்றி தெரிந்து கொள்வோம் என்று ஆளுநரிடம் பிடிவாதம் பிடித்தீர்களே. ஏன்?

சரி, அதன் பிறகு ஆளுநர் தமிழக காவல்துறைத் தலைவரை அவசரமாக அழைத்தார். அவரும் வந்தார். என்னென்ன பாதுகாப்பு ஏற்பாடு என்று கேட்கிறீர்கள். டி.ஜி.பி. ராமசாமி, தலைவர் விமான நிலையத்திற்கு வந்ததிலிருந்து காஞ்சிபுரம் செல்வது வரை விளக்கி, வழியெங்குமான பாதுகாப்பு ஏற்பாடு பற்றி கூறுகிறார். காஞ்சிபுரத்தில் ஒரு சேட்டு வீட்டில் உணவருந்தி சற்று ஓய்வெடுக்கவுள்ளார் என்றபோது, ‘அந்த சேட்டு வீடு வேண்டாம். அது சரியாக இருக்காது’ என மறுத்தீர்களே ஏன்? அதற்கு பதில், விமான நிலையத்தின் வி.ஐ.பி. லாஞ்ச்சிலேயே உணவும் சற்றும் ஓய்வும் இருக்கட்டும் என மாற்றினீர்களே, எதற்கு?

காஞ்சிபுரம் சேட்டு வீட்டில் தலைவர் ராஜீவ் போகக்கூடாது என தடுத்தீர்களே. அந்த வீட்டில் என்ன ஆபத்து?. யாரால் ஆபத்து?. அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது?... பதில் சொல்லுங்களேன். இல்லை, அப்படி எந்த தகவலும் அறியாமலேயே தமிழக கவர்னரிடம் சென்று சும்மா ஒரு புகார் மனுவை கொடுத்தேன் என கூறப்போகிறீர்களா என்றால் கேட்பவர்கள் மடையர்கள் அல்ல என்பதை புரிந்துகொள்ளுங்கள்” என்றேன்.

வாழப்பாடி ராமமூர்த்திக்கு வியர்த்துக் கொட்டியது. முகத்தில் பதட்டம் படர்ந்தது. அவரை கட்டுப்படுத்திக்கொள்ள சிறிது நேரம் போனது. பிறகு பேச்சை மாற்றி சரி, சுப்ரமணியசாமி மீது என்ன சந்தேகம் என்பதற்குள் தொடர்ந்தார். அவரது நோக்கம் 'சுவாமி மீது நான் என்ன சொல்கிறேன்' என்பதிலேயே இருந்ததை உணரமுடிந்தது.

"சாமி மீது வெறும் சந்தேகம் மட்டுமல்ல. வலுவான மர்மங்களும் இருக்கிறது. நாளைய மறுதினம் டெல்லியில் ஜெயின் கமிஷன் விசாரணை. அதில் சுப்ரமணியசாமியை பாக்ஸில் நிற்கவைத்து குறுக்கு விசாரணை செய்யப் போகிறார்கள்தானே...?"

"ஆமாம்."

"அந்தக் குறுக்கு விசாரணையில் நீங்களும் ஒரு பார்ட்டி. உங்கள் சார்பான வழக்கறிஞராக முத்துக்கிருஷ்ணனை நியமித்திருக்கிறீர்கள். அவர் சுப்ரமணியசாமியை உங்கள் சார்பாக குறுக்கு விசாரணை செய்வார். செய்யப்போகிறார். சரிதானே".

சரிதான்.

அப்போது இந்த ஒரு கேள்வியை மட்டும் நீங்கள் கேளுங்களேன் பார்ப்போம். "மே 20ஆம் தேதி நள்ளிரவில் ஆத்தூர் பொதுக்கூட்டத்திலிருந்து அவசரமாக டெல்லி போயாக வேண்டும் என சென்னை வந்தார் சாமி. 21ஆம் தேதி டெல்லிக்குச் சென்றீர்களா? டெல்லிக்குச் சென்றீர்கள் என்றால் விமானத்திலா? ரயிலிலா அல்லது பேருந்திலா? அல்லது எதுவுமே இல்லாமல் நடந்தேதான் போனீர்களா?. விமானத்தில் சென்றதாக சொன்னால் உங்களுக்கு பக்கத்து சீட்டில் அல்லது முன்பாகவோ பின்பாகவோ இருந்த சக பயணிகள் யார் யார் என்ற கேள்வியைக் கேளுங்களேன் பார்ப்போம்" என்றேன்.

"அப்புறம். வேற என்னென்ன கேள்வி, என்னென்ன சந்தேகம். விவரமாக சொல்லுங்களேன்" என வேகமானார்.

"சார், முதலில் அந்த ஒரு கேள்வியை மட்டுமே கேளுங்கள். அந்த சந்தேகத்திற்கு மட்டும் பதிலை வாங்குங்கள். மற்றதை பிறகு கூறுகிறேன். எல்லாவற்றையும் இப்போதே கூறிவிட முடியாதே" என்றேன். அதற்கு மேலும் என்னிடமிருந்து விஷயங்களை வாங்க முடியாதவரான தவிப்பு தெரிந்தது.

“சரி வேலுசாமி. ஒரு பத்து நிமிடம் இருங்கள்,. இதோ வந்துவிடுகிறேன்” என்றபடியே அறையைவிட்டு வெளியே சென்றார். ஆனால் சொன்னபடி வரவில்லை. உதவியாளர் மகாராஜன் வந்து டி.வி.யை ஓட விடுகிறார். பிறகு வறுத்த முந்திரியை கொண்டுவந்து வைக்கிறார். நான் சாப்பிடாத போதும், உலர் பழங்களைக் கொண்டு வருகிறார். பிறகு பழச்சாறு வகைகள் வருகிறது. குளிர்பானம் வருகிறது. தேனீரும் வருகிறது.

ஆனால் வாழப்பாடி ராமமூர்த்தி மட்டும் அறைக்கு வந்தபாடில்லை. “எங்கப்பா உங்க தலைவர்” என ஊழியரிடம் கேட்டபோது அவர் யாருடனோ பேசிக்கொண்டிருக்கிறார் என்ற பதில்தான் வந்தது. அந்த வீட்டில் எங்களைத் தவிர வேறு யாருமே இல்லை. எல்லோரையும் விரட்டாத குறையாக வெளியே அனுப்பிவிட்டிருந்தார். ஒன்றும் புரியவில்லை. கடைசியில் ஒண்ணேகால் மணி நேரம் கழித்து உள்ளே வந்தார். “நீங்க கேட்ட சந்தேகங்களை எல்லாம் நாங்க கேட்டு விடுகிறோம். இரண்டொரு நாளில் நானே தொடர்புக்கு வருகிறேன்” என்றார்.

“உங்களுக்கு எதுக்கு சிரமம், நானே போன் செய்கிறேன். நான் சொன்னதை மட்டும் சாமியிடம் மறக்காம கேட்டுவிடுங்கள்” என்றேன். பிறகு வாங்க போகலாம் என்றார்.

கீழே இறங்கி வந்தோம். என்னோடு வந்திருந்த கோவை ரவிச்சந்திரன், சுவாமிநாதன் ஆகியோரை அழைத்துச் சென்று தனியாக ஏதோ பேசினார் ராமமூர்த்தி. பிறகு வெளியே வந்த நாங்கள் மூவரும் ஒரு ஆட்டோவைப் பிடித்து, அதில் ஏறினோம். வரும்போதுதான் கோவை ரவிச்சந்திரன் “என்னண்ணே கொஞ்சம் இறங்கி வரக்கூடாதா? பேரத்தை முடிச்சுக்கலாமில்ல. 3 ரூபாயிலேயே இருக்கீங்க. கொஞ்சம் இறங்கி வாங்க. இரண்டரை என்றால் கூட இன்னைக்கே செட்டில் பண்ணிடலாம்னு தலைவர் சொல்றாரு (வாழப்பாடி). என்னண்ணே சொல்றீங்க” என்று போட்டு உடைத்தார்.

எனக்கு பகீர் என்றானது. ஒன்றும் புரியவில்லை. பக்கத்திலிருந்த சுவாமிநாதனைப் பார்க்கிறேன். அவர் முழிக்கிறார். “என்னய்யா, என்னை வைத்து ஏதாவது பேரம் பேசினீர்களா” என்றேன் கோபத்தோடு. அவர் முழித்தபடியே இருக்கிறார். சத்தியமா அந்த விஷயம் எல்லாம் எனக்குத் தெரியாதண்ணே என பதறினார் ரவிச்சந்திரன்.

பிறகுதான் தெரிந்தது, என்னுடன் இருந்த சுவாமிநாதனும், வாழப்பாடியுமே அப்படி ஒரு பேரத்தைப் பேசியிருக்கிறார்கள். வாழப்பாடியார் தொடங்கி வைக்க, என் தரப்பில் சுவாமிநாதன் மூன்று கோடி என்று பேச, இன்று கோவை ரவிச்சந்திரனிடம் இரண்டரை கோடிக்கு இறங்கிவரச்சொல்லு என பேரம் பேசியிருக்கிறார். அதாவது நான் சுப்ரமணியசாமிக்கு எதிராக ஜெயின் கமிஷனுக்குப் போகக்கூடாது என்பதற்கே அந்த பேரம். சுப்ரமணியசாமிக்காக வாழப்பாடியார் குதித்திருக்கிறார்!. நான் வழியிலேயே ஆட்டோவை நிறுத்தச் சொன்னேன். எப்படிப்பட்ட உயிர் விஷயம். இதில் விளையாட்டா என்று இருவரையும் கடிந்துகொண்டதோடு கண்டிக்கவும் செய்தேன்.

கோவை ரவிச்சந்திரனோ, இதில் எனக்கேதும் தெரியாதுண்ணே. இன்னைக்கு வாழப்பாடி இரண்டரை கோடியாக குறைக்கச் சொல்லி என்னிடம் சொன்னது மட்டும்தான் தெரியும். அதற்கு முன்பாக பேரத்தை வாழப்பாடியாரே பேசினாரா அல்லது சுவாமிநாதனே பேசினாரா என்று தெரியாது என, நடந்ததைச் சொன்னார்.

அங்கேயே அவர்களை துண்டித்துக்கொண்டு, வேறு ஒரு ஆட்டோவைப் பிடித்து எழும்பூரில் உள்ள அபிராமி ஓட்டலுக்கு வந்துவிட்டேன். வழி நெடுக எனக்கு "இவ்வளவு பெரிய தொகையில் பேரம் பேச வாழப்பாடியாருக்கு என்ன அவசியம் வந்தது. இந்தப் படுகொலையில் அவருக்கென்ன தொடர்பு" என்ற சிந்தனையே குழப்படி செய்தது.

ஓட்டலில்தான் இருந்தேன். சற்று நேரத்திற்குள் ஒரு தொலைபேசி அழைப்பு. வரவேற்பாளர் அறைக்குச் சென்றுதான் பேசவேண்டும். அப்போதெல்லாம் தனித்தனி அறைகளுக்கான தொலைபேசி வசதி இல்லை. தொலைபேசியை வாங்கி, யார் என்று கேட்டேன். மறுமுனையில் "அண்ணே. தப்பு பண்ணிட்டீங்கண்ணே. தப்பு பண்ணிட்டீங்க" என்ற குரல். எனக்கு பழக்கமானவர்தான். பெயரை சொன்னால் நாகரிகமாக இருக்காது. அவரும் டாக்டர் சுப்ரமணியசாமியுடன் இருப்பவர்தான். ஒருவகையில் நான்தான் கட்சியில் இணைத்து விட்டிருந்தேன் எனலாம். அப்படிப்பட்டவரிடமிருந்துதான் அந்த வார்த்தை. புரியாவிட்டாலும் ஏதோ ஒன்று மனதை நெருடியது.

"என்னண்ணே இப்படி பண்ணிட்டீங்க. நீங்க வாழப்பாடி ராமமூர்த்தியை சந்திச்சீங்களா" என்றார். எனக்கு தலையில் இடிஇடித்த

மாதிரி பேரதிர்ச்சி.

வாழப்பாடி ராமமூர்த்தியை சந்தித்துவிட்டு இப்போதுதான் ஓட்டல் அறைக்குள் வந்து அமர்கிறேன். அந்த சந்திப்பு கோவை ரவிச்சந்திரன் சுவாமிநாதனை தவிர வேறு யாருக்குமே தெரியாது. அந்த இருவரும் சாமியின் முகாமிலுள்ள இந்த டெலிபோன் உரையாடல் நபருக்கு தெரியாதவர்கள். மேலும் என்னை தவிர்த்துவிட்டு பார்த்தால் எஞ்சியிருப்பது வாழப்பாடி ராமமூர்த்தி மட்டுமே...? எனக்கு மேலும் அதிர்ச்சி கூடியது.


“என்னப்பா சொல்ல வர்றே” என்றேன்.

“அண்ணே நீங்க வாழப்பாடி ராமமூர்த்திய பார்த்திருக்கீங்க. அவரிடம் இந்த விதமான சந்தேகங்களை சுவாமியை நோக்கி கேட்கச் சொன்னீர்களா” என்று நான் வாழப்பாடியிடம் கூறியதை அப்படியே சொன்னது டெலிபோன் குரல். “நீங்க மோசம் போயிட்டிங்கண்ணே. வாழப்பாடி ராமமூர்த்தியிடம் என்னென்ன கேள்விகளை கேட்டீர்களோ. அதை அந்த ஆள் அப்படியே டெல்லியில் உள்ள சாமிக்கு விவரமா சொல்லியிருக்காரு. சுப்ரமணியசாமி அதை அப்படியே இங்க (சென்னை) இருந்த சந்திரலேகாகிட்ட பேசினாரு. அப்படி பேசின தகவலை வச்சிதான் உங்ககிட்ட நான் கேட்டேன். ஏதோ சொல்வதை சொல்லிட்டேன். ஜாக்கிரதையா இருங்கண்ணே” என்று அவர் ஃபோனை வைத்துவிட்டார்.

எனக்கு மனதில் பயம் கிடுகிடுவென்று ஏறியது. ஏதோ ஒரு பேராபத்து வளையத்திற்குள் இழுபட்டுக் கொண்டிருக்கிறேன் என நடுங்கியது. எப்போதும் எதுவும் நடக்கலாம் என்பதை உணர்ந்தேன்.

என்ன நடந்தாலும் சரி. எப்படியாவது டெல்லிக்குள் சென்றுவிடவேண்டும். ஜெயின் கமிஷனில் சுப்ரமணியசாமிக்கு எதிரான அபிடவிட்டை தாக்கல் செய்துவிட வேண்டும். அதன் பிறகு செத்துப் போனால்கூட பரவாயில்லை. நமக்குத் தெரிந்த இந்த ரகசியங்கள் நாட்டு மக்களுக்குத் தெரிந்துபோனால் அதுவே போதும் என்ற முடிவுக்கு வந்தேன்.

# வாழப்பாடி ராமமூர்த்தி..
# நீயுமா..?



இரண்டு நாட்கள் கடந்துவிட்டது. நாம் சொன்னபடி வாழப்பாடியார் சுப்ரமணியசாமியிடம் கேள்விகளை கேட்டாரா. மேற்கொண்டு என்ன ஆச்சு என்ற தகவல் ஏதுமில்லை. எனக்கு படபடப்பு. தெரிந்துகொண்டால் நன்றாக இருக்குமே என்ற தவிப்பு. அதனால் நானே டெல்லியில் உள்ள வாழப்பாடி ராமமூர்த்தியின் வீட்டிற்கு போன் செய்தேன். இரண்டு மூன்று முறைக்கு மேல் தொடர்புகொண்டேன். ஒவ்வொரு முறையும் ஒருவர் விவரம் கேட்கிறார். அவரிடம் சொல்கிறோம் என்கிறார்கள். ஆனால் வாழப்பாடி தொடர்புக்கு வரவேயில்லை. அவர் என்னிடம் பேசுவதைத் தவிர்க்கிறார் என்பது புரிந்தது. ஆனால் ஏனென்று புரியவில்லை.

இந்த நிலையில்தான் நக்கீரன் காமராஜின் திருமணம் குன்றக்குடி அடிகளாரின் தலைமையில் பெரம்பலூரில் நடக்கிறது. அன்று பார்த்து நான் முக்கிய வேலை என்று பெங்களூருக்குச் சென்றேன். தெரிந்த தம்பியாயிற்றே எப்படியும் கலந்துகொள்ள வேண்டும் என்று சேலம், ஆத்தூர் என குறுக்கு வழியாக பெரம்பலூர் வந்துசேர்ந்தேன்.

திருமண மண்டபத்தில் நான் நுழைந்தபோது, கருணாநிதி, குன்றக்குடி அடிகளார், வலம்புரிஜான், க.சுப்பு, நக்கீரன் கோபால் எல்லாம் மேடையில் அமர்ந்திருந்தார்கள். என்னையும் மேடைக்கு அழைத்தார்கள். நான் வேண்டாம் என கூறி, கீழே முன்வரிசையில் உட்கார்ந்தேன். மேடையில் இருந்த ஒவ்வொருவரும் என்னைப் பார்த்து மரியாதை நிமித்தமாக வணக்கம் சொன்னார்கள். நானும் கைகூப்பினேன்.

தலைவர் கருணாநிதிக்கு லைட் வெளிச்சத்தில் சரியாகத் தெரியவில்லை போலும். சற்று தலைசாய்த்துப் பார்க்கிறார். அருகிலிருந்த நக்கீரன் கோபாலிடம் ஏதோ கேட்கிறார். அவரும் என்னைக் கைநீட்டி ஏதோ கூறினார். உடனே என்னைப் பார்த்து கைகூப்பினார் கருணாநிதி. நானும் பதிலுக்கு வணக்கம் என்றேன்.

அதற்குள் வாழப்பாடி ராமமூர்த்தியும் வந்து மேடையில் அமர்ந்தார். எதிரே நான் உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும் பேயைக்கண்ட மாதிரி அவருக்கு முகம் வெளிறியது. அதன் பிறகு வேறுபக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டார். கடைசி வரை நேரெதிரே கீழே உட்கார்ந்திருக்கும் என்னைப் பார்க்கவே இல்லை. என்னடா இது. எனக்கு நெருக்கமில்லாத பலரும் பார்த்து விசாரிக்கிறார்கள். முதல்வர்கூட ஒரு சம்பிரதாயத்திற்கு வணக்கம் என்கிறார். ஆனால் நன்கு பழக்கமாக, நெருக்கமாக இருந்த வாழப்பாடி ஏனிப்படி நடந்துகொள்கிறார். அவருக்கு

என்ன ஆச்சு. சரி, இன்றைக்கு நேரில் கேட்டுவிடுவோம் எனக் காத்திருந்தேன். எனக்கும் சரியான கோபம்.

நிகழ்ச்சி முடிந்தவுடன், என் பக்கம் திரும்பாமலே அவசரம் அவசரமாக இறங்கி வெளியே சென்றார் என்பதைவிட, ஓடினார் என்பதே சரி. காரில் ஏறுவதற்கு முன்பு மடக்கிவிட வேண்டும் என்று அவரைவிட அவசரமாகப் போனேன். பட்டென்று கார் கதவைத் திறந்து உட்காருவதற்கு முன்பு துரைமுருகன் ஓடிச்சென்று மடக்கிவிட்டார். வேறு ஏதோ பேசுவதற்காக. அவர் பேசி முடித்தவுடன் நான் பிடித்துக்கொண்டேன்.

“என்னங்க ஆச்சு. டெல்லி வீட்டிற்கு இரண்டு மூன்று முறை தொலைபேசியில் அழைத்தேனே. உங்களுக்குப் பேசவே தோணலையா. சரி. சுப்ரமணியசாமியிடம் அந்த கேள்வியைக் கேட்டீர்களா? ஆமாம், இல்லை என்றாவது ஒரு பதிலை சொல்லியிருக்கலாமில்ல? ‘என்ன சந்தேகம்’ என்று நீங்கள்தானே அழைத்துக் கேட்டீர்கள். சொன்னேன் இல்லையா? ‘நானே... போனில் வருகிறேன்...’ என்றுதானே கூறினீர்கள். பிறகு நான் தொலைபேசியில் அழைத்தபோது ஏன் தவிர்க்கிறீர்கள். என்னைப் பார்ப்பதைத் தவிர்த்து ஏனிப்படி ஓடுகிறீர்கள்” என்று அழுத்தமாகவே கேட்டேன்.

முகம் வெளிறிப்போன அவர் ஏதும் பேசவே இல்லை. அப்படியே தலைகுனிந்தபடி நின்றவாரே “பிறகு நான் பேசுகிறேனே” என்ற ஒற்றை வார்த்தையோடு பட்டென்று காரினுள் உட்கார்ந்து பறந்துவிட்டார். ஆக அவர் இனி நம்மிடம் பேசமாட்டார் என்பது பட்டவர்த்தனமாக புரிந்தது. தெரியாத்தனமாக நாம் சில சந்தேகங்களை பேசிட்டோமே என வருந்தினேன். வருந்தினேன் என்பதைவிட எனக்கான நாட்கள் எண்ணப்படுவதாக பயந்தேன் என்பதே சரியாக இருக்கும். ஒரு முடிவோடு திருச்சி வந்தேன்.

# சி.பி.ஐ.யின் விசாரணைப் போக்கு...



அன்றிலிருந்து பல்வேறு இடங்களுக்கும் விடாமல் அலைந்தேன். எனக்கான சந்தேகத்தைப் போக்கிக்கொள்ளவும், ஆதாரங்களுக்காகவும் அப்படி ஓடினேன். உறக்கமின்றி அலைந்தேன். ஓரளவு தகவல்களை எல்லாம் சேகரித்தபிறகு அதை என் மனதிலேயே போட்டு இறுத்திவைக்க முடியவில்லை. மனபாரம் கூடிக்கொண்டேயிருந்தது. தாங்கமுடியாத மன அழுத்தம். ஒரு கட்டத்தில், நான் அறிந்த ரகசியங்களை எல்லாம் மக்களிடமாவது அம்பலப்படுத்தவேண்டும் என முடிவெடுத்தேன். அது என் உயிருக்கு ஆபத்தாகக்கூட முடியலாம். மன அழுத்தத்தில் துயரப்பட்டு துயரப்பட்டு இறப்பதைவிட மக்களிடம் சொன்னபிறகு வரும் மரணம் மேலானதாக தெரிந்தது

துணிந்து முடிவெடுத்த பிறகு முதல் கூட்டத்தை **06.01.1995** அன்று கோயம்புத்தூரில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தேன். நண்பர் ரவிச்சந்திரன்தான் ஏற்பாடு செய்தார். ஆனால் முயற்சி எடுத்த எந்த இடத்திலும் கூட்டம் நடத்த இடம் கிடைக்கவில்லை. இப்படி ஒரு கூட்டம் என்றதுமே இடம் கொடுக்க நடுங்கினார்கள். பொதுவாகவே அந்த நேரத்தில் ராஜீவ்காந்தி படுகொலை பற்றிப் பேசவே மக்களுக்கு பயம். நம்மையும் பிடித்து விடுவார்களோ என்ற நடுக்கம். அந்த அளவிற்கு பெரிய அச்சத்தை ஏற்படுத்தி வைத்திருந்தார்கள். கடைசியாக 'மணிமகால்' ஓனர் ஒப்புக்கொண்டார். நான் பேசத்தொடங்கியபோது மக்களைவிட போலீஸாரே அதிகம் வந்திருந்தார்கள். வெளியிலும் ஏகப்பட்ட போலீஸ் நின்றிருந்தது. ஒரு கட்டத்தில் கொஞ்சம் கொஞ்சமாக கூட்டம் வந்தது. உள்ளே வந்தவர்களைவிட வெளியே நின்றிருந்தவர்கள்தான் அதிகம். அந்தளவிற்கு அச்சம்.

அந்தக் கூட்டத்தைத் தொடங்குகிறபோதே தமிழன் எப்படிப்பட்டவன் என்று சொன்னேன். "வரலாற்று ரீதியாக, மற்ற இனத்தைவிட தமிழினத்திற்கு மனிதாபிமானம் மட்டுமல்ல, மற்ற உயிர்களிடத்திலும் அன்பு பாராட்டியவன் தமிழன். பேகன் குளிருக்கு நடுங்கிய மயிலைப் பார்த்தே வருந்தி அதற்கு தனது பட்டாடையை எடுத்துப் போர்த்திவிட்டுச் சென்றான். தேரில் வந்தபோது பற்றிப்படற வழியின்றி தவித்த முல்லைக் கொடியைப் பார்த்து வருந்தி அதற்கு ஆதரவாக இருக்கட்டுமே என்று தனது தேரையே நிறுத்திவைத்துவிட்டு நடந்து சென்றான் பாரி மன்னன். அதைப்போலவே மனுநீதிச் சோழன். பசுவின் கன்று இறந்ததற்கு தன் மகன்தான் காரணம் என்று மகனையே தேர் ஏற்றிக்கொன்று நீதியை நிலைநாட்டினான். வள்ளலாரை

எடுத்துக்கொண்டால் ‘வாடிய பயிரைக்கண்டு வாடும் நெஞ்சம் வேண்டும்’ என உருகினார். உலகில் யாருக்கும் இல்லாத ஈரநெஞ்சம் வள்ளலாருக்கு, தமிழனுக்குத்தான் இருந்தது.

இன்னும் மேலாக சொல்லவேண்டும் என்றால் ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற வள்ளுவனைச் சொல்லலாம். இப்படி உயிர்கள் அனைத்தும் ஒன்றே என்று போற்றிய இதயமும் தமிழனுக்குத்தான் இருந்தது. உலகில் பயிர்பச்சை உட்பட எல்லா உயிர்களைப் பற்றியும் நேசித்து போற்றியவன் தமிழன் மட்டுமே. அப்படிப்பட்ட தமிழினம் தன்னையும் தன் மண்ணையும் நம்பிவருகிற ஒருவரை படுகொலை செய்தான் என்று சொன்னால், அப்படிச் சொல்பவன் அயோக்கியன்.. அதை நம்புகிறவன் முட்டாள்” என்றுதான் என் பேச்சைத் தொடங்கினேன்.

அதன் பிறகு நான் சொன்னேன். “எனது அரசியல் வாழ்க்கையில் எனக்கு விவரம் தெரிந்த நாளில் இருந்து தி.மு.க.வையும் அதன் தலைவர் கருணாநிதியையும் நான் எதிர்த்தே வந்திருக்கின்றேன். இன்று மட்டுமல்ல. நாளையும் எதிர்ப்பேன் என்றுதான் நம்புகிறேன். அவரோடு ஒத்துப்போக முடியும் என்று என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. ஆனால் அரசியல் ரீதியாக அவர் எனக்கு எதிரி என்பதற்காக, இந்த ராஜீவ்காந்தி படுகொலையில் அவரையும் அவரது கட்சியையும் சிக்கவைத்து, சிக்கலில் மாட்டிவிட வேண்டும் என நினைப்பது அரசியல் அயோக்கியத்தனம் என்று நான் நினைக்கின்றேன்.

இந்தக் கொலைக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இல்லை. அதைப்போலவே உலக அரங்கில் இந்தப் படுகொலைக்கு மூலக்காரணம் விடுதலைப் புலிகள்தான் என்கிற ஒரு செய்தியை இன்றைக்கு அழுத்தமாக பதியவைத்திருக்கிறார்கள். இப்படி ஒரு செய்தியை பரப்பிவிட்டதற்கு மூலக்காரணமே சுப்ரமணியசாமிதான். அவனுக்குப் பின்னாலே இருப்பது யார் என்பதையெல்லாம் விளக்குவதற்குதான் இந்தப் பொதுக்கூட்டம்” என்று பேசினேன். உலகின் மிகப் பெரிய வல்லரசு அமெரிக்கா. அதன் தார்மீக பலம் என்பது குட்டி நாடான இஸ்ரேல். அதேபோல் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவிற்கு ஈழம் என்ற நாடு உருவானால் அதுதான் நமக்கு தார்மீக பலமாக இருக்கும்” என்றேன்.

கூடியிருந்தவர்கள் அச்சத்திற்கு நடுவிலும் கைதட்டி ஆர்ப்பரித்தார்கள். சரியாக 2 மணி 25 நிமிடம் இந்தப் படுகொலை

மற்றும் சுப்ரமணியசாமியின் சதிப் பின்னணி குறித்துப் பேசினேன். கூடியிருந்தவர்கள் எந்த சலசலப்பும் இன்றி நிலைகுத்திப்போய் கவனித்தார்கள். அந்த அளவிற்கு இந்தப் படுகொலையையும் அது பற்றிய உண்மைகளையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிற வெறி இருந்தது. இப்படியெல்லாம் சதித்திட்டம் நடந்திருக்கிறதா? இப்படியெல்லாம் அப்பாவிகள் சிக்கியிருக்கிறார்களா என்ற அதிர்ச்சி இருந்தது. கூட்டம் முடிந்ததும் பலபேர் ஓடிவந்து என் கையைப்பிடித்து குலுக்கினார்கள். இப்படியெல்லாம் நடந்திருக்கிறதா? எங்களுக்குத் தெரியாத பல உண்மைகளை இன்று போட்டுடைத்திருக்கிறீர்கள். தமிழ்நாட்டு வரலாற்றில் இதுவொரு திருப்புமுனை என்றெல்லாம் பேசினார்கள். நான் அன்றைக்கே ஒன்றைக் கூறினேன். ஈழத்தமிழர்களின் போராட்டத்தையும் ராஜீவ்காந்தி படுகொலையையும் பிரித்துப்பார்க்கக் கூடாது. இரண்டிற்கும் தொடர்பிருக்கிறது. முதலில் இந்தப் படுகொலையில் புலிகளுக்குத் தொடர்பு என்பதை உடைத்தெரிய வேண்டும். இந்த ராஜீவ்காந்தியின் படுகொலையின் மீது எழுந்துள்ள சந்தேகத்தை நீக்காத வரையில், இந்தக் கொலைச் சதியின் சூத்ரதாரிகள் யார் என்பதை அம்பலப்படுத்தாத வரையில், அவர்களை சட்டத்தின்முன் கொண்டுவந்து நிறுத்தாத வரையில், ஈழப்போராட்டத்திற்கு தாய்த் தமிழகத்தின் ஆதரவு பெரிய பலமாக அமையாது. முன்னாள் பிரதமரைப் படுகொலை செய்தவர்கள் என்ற வகையில் உலக நாடுகளின் ஆதரவும் கிடைக்காது. அதற்கு ஒரே வழி நம்மீது விழுந்த, புலிகள்மீது விழுந்த இந்தக் கொலைப்பழியை அகற்றவேண்டும் என்று பேசினேன்.

நான் அப்படிப் பேசி பதினெட்டு ஆண்டுகள் ஓடிவிட்டது. இன்றுதான் பலர் இப்படிப் பேசுகிறார்கள். கேட்கிறபோது அன்று நான்பட்ட துயரங்களுக்கு ஓரளவேனும் பலன் கிடைத்திருக்கிறதே என்ற மகிழ்ச்சி. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அன்று பேசிய சில தமிழின உணர்வாளர்கள் என் கருத்துக்கு எதிராக இருந்ததுதான் வேதனை. அவர்களின் இனப்பற்றுமீது துளியளவும் சந்தேகம் இல்லை. இனத்திற்காக அவர்கள் பட்டபாடு மீதும் மாசுகூற முடியாது. அவர்கள் நோக்கம் வேறு. அது உண்மையானதுதான். ஆனால் அவர்கள் பேசும்போது “ஆமாம் ராஜீவ்காந்தியை கொன்றது நாங்கள்தான். கொலையாளி தணுதான் எங்கள் குலதெய்வம். ஈழத்திற்கு அமைதிப்படையை அனுப்பிவைத்து பல்லாயிரம் அப்பாவி மக்களை படுகொலை செய்து, எங்கள் இனத்துப் பெண்களை பாலியல் வல்லுறவு கொடுமைக்கு ஆளாக்கிய ராஜீவ்காந்தியை படுகொலை செய்தது சரியானதே” என்று பேசினார்கள். தொலைநோக்குச்

சிந்தனையின்றி உணர்ச்சி மயத்திற்குள் நின்று அமைதிப்படை ஆடிய ஆட்டத்திற்கு எதிர்வினையாற்றும் கோபத்தில், ஆத்திரத்தில் அப்படிப் பேசினார்கள். அதுதான் அந்த இயக்கம் பலமடைவதற்கு பதிலாக பலவீனமாய் தேயக் காரணமாகியது. அவர்கள் அப்படி பேசியதை சுப்ரமணியசாமி போன்ற சதிகாரர்கள் சாதகமாக பயன்படுத்திக்கொண்டார்கள்.

இதில் இன்னொன்றையும் கூறவேண்டும். உணர்வாளர்கள்தான் உணர்ச்சிவசப்பட்டு அப்படிப் பேசினார்கள் என்று பார்த்தால் அவர்களை எல்லாம் முன்நின்று வழிநடத்திய அனுபவமிக்க ஆற்றல்மிக்க மூத்த தலைவர்கள்கூட அந்த நிலைப்பாட்டிலேயே இருந்தார்கள் என்பதுதான் வேதனை. நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. மிகமிக முக்கியமான ஒரு தலைவர்கூட “எதற்காக வேலுசாமி இப்படி, ராஜீவ்காந்தி படுகொலை பற்றியே பேசுகிறீர்கள். சும்மா அதையே ஏன் பேசுகிறீர்கள். அதையெல்லாம் பேசவேண்டாம். பேசிப்பேசி ஏன் அதை பெரிய பிரச்சனையாக்குகிறீர்கள்?” என்றார்.

கொலையை பற்றிப் பேசுவதல்ல என் நோக்கம். “இந்தக் கொலையில் புலிகளுக்குத் தொடர்பே இல்லை. வேறு ஒரு சதிகாரகும்பல் இருக்கிறது என்பதை மக்களிடத்தில் பரப்பவேண்டும். அப்படி செய்வதால் மட்டுமே பழியை விலக்கமுடியும். பழி விலகினால் மக்கள் ஆதரவுகூடும். மக்கள் ஆதரவு பலத்தோடு ஒன்றுகூடி போராடினால் சதிகாரனை சட்டத்தின் முன் நிறுத்தலாம். இங்கே மக்கள் ஆதரவு இல்லாமல் அங்கே ஈழவிடுதலைப் போராட்டத்தை வென்றெடுக்க முடியாது. அதுதான் என் நோக்கம்” என்று கூறியதை ஏனோ தவிர்த்தார்கள். நான் ஒற்றை ஆளாய் நின்றேன். அன்றைக்கு அதை ஒப்புக்கொள்ளாத அந்தத் தலைவர் இன்றைக்கு அதை ஒப்புக்கொள்கிறார். இன்னும் சொல்லப்போனால் இன்றைக்கு வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஈழத்தமிழர்களில் மிக மூத்தவராக, முன்னாள் போராளியாக, அறிஞராக இருக்கக்கூடிய டேவிட் ஐயா அவர்களிடம் ஒருமுறை நானும் முன்னாள் மத்திய அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமாக இருந்த செஞ்சி ராமச்சந்திரனும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அவர் செஞ்சி ராமச்சந்திரனிடம் ஒன்றைக் கூறினார்.

“எங்களுக்காக இந்தத் தாய்த்தமிழ் மண்ணில் பலபேர் தங்களை முழுமையாக ஒப்படைத்துக்கொண்டு பாடுபட்டிருக்கிறார்கள். குடும்பம் நொடிந்துபோக உறவுகள் சிதற தங்களையே இழந்து

பாடுபட்டிருக்கிறார்கள். கொடுஞ்சிறைக்கு ஆளாகியிருக்கிறார்கள் படாத பாடுபட்டிருக்கிறார்கள். வார்த்தைகளால் அதைக் கூறிவிட முடியாது. அவர்களுக்காக எங்கள் ஈழத்து மக்கள் காலம் முழுக்க நன்றிக் கடன்பட்டவர்களாக, உதவியை மறக்க முடியாதவர்களாக இருப்போம். ஆனால், அரசியல் ரீதியாக அறிவுபூர்வமாக இந்தக் கொலைசதி திட்டத்தை சந்திக்க எதிர்கொள்ளத் தவறிவிட்டார்கள். ஒரே ஒருவரைத் தவிர. அந்த ஒருவர்தான் வேலுசாமி. அவர் எடுத்த அந்த நிலைப்பாட்டை அப்போது இன்னும் கொஞ்ச பேர் ஆதரித்திருப்பார்களேயானால் ஈழப் போராட்டத்தினுடைய போக்கே மாறியிருக்கும்" என்றார். அவர் சொன்ன போதுதான் நான் நினைத்ததும் எடுத்த முடிவும் மிகத் தெளிவானதுதான் என்று இப்போதும் ஆறுதல் அடைகின்றேன். ஆனாலும் துரதிருர்ஷ்டம் என்னவென்றால் அப்போது என் முடிவை பலரும் ஆதரிக்காததுதான்.

இதோ 21 ஆண்டுகள் கடந்துவிட்ட பிறகு இப்போது ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் என சிறைக்கொட்டடியில் இருக்கும் பேரறிவாளன் புத்தகம் எழுதினார். முருகன், நளினி ஆகியோர் எப்படியெல்லாம் சித்திரவதை செய்து கொலைப்பழியை சுமத்தினார்கள் என்பதை கண்ணீர் மல்க எழுதினர்கள். சாந்தன், ராபட் பையாஸ் உள்ளிட்ட பலரும் நாங்கள் குற்றவாளிகள் இல்லை. தொடர்பே இல்லாத எங்கள் தலையில் எப்படி கொலைப்பழியை வைத்து அழுத்தினார்கள் என ரத்த வரிகளைக் கொண்டு வாசித்து விட்டார்கள். மற்ற தலைவர்களும் இப்போது கொலையாளிகள் வேறு. இவர்கள் அப்பாவிகள் என்று குரலெழுப்புகிறார்கள். போகட்டும்.

நான் விட்ட இடத்தில் இருந்து தொடர்கிறேன். கோவையில் நடத்திய கூட்டத்தை அடுத்து மதுரை, திருச்சி, சென்னை ஆகிய ஊர்களிலும் அப்படியான விளக்கக் கூட்டத்தை நடத்தினேன். மதுரையில் காலேஜ் ஹவுஸ் ஹால். அரங்கம் நிரம்பி வழிந்தது. வெளியிலும் நல்லகூட்டம். அடுத்து திருச்சி ஆனந்த் ஓட்டல் ஹாலில் நடந்த கூட்டம் வியப்பாய் மாறியது. அரங்கத்திற்கு வெளியே நீண்டு சாலையையும் மறித்து போக்குவரத்தே ஸ்தம்பித்துப்போனது. அந்தளவிற்கு ராஜீவ்கொலையை பற்றி அறிந்துகொள்ளும் வெறி, வேகம் மக்களிடம் இருந்தது. கடைசியாக சென்னையில் நடத்திய கூட்டம்தான் பெரியளவில் பேசப்படாமல் போனது. காரணம், நான் சென்னை கூட்டங்களில் பேசி பழக்கமே ஒழிய கூட்டத்தை ஒருங்கிணைத்து நடத்திய பழக்கமில்லை. ஜெர்மன் ஹாலில் நடந்த அந்தக் கூட்டத்திற்கு எதிர்பார்த்த

கூட்டமில்லாமல் போனது. ஆனால் கேட்டவரையில் மக்களிடம் ஆர்வம் மிகுந்தது. ஆதரவும் இருந்தது.

இப்படி நான் ஊர்ஊராக தெருத்தெருவாக பேசியபோதிலும் சி.பி.ஐ. சிறப்பு புலனாய்வுக் குழுவின் தலைவரான கார்த்திகேயனுக்கு மட்டும் காது செவிடாகியிருந்தது. விசாரணை அதிகாரியான ரகோத்தமனுக்கும் கண்கள் குருடாகியிருந்தது. யார் யாரையோ தேடிப்போனார்கள். அப்பாவிகளையெல்லாம் தூக்கிவந்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்படி பல உண்மைகளை பேசுகிறாரே அவரை அழைத்துவந்து விசாரிப்போம் என்று ஏனோ கடைசிவரை தோன்றவேயில்லை. அது ஏன் என்பதும் இதுவரை எனக்குப் புரியவில்லை. அவர்களாகவே ஒரு தரப்பை குற்றவாளிகள் என்று முடிவு செய்துவிட்டு அதைநோக்கியே பயணமானவர்களுக்கு என்மீதெல்லாம் பார்வை எப்படி விழும்.? ஊர் ஊராக பேசிவிட்டேன். ராஜீவ் கொலையில் யார் குற்றவாளிகள் என்ற சந்தேகத்தை மக்களிடம் விளக்கிவிட்டேன். அதுவே எனக்கு மேலும் அச்சுறுத்தலாகிப்போனது. சரி முறைப்படி நீதிமன்றத்தில் ஏதாவது பதிவு செய்ய முடியுமா. ஜெயின் கமிஷனுக்குப் போக முடியுமா? அப்படி சென்று பதிவு செய்தால் இன்னும் வலுவாக இருக்குமே என்ற கவலை. என்ன செய்யலாம் என குழப்பதில் இருந்தேன்.

அப்போதுதான் மிக சீனியர் வழக்கறிஞரான எம்.எஸ்.வெங்கடாச்சலம் அவர்களை சந்தித்தேன். அவர் சட்ட வல்லுனர் மட்டுமல்ல. எதையும் ஆராய்ந்து அறியக்கூடியவர். அறிஞர் அண்ணா நடத்திய 'ஓம்லேண்ட்' என்ற ஆங்கில பத்திரிகைக்கு சரியான ஆள்வேண்டும் என தேர்வுசெய்தவர்களில் முதன்மையாக கிடைத்தவர். அண்ணாவினுடைய வீட்டிலேயே தங்கி ஆங்கில பத்திரிகை துணை ஆசிரியராக இருந்தவர். அவரது ஆங்கிலத் திறமையை அறிந்த அண்ணா, வழக்கறிஞராக வந்தால் சிறப்பாக இருக்கும் என்று சட்டக்கல்லூரியில் படிக்க ஏற்பாடு செய்தவர். அப்படிப்பட்டவரிடம் சென்றேன். இரண்டு மணிநேரம், நடந்தது எல்லாவற்றையும் விளக்கமாக பேசினேன். சுப்ரமணியசுவாமி மீதான சந்தேகங்களை அடுக்கினேன். இறுதியாக நான் ஜெயின் கமிஷனுக்குச் சென்றால் சரிவருமா? விசாரணைக்கு எடுத்துக்கொள்வார்களா என்று ஆலோசனையைக் கேட்டேன்.

குறித்து வைத்தவைகளை பார்த்தபடியே, நீண்ட யோசனையில் இருந்தவர் "ஒரு விஷயம், நீங்க ஜெயின் கமிஷனுக்குப் போனால் வெற்றி கிடைக்குமா? தோல்வி கிடைக்குமா என்பதல்ல முக்கியம். சட்டத்தில் வாய்ப்பிருக்கு. இல்லாமல் செய்யவும் வாய்ப்பிருக்கு. ஆனால் இப்படி ஒரு வழக்கை ஜெயின் கமிஷன்வரை எடுத்துச் செல்வதற்கு துணிச்சல் மட்டும் போதாது. முரட்டுத் துணிச்சல் வேண்டும். இதுபற்றிப் பேசவே பயப்படும்படியான இந்தக் காலகட்டத்தில் அந்த சதிகாரர்கள் பற்றியே பேசப்போகிறேன் என்பது நினைத்துப் பார்க்க முடியாதது. அது ஒன்று போதும் போ. உண்மையும் துணிச்சலும் உனக்கிருக்கிறது. அது வெல்லும். தமிழினத்தின் மீது சுமத்தப்பட்ட இந்தப் படுகொலை பழியைத் துடைக்க முரட்டுத் துணிச்சல் மட்டுமே வேண்டும். நீ போய்வா. இன்றில்லாவிட்டாலும் நாளைய தமிழ்ச் சமுதாயம் உன்னைத் திரும்பிப் பார்க்கும்" என்று என்னை தட்டிக்கொடுத்தார். இலக்கை அடையும்வரை எச்சரிக்கையாய் இரு என்று ஆதரவாக நின்றார். அவர் தந்த உற்சாகம்தான் என்னை உறுதியாக முடிவெடுக்க துணியவைத்தது. அடுத்த ஓரிரு தினங்களில் சென்னை வந்தேன். வழக்கம்போல் எழும்பூரிலுள்ள அபிராமி ஓட்டலில் தங்கினேன். பிறகு இடத்தை மாற்றிக்கொள்வதாக திட்டம்.

அப்போது ஒருவர் சந்திக்க வந்தார். ஒரு வங்கியின் மேலாளர் என்றும் அமைச்சர் செல்வகணபதியின் நண்பர் என்றும் நம்பகமாக அறிமுகப்படுத்திக்கொண்டார்.

"ஒன்றுமில்லை. செல்வா சார் பார்க்கச் சொல்லி அனுப்பினார். நீங்கள் ஜெயின் கமிஷனில் ஏதோ அபிடவிட் தாக்கல் செய்ய இருக்கிறீர்களாமே? அதற்காக டெல்லி போகப் போகிறீர்களாமே? உண்மையா என்றார்.

யாராவது ஒருவர் நமக்கு உதவி செய்யமாட்டார்களா என்ற தவிப்பில் இருந்த நேரம் அது. தம்பி செல்வா (செல்வகணபதி) டெல்லியில் படித்தவர், வழக்கறிஞராக இருந்தவர். அவர் மூலமாக டெல்லியில் தெரிந்த நல்ல வழக்கறிஞரைப் பிடிக்க வாய்ப்பிருக்குமா என்ற யோசனை. "ஆமாம்" டெல்லிக்குப் போகும் முயற்சி இருக்கிறதுதான்" என்றேன்.

"அப்படியா!" என்று சில நிமிடங்கள் பேசியிருந்த வங்கி மேலாளர், திரும்ப வருவதாகச் சொல்லிப் புறப்பட்டார். ஒண்ணரை மணிநேரம்

கடந்திருக்கும். மீண்டும் அவசரத்தோடு பரபரக்க வந்தார்.

"சார். செல்வாகிட்ட சொன்னேன். 'அப்படியா. அண்ணனை அவசியம் பார்க்கனுமே?. சந்திக்க முடியுமா?. சங்கடமில்லை என்றால் வீட்டிற்கு வருவாரா? அல்லது வேறெங்காகிலும் சந்திப்பதாக இருந்தாலும் சரி. கேட்டுச்சொல்' என்றார். என்ன சார் சொல்றீங்க" என தயங்கினார்.

"எனக்கொன்றும் சங்கடமில்லை. நானே அவரது வீட்டிற்கு வருகிறேன். எப்போது வருவது என்பதை கூறுங்கள்" என்றேன். அவரே "இரவு 11 மணிக்கு சந்திக்கலாமா சார். அதுதான் சரியாக இருக்கும்" என்றார். "சரி. என்னிடம் வாகனமில்லை. நீங்கள்தான் வந்து அழைத்துப் போகவேண்டும்" என்றேன்.

சொன்னபடி, கூறிய நேரத்திற்கு அந்த வங்கி மேலாளரே வந்து என்னை அழைத்துச் சென்றார். அதற்குள் அமைச்சரின் வீட்டிலிருந்த பார்வையாளர்கள், கட்சிக்காரர்கள் என அனைவரையும் அனுப்பிவிட்டிருந்தார். வெறிச்சோடிப்போய் இருந்தது.

காத்திருந்த செல்வா "வாங்கண்ணே" என்று உள்ளே அழைத்துச் சென்றார். இருவரும் உட்கார்ந்து பேசினோம். ராசிபுரத்தைச் சேர்ந்த மோகன் கல்யாணிதான் நான் டெல்லிபோக இருக்கும் முயற்சி பற்றி சொன்னதாக செல்வா சொன்னார். "ஆமாம், அந்த நண்பர் எனக்குத் தெரிந்தவர்தான். சரியான தகவலைத்தான் கூறியிருக்கிறார்" என்றேன்.

பிறகு "நான் என்ன செய்யணும்னே. ஏதாவது செய்யணும் என்றுதான் கூப்பிட்டேன்" என்றார்..

நான் "எனக்கு பெரிய உதவி ஏதும் வேண்டாம். தேவைப்படுவதெல்லாம் ஒரே ஒரு சீனியர் வழக்கறிஞர் உதவி மட்டும்தான். நீங்கள் டெல்லியில் படித்து அங்கே வழக்கறிஞராக இருந்தீர்கள். யாராவது ஒரு நம்பகமான நபரைக் கூறினால் போதும்" என்றேன்.

"சரிங்கண்ணே. என்ன மாதிரியான உதவிக்கு வழக்கறிஞர் வேண்டும் என்றார்."

"ஒன்றுமில்லை. இந்த ராஜீவ்காந்தி படுகொலையில் சுப்ரமணியசாமியை நோக்கிய சந்தேகங்கள் நிறைய உள்ளது. ஒரு

வழியாக அதை எல்லாம் தொடுத்திருக்கிறேன். எல்லாம் மனதளவிலேயே உள்ளது. அவற்றை ஒரு ட்ராப்டாக தயாரிக்க வேண்டும். ஜெயின் கமிஷனில் தாக்கல் செய்ய பிரமான வாக்குமூலமாக தயாரிக்க வேண்டும். பிறகு அந்த கமிஷனுக்கு நானாகவே போகமுடியாதல்லவா. அந்த வழக்கறிஞர் ஜெயின் கமிஷனில் மனுத்தாக்கல் செய்யவும் உடன்வந்து உதவியாக இருக்கவேண்டும். தமிழ் தெரிந்தவர்தான் வேண்டும்" என்பதை விவரித்தேன்.

கேட்டுக்கொண்ட செல்வகணபதி "வெளிப்படையாக சொல்லணும்னா உங்களுக்கு எந்த வகையிலாவது உதவணும்னுதான்னே கூப்பிட்டேன். ஆனாலும் இந்த விஷயத்தைப் பற்றி அம்மாகிட்ட ஒரு வார்த்தை பேசி விடுகிறேன். அந்த ஆளு (சுவாமி) அம்மாவைப் பற்றி கண்டபடி பேசி வருகிறார். ராஜீவ்காந்தி கொலையில் அம்மா மீதே குற்றம் சுமத்துகிறார். தெரியும்தானே" என்றார்.

"ஆமாம். தெரியும்தான். கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். ஆனால் உங்கள் தரப்பில் இருந்து பதிலடி வந்திருக்க வேண்டுமல்லவா. அப்படி ஒன்றும் இல்லையே" என்றேன்.

"அதனால்தானே அம்மாவிடம் ஒரு வார்த்தை கேட்டுக்கொள்கிறேன். இப்படியான விஷயத்தைச் சொன்னால் ஒருவேளை சந்தோஷப்பட்டாலும் படுவாரில்ல" என்றவுடன், "சரி கேட்டுவிட்டே வாருங்கள்" என்று கூறி விடைபெற்றேன்.

# மீண்டும் ஜெயலலிதா சந்திப்பு...

*இட்ஸ் ஓ.கே. நியாயத்திற்கான ஒன்றைச் செய்ய வேண்டும். என்னால் முடிந்த உதவிகளை செய்தால் நல்லதுதானே. என்ன உதவி வேண்டும். கூறுங்கள்*



காத்திருந்தேன். அடுத்தநாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களே என்னை சந்திக்க வேண்டும் என்கிறார் என்ற தகவலை செல்வகணபதி கூறினார்.

குறிப்பிட்டபடியே காலை 11 மணி வாக்கில் தலைமைச் செயலகத்தில் உள்ள முதல்வரின் அலுவலகத்துக்கு காரில் அழைத்துச் சென்றார் செல்வா. ஒரு நடமாட்டமும் இல்லை. நிசப்தமான அமைதி.

அந்த நீண்ட வளாகத்தில் நடந்து சென்றபோது, ஒருவர் ஓடிவந்து "அண்ணே நீங்களாண்ணே" என கட்டிப்பிடித்துக் கொண்டார்.

அவர் எனக்கு முன்பே தெரிந்த முதல்வர் பிரிவின் மக்கள் தொடர்பு அதிகாரி சம்சுதீன்தான். "எதுக்குய்யா இப்படிப் பண்றே" என்றேன்.

"அண்ணே யாரோ ஒரு முக்கிய வி.வி.ஐ.பி. வரப்போறதா சொல்லி எல்லோரையும் வெளிய போகச் சொல்லிட்டாங்க. முக்கிய பார்வையாளர்கள் சந்திப்பைக் கூட ஒத்திவைத்து விட்டார்கள். அப்படி எந்த வி.வி.ஐ.பி. என்று பார்க்கத்தான் இங்க இருந்தேன்" என்றதோடு.

"அண்ணே. உங்களுக்கு ஏதோ நல்லது நடக்கப்போகுது. உங்க குடும்பத்தை பற்றி நல்லா தெரியும். அதைவிட உங்களைப் பற்றி நன்றாகவே தெரியும். அம்மா ஏதாவது நல்லது செய்வாங்கண்ணே. அப்படி செய்தா தயவுசெய்து வேண்டாம்னு சொல்லிடாதீங்கண்ணே" என குறுகிய நேரத்திலும் பரக்க பரக்க கிசுகிசுப்பாக சொன்னார். ஆகட்டும் பார்க்கலாம் என்றபடி கடந்தேன்.

நானும், செல்வகணபதியுமாக, முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களின் அறைக்குள் நுழைந்தோம். முதல்வர் எழுந்து நின்று "வணக்கம் வாங்க" என வரவேற்று உட்காரச் சொன்னதையும், அந்த அறையில் இருந்த முதல்வரின் தனிச் செயலாளரை வெளியேற்றிவிட்டதையும் நான் உணரவில்லை, மறந்திருந்தேன் எனலாம். காரணம் நான் பெரிதும் மதித்திருந்த பெருந்தலைவர் அமர்ந்திருந்த இடம் அது. பார்த்த மாத்திரத்தில் ஒரு நினைவலை.

காமராஜர் முதல்வராக இருந்த நேரம். பழைய சட்டமன்ற விடுதியில் மண்ணாங்கட்டி என்பவர் கீழ்மட்ட ஊழியராக இருந்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்பதை வாங்கிவந்து தருவார். முதல் தளத்தில் முன்பாகவே இருக்கும் மூக்கையா தேவர் அறையிலேயே இருப்பார். ஒருமுறை "ஏம்பா மண்ணாங்கட்டி, அவசரமாக வெளியில போறன். குளிச்சு முடிச்சு ரெடியாகுறதுக்குள்ள இட்லிய வாங்கி வந்துடு" என்று 100 ரூபாயைக் கொடுத்தார் மூக்கையா தேவர். சொன்னபடியே அவர் ரெடியாகி காத்திருந்தார். ரொம்ப நேரம் ஓடியது. தலையில் சுமையுடன் தட்டுத்தடுமாறி வந்தார் மண்ணாங்கட்டி. பார்த்ததும் "ஏன்யா. நான் அவசரமா வெளியில போகணும்னு காத்துக்கிட்டு இருக்கேன். இட்லி

வாங்க இவ்வளவு நேரமா" என்று சத்தம் போட்டார், மூக்கையா தேவர். மண்ணாங்கட்டிக்கு கோபம். "என்னங்கய்யா நீங்க. இங்க ஆஸ்ட்ல அவ்வளவு இட்லி இல்லைன்னு சொல்லிட்டாங்க. மவுண்ட் ரோடெல்லாம் போய் அலைஞ்சு 100 ரூபாய்க்கும் இட்லி வாங்குறது லேசுப்பட்ட காரியமா" என்று பதிலுக்கு சத்தம் போட்டார். அதுதான் மண்ணாங்கட்டி என்ற வெகுளி. அப்பாவி. அவ்வளவு வெள்ளந்தி....

அப்படியான மண்ணாங்கட்டியின் தலையில் ஒருநாள் இடி விழுந்தது. அந்த உத்தரவை படித்துக்காட்டச்சொல்லி வீட்டில் அழுது புரண்டு கதறினார். அரசாங்க உத்தியோகத்தில் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் எல்லாம் இனி வேலையில் இருக்கக் கூடாது. பணியில் இருந்து நீக்கப்படுகிறார்கள் என்று காமராஜர் போட்ட உத்தரவுதான் அந்தக் கடிதம். இரண்டு நாள் கழித்து பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு ஓடிவந்தார். மூக்கையா தேவரிடம் தரையில் விழுந்து கதறி அழுகிறார். என்னவென்று கேட்கிறார். இப்படி ஒரு உத்தரவு வந்திருக்கிறதே. என் குடும்பம் எல்லாம் நடுத்தெருவுக்கு வந்துடுச்சே. எப்படியாவது காப்பாத்துங்க ஐயா என்று பித்துப் பிடித்தவராக அழுகிறார். ஏதாவது சமாதானம் சொல்லணுமே என்று முதல்வர் ஆபிசுக்கு போன் போடுடா. கேட்டுடலாம் என்றார் மூக்கையா தேவர். அப்போது எல்லாம் நேரடியாக தொலைபேசும் வசதி இல்லை. ஆப்ரேட்டரிடம் கூறிவிட்டுக் காத்திருக்கணும். முதல்வர் அலுவலகத்தில் யாராவது உதவியாளர் எடுப்பார்கள்.

மண்ணாங்கட்டி புக்செய்த நேரம் உடனே தொடர்பு கிடைத்தது. மறுமுனையில் முதல்வர் காமராஜ். யார் நீங்கள், உங்களுக்கு என்ன வேண்டும் என்கிறார். "அய்யா நான்தான் அசம்பிளி ஆஸ்டல் பியூன் மண்ணாங்கட்டி பேசுறங்க ஐயா" என்றபடியே அருகில் இருந்த மூக்கையா தேவரை பார்க்கிறார். அவருக்கு முதல்வர் அலுவலகத்தில் இருந்து யாராவது உதவியாளர்கள்தான் டெலிபோனை எடுத்திருப்பார்கள் என்ற நினைப்பு. "எழுதப்படிக்கத் தெரியாதவங்க எல்லாம் முதல்வரா இருக்கறப்போ நான் பியூனா இருக்கக்கூடாதான்னு கேளுடா" என்கிறார். மறுமுனையில் இருந்த காமராஜரிடம் அதை அச்சுபிசகாமல் "ஐயா, எழுதப்படிக்கத் தெரியாதவங்க எல்லாம் முதல்வரா இருக்கிறப்போ நான் பியூனா இருக்கக்கூடாதான்னு தேவர் ஐயா கேட்கச் சொல்றாருங்க" என்கிறார் மண்ணாங்கட்டி, பிறகு பேச்சில்லை....

அடுத்த 30 நிமிடத்தில் உயர் அதிகாரிகள் 3-பேர் அங்கே வந்துவிட்டார்கள். முதல்வருக்கு போன் செய்தது யார்? என்றார்கள். நான்தான் ஐயா என்று முன்னே வருகிறார் மண்ணாங்கட்டி. உங்களை கையோடு அழைத்துவரச் சொல்லியிருக்கிறார். உடனே புறப்படுங்கள் என்று நிற்கிறார்கள். அப்போதுதான் நாம் பேசியிருப்பது முதல்வரிடம் எனப் புரிகிறது. மூக்கையா தேவருக்கும் பதட்டம். மண்ணாங்கட்டி 'ஐயா நீங்களும் வாங்க' என்று அழுகிறார். பின்னாடியே வருகிறேன். நீ போப்பா என்று அனுப்பி வைக்கிறார். கோட்டையில் உள்ள முதல்வர் காமராஜரை நோக்கி வாகனம் பறக்கிறது.

முதல்வரின் அறையில் உள்ள ஷோபாவில், கண்ணத்தில் கைவைத்தபடி கவலைதோய்ந்த முகத்தோடு உட்கார்ந்திருக்கிறார் காமராஜர். கதவு திறக்கப்படுகிறது. மண்ணாங்கட்டி முதலில் நுழைய அதிகாரிகள் சற்று ஒதுங்கி கதவோரம் நின்று கொண்டார்கள். 'நீங்கதான் மண்ணாங்கட்டியா...' என்கிறார். 'ஆமாங்க ஐயா. நான் தெரியாம பேசிட்டேன். என்னை மன்னிச்சுடுங்க ஐயா' என்றபடியே கீழே விழுந்தார். அந்த கலாச்சாரம் காமராஜருக்குப் பிடிக்காது. அதிகாரிகளை பார்க்க உடனே எழுப்பி நிற்க வைக்கிறார்கள். அவரை "இங்க வா... வான்னேன். வந்து பக்கதில உட்காருங்கன்னேன்" என்றழைக்கிறார்.

மண்ணாங்கட்டி தயங்கி நிற்கிறார். காமராஜர் முறைக்க, தயங்கித் தயங்கி பக்கத்தில் சென்று உட்காருகிறார். மண்ணாங்கட்டியை முதுகில் தட்டிக்கொடுத்து முகத்தையே உற்றுப்பார்த்த முதல்வர் காமராஜ், பட்டென்று கையெடுத்துக் கும்பிட்டு "நான் தப்பு பண்ணிட்டன். தெரியாம செய்திட்டேன். மன்னிச்சுடு. அந்த தவறை நீதான் புரியவைச்சே... ரெண்டு நாளா உங்கவீட்ல சோறுதண்ணியில்லியாமே. சமைக்கலயாமே.... உங்களுக்கு ரெண்டு பொம்பள புள்ளைங்க... எல்லாத்தையும் இப்பதான் தெரிஞ்சுகிட்டேன்.. எவ்வளவு பெரிய தப்பு செய்திருக்கேன்.. நான் அப்படி ஒரு உத்தரவு போட்டிருக்கக்கூடாது. 'இனிமே புதிதாக வேலைக்கு வருபவர்களுக்கு எழுத படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்'னு போட்டிருக்க வேண்டும். நான் செய்தது தவறுதான். மன்னிச்சிடுன்னேன்" என்று தட்டிக்கொடுத்து ஆதரவு சொல்ல, மண்ணாங்கட்டி கதறி அழுகிறார். காமராஜருக்கும் பேச்சு இல்லை...

அடுத்து, அங்கேயே ஒரு உத்தரவு தயாராகிறது. காமராஜர் கையொப்பமிடுகிறார். மண்ணாங்கட்டிக்கு மீண்டும் அரசு வேலை. அதிகாரிகளைப் பார்த்து இவரை அழைத்துக்கொண்டு போங்க. வேலை

கொடுத்தாச்சு. இனி கவலைப்பாடாதீங்கன்னு அவரோட மனைவி, குழைந்தைங்ககிட்ட சொல்லுங்கன்னு அதிகார குரலில் உத்தரவிடுகிறார். பிறகென்ன நினைத்தாரோ சற்று தயங்கி, போகிறபோது வெறும் கையோட போகாதீங்க. ஓட்டல்ல எல்லாருக்கும் சாப்பாடு வாங்கிட்டுப் போய்க் கொடுங்க. ரெண்டு நாளா அவர்கள் சாப்பிட்டிருக்க மாட்டார்கள், என கண்டிப்போடு கூறுகிறார் அந்த அதிகாரிகளிடம். மண்ணாங்கட்டிக்குப் பேச வார்த்தைகளின்றி கையெடுத்துக் கும்பிட்டபடியே வெளியேற, முதல்வர் காமராஜரும் எழுந்து கையெடுத்துக் கும்பிட்டபடியே அனுப்பிவைத்தார்.

ஒரு ஏழையின் கண்ணீர் வலி..இன்னொரு ஏழைக்குத்தான் தெரியும். ஆமாம் அந்த மாமனிதர் காமராஜர் ஏழையாகவே வாழ்ந்தார், எழைகளுக்காகவே இருந்தார்...

செல்வி ஜெயலலிதாவின் எதிரே அமர்ந்த நொடிகளில் பெருந்தலைவரின் இந்த நடந்த கதை நிழலாடிப்போனது.

நான் விஷயத்துக்கு வருகிறேன்.

சில நிமிடங்கள் சம்பிரதாய நலன் விசாரிப்பிற்குப் பிறகு என்னுடைய விவகாரத்திற்கு வந்தார் முதல்வர். சொல்லுங்கள். எதை அடிப்படையா வச்சு அபிடவிட் போடப்போறீங்க? அதுக்கான எவிடன்ஸ் ஏதாவது இருக்கா என்ற சந்தேகங்களை எல்லாம் கேட்டார்.

மேடம். நான் எதையும் வலிய கூறப்போவதில்லை. அதற்காக வேண்டி புதியதாக ஆவணங்கள் எதையும் தேடப்போவதில்லை. தலைவர் ராஜீவ்காந்தி படுகொலைக்கு முன்பும், பின்புமாக டாக்டர் சுப்ரமணியசாமியோட நடவடிக்கை என்ன? அதன் மீதான சந்தேகங்கள் என்ன? அந்த சந்தேகங்களுக்கான சாமியின் பதில் என்ன போன்றவற்றை நடந்தது நடந்தபடியே, உண்மைகளை மட்டுமே முன்வைத்து கேட்கப்போகிறேன். அதுவே பல மர்மங்களை வெளிக்கொண்டு வந்துவிடும் எனக் கூறிவிட்டு மே மாதம் பத்தொன்பதாம் தேதி சென்னை விமான நிலையத்திலிருந்து தொடங்கி நடந்தது அத்தனையும் விவரித்தேன்.

அனைத்தையும் கவனமாக கேட்டபடியே வந்தார். மே 21ஆம் தேதி நள்ளிரவு ஆத்தூரிலிருந்து டெல்லி புறப்பட்ட சுவாமி, அங்கே போகவே இல்லை என்ற இடத்தில் இன்னும் தெளிவு தேவைப்பட்டது.

மே 19ம் தேதியிலிருந்து 21ம் தேதி சாமி டெல்லிக்குப் போவதாக சென்னைக்கு வந்தவரை அவருக்கு கார் டிரைவராக இருந்தவர் பெயர் கனகராஜ். அந்த வாகனமும், டிரைவரும் தமிழ்நாடு டூரிசத்தைச் சேர்ந்தவர்கள். படுகொலை சம்பவத்திற்குப் பிறகு இரண்டாண்டு கழித்து அதாவது என் மனதில் அடுக்கடுக்கான சந்தேகங்கள் வலுத்த பிறகு, நான் ஜெயின் கமிஷனுக்குப் போயாக வேண்டும் என முடிவெடுத்த பிறகு அந்த டிரைவர் கனகராஜை தேடத் தொடங்கினேன். எவ்வளவோ முயற்சி எடுத்தேன். எங்கெங்கோ ஓடி அலைந்தேன். அவரைப் பற்றிய எந்தத் தகவலும் இல்லை.

அப்படி அவரை தேடி அலைந்ததில்தான். மே 21ம் தேதி காலையில் சென்னை வந்து சேர்ந்த சுப்ரமணியசாமி நேராக அப்பல்லோ மருத்துவமனை அருகே உள்ள ஓட்டல் சிந்தூரியில் போய் இறங்கினார். இறங்கிக்கொண்டு டிரைவரையும் வாகனத்தையும் இனி தேவையில்லை என திருப்பி அனுப்பியிருக்கிறார் என்ற தகவல் கிடைத்தது. அதுமட்டுமல்ல. அந்த ஓட்டலில் டெல்லியைச் சேர்ந்த சந்திராசாமி. வேறு பெயரில் பதிவு செய்யப்பட்ட ஒரு அறையில் தங்கியிருந்தார். அந்த அறையில் சந்திராசாமியோடு சுப்ரமணியசுவாமியும் ஒன்றாகவே தங்கியிருக்கிறார்கள்.

பிறகு ஓட்டல் சிந்தூரியில் இருந்து, தனிப்பட்ட காரின்மூலம் தரை மார்க்கமாகவே பெங்களூர் சென்றிருக்கிறார்கள். அடுத்து அங்கிருந்து விமானத்தில் டெல்லி சென்றிருக்கிறார்கள். அந்த விமான டிக்கட்டும் வேறு நபர்களின் பெயரில் எடுக்கப்பட்ட டிக்கெட் என்பதும் தெரிய வந்திருக்கிறது. டெல்லி சென்ற சந்திராசாமி, நேராக அவரது ஆசிரமத்திற்குச் சென்றிருக்கிறார். அன்று மாலையில் ஆசிரமத்தில் இருந்த அனைவருக்கும் சந்திராசாமி லட்டு வழங்கியிருக்கிறார். இன்று ஒரு நல்ல விஷயம் நடக்கப் போகிறது என்பதற்காகவே லட்டு கொடுப்பதாகவும் கூறியிருக்கிறார் என்று எனக்குத் தெரிந்த, நான் அறிந்தவற்றை எல்லாம் விவரித்தேன்.

ஆச்சரியப்பட்டுப் போன செல்வி ஜெயலலிதா அவர்கள் "இவ்வளவு ரகசியமா, இப்படி எல்லாம் நடந்திருக்கிறதா என அதிர்ந்தவர், இவ்வளவையும் செய்துட்டு அந்தாளு என்னைப் போட்டு பாடாய் படுத்துகிறான். அந்தப் படுகொலைக்கும் எனக்கும் தொடர்பிருப்பதாகவும். அன்று கிருஷ்ணகிரி தேர்தல் பிரச்சாரத்தில் இருந்த நான், ராஜீவ் வந்துவிட்டாரா என்று தருமபுரி கலெக்டருக்கு போன் மேல் போன்

போட்டு விசாரித்ததாகவும் பொய்யை வேறு சொல்லிக்கிட்டிருக்கான், அயோக்கியன்" என்று ஆதங்கப்பட்டார்.

"மேடம். இப்போ பிரச்சனை அதுவல்ல. இவ்வளவு பெரிய ரகசியம் எல்லாம் என்னோடவே இருக்கிறது. அதை சட்டபூர்வமாக பதிய வேண்டிய இடத்தில் பதிவு செய்ய வேண்டும். அப்படி என்றால் ஜெயின் கமிஷன் மூலம் நாட்டுக்குத் தெரிந்தாக வேண்டும். அதுதான் வழி. அதற்காகத்தான் செல்வாவை சந்தித்தேன்.. அவரோ உங்க கவனத்திற்குக் கொண்டு வராமல் எந்த உதவியும் செய்ய முடியாது என்றும், கேட்டுவிட்டுச் சொல்கிறேன் என்றும் சொன்னார். இனி நீங்கதான் சொல்லணும் என்றேன்.

"இட்ஸ் ஓ.கே. நியாயத்திற்கான ஒன்றை செய்ய வேண்டும். என்னால் முடிந்த உதவிகளை செய்தால் நல்லதுதானே. என்ன உதவி வேண்டும். கூறுங்கள்" என்றார் முதல்வர்.

"எனக்கு எந்தவித உதவியும் வேண்டாம் மேடம். டெல்லியில் தமிழ் தெரிந்த ஒரு வழக்கறிஞர் மட்டும் போதும்" என்றேன். உடனே அவர் செல்வாவைப் பார்த்தார்.

"எஸ் மேடம். டெல்லியில் நான் பாலகிருஷ்ணன் என்பவரிடம்தான் ஜூனியராக இருந்தேன். அவர் ஒரு மூத்த வழக்கறிஞர். கேரளத்தைச் சேர்ந்தவர். தமிழும் நன்றாக தெரிந்தவர்" என்றார் செல்வா. அடுத்து முதல்வர் பேச, பேச, எஸ் மேடம், எஸ் மேடம் என்ற ஒற்றை வார்த்தையோடு பதிலளித்தபடி இருந்தார் செல்வா.

சுமாராக ஒண்ணரை மணி நேரம் அந்த சந்திப்பு.

முடிந்தவுடன் கதவைத் திறந்து வெளியே வந்தேன். பெரிய ஆச்சரியம். நாவலர் நெடுஞ்செழியன், எஸ்.டி.எஸ், கே.ஏ.கிருஷ்ணசாமி, முத்துசாமி, செங்கோட்டையன், கண்ணப்பன் ஆகியோர் உட்கார்ந்திருந்தார்கள். என்னைக் கண்டதும் அவர்களுக்கு வியப்பு.

எஸ்.டி.எஸ். மட்டும் விறுவிறுவென எட்டி வந்து "தம்பீ. நீங்களா தம்பி அது" என்று கையை அழுத்திப் பிடித்துக்கொண்டார். நீங்களாவென்றால்... என்னணண்ணே சொல்லவர்றீங்க என்றேன்.

"தம்பி. நாங்க ரொம்ப நேரமா இங்க காத்துக் கொண்டிருக்கிறோம். உள்ளே முக்கிய வி.வி.ஐ.பி. ஒருவர் சந்தித்துக் கொண்டிருக்கிறார்

என்றார்கள். கடைசியாக பார்த்தால் நீங்களாக இருக்கிறீர்கள். அதான் அப்படி கேட்டேன்" என்றார் சிரித்தபடி.

அன்று அது அப்படியொரு அதிமுக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பாக இருந்திருக்கிறது என்பதை புரிந்துகொள்ளலாம். முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களுடனான சந்திப்பிற்கு அடுத்த நாளில் நான் டெல்லியில் இறங்கினேன். தங்கும் இடத்தைப் பற்றி எங்கேயும் கூறிக்கொள்ளவில்லை.

டெல்லியில் உள்ள நீதிபாக் என்ற பகுதி. முழுக்க முழுக்க வழக்கறிஞர்களும் நீதிபதிகளும் தங்கியுள்ள ஏரியா. அங்கு நீதிபதி கே.கே.வேணுகோபாலின் வீட்டிற்குச் சற்று தள்ளிதான் நான் சந்திக்கப்போகும் வழக்கறிஞர் பாலகிருஷ்ணன் வீடு. அவரது மருமகன் பிரசாந்த் என்பவர் காரில் வந்து அழைத்துச் சென்றார். அவரும் ஒரு வழக்கறிஞரே. தொடர்ந்து மூன்று நாட்கள். வழக்கறிஞர் பாலகிருஷ்ணனுடன் கலந்துரையாடல். எனக்கு சுப்ரமணியசாமி மீதான அனைத்து சந்தேகங்களையும் விவரித்தேன். இறுதியாக டிராப்ட் எழுதி முடிக்கப்படுகிறது.

இந்த அபிடவிட் நிச்சயம் பெரிய சர்ச்சையை மட்டுமல்ல. அதிர்வலைகளையும் ஏற்படுத்தும் என்றார் மூத்த வழக்கறிஞர் பாலகிருஷ்ணன்.

அடுத்து, நீதிபதி ஜெயின் தலைமையிலான கமிஷனில் மனுக்கொடுக்க வேண்டியதுதான். விசாரணைக்கு ஏற்றதா, இல்லையா என்ற விவாதம் நடக்கும். அதற்குப் பிறகுதான் எல்லாமும். நானும் வழக்கறிஞர் பாலகிருஷ்ணன் மற்றும் அவரது மருமகன் பிரசாந்த் ஆகியோர் ஜெயின் கமிஷனுக்குச் செல்கிறோம்.

அங்கே ஜெயின் கமிஷனின் செயலாளராக மனோகர்லால் என்பவர் உட்கார்ந்திருந்தார். பாலகிருஷ்ணனை பார்த்ததும் எழுந்து "அரே சாப் ஆவோஜி" என்று இந்தியில் கூறி சந்தோஷத்துடன் வரவேற்றார். அந்த மனோகர்லால் சுப்ரீம் கோர்ட்டு சர்வீஸில் இருந்த போதே பழக்கம் என்றார் பாலகிருஷ்ணன்.

ஜெயின் கமிஷனில் ஒரு அபிடவிட் தாக்கல் செய்யவேண்டும். இவர் திருச்சியை சேர்ந்த வேலுசாமி. என என்னை அறிமுகப்படுத்தியதும். அப்படியா நல்லது. உட்காருங்கள், உட்காருங்கள் என்றார். தேநீர் வந்ததும் நாங்கள் அதை பருகியபடியே இருக்கிறோம்.

அதற்குள்ளாகவே என்னுடைய அபிடவிட்டை புரட்டுகிறார். பார்வையை ஓட்டுகிறார். ஆங்காங்கே முகம் கோணலாகியது. அதிர்ப்தி தெரிகிறது. முடிந்தவுடன் என்னைப் பார்த்து "ஆர் யூ அக்யூசிங் டாக்டர் சுப்ரமணியசாமி" என்றார் மனோகர்லால். முகத்தில் வெறுப்பு பட்டவர்த்தனமாய் தெரிந்தது.

"ஆமாம், டாக்டர் சுப்ரமணியசாமி மீதுதான் குற்றம் சாட்டுகிறேன்" என ஆங்கிலத்தில் கூறினேன். அந்த அபிடவிட் கோப்பைத் தூக்கி மேஜை மீது தொப்பென்று அலட்சியமாக போட்டார். "சரி நீங்கள் போகலாம், அழைப்பு வரும். கூப்பிடும்போது வாருங்கள்" என்றதோடு வேறு எதையோ தேடும் வேலையில் இறங்கினார். வழக்கறிஞர் பாலகிருஷ்ணன் கேட்ட ஓரிரு கேள்விகளுக்குக் கூட. நேராக பதில் இல்லை. முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டே பேசினார்.

அந்த அறையைத் தாண்டினதுமே "என்ன இவர் இப்படி நடந்துகொள்கிறார். நன்றாக வரவேற்றவர் இப்படி நடந்துகொள்கிறாரே" என்று சீனியர் ரொம்பவே குழம்பினார். நாம் நினைப்பதுபோல் இது சாதாரண விஷயமாக இருக்காது போலிருக்கிறது என்றார்.

"சார். எனக்கென்னவோ இந்த ஜெயின் கமிஷனே சந்திராசாமி, சுப்ரமணியசாமி கட்டுப்பாட்டிலிருப்பதாக தெரிகிறது" என்றேன்.

எப்படி என்பதைப் போல் பார்க்கிறார்.

"இந்த நீதிபதி ஜெயினின் முழுப்பெயரும் தெரியுமா. எம்.சி.ஜெயின். அதாவது மிலாப் சந்த் ஜெயின். சந்திராசாமியின் உண்மையான பெயர் என்ன? என்.சி.ஜெயின். அதாவது நேமிசந்த் ஜெயின். ஆக ஏதோ ஒரு வகையில் ஒருவருக்கொருவர் தொடர்புடையவர்களாக இருப்பார்கள் போலிருக்கிறது. இந்த கமிஷன் முழுதும் இரண்டு சாமிகளின் கட்டுப்பாட்டிலிருப்பவர்கள்தான்" என்றேன்.

"ஓ! இதன் தீவிரத்தன்மை புரிகிறது" என்றார் பாலகிருஷ்ணன். எனக்கோ இப்போதுதான் ஆபத்து வளையத்திற்குள் சிக்கியிருக்கிறோமா என்ற பயம். மேலும் தலை சுற்றியது. நான் தங்கியிருந்த இடத்திற்கு வருகிறேன். அங்கிருந்து வேறு இடத்திற்கு மாறினேன். தமிழகத்தில் உள்ள அமைச்சர் செல்வகணபதியை தொடர்புகொண்டு இப்படியெல்லாம் நடந்திருக்கிறது. எனது அபிடவிட்டை விசாரணைக்கு எடுத்துக்

கொள்வார்களா என்றும் தெரியவில்லை. “நிலைமை ஆபத்து சூழலாகத்தான் இருக்கிறது” என்று கூறினேன்.

“அண்ணே, பார்த்து கவனமா இருங்கண்ணே. சொல்றதைப் பார்த்தால் சிக்கலாதான் இருக்கிறது, ஜாக்கிரதையா இருங்கள். தமிழ்நாடு என்றால் நாங்கள் பாதுகாப்பு ஏற்பாடு செய்யலாம். டெல்லியில் முடியாது. பார்த்துக்கோங்க” என்று மீண்டும் மீண்டும் எச்சரித்தார் செல்வகணபதி.

இதனிடையில், தஞ்சையைச் சேர்ந்த சந்திரசேகரனின் நட்பை பிடிக்கின்றேன். எங்கள் ஊர்க்காரர். ஏற்கெனவே அறிமுகம். அவருக்கு மட்டும் நான் இருப்பதை வெளியில் கூறிவிடாதீர்கள் எனச் சொல்லி தொடர்பிலிருந்தேன்.

திருச்சியிலிருந்து என் மனைவி, ஏதாவது அவசர தகவல் என்றால் சந்திரசேகருக்குத் தெரிவிக்கும்படி அவரது தொடர்பு எண்ணைக் கொடுத்து வைத்திருந்தேன். அந்த சந்திரசேகரைத் தவிர எனது நடமாட்டம் யாருக்கும் தெரியாது.

தொடர்ந்து இடத்தை மாற்றியபடி இருந்தேன். ஒருநாள் முழுதும்கூட ஒரு இடத்தில் நிலையாக தங்கவில்லை. அதீத அச்ச உணர்வு. உயிருக்கு ஆபத்து. எந்த நேரத்திலும், எப்படியும் நடக்கலாம் என மனது அடித்துக்கொண்டது.

இப்படியான நேரத்தில்தான் நான் தங்கியிருந்த அறைக்கதவு தட்டப்படுகிறது. நேரத்தைப் பார்க்கிறேன். இரவு இரண்டு மணி. கதவு தொடர்ந்து தட்டப்படுகிறது தைரியத்தை வரவழைத்துக்கொண்டு ‘யாரது’? என்றேன் சற்று அதட்டலாக?

“நான்தாண்ணே. சந்திரசேகர்” என்ற குரலை அடுத்து கதவைத் திறந்து பார்த்தபடியே பட்டென்று உள்ளே இழுத்துக்கொண்டு கதவை மூடினேன். “என்னய்யா, இந்த நேரத்தில். ஊரிலிருந்து ஏதாவது முக்கிய தகவலா” என்றேன் பதட்டத்தோடு.

“ஆமாம்ணே. முக்கிய தகவல்தாண்ணே. ஆனால் ஊரிலிருந்தல்ல. 10, ஜன்பத் ரோட்டிலிருந்து” என்றதும் “என்னப்பா சொல்ற. 10 ஜன்பத் ரோடு என்றால் சோனியா மேடம்தானே” என்றேன்.

“ஆமாம்ணே. சோனியா மேடம்தான் உங்களை சந்திக்க வேண்டும் என்று தேடிக்கிட்டிருக்காங்க. இன்னைக்கு காலையில் மத்திய பிரதேச

எம்.பி. ரஜினி ரஞ்சன்சாகுல் இருக்காரில்ல. அவர் நம்ம தஞ்சை தொகுதி சாமிநாதன் எம்.பி.ய தேடி வந்து சந்திச்சாரு. உங்க பெயரைச் சொல்லி, அவர் டெல்லியில்தான் இருக்கிறாராம். சந்தித்தாக வேண்டும்னு 10 ஜன்பத் ரோட்டிலிருந்து தகவல் வந்தது. பல இடத்தில் விசாரித்துவிட்டேன். நீங்க தமிழ்நாட்டுக்காரர். அதுவும் திருச்சி பக்கம்ங்கிறதால ஏதாவது செய்தி தெரியுமா. அவசரமா தேவை என கேட்டுக் கொண்டிருந்தார்.

சாமிநாதன் சாருக்கும் தெரியல. பக்கத்திலிருந்த என்கிட்ட "என்னப்பா உனக்கு ஏதாவது தெரியுமா"ன்னு கேட்டாரு. "தெரியாதண்ணே" என கூறிவிட்டேன். "அப்படி ஏதாவது தெரிந்தால் உடனே ரஜினிரஞ்சன் சாகுலுக்கு தகவல் கொடுப்பா" என்றார். "சரிங்கண்ணே"ன்னு சொல்லிட்டேன். உங்ககிட்ட தெரிவிக்காம எதையும் சொல்லிடக்கூடாதில்ல. அதான் அப்படி நடந்துகொண்டேன்" என்றார்.

அதைக்கேட்டவுடன் எனக்கு குழப்பம். ஒருவேளை நாம் வந்திருப்பதன் நோக்கம் 10 ஜன்பத் ரோட்டிற்கு தெரிந்திருக்குமோ. அபிடவிட் தாக்கல் செய்திருப்பது தெரிந்திருக்குமோ... எண்ணம் பலவாறாக ஓடியது. இறுதியில் எது எப்படியிருந்தாலும், தகவல் உண்மை என்றால் இந்தச் சந்திப்பை தவறவிடக்கூடாது என்ற முடிவுக்கு வந்தேன். பொழுது விடிந்தது. அதிகாலையிலேயே தயாராகிவிட்டிருந்தோம். பெரோஷா ரோட்டிலுள்ள ரஜினிரஞ்சனின் பங்களாவிற்குள் அழைத்துச் சென்றார் சந்திரசேகர். உள்ளே நிறைய பார்வையாளர்கள், காங்கிரஸ் கட்சியின் மூத்த நிர்வாகி என்பதால் காலையிலேயே கூட்டம் இருந்தது.

சந்திரசேகரோடு என்னைப் பார்த்துவிட்ட ரஜினிரஞ்சன் சாகுல், ஓடிவந்து கையைப் பிடித்து குலுக்கி கட்டித் தழுவினார். "உங்களைத்தான் மேடம் (சோனியா) சந்திக்கவேண்டும் என விரும்புகிறார். நானும் எங்கெல்லாமோ தேடி அலைந்தேன். நல்லவேளை வந்துவிட்டீர்கள்" என்றார். உடனே பார்வையாளர்களை எல்லாம் அனுப்பி வைத்துவிட்டார்.

நேராக வீட்டினுள் அழைத்துப்போனார். அவரது பேத்தி, அப்போது கல்லூரி ஒன்றில் படித்துக்கொண்டிருந்தார். சிற்றுண்டி கொண்டுவந்து பரிமாறினார். சாப்பிட்டபடியே பேசுவோம் என்று கூறி அமர்ந்து கொண்டோம்.

"உங்க அபிடவிட் விஷயம் பற்றி சோனியா மேடத்திற்கு தகவல் சென்றிருக்கிறது. நான் ஏற்கெனவே தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

மேற்பார்வையாளராக இருந்த பழக்கத்தால் என்னைக் கூப்பிட்டார். இது மிக ரகசியம், அவரை நான் சந்தித்தாக வேண்டும் என்று உங்களின் விவரத்தைச் சொன்னார். நானும் இரண்டு மூன்று நாட்களாக எங்கெங்கோ விசாரித்துப் பார்த்துட்டேன். நல்லவேளை. கிடைத்துவிட்டீர்கள், எனக்கும் நிம்மதி" என்றார்.

சிற்றுண்டியை முடித்துக்கொண்ட கையோடு எண் 10 ஜன்பத் ரோட்டிற்குச் சென்றோம். சோனியாகாந்தியின் வீடு. அங்கிருந்த ஜார்ஜ் இடம் விவரத்தை தெரிவித்தார் ரஜினிரஞ்சன். அந்த நேரம்தான் சோனியாகாந்தி பீகாருக்கு புறப்பட்டுச் சென்றார். மாலையில் திரும்பி விடுவார். நீங்கள் வரும் தகவல் தெரிந்திருந்தால் மேடம் இங்கிருந்திருப்பார். இந்த நபரை சந்திக்கவேண்டும் என்றுதான் மேடம் எதிர்பார்த்திருந்தார் என்ற விவரத்தைச் சொன்னார் ஜார்ஜ்.

பரவாயில்லை. இன்று நான் அவசரமாக ஊருக்குக் கிளம்புகிறேன். மிஸ்டர் வேலுசாமி மட்டும் நாளை வருவார். நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள் என்றார் ரஜினிரஞ்சன். இனி நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்ற ஜார்ஜ், நாளை மாலையில் நீங்கள் மட்டும் வந்தால் போதும் என்று விவரித்தார். அங்கிருந்து புறப்பட்டோம். அன்று மதியம். யு.என்.ஐ. கேண்டீனில் சாப்பிடச் சென்றேன். அங்கு தமிழகத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர் நூருல்லா இருந்தார். டெல்லிக்கான தினமலர் நாளேட்டின் ஸ்பெஷல் கரஸ்பாண்டண்ட்.

"வா தலைவா. என்ன டெல்லி பக்கம்" என்றார்.

"சும்மாதான் வந்தேன்" என்று மற்ற கதைகளை பேசிவிட்டு. "மேடம் சந்திக்க இருக்கிறார். நான் அவரை சந்திக்கப் போகிறேன்" என்றேன் சீரியஸாக. அதைக்கேட்டதும் நூருல்லாவுக்கு எரிச்சல். "பார்த்தீங்களா தலைவா. என்கிட்டேயே கதையா? அந்தம்மாவது உங்களை சந்திக்கிறதாவது. வேற யாருகிட்டயாவது கதை விடுங்க" என்று கிண்டலடித்தார்.

அவர் அப்படி நம்ப மறுப்பதற்குக் காரணம் இருந்தது.

தலைவர் ராஜீவ்காந்தியின் மரணத்திற்குப் பிறகு சோனியாகாந்தி யாரையுமே சந்திக்க விரும்பவில்லை. பிரதமராக இருந்த நரசிம்மராவையே சந்திக்கவில்லை. ஏன் ஜனாதிபதியையும் கூட சந்திக்க விரும்பாமல் இருந்தார். கட்சியின் முக்கிய பிரமுகர்களையும்

சந்திப்பதில்லை. ஏதோ கோபம் அவருக்கு. அந்த நேரத்தில் நான் சோனியாகாந்தியை சந்திக்கப்போகிறேன் என்றால் யாரும் சிரிக்கத்தான் செய்வார்கள். நம்பமாட்டார்கள்.

அதுவும் எனக்குத் தெரியும். ஆனாலும் இந்த சந்திப்பு யாராவது ஒருவருக்குத் தெரிந்தாக வேண்டுமே என்ற நிலை எனக்கு. ஏதாவது நடந்து விட்டால்... வெளியில் பேச ஒரு ஆள் வேண்டுமே. அதனால் நூருல்லாவிடம் "ஜோக் இல்லை. உண்மைதான்" என்றேன்.

"அப்படியென்றால் நானும் வருகிறேன். அப்போதுதான் நம்புவேன்" என்றார். நீங்கள் நம்பவேண்டும் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. உடன் வருவது பற்றியும் தயக்கம் இல்லை. "தாராளமாக வா" என்றேன். அதிலிருந்து நூருல்லா என்னுடனேயே ஒட்டிக் கொண்டார். வேறு எங்கேயும் போகவில்லை.

மாலையில் குறிப்பிட்ட நேரத்திற்கு 10, ஜன்பத் ரோட்டிற்குப் புறப்பட்டோம். பத்திரிகையாளர் நூருல்லாவும் கூடவே வந்தார்.

# சோனியா காந்தியைச் சந்தித்தேன்...

*இந்த விவகாரத்தை நீங்கள் கையிலெடுப்பதால் உங்களின் உயிருக்கு ஆபத்து என்பதை அறியவில்லையா? தெரிந்தும் ஏன் இப்படி செயல்படுகிறீர்கள். இதனால் உங்களுக்கு என்ன ஆதாயம்?*



எண். 10 ஜன்பத் ரோட்டில் உள்ள சோனியாகாந்தியின் பங்களாவிற்குள் நுழைந்தோம். பத்திரிகையாளர் நூருல்லாவிற்கு பிரமிப்பு. நம்பவே முடியவில்லை. அவர் பார்வையாளர்கள் அறையோடு நின்றுகொண்டார். என்னை மட்டும் உள்ளே அழைத்துச் சென்றார்கள். அப்போது மத்திய பாதுகாப்பு படைவீரர் ஒருவர் ஓடிவந்து "அண்ணே" என்று கட்டிப்பிடித்தார். எனக்கு ஏதும் புரியவில்லை. பிறகுதான் அவர் தான் ஒரு தமிழர், குளித்தலையைச் சேர்ந்த

ராஜேந்திரம் எனது ஊர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டபோது புரிந்தது. ஒரு தமிழராக என்னைப் பார்த்ததில் வந்த மகிழ்வை பகிர்ந்துகொண்டார். எனது சொந்த ஊருக்கும் ராஜேந்திரத்திற்கும் பத்து கிலோமீட்டர் தொலைவு என்பது கூடுதல் பாசத்திற்குக் காரணம்.

உள்ளே வி.வி.ஐ.பி. சந்திப்பிற்கான பெரிய அறை. சோனியா காந்தி வணக்கம் சொன்னபடி வரவேற்றார். முகத்தில் சோகமும், அமைதியும் தெரிந்தது. அவர் தவிர சோனியா உதவியாளர்கள் மாதவனும் பிள்ளையும் அங்கே இருந்தார்கள். மாதவனுக்கும் பிள்ளைக்கும் நன்றாக தமிழ் தெரியும். தமிழிலிருந்து சோனியாவிற்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க வேண்டி. நால்வருமாக அமர்ந்தோம்.

சோனியாவின் அருகில் குறிப்பேடு. முதல் ஒரு ஐந்து நிமிடம், என்னைப் பற்றி விசாரித்தார். அதன் பிறகு ராஜீவ்காந்தி கொலையில், சுப்ரமணியசாமியின் பங்கு என்ன என்ற எனது சந்தேகத்திற்குள் நுழைந்தோம். ஒரு மணி நேரம். நான் தொடக்கத்திலிருந்து நடந்த ஒவ்வொன்றையும் விவரிக்கின்றேன். எங்கெங்கே எனக்கு சுவாமியின் மீது சந்தேகம் வந்தது. ஏன் வந்தது என்பதை அழுத்தமாக கூறிவந்தேன். நான் விவரமாக பேசவேண்டும் என்பதற்காக தமிழிலேயே பேசினேன். மாதவனையும் பிள்ளையும் அவருக்கு மொழிபெயர்த்தபடி வந்தார்கள்

சோனியாகாந்தி ஆங்காங்கே குறிப்பெடுக்கவும் தவறவில்லை.

எல்லாமும் முடிந்த பிறகுதான் சோனியாகாந்தி பேசினார். குறிப்பிட்ட சில இடங்களில் மேலும் விளக்கம் கேட்டார். டாக்டர் சுப்ரமணியசாமியிடம் நான் எனது சந்தேகத்தைக் கேட்ட பிறகு அவரிடம் ஏற்பட்ட மாற்றம் பற்றிக் கேட்டார். இப்படி எல்லாமும் விவரமாக கேட்டுக்கொண்டார்.

கடைசியாக, முகத்தை இறுக்கமாக வைத்தபடி, ஆழ்ந்த சிந்தனையோடு, "இந்த விவகாரத்தை நீங்கள் கையிலெடுப்பதால் உங்களின் உயிருக்கு ஆபத்து என்பதை அறியவில்லையா. தெரிந்தும் ஏன் இப்படி செயல்படுகிறீர்கள். இதனால் உங்களுக்கு என்ன ஆதாயம்" என்று கேட்டார்.

"எஸ் மேடம். நீங்கள் கேட்பதில் அர்த்தம் உள்ளது. ஆனால் நான் எந்தவித ஆதாயத்தையுமே எதிர்பார்க்கவில்லை. அப்படி எதிர்பார்த்திருந்தால் நான் ஜெயின் கமிஷன் வரை வந்திருக்கமாட்டேன். சம்பந்தப்பட்டவர்களோடு தமிழகத்திலேயே ஏதாவது சமரசம் பேசி

ஆதாயம் கண்டிருக்கலாம். அதற்கு என் மனச்சாட்சி இடம் கொடுக்கவில்லை. நானறிந்த உண்மைகளை வெளியில் சொல்ல முடியாமல் பல நாள் உறக்கமின்றி தவியாய் தவித்திருக்கிறேன். இந்த உண்மை எப்படியாவது நாட்டு மக்களுக்குத் தெரிந்தால் போதும். அப்படி ஒரு பதிவை செய்துவிட்டு இறந்துபோனால்கூட கவலையில்லை. அந்த நோக்கத்தோடுதான் டெல்லி வந்தேன்” என்று கூறினேன்.

இந்தமுறை என் முகத்தையே உற்றுப்பார்த்தபடி “சரி எங்களின் உதவி ஏதாவது வேண்டுமா? நாங்கள் ஏதும் செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா. என்ன வகையான உதவி...” என முடிக்கும் முன்பாகவே மறுத்த நான்...

“இல்லை மேடம். உங்களிடம் இருந்து பின்னாளில் ஏதாவது ஆதாயம் கிடைக்கும் என்றோ அல்லது அரசியல் அதிகாரப் பதவி, பண உதவி வேண்டும் என்றோ நான் கனவில்கூட நினைக்கவில்லை. எந்தவிதமான உதவியுமே தேவையில்லை. அப்படி எதிர்பார்த்து நான் டெல்லிக்குப் பயணிக்கவில்லை. அப்படி நினைத்திருந்தால் எந்தவகையிலாவது நான் உங்களிடம் வந்து நின்றிருக்கவேண்டும். இன்னும் சொல்லப்போனால், நீங்கள் என்னை இப்படி அழைத்து சந்திப்பீர்கள் என்றுகூட நினைத்துப் பார்க்கவில்லை. ஒரு உன்னதமான தேசத் தலைவரின் கொலையில், பல மர்ம முடிச்சுகள் இருக்கிறது. அதில் எனக்குத் தெரிந்த மர்ம முடிச்சுகளை அவிழ்த்து இந்த நாட்டு மக்களுக்கு வெளிச்சமிடவே இங்கு வந்தேன். எந்தவிதமான உதவியும் தேவையில்லை” என்று மிக நிதானமாக, தெளிவாகச் சொன்னேன்.

பிறகு எழுந்து நின்று வணக்கம்கூறி விடைபெற்றேன். அவரும் வணக்கம் சொன்னபடி எழுந்தார். நான் அந்த அறையின் வாசலைத் தாண்டியவுடன் பட்டென்று நின்றேன். என்னையுமறியாமல் ஒரு தயக்கம். இந்த உதவியை கேட்டே ஆகவேண்டும். ஆனால் மனம் தடுத்தது. குழப்பத்தில் தடுமாறியதெல்லாம் வினாடி நேரத்தில் தெரிகிறது.

புரிந்துகொண்ட சோனியாகாந்தி அவர்கள் உடனே புன்னகைத்தபடி “எஸ்.மிஸ்டர் வேலுசாமி என்ன வேண்டும் சொல்லுங்கள்” என்றார்.

“மேடம்... எனக்கு ஒரே ஒரு உதவி மட்டும் செய்யவேண்டும் அதுதான்” என மிகத் தயங்கித் தயங்கி வார்த்தைகளை மென்று விழுங்கினேன்.

அவர் சற்று சிரித்தபடியே “என்ன உதவி வேண்டும். தயக்கமில்லாமல் கேளுங்கள்” என்றபடி என் முகத்தையே உற்று நோக்கினார். எனக்கு சட்டென்று கேட்கவரவில்லை. அதே தயக்கம். “என்ன உதவி வேண்டும் கேளுங்கள்” என்றார் மீண்டும்.

“மேடம்... நான் ஜெயின் கமிஷனில் அபிடவிட் தாக்கல் செய்திருக்கிறேன். அந்த மனு விசாரணைக்கு உகந்ததா, இல்லையா என்று விவாதத்திற்குப் பிறகுதான் முடிவாகும். ஏற்கப்பட்டால்தான் என்னுடைய சந்தேகங்களை எல்லாம் முன்வைத்து விடைகாண முடியும். தள்ளுபடியானால் அதற்கு வாய்ப்பே இல்லை. இவ்வளவு ரகசிய உண்மைகளும் வெளிச்சத்திற்கு வராமலேயே போய்விடும். நான் மனுத்தாக்கல் செய்த அன்றே அந்த அதிகாரி மனோகர்லால் நடந்து கொண்ட விதம் சந்தேகத்தை அதிகரித்துள்ளது. எனவே நீங்கள்தான் இதில் ஏதாவது செய்ய வேண்டும்” என்றேன்.

மீண்டும் அதே மெல்லிய சிரிப்பு. இந்த உதவியைத்தான் கேட்க வந்தாயா என்பதைப் போல. “சரி அதை நான் பார்த்துக் கொள்கிறேன். வேறென்ன உதவி வேண்டும்” என்றார். “ஏதும் வேண்டாம்” என்றேன். ஓ.கே. போய் வாருங்கள் என்றவர் என்ன நினைத்தாரே தெரியவில்லை. பக்கத்திலிருந்த குறிப்பேட்டை பார்த்தார். எடுத்துக் கொடுத்தார்கள். அதிலிருந்து ஒரு தாளை கிழித்து பிள்ளையிடம் கொடுத்தார். அதில் தொலைபேசி எண்களை எழுதினார்கள். எல்லாம் பர்சனல் எண் என்று என்னிடம் கொடுத்த சோனியா “இதை வைத்துக் கொள்ளுங்கள். அரவுண்ட 24 அவர்ஸ். எப்போது வேண்டுமானாலும் எந்த நேரத்திலும் தொடர்புகொள்ளலாம். நான் இல்லாதபோது இவர்கள் இருவரும் எடுப்பார்கள். என்ன உதவி என்றாலும் சரி. என்ன பிரச்சினை என்றாலும் சரி. சொல்லுங்கள். கட்டாயம் செய்வேன் தயங்காதீர்கள்” என்று கூறி அனுப்பினார்.


வெளியே, சோனியா அவர்களின் பங்களாவிற்கு எதிரே இருந்த ஒரு தெருவில்தான் நாங்கள் சென்ற வாடகை கார் நின்றிருந்தது. இஞ்ஜினில் ஏதோ பிரச்சனை என்று பேணட்டை தூக்கி நிறுத்திவிட்டு சரிபார்த்தபடியே நின்றிருந்தார். நாங்கள் அவரிடம் சென்றதும் அவசரத்தில் பேணட்டை இறக்க, கை தடுமாற... டமால் என்ற சத்தத்தோடு விழுந்து மூடியது. சொன்னால் நம்பமுடியாது. அடுத்த நொடி. சினிமாவில் வருவதைப்போல மின்னலாய் வந்து சுற்றி வளைத்து நின்றது

ராணுவப்படை. கையில் ஏ.கே. 47. எப்படியிருக்கும்?.இந்தியில் ஏதோ கத்தினார்கள். அந்த டிரைவர் கையைத்தூக்கி சரண்டர் என நின்றதைப் பார்த்ததும், நாங்களும் கைகளைத் தூக்கி நின்றோம். உடம்பு வெடவெடத்துப்போனது. ஏதும் புரியவில்லை. பத்திரிகையாளர் நூருல்லா அவருக்குத் தெரிந்த இந்தியில் நடந்ததை விளக்கினார். அவர்கள் சுற்றிவளைத்துவிட்ட பிறகு, விசாரித்து அறியாமல், மேலிடம் அனுமதியில்லாமல் விடமாட்டார்களாம். நூருல்லா சொன்னதை வைத்து வயர்லெஸ் வழியாக எங்கோ பேசினார்கள். நாங்கள் சொன்ன தகவல் உண்மை என்றான பிறகு எச்சரித்து விட்டார்கள் அந்த கார் டிரைவரைத்தான் கடுமையாக எச்சரித்தார்கள். பிறகுதான் தெரிந்தது. தலைவர் ராஜீவ்காந்தி படுகொலைக்குப் பிறகு சோனியா அவர்களின் வீடு அதிஉயர்ந்த பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவந்திருக்கிறார்கள். தெரிந்தும் தெரியாமலும் ராணுவ அதிரடிப்படை, அவர்களையும் வீட்டையும் கண்காணித்தபடியே இருக்கிறது என்று. அந்த மிரட்சியோடவே நான் தங்கியிருந்த இடத்திற்கு வந்தேன். சோனியா அவர்கள் கொடுத்த காகிதத்தைப் பார்த்தேன். ஐந்து தொலைபேசி எண்கள். பென்சிலால் எழுதப்பட்டிருந்தது. அவசியம் உதவும் என்று முக்கியத்துவம் கொடுத்து பத்திரப்படுத்திவைத்தேன்.

ஒன்று இரண்டல்ல. 18 ஆண்டுகள் கடந்துவிட்டது. சோனியாகாந்தி அவர்கள் எழுதிக்கொடுத்த தொலைபேசி எண் தாள் இன்றும் அப்படியே என்னிடம் பத்திரமாக இருக்கிறது. எத்தனையோ நெருக்கடிகளை சந்தித்திருக்கிறேன். சோதனைகளை சந்தித்திருக்கிறேன். இதுவரை ஒரு நாளும் நான் உதவி வேண்டும் என்று சோனியா அவர்களிடம் பேசியதே இல்லை. அது போகட்டும். நான் விட்ட இடத்திலிருந்து தொடர்கிறேன்.

சோனியா அவர்களை சந்தித்த பிறகு மீண்டும் நான் தங்கியிருந்த இடத்திற்கு வந்தேன். தொடர்ந்து அங்கிருப்பது சிக்கல் என்று திருச்சி வந்துவிட்டேன். நான் கொடுத்த அபிடவிட் மனு மீதான விசாரணை எப்போது வருகிறது என்பதை தெரிந்து கொண்ட பிறகு, இந்தமுறை என்னோடு புலமாடனை மட்டும் அழைத்துச் சென்றேன்.

# என் மனு மீதான விசாரணை..



அன்று...

ஜெயின் கமிஷன் விசாரணை நடக்கும் விஞ்ஞான் பவன் வளாகம். என் அபிடவிட் மீதான விசாரணை நாள். என் வழக்கறிஞரோடு உள்ளே சென்று அமர்ந்தேன். உடன் புலமாடனும் இருந்தார். அந்த நீதிமன்ற இடத்தைப் பார்த்தால் அதிமுக்கியத்துவம் வாய்ந்த இடமாகப்படவில்லை. டாக்டர் சுப்ரமணியசாமி அங்கு எல்லாவற்றையும் கிண்டலடித்தபடி இருந்தார். அந்த இடமே கோமாளிகள் மடம் என்பதைப் போன்று இருந்தது. பெரிய தேசத் தலைவரின் கொலை மீதான விசாரணை என்ற முக்கியத்துவம் தெரியவில்லை. எனக்கு சுத்தமாக நம்பிக்கை போனது. அதைவிட எனக்கு எதுவும் நடக்கலாம் என்ற பயம் அதிகமானது.

நம்பிக்கையற்ற இடத்தில் வந்து உண்மை, ரகசியம் என மாட்டிக் கொண்டோமோ என்ற பயம். அங்கே காங்கிரஸ் கட்சி சார்பாக பிரபல வழக்கறிஞர் மிட்டல் விவாதம் நடத்திக் கொண்டிருக்கிறார். ஒரு கட்டத்தில் குறுக்கிட்ட நீதிபதி ஜெயின் “முக்கியமான ஒரு டிபெட் வரப்போகிறது உங்கள் விவாதத்தை சுறுக்கமாக முடித்துக் கொள்ளுங்கள்” என்றார்.

“அப்படியா, என்ன முக்கியமான டிபெட். யாரது?” என்கிறார் மிட்டல்.

அப்போது எதிரே உட்கார்ந்திருந்த என்னை நோக்கி விரலை நீட்டி “அதோ தமிழ்நாட்டைச் சேர்ந்த மிஸ்டர் வேலுசாமி. அவருடைய மனு மீதான விசாரணைதான் வரவிருக்கிறது” என்றார்.

எனக்கு நாடி நரம்பெல்லாம் சில்லிட்டுப்போனது. அதிர்ச்சியா என்பதைக் கூட உணரமுடியவில்லை. நீதிபதி ஜெயினுக்கு என்னை எப்படித் தெரியும். குறிப்பாக என்னை நோக்கிக் கைகாட்டி பேசினாரே எப்படி? இதற்கு முன் அவர் என்னைப் பார்த்தது கிடையாதே. நான்தான் வேலுசாமி என்கிறாரே எப்படி? என்ற கேள்வியினூடாக ஒரு நம்பிக்கை!. சோனியாவிடம் சொன்னதற்குப்பின் ஏதோ ஒன்று நடந்திருக்கிறது. மனதில் மின்னலாய் மகிழ்ச்சி வெட்டிச் சென்றது.

அதுவரை சோர்ந்து உட்கார்ந்திருந்த நான். சற்று தெம்பாக உட்கார்ந்தேன். எனக்கு முன்னும் பின்னுமாக பெரிய தாதாக்களை போன்ற ஆட்கள் வேறு உட்கார்ந்திருந்தார்கள். அந்த பயத்தில் வேறு

இருந்தபோதுதான் இப்படி ஒரு திருப்புமுனை. சின்ன நம்பிக்கை. மிட்டலின் விவாதம் முடியும் தருவாயிலிருந்தது.

திடீரென்று அந்தப் பகுதியே பெரும் பரபரப்பு. காவல்படை அங்கங்கே நின்றது. நடமாடியது. இன்னும் சற்று நேரத்திற்கெல்லாம் கறுப்பு பூனைப்படை சூழ அதிவேக நடையோடு பிரியங்கா வந்துகொண்டிருந்தார். எல்லோருக்குமே வியப்பு. இந்த ஜெயின் கமிஷன் கடந்த மூன்று வருடமாக நடந்து வருகிறது. அதுவரை தலைவர் ராஜீவ்காந்தி குடும்பத்திலிருந்து ஒருவர்கூட அந்த நீதிமன்றத்திற்குள் வந்ததே இல்லை.

எல்லோரும் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருக்கும்போது ஜெயின் கமிஷன் ஹாலுக்குள் நுழைந்தார் பிரியங்கா.

அப்படி உள்ளே நுழைந்தவர் வேறு எதையும், எங்கேயும் பார்க்கவில்லை. உட்கார்ந்திருந்தவர்களிடையே பார்வையை ஓட்டினார். என்னைக் கண்டதும், லேசாக தலையை அசைத்தபடி சாய்த்து 'நமஸ்தே' என்பதாக செய்தார். பிறகு அவருக்கான இடத்தில் போய் அமர்ந்து, என்னை சில நிமிடம் பார்த்தபடி இருந்தார்.

எனக்கு எல்லாமும் புரிந்து போயிற்று. நாம் தனி ஆளாக இல்லை. பக்கபலமாக சிலர் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்தேன். மனதில் பெரிய தெம்பு. நம்பிக்கை. இன்னும் நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

அதுவரை கோமாளி மடமாக, காமெடி கூடமாக இருந்த ஜெயின் கமிஷன் பிறகுதான் ஒரு இறுக்கத்திற்கு வந்தது. ஒரு முக்கியத்துவமான அரங்கு என கொஞ்சம் மாறத் தொடங்கியது.

பிரியங்கா காந்தி, கையில் குறிப்பேட்டோடு கூர்ந்து கவனிக்கத் தொடங்கியிருந்தார். எனது அபிடவிட் மனு மீதான விவாதம் தொடங்கியது. ஏற்பதா வேண்டாமா என்று விவாதம் தொடங்கிவிட்டது. தகுந்த காரணத்தோடு மறுக்கவேண்டிய டாக்டர் சுப்ரமணியசாமி கேலியும் கிண்டலுமாக பதிலளித்தபடி இருந்தார். ஜெயின் கமிஷன் மீது அவருக்கு அப்படி ஒரு நம்பிக்கை இருந்திருக்கிறது போலும்!. எதற்கெடுத்தாலும் நையாண்டி தோரணையில் பதில், அல்லது கேள்வி தான் அவரிடம்.

அன்றுதான், அது அடித்து நொறுக்கப்பட்டது. பிரியங்கா காந்தி வேறு உட்கார்ந்து கவனித்தபடியே இருந்தார். சாமியின் நையாண்டித்தனம் தொடர்வதை பார்த்தபடியே இருந்த நீதிபதி ஜெயின் ஒரு கட்டத்தில்

கோபமாகிப் போனார். “மிஸ்டர் சாமி. இதுவொன்றும் கிண்டர்கார்டன் ஸ்கூல் அல்ல. நீதிமன்றம். கவனத்தில் வைத்துக்கொள்ளுங்கள்” என எச்சரித்தார். அதன் பிறகுதான் எல்லாமும் மாறியது.

விவாதத்தின் முடிவில், டாக்டர் சுப்ரமணியசாமிக்கு எதிராக என்னுடைய மனு ஏற்றுக் கொள்ளப்பட்டது. விசாரணைக்கு உகந்தது என நீதிபதி ஜெயின் தீர்ப்பு சொன்னார். தள்ளுபடி செய்யவேண்டும் என விவாதம் செய்த டாக்டர் சுப்ரமணியசாமியின் முகம் அப்போதே சுருங்கி கருகி வாடிவிட்டது.

இந்தத் தீர்ப்பிற்குப் பிறகு, இருக்கையில் இருந்து எழுந்த பிரியங்கா மீண்டும் என்னை நோக்கிப் பார்த்தவாறு, கறுப்புப் பூனைப் படைகள் சூழ வெளியேறினார். அங்கு இருந்த வேறு யாரையுமே பார்க்கவில்லை என்பது பெரும் வியப்பாக இருந்தது.

அந்த பரபரப்பிற்கிடையே என்னருகில் இருந்த மனிதர் என் கைகளைப் பிடித்து குலுக்கியபடி சிரித்தார். அந்த நேரத்தில் புதியவர்கள் யாரைக் கண்டாலும் பயம். அந்த மனிதரிடம் ஒன்றும் புரியாமலே சிரித்து வைத்தேன்.

பிறகுதான் அவரது ஜிப்பா பாக்கெட்டிலிருந்து ஒரு விசிட்டிங் கார்டை எடுத்துக் கொடுத்தார். சுரேஷ் பச்சோரி. மத்திய பிரதேச மாநில காங்கிரஸ் எம்.பி. என்றிருந்தது. ராஜீவ்காந்தியின் நெருங்கிய நண்பர், குடும்ப நட்பில் இருப்பவர். போபாலில் இருக்கிறார் என்பதெல்லாம் அறிமுகத்தில் கூறினார்.

“எல்லாம் சரி. என்னைத் தெரியுமா? முன்பே பார்த்திருக்கிறீர்களா?” என்றேன்.

நெம். 10. ஜன்பத் ரோட்டிலிருந்துதான் தெரியும். சோனியாஜி உங்களுடைய இரண்டு புகைப்படங்களைக் காட்டி எல்லாமும் கூறியிருந்தார். அதனால்தான் உள்ளே வந்தவுடன் உங்களுக்குப் பாதுகாப்பாக பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தேன் என விவரித்தபோது எனக்கு பெரிய வியப்பு. அன்றிரவு வீட்டிற்கு வரச்சொன்னார். மாலையில் அவரே வந்து அழைத்துச் சென்றார். புலமாடனும் நானும்தான் போனோம். விருந்துக்குப் பிறகு பேசிக்கொண்டிருந்துவிட்டு வந்தேன். அதன்பிறகு ஜெயின் கமிஷனுக்கு நான் சென்றபோது எல்லாம் சுரேஷ் பச்சோரியும் வருவார். சந்திப்பும் உரையாடலும் வழக்கம்போல் இருக்கும்

எப்போது வேண்டுமானாலும், என்ன உதவியென்றாலும் வீட்டிற்கு வாருங்கள். அல்லது தொலைபேசியில் கூறுங்கள். மறந்தும் இருந்து விடாதீர்கள் என்று நட்புறவோடு பேசுவார்.

அப்படிப்பட்ட சுரேஷ் பச்சோரி பின்னாளில் மத்திய அமைச்சராக இருந்தார். நினைத்திருந்தால் அவரிடம் சென்று ஏதாவது உதவி என பெற்றிருக்க முடியும். அல்லது அவரை அடிக்கடி சென்று சந்திப்பதன் மூலம், அரசியல் ஆதாயத்தையாவது பெற்றுக்கொண்டிருக்க முடியும். ஆனால் இன்று வரையிலும் நான் அவரை நாடிச் சென்றதே இல்லை.

எப்படியோ எனக்கிருந்த பெரிய ஒரு மனபாரம் இறக்கிவைக்கப்பட்டிருந்தது. இத்தனை ஆண்டுகளாக நான் என் மனத்திற்குள்ளாகவே ஏற்றி வைத்துக்கொண்டிருந்த ராஜீவ் படுகொலை மர்மச் சுமைகள் இனி ஜெயின் கமிஷன் மூலமாக நாட்டு மக்களுக்குத் தெரியப்போகிறதே என்ற புத்துணர்ச்சி.

இதற்கிடையில் சென்னையிலிருந்து அமைச்சர் செல்வகணபதி தொடர்பு கொண்டார். “ராஜீவ்காந்தி படுகொலையில் செல்வி. ஜெயலலிதா அவர்களுக்கும் தொடர்பிருக்கிறது. படுகொலை சம்பவத்தன்று கிருஷ்ணகிரி தேர்தல் பிரச்சாரத்தில் இருந்தபடியே ராஜீவ் ஸ்ரீபெரும்புதூர் வருகையை உறுதிப்படுத்திக் கொள்வதில் தீவிரம் காட்டியபடி, அடிக்கடி விசாரித்தபடியே இருந்தார். அது ஏன்? எனவே செல்வி. ஜெயலலிதாவையும் ஜெயின் கமிஷனில் அழைத்து விசாரிக்கவேண்டும்” என மனுதாக்கல் செய்திருந்தார் சுப்ரமணியசாமி.

அப்போது முதல்வர் பதவியிலிருந்த செல்வி.ஜெயலலிதாவிற்கு அது பெரிய சங்கடமாயிருந்தது. உண்மை இல்லையென்றாலும்கூட ஒரு முதல்வராக நீதிமன்றக் கூண்டில் ஏறி நின்று பதில் கூறுவது சரியாகாதே என்ற சங்கடம் அது.

அதனால் டாக்டர் சுப்ரமணியசாமியின் மனு ஏற்பிற்கு உரியதல்ல தள்ளுபடி செய்யவேண்டும் என்று பிரபல மூத்த வழக்கறிஞர் ராம்ஜெத்மலானியை நியமித்திருந்தார் செல்வி. ஜெயலலிதா.

“அதனால், ராம்ஜெத்மலானிக்கு நீங்கதான் பல விஷயத்தையும் எடுத்துச் சொல்லவேண்டும். அவர் உங்களோடு கலந்துரையாடல் செய்ய விரும்புகிறார். அதற்கு ஒத்துழைப்பைத் தாருங்கள். நீங்கள் சொல்வதை

வைத்துதான் ராம்ஜெத்மலானி எதையும் செய்ய முடியும்னு அம்மா கூறுகிறார்கள்" என்றார் செல்வா.

"இதிலென்ன இருக்கிறது. தாராளமாக செய்கிறேனே" என்று கூறினேன்.

அதனையடுத்து, அவரது அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார்கள். வழக்கறிஞரான விஸ்வநாதன் என்ற பொள்ளாச்சியை சேர்ந்த இளைஞர்தான் அழைத்துச் சென்றார். அங்கு ராணி என்ற வழக்கறிஞரும் இருந்தார். ராம்ஜெத்மலானிக்கு ஜூனியரான அவருக்கு மிக நன்றாகத் தமிழ் தெரியும். அது வசதியாய்ப் போயிற்று.

தொடர்ந்து மூன்று நாட்களுக்கு மேல் ராம்ஜெத்மலானியுடன் கலந்துரையாடல் நடந்தது. எனக்குத் தெரிந்த அனைத்தையும் விளக்கினேன். சுப்ரமணியசாமி மீதான அடுக்கடுக்கான சந்தேகங்களை அடுக்கினேன். அனைத்தையும் குறிப்பெடுத்துக்கொண்டார்கள். தொடர்ந்து இப்படி பேசிக்கொண்டிருக்கும் போதுதான் ஒருநாள், 'அடிப்படையில் நானும் ஒரு தமிழன்தான் தெரியுங்களா?' என்று சிரித்தார் ராம்ஜெத்மலானி.

"என்ன சார் சொல்கிறீர்கள்" என்றேன் புரியாமல்.

"ஆமாம், என்னுடைய அம்மா சுத்தமான தமிழச்சி. கோயம்புத்தூரைச் சேர்ந்தவர். அப்பா வடநாட்டுக்காரர். இருவருக்கும் காதல். திருமணத்தில் முடிந்தது. ஏனென்று தெரியவில்லை. எனக்கு தமிழை சரியாக கற்றுத்தராமல் விட்டுவிட்டார்கள். நானும் தமிழ் தெரியாமலேயே வளர்ந்துவிட்டேன். அதனால்தான் என்னையும் அறியாமல் தமிழ்மீது, தமிழகத்தின் மீது ஒரு பாசம் ஊடாடி வருகிறது" என்று கூறி சிரித்தபோது எனக்கு வியப்பு தாளவில்லை. மனிதர்களுக்குள் எப்படியான ஏக்கங்கள்...?

பிறகு, அவருடனான சந்திப்பு, கலந்துரையாடல், விவாதம் எல்லாம் முடிந்தபோது ராம்ஜெத் மலானி ஒரு வார்த்தையை சொன்னார். "சுப்ரமணியசாமி நல்ல ஆள் இல்லை என்பது தெரியும். ஆனால் இவ்வளவு பெரிய கிரிமினலாக இருப்பார் என்று நினைக்கவில்லை" என்பதே அது.

ஜெயின் கமிஷனில், செல்வி. ஜெயலலிதா மீதான சுப்ரமணியசாமியின் குற்றச்சாட்டு ஏற்புடையதல்ல என்று

வாதாடவேண்டும். அந்த டிபெட் இரண்டு நாட்கள் நடந்தது. இரண்டு நாட்களும் நான் கூடவே இருக்கவேண்டும் என்று கூறி நீதிமன்றத்தில் அவருக்கு பக்கத்திலேயே உட்கார வைத்துக்கொண்டார் ராம்ஜெத்மலானி. அப்போது சுப்ரமணியசாமிக்கும், இவருக்குமான விவாதம் சூடு பறந்தது. ஆனால் ராம்ஜெத்மலானியின் வாதத்தை, சரியான காரணங்களைக் கூறி மறுக்கவேண்டிய சாமி கிண்டலும் கேலியுமாகவே பதிலளித்துக் கொண்டிருந்தார். இந்த கமிஷனெல்லாம் என்னுடையது. நான் அனைத்திற்கும் மேலானவன் என்கிற நினைப்பிலிருந்திருப்பார் போலும்!.

ஒரு கட்டத்தில் கோபமடைந்த ராம்ஜெத்மலானி. கையிலிருந்த சட்டப் புத்தகத்தைத் தூக்கி வேகமாக வீசி அடித்தார். நீதிபதி ஜெயின் அமர்ந்திருந்த மேஜைக்கு முன்பாக, கீழே விழுந்தது. "இது நீதிமன்றமா என்ன? சாமி ஏன் இப்படி லூசுத்தனமாக நடந்து கொள்கிறார்" என்று காட்டமாக குரலெழுப்பினார். அப்போது நீதிபதி ஜெயின் சாமியின் நடவடிக்கையை கடுமையாக கண்டித்தார். விவாதத்தின் முடிவாக சுப்ரமணியசாமியின் மனுவை தள்ளுபடி செய்வதாக நீதிபதி ஜெயின் தீர்ப்பு கூறினார்.

அந்த பெரும் சிக்கலிலிருந்து செல்வி. ஜெயலலிதா மீண்டார் என்பதைவிட தப்பினார் என்றே கூறவேண்டும்.

அதற்கு சாதாரணமாக தெருவில் அலைந்துகொண்டிருக்கும் இந்த வேலுசாமிதான் அன்று உதவியாக இருந்தான் என்று இதுவரையிலும் நான் தம்பட்டம் அடித்துக்கொண்டதில்லை. அதைச் சொல்லி அவர்களிடம் எந்த ஆதாயத்தையும் தேடிக்கொள்ள முனைந்ததில்லை. வாய்மையே வெல்லும் என்பதற்கு துணையாய் இருந்தோம் என்ற ஆறுதலோடு நின்று கொண்டேன்.

# முகத்திரை கிழிந்து தொங்கியது...

*பிரியங்காவின் பார்வை ஆத்திரத்திலும் கோபத்திலும் அப்படியே தீ ஜ்வாலையாக முகமெல்லாம் சிவந்து கண்கள் சுப்ரமணியசாமியின் மீது ஆவேசப் பார்வையோடு நிலைகுத்தி நின்றிருந்தது*



ஜெயின் கமிஷன் என்னை எப்போது அழைக்கும், என் மனு மீதான விசாரணையை எப்போது தொடங்கும் என்ற காத்திருப்போடு உட்கார்ந்துவிடவில்லை. அது சம்பந்தமான இன்னும் என்னென்ன தகவல் கிடைக்கும் என்ற தேடலில் இருந்தேன். இதற்கு முகம் தெரியாத மனிதர்கள்கூட உதவியாக நின்றார்கள். குறிப்பிட்ட மாலை நாளேடுகள் வேண்டும் என்று அலைந்தேன். கடைசியில் அந்த பத்திரிகை அலுவலகமே சென்றேன். ‘இதற்குதான்’ என்றதும் தயவுசெய்து

போய்விடுங்கள் என்று அனுப்பினார்கள். அதேபோன்று சுப்ரமணியசாமியை கடைசியாக காரில் ஏற்றிக்கொண்டு சென்னை சென்ற அந்த வாகன ஓட்டியை தேடி சென்னையில் தெருத்தெருவாக அலைந்தேன். எத்தனை நாள் என்று தெரியாது. அவரை பற்றி எந்த தகவலும் கிடைக்கவே இல்லை. இப்படி பல கசப்பான அனுபவங்களை ஒற்றை மனிதனாக சந்தித்தேன்.

அந்த நேரத்தில், நான் எதிர்பார்த்திருந்த விசாரணை கமிஷன் அழைப்பு வந்தது. டெல்லி சென்றேன். ஆனால் சோனியா உட்பட அவர்கள் சார்பான யார் உதவியையும் பெறவில்லை. வழக்கம்போல் தனியாக ரகசிய இடத்தில் இருந்தேன். குறிப்பிட்ட நாளில் எனது வழக்கறிஞருடன் சென்றேன். அங்கு நடந்த விசாரணையை கவனித்தபோது எனக்கு பகீர் என்றிருந்தது. மாண்புமிகு நீதிமன்றம் என்ற எண்ணமே இல்லை. சந்திராசாமியும் சுப்ரமணியசாமியும் ஏகத்திற்கும் நையாண்டி கச்சேரி நடத்திக் கொண்டிருந்தார்கள். அதற்கு ஒரு சின்ன உதாரணம்.

“நீங்கள் நீதிமன்றத்திற்கு வந்து இறங்கியபோது விலை உயர்ந்த வெளிநாட்டு காரில் வந்து இறங்கினீர்களே. எந்த நாட்டிலிருந்து வந்த கார் தெரியுமா?”

“அதெல்லாம் தெரியாது. வந்தது, பயன்படுத்துகிறேன்.”

“சரி அதற்கு வரி எல்லாம் கட்டவேண்டுமே. முறையாக கட்டியிருக்கிறீர்களா?”

“அதுவும் தெரியாது. வந்தது, பயன்படுத்துகிறேன். நிர்வாகிகள் பார்த்துக்கொள்வார்கள்.”

“உங்களுக்கு வெளிநாட்டு பக்தர்கள் எல்லாம் இருக்கிறார்களா? வெளிநாட்டுத் தொடர்பு உண்டா?”

“எனக்கு 130 நாடுகளின் முக்கிய தலைவர்கள் எல்லாம் பக்தர்களாக இருக்கிறார்கள்.”

“முக்கியமான பக்தர்களைக் கூற முடியுமா?”

“புருனே சுல்தான், யாசர் அராபத், எலிசபத் டெய்லர் (கிளியோபட்ரா படத்தில் நடித்தவர்) கீலர் (இங்கிலாந்து அரசியல் இந்த

நடிகையால் மாறியது) ஆகியோர் எல்லாம் பக்தர்கள்.

“சரி, இதில் எலிசபத் டெய்லரும், கீலரும் எதற்காக சந்திப்பார்கள். அவர்கள் நடிகைகள் ஆயிற்றே.?”

“அவர்களும் எனக்கு பக்தர்கள்தானே. எதாவது ஆலோசனைக்காக வருவார்கள்.”

“என்னவிதமான ஆலோசனையைக் கேட்பார்கள்.?”

“குழந்தை எப்படி பெற்றுக்கொள்வது” என்று கேட்பார்கள். வழக்கறிஞரின் கேள்விக்கு சாமியார் சந்திராசாமி இப்படி பதில் சொன்னதும் மொத்தக்கூட்டமும் கொல்லென்று சிரிக்கும்.

“நீங்கள் ஒரு சன்னியாசி, சாமியார். உங்களிடம் குழந்தை பெற்றுக்கொள்வது பற்றி ஆலோசனையா?”

“ஆமாம். பக்தர்கள் கேட்கிறார்கள். ஆலோசனையை கூறவேண்டியதுதான்.”

இப்படித்தான், கேலியும் கிண்டலுமாக இருந்தது அந்த விசாரணை கமிஷன். இதுவெல்லாம் என்னுடைய அபிடவிட் தாக்கலான பின் பிரியங்காகாந்தி அங்கே வந்து உட்கார்ந்து கவனிக்கத் தொடங்கிய பிறகுதான் கொஞ்சம் சீரியஸாக மாறத் தொடங்கியது. இப்படியான நிலையில்தான் என்னுடைய மனுமீதான விசாரணை வந்தது.

விசாரணை இப்படி தொடங்கியது. அதற்கு முன்பாக பிரியங்கா காந்தி கறுப்புப்பூனைப் படைகளுடன் வந்து அமர்ந்தார். வழக்கம்போல் அந்த நீதிமன்றம் ஓர் இறுக்கமான சூழலுக்கு மாறியது. பிரியங்காவின் கையில் ஒரு குறிப்பேடு. நடப்பவற்றை உன்னிப்பாக கவனிக்கத் தொடங்கினார். பிறகு நீதிபதி கேள்விகளை கேட்கக் கேட்க சுப்ரமணியசாமியின் பதில் இப்படி வருகிறது.

“எதிரே இருக்கக்கூடிய நபர் வேலுசாமியை தெரியுமா?”

(ஏளனமாக) ”இவரை யார் என்றே எனக்குத் தெரியாது.”

“தெரியாதா? உங்கள் கட்சியில்தானே அகில இந்திய செயலாளராக இருந்தார்?”

“என் கட்சியில் லட்சக்கணக்கான நபர்கள் இருக்கிறார்கள். நிறையபேருக்கு பொறுப்பு கொடுத்திருப்பேன். அதில் இவர் யார் என்று எப்படி அடையாளம் வைத்துக்கொள்ள முடியும்?. தெரியலையே.”

சாமிக்கு ஏதோ ஒரு 200 எம்.பி.-க்கள் இருப்பதைப் போலவும், கட்சிக்குப் பல செயலாளர்களை வைத்திருப்பதை போலவும் ஒரு நினைப்பு, அலட்சியம். நீதிபதி தொடர்ந்தார்.

“சரி. உங்கள் கட்சி சார்பாக நீங்கள் மேற்கொண்ட தேர்தல் சுற்றுப்பயண விவரம் இருக்கிறதா. சொல்ல முடியுமா?”

“எனக்கு அதுவெல்லாம் நினைவில்லை.”

“உங்களது கட்சி அலுவலகத்தில் சுற்றுப்பயண விவரம் இருக்குமே. அதைப் பார்த்துச் சொல்லலாமே?”


“இந்தக் கேள்வியை கேட்டவுடன், ஏதோ சாமர்த்தியமாக சொல்வதாக நினைத்து வகையாக மாட்டினார் சாமி.

“அந்தத் தேர்தல் சுற்றுப்பயண விவரம் எல்லாம் கட்சி அலுவலகத்தில் இருந்ததுதான். இதோ இருக்காரே வேலுசாமி. இவர் கட்சியைவிட்டு போகும்போது அந்த ஃபைலை எல்லாம் திருடிக்கொண்டு ஓடிட்டார்” என்று கூறியதும் நீதிபதிக்கு முகம் சுருங்கியது.

“என்ன மிஸ்டர், இப்போதுதானே அந்த வேலுசாமியை யார் என்றே தெரியாது என்றீர்கள். உடனே எப்படி அவர்தான் அந்த ஃபைலை திருடிக்கொண்டார் என்கிறீர்கள். உண்மையைச் சொல்லுங்கள். (வேலுசாமியை) அவரை உங்களுக்குத் தெரியுமா? தெரியாதா?” என்றார் முறைத்துப் பார்த்தபடி.

அப்போதுதான் சாமிக்கு தான் மாட்டிக்கொண்டோம் என்பது தெரிந்தது. அப்படியே முழித்தார்.

“சரியாக சொல்லுங்கள் மிஸ்டர். இது நீதிமன்றம். நீங்கள் விளையாடுவதற்கான இடம் இல்லை.. அவரை உங்களுக்கு முன்னமே தெரியுமா? தெரியாதா?” என்றார். சுப்ரமணியசாமியிடமிருந்து பதிலேதும் இல்லை. திணறினார். அதன் பிறகு கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் மிக நிதானமாக யோசித்து ‘நினைவில்லை, தெரியாது’ என்றபடியே பதிலளிக்கத் தொடங்கினார்.



தமிழரின் தன்மானம் காப்போம்
மாபெரும் பொதுக்கூட்டம்

இடம் : சின்னக்கடைத் தெரு (மலைக்கோட்டை அருகில்)

நாள் : 1.12.97 திங்கட்கிழமை இரவு 7.00 மணிக்கு

பொருள் : அமரர் ராஜீவ்காந்தி படுகொலை - தமிழர் மீது ஜெயின் சுமத்திய பழி

தலைமை : K. புலமாடன் முன்னிலை : P. சுதாகரன்

கருத்துரை : திருமிகு. **திருச்சி வேலுசாமி,** B.A.,
திருமிகு. **M.S. வெங்கடாஜலம்,** M.A., B.L.,
திருமிகு. **வேங்கை சந்திரசேகரன்,** M.A., B.L.,

நன்றியுரை : R.B.S. மணியன்

இவண்,
காமராஜ் தேசிய பேரவை
சின்னக்கடைத் தெரு, திருச்சி - 2

குறிப்பு : கூட்டம் சரியாக இரவு 10.00 மணிக்கு முடிவுறும்.

“சரி, மே-மாதம் 21-ம் தேதி சென்னையில் இருந்து டெல்லிக்கு எப்படி வந்தீர்கள். விமானத்திலா? ரயிலிலா?”

இந்தக் கேள்விக்கு பதில் ஏதும் சொல்லாமல் தலைகுனிந்தபடி நின்றார் சாமி. “21-ம் தேதி காலையிலிருந்து மாலை வரை நீங்கள் டெல்லியில் இல்லை. வேறு எங்கோ ரகசியமாக இருந்தீர்கள் என்பதற்கு என்ன பதில்.?”

“இல்லை நான் அன்று டெல்லியில்தான் இருந்தேன்.”

“சரி, டெல்லியில்தான் இருந்தீர்கள் என்றால் அதற்கு என்ன ஆதாரம்?. மத்திய அமைச்சர்களின் மூவ்மெண்ட் ரிப்போர்ட் பைல் இருக்குமே, அது இருக்கிறதா?” என்ற கேள்விக்கு “அது தொலைந்து போய்விட்டதாக மத்திய அரசு பதில் அளித்திருக்கிறது” என்றார் அரசு தரப்பு வழக்கறிஞர்.

அடுத்து சாமியை பார்த்து “நீங்கள் 21-ம் தேதி டெல்லியில்தான் இருந்தீர்கள் என்பதற்கு ஆதாரம் ஏதாவது இருக்கிறதா?” என்றார்.

“ஓ இருக்கிறதே” என்ற சாமி, ஆங்கில நாளேட்டில் வந்திருந்த இரண்டு துண்டு செய்தியை எடுத்துக் கொடுத்தார். அதை வாங்கிப் பார்த்த நீதிபதி ஜெயினுக்கு முகம் சுருங்கியது. சாமி சரியாகத்தான் சொல்கிறார்.

நாங்கள்தான் ஏதோ தவறாக புகார் செய்திருக்கிறோம் என்பதாக அது பட்டது.

உடனே அதைக் கொடுக்கும்படி நான் கேட்டேன்.

எனது வழக்கறிஞரிடம் அதைக் கொடுத்தார். அதைப் பார்த்த எனது வழக்கறிஞர், “ஆமாம் வேலுசாமி. சுவாமி சரியாகத்தான் கூறுகிறார். அன்றைய தினம் பகல் முழுக்க அவர் டெல்லியிலேதான் இருந்திருக்கிறார்” என்றார். அவருக்கும் பிடிப்பு விட்டுப்போனது. எனக்கு பெரியகுழப்பம்.

அந்த செய்தித்தாள் பகுதியை கொடுங்கள் என்று வாங்கிப்பார்த்தேன்.

அன்றைய தினம் சாமி டெல்லியில் செய்தியாளர்களைப் பார்த்து ஒரு செய்தி கொடுத்திருந்ததாக பதிவாகியிருந்தது. எனக்கும் குழப்பம், அதிர்ச்சி!. ஒன்றும் புரியாமல், இது எப்படி சாத்தியம்? என்று பார்க்கிறேன். அப்படியே நீதிபதியையும் பார்த்தேன். நாங்கள் ஏதோ தவறான புகாரை கொடுத்த நபர்கள். சாமி, சரியானவர்தான் என்ற பார்வை தெரிந்தது.

இதையெல்லாம் கவனித்தபடி இருந்த பிரியங்கா காந்தியின் முகத்திலும் குழப்பம்.

நான், மீண்டும் அந்த செய்தித்தாள் பத்திகளைப் பார்த்தேன்.

சிங்கிள் கால செய்தி. அதன் கீழே கடைசியாக பி.டி.ஐ., பி.டி.ஐ. என்று இரண்டிலுமே இருந்தன. இருண்டுகொண்டிருந்த என் முகத்தில் மின்னல் வெளிச்சம்!. உடனே நீதிபதியைப் பார்த்து "இது பொய். சாமி திட்டமிட்டு நீதிமன்றத்தை எமாற்றியிருக்கிறார். அவரது ஏமாற்று புத்தியை இங்கேயும் காட்டியிருக்கிறார்" என்றேன். அங்கிருந்தவர்கள் எல்லாருக்கும் குழப்பம். நீதிபதி என்னைப் பார்த்து "எப்படிக் கூறுகிறீர்கள்?" என்றார். "சார், சுப்ரமணியசாமி கொடுத்த அந்த இரண்டு செய்திகளின் கீழேயும் பி.டி.ஐ. என்றிருக்கிறது. இவர் நேரடியாக செய்தியாளர்களை சந்தித்து பேட்டி கொடுத்திருந்தால் அப்படி வந்திருக்காது. பி.டி.ஐ. என்பது ஒரு செய்தி நிறுவனம். ஒருவர், உலகின் எந்த மூலையில் இருந்தும் பி.டி.ஐ. நிறுவனத்தில் உள்ள ஒருவரைப் பிடித்து செய்தியைக் கொடுக்கலாம். சாமியும் அப்படித்தான் கொடுத்திருக்கிறார். அதனால்தான் செய்தியின் கீழே பி.டி.ஐ. என்று போட்டிருக்கிறார்கள். பொய்யான ஆவணங்களைக் காட்டி, நீதிமன்ற விசாரணையை திசைதிருப்புகிறார் சாமி. அவர் செய்தியாளர்களை சந்தித்திருந்தால் எங்கே சந்தித்தார். அதில் யாராவது ஒரு செய்தியாளரை அடையாளம் கூற முடியுமா?" என்று கேட்டதும் நீதிபதிக்கு மட்டுமல்ல பிரியங்காவின் முகத்திலும் ஒரு வெளிச்சம்! புதிய திருப்பம்.

நீதிபதியும் சாமியைப் பார்த்து என் கேள்விக்கு பதில் என்ன என்று கேட்கிறார். சாமியிடம் இருந்து ஒரு பதிலும் இல்லை. அவருக்கு வியர்க்கத் தொடங்கியது. தடுமாறுகிறார் என்பதும் புரிந்தது. எல்லோரும் இதைக் கூர்ந்து கவனித்தபடி இருந்தார்கள்..

அடுத்த கேள்வி, "மே-மாதம் 22-ம் தேதி மற்றும் 23-ம் தேதி ஆகிய இரண்டு நாட்கள் உங்களுக்கு மதுரையிலும் திருச்சியிலும் பொதுக்கூட்ட நிகழ்ச்சி இருந்தது. கட்சியின் தேர்தல் பிரச்சாரம். தெரியுமா?" என்றோம்.

திணறினார், யோசித்தார். "தெரியவில்லை. சரியாக நினைவில்லை" என்றார்.

"யோசித்து சரியாக கூறுங்கள்?" என்றார் நீதிபதி.

"இல்லை. எனக்கு அப்படி ஒரு நிகழ்ச்சி இருந்ததாக நினைவில்லை" என்றார்.

அப்போதுதான், நான் வைத்திருந்த 1991 மே மாதம் 21-ம் தேதி வந்திருந்த மாலைமலர், மதுரைமணி ஆகிய இரண்டு மாலை நாளேட்டை எடுத்தேன். இரண்டும் மதுரை பதிப்பு. அந்த இரண்டு நாளேட்டிலும் சுப்ரமணியசாமி 22-ம் தேதி மாலை மதுரையில் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்கிறார் என்ற விளம்பரமும் செய்தியும் வந்திருந்தது. அதில் சுப்ரமணியசாமியோடு நானும் மதுரை மாவட்ட ஜனதா கட்சி தலைவரும் கலந்துகொள்வதாக இருந்தது. கட்சி சார்பான விளம்பரம் செய்தி அறிக்கைதான் அது. அதை சாமியிடம் காட்டினேன். இப்போதாவது நினைவிருக்கிறதா. தெரிகிறதா என்றேன். அதை வாங்கிப் பார்த்தவர் ஒன்றும் சொல்லமுடியாதவராக ஒருமாதிரி தலையாட்டி பிறகு ஆமாம் நினைவிருக்கிறது என்றார்.

“ஆக 22-ம் தேதி மதுரையிலும், 23-ம் தேதி திருச்சியிலும் நீங்கள் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேச இருந்தீர்கள். சரிதானே?”

யோசித்தபடியே “ஆமாம்” என்றார்.

“அது தேர்தல் பிரச்சார காலகட்டம். 22-ம் தேதி மதுரை பொதுக்கூட்டத்திற்கு நீங்கள் முன்கூட்டியே விமான டிக்கெட் முன்பதிவு செய்திருக்க வேண்டும். இல்லையா? அப்படியென்றால் அந்த விமான டிக்கெட் எங்கே?” என்ற கேள்வியை கேட்டதும் சுவாமிக்கு மேலும் வியர்வை கொட்டத்தொடங்கியது.

“22-ம் தேதி மதுரைக்குச் செல்ல வேண்டும் என்றால் நீங்கள் அன்றைய தினம் காலை டெல்லியில் இருந்து 6 மணி விமானத்திற்குதான் புறப்பட்டுச் செல்லவேண்டும். அதற்கு நேராக பேருந்துக்குச் சென்று டிக்கெட்டை வாங்குவதைப் போல் வாங்கமுடியாது. ஆக முன்கூட்டியே பதிவு செய்திருக்க வேண்டும். எங்கே அந்தப் பயணச்சீட்டு?” மீண்டும் எனது கேள்வி.

சாமியிடம் இருந்து பதில் இல்லை. முழித்தார். ஏதோ சொல்ல வருகிறார். ஆனால் முடியவில்லை. நீதிபதியும் எங்கே அந்தப் பயணச்சீட்டு விவரம் என்ற கேள்வியை கேட்கிறார்.

பட்டென்ற பதில் இல்லை. நன்றாக முழித்துவிட்டு கடைசியாக “நான் அந்த புரோகிராமை கேன்சல் செய்துவிட்டேன். அதனால் டிக்கெட்டையும் கேன்சல் செய்துவிட்டேன்” என்றார்.

அப்படிச் சொன்னதும் அங்கே இருந்த மொத்த பார்வையாளர்களும் அதிர்ச்சியோடு நிமிர்ந்து பார்க்கிறார்கள். அவர்கள் அனைவரும் முக்கியமானவர்கள். மெத்த படித்தவர்கள். ஒரு நிமிடம் மௌனமாக செல்கிறது நேரம்.

“சரி டிக்கெட்டை கேன்சல் செய்தீர்கள் என்றால் அதற்கான படிவம், அத்தாட்சி எங்கே?” என்றேன். இந்த நேரத்தில் சாமிக்கு மேலும் வியர்த்தபடி இருந்தது. கிட்டத்தட்ட சட்டை முழுவதும் நனைந்திருந்தது. பிறகு, மிகத் தயங்கித் தயங்கி “நான் விமான டிக்கெட்டே எடுக்கவில்லை” என்றார்.

“முதலில் விமான டிக்கெட்டை கேன்சல் செய்துவிட்டேன் என்றீர்கள். பிறகு டிக்கெட்டே எடுக்கவில்லை என்கிறீர்கள். சரி, ஏன் எடுக்கவில்லை? அதற்கு ஏதாவது முக்கிய காரணம் இருக்கவேண்டுமில்லையா? அது என்ன காரணம்? கடைசிகட்ட தேர்தல் பிரச்சாரத்தையே கேன்சல் செய்துவிடும் அளவிற்கு என்ன முக்கிய வேலை. என்ன காரணத்திற்காக மதுரை பயணத்தை உறுதி செய்யவில்லை? கேன்சல் செய்தீர்கள்?” என்ற அடுக்கடுக்கான கேள்விக்கு சாமியிடம் இருந்து ஒரு பதிலும் இல்லை.

நிற்க தடுமாறினார். நிற்கமுடியாமல், விசாரணை கூண்டின் கைப்பிடியை பிடித்துக்கொண்டார். உடல் முழுவதுமே நனைந்துவிட்டது.

அப்போதுதான் நான் என் வழக்கறிஞர் பாலகிருஷ்ணனிடம் அதை மெதுவாக சொன்னேன். அதைக் கேட்ட அவர் புத்துணர்ச்சி பெற்றவராக சத்தம் போட்டு “எஸ் மை லாட். த ஹோல் வேல்ட் சேஞ்ச் தேர் ப்ரோகிராம் ஆப்டர் த அசாஸினேசன் ஒன்லி. பட் அவர் ஜென்டில்மென் டாக்டர் சாமி சேஞ்ச் இஸ் ப்ரோகிராம் பிஃபோர் த அசாஸினேசன் (மொத்த உலகமும் இந்த ராஜீவ்காந்தி படுகொலைக்குப் பிறகுதான் தமது திட்டத்தை மாற்றிகொண்டது. ஆனால் சுப்ரமணியசாமி மட்டுமே படுகொலைக்கு முன்பாக தனது பயணத்திட்டத்தை மாற்றியிருக்கிறார். அது ஏன்?) முக்கியமாக தேர்தல் பிரச்சாரத்தைவிட்டு எங்கோ ரகசியமாக தங்கியிருக்க காரணம் என்ன?” என்று கேட்டபோது.....

யாரிடமிருந்தும் எந்த சத்தமும் இல்லை. “இந்த கேள்விக்கு பதிலை சொல்லுங்கள் மிஸ்டர்” என்கிறார் நீதிபதி. சாமியிடம் இருந்து பதில் இல்லாதது மட்டுமல்ல. தலைகுனிந்தபடி நிற்கிறார். இப்போது

நனைந்த உடலில் இருந்து வியர்வை அவரது கைவிரல் வழியாக சொட்டியபடியே இருக்கிறது. எல்லோரும் அந்தக் கோலத்தைப் பார்க்கிறார்கள். எனக்கு ஏதோ இனம்புரியாத இன்ப அதிர்ச்சி உடலுக்குள்ளாக பாய்கிறது. யார் குற்றவாளி என்பது அம்பலப்பட்டதாக திருப்தி. எனக்கே இப்படி இருக்கிறது என்றால் தந்தை ராஜீவ்காந்தியை பறிகொடுத்துவிட்டு தவிக்கும் மகள் பிரியங்காவிற்கு எப்படி இருக்கும் என்று அவரைப் பார்க்கின்றேன். அவரது முகம்... ஆத்திரத்திலும் கோபத்திலும் அப்படியே தீ ஜ்வாலையாக முகமெல்லாம் சிவந்து கண்கள் சுப்ரமணியசாமியின் மீது ஆவேசப் பார்வையோடு நிலைகுத்தி நின்றிருந்தது. அதை எப்படி விவரிப்பதென்று தெரியவில்லை. கோவலனை பறிகொடுத்த கண்ணகி, பாண்டிய மன்னனின் அரசவை மண்டபத்திற்குள் தலைவிரி கோலமாக நுழைந்ததை இளங்கோவடிகள் கூறுவதை படித்த ஞாபகம்தான் சட்டென நினைவுக்கு வந்தது.

தலை குனிந்தபடியே நின்ற சாமி எந்தப் பக்கமும் திரும்பவில்லை. நீதிபதி ஜெயினோ சுப்ரமணியசாமியை உற்றுப் பார்த்தவர் அப்படியே பார்த்தபடியே இருக்கிறார். பார்வையாளர்கள் மத்தியிலும் ஒரே நிசப்தம். அடுத்து நீதிபதி என்ன சொல்லப்போகிறார் என்ற எதிர்பார்ப்பு. ஆனால் ஜெயின் கன்னத்தில் கை வைத்தபடியே, சாமியை பார்த்தபடியே இருக்கிறார். இரண்டு நிமிடங்கள் அப்படியே ஓடுகிறது. பேனாவை மூடி மேஜை மீது வைத்தார். பிறகு கண்ணாடியை கழற்றி மேஜைமீது வைத்தபடி, அப்படியே எழுந்தார். சாமி மீது வைத்த பார்வையை விலக்கவே இல்லை. அப்படியே எழுந்தார். வழக்கமாக ‘கோர்ட் இஸ் அர்ஜன்ட்’ என்று சொல்வதைக்கூட மறந்து சாமியை மேலும் முறைத்துப் பார்த்தபடியே அவரது அறைக்குள் சென்றார்.

பிறகு சாமியும் விசாரணைக் கூண்டிலிருந்து இறங்கினார். பார்வையாளர்களும் எழுந்து அங்குமிங்கும் நகர்ந்தார்கள். சாமி, பிரியங்காவை கடக்கும் போது அப்படியே தலைகுனிந்து நடந்தார். அந்த நேரத்தில் நான் பிரியங்காவைப் பார்க்கிறேன். சுப்ரமணியசாமியை அப்படியே சுட்டெரித்துவிடுவதைப் போல் பார்க்கிறார். முகத்தில் ஆதங்கம், ஆத்திரம் எல்லாம் ஒன்றுகூட கண்கள் சிவந்து கலங்கியிருக்கின்றன. ‘நீதானா அந்தக் குற்றவாளி?’ என்ற முறைப்பு அது. அப்படியே என்னையும் பார்க்கிறார். ஒருவித ஏக்கம், இயலாமை எல்லாம் கலந்த சாந்தமான பார்வையோடு தலைசாய்த்து இமைமூடினார். அதை நன்றி என எடுத்துக்கொள்வதா? தெரியவில்லை. அடுத்தநொடி அங்கிருந்து வேக வேகமாக வெளியேறினார்.

அவர் சென்றவுடனேயே அங்கு இருந்த மிக மூத்த வழக்கறிஞரான தத்தா ஓடிவந்து என் கைகளைப் பற்றினார். “இந்த வழக்கு இவ்வளவு நாளும் இருட்டில் இருந்தது. இன்றுதான் அதன்மீது ஒரு வெளிச்சக்கீற்று மின்னலாய் பாய்ந்திருக்கிறது. இவ்வளவு நாளும் திக்குத் தெரியாத நிலையில் இருந்தது. மிகவும் நன்றி” என்று தட்டிக்கொடுத்தார். அதே போன்று காங்கிரஸ் கட்சி சார்பாக வாதாடிய மூத்த வழக்கறிஞரான மிட்டலும் ஓடிவந்து கட்டிப்பிடித்துக்கொண்டார். “என்னால் எப்படி விவரிப்பதென்று தெரியவில்லை. சாமி அந்த இரண்டு பத்திரிகை செய்திகளையும் காட்டியபோது, ‘இத்தோடு எல்லாம் முடிந்தது’ என்று நினைத்து விட்டேன். ஆனால் நீங்கள்..?. வாய்மை வென்றிருக்கிறது. பரவாயில்லை” என்றார். அது என் கடமை என்பதால் பாராட்டாக எடுத்துக்கொள்ள முடியவில்லை.

அதேபோன்று தமிழகத்தைச் சேர்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினரான விடியல் சேகர் ஓடிவந்து “அண்ணே இந்த நாளை வாழ்க்கையில் மறக்க முடியாதண்ணே. உங்கள் மூலமாக இன்னைக்கு இந்த வழக்கில் ஒரு வெளிச்சம் கிடைத்திருக்கிறதண்ணே” என்றார். முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.ஆர். பாலசுப்ரமணியன், எனக்கு பரிச்சயமில்லை என்றாலும், விடியல் சேகரோடு சேர்ந்து கைகொடுத்துப் பாராட்டினார்.

இதையெல்லாம் சொல்ல காரணம் இருக்கிறது.

இப்படி, வழக்கிற்கு சம்பந்தமே இல்லாத பலரும் என்னை அங்கே அங்கீகரித்தார்கள். பாராட்டினார்கள். கட்டிப்பிடித்து உருகினார்கள். ஆனால், ஒருவர் மட்டும் என்னை கோபமாக முறைத்தது முறைத்தபடியே இருந்தார். என்னை வெறுப்பாக பார்த்தபடி எழுந்து விறுவிறுவென வெளியேறினார்.

அவர்தான் சி.பி.ஐ. சிறப்பு புலனாய்வுக் குழுவின் தலைவரான கார்த்திகேயன்.

பரவாயில்லை நாங்கள் புலனாய்வு செய்யாததைக்கூட நீங்கள் செய்திருக்கிறீர்கள் என்று பாராட்ட வேண்டாம் ஹலோ என்று ஒரு வார்த்தையாவது பேசியிருக்கலாம். ஆனால் இல்லை. ஏதோ அவரை விசாரணைக் கூண்டில் நிறுத்தி, அவர்தான் இந்தப் படுகொலையின் சூத்ரதாரி என நான் வாதாடியதைப் போன்று முறைத்துக்கொண்டே சென்றார். அதுதான் வேடிக்கையாக இருந்தது.

சரி போகட்டும். அதன் பிறகு நான் வழக்கறிஞரோடு அவரது அலுவலகம் சென்று மற்ற வேலைகளை முடித்துக்கொண்டு அவசர அவசரமாக விமானம் ஏறினேன். அந்த விமானத்தில் வலதுபக்கம் மூன்று இருக்கைகள். இடது பக்கம் இரண்டு இருக்கைகள். நுழைவு வாசல் ஓரத்தில் இருந்த முதல் மூன்று இருக்கையில் திராவிடர் கழகத்தின் தலைவர் கி.வீரமணியும் அவரது நண்பர் வழக்கறிஞர் வீரசேகரனும் அமர்ந்திருந்தார்கள். அவர்கள் பக்கத்தில் நான் அமர்ந்துகொண்டேன். என்னைப் பார்த்த கி.வீரமணி "வாழ்த்துகள் வேலுசாமி. இன்னைக்கு பிரமாதமாக ஆர்க்யூமெண்ட் செய்தீர்களாமே. நடந்ததை எல்லாம் கேள்விப்பட்டேன். பரவாயில்லை. சதிகாரர்கள் யார் என்பது ஓரளவு வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது" என்று பாராட்டினார். நானும் சிரித்தபடியே "ஆமாம்" என்றேன். இதற்குள் விமானம் புறப்படத் தயார் நிலைக்கு வந்தது. அந்தக் கடைசி நிமிடத்தில் அவசர அவசரமாக ஒருவர் உள்ளே நுழைந்தார். என்னைக் கண்டதும் நெருப்பை மிதித்துவிட்டதைப் போன்று முகம் மாறினார். அப்படியே முகத்தை திருப்பிக்கொண்டு எனக்குப் பக்கத்தில் இரண்டுபேர் அமரக்கூடிய இருக்கையில், என் பக்கமாக உட்கார்ந்தார்.

சும்மா அப்படி திரும்பினாலே என் முகத்தைப் பார்த்துவிடலாம்.

அப்படியிருந்தும் டெல்லி முதல் சென்னைவரை சுமார் இரண்டரை மணிநேரம். அந்த முகத்தை என் பக்கம் திருப்பவேயில்லை. கழுத்தில் சுளுக்கு விழுந்தவரை போன்று அந்தப்பக்கமே முகத்தைத் திருப்பிக்கொண்டார். யார் அந்த பெரிய மனிதர் என்று திரும்பவும் கேட்டுவிடாதீர்கள். சி.பி.ஐ அதிகாரி கார்த்திகேயனேதான். அவருக்கு ஏன் என்மீது இவ்வளவு காழ்ப்புணர்ச்சி என்று யோசிக்கும்போதே அவர் புலன்விசாரணை செய்த கோணமும் லட்சணமும் நினைவுக்கு வந்து தொலைத்தது.

அதிகாரம் வைத்திருப்பவர்கள் சொல்வதே தீர்ப்பாகிவிடுகிறது. என்ன செய்வது. "தன்நெஞ்சறிவது பொய்யற்க பொய்த்த பின் தன்நெஞ்சே தன்னைச் சுடும்" என்ற குறளை கார்த்திகேயன் படித்திருக்க மாட்டாரோ?

# இடைக்கால அறிக்கையும் எரிச்சலும்...



ஜெயின் கமிஷனில் என் தரப்பிலான விசாரணை முடிந்த பிறகு நான் மீண்டும் டெல்லி போகவில்லை. தமிழகத்தின் பல இடங்களிலும் ராஜீவ் கொலையில் புலிகளுக்குத் தொடர்பில்லை. அது சர்வதே சதி. அந்த சதியின் காரணகர்த்தா சுப்ரமணியசாமி என்று விடாமல் பேசி சருகிறேன். இந்த நேரத்தில்தான் 1997ம் ஆண்டு நவம்பர் மாதம் ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கை வெளியானது. அதில் ராஜீவ்காந்தியை கொலைசெய்த விடுதலைப் புலிகளோடு தி.மு.க.விற்கு தொடர்பிருக்கிறது என்பதோடு ஒட்டுமொத்த தமிழர்ககள் மீதும் குற்றம் சொல்வதைப்போல் அமைந்திருந்தது. அதைப் பார்த்ததும் எனக்கு ஆத்திரம். என்னடா இது, இந்த ஜெயின் கமிஷனாவது சரியாக நடக்கும், நீதியை நிலைநாட்டும் என்று நம்பினோமே. இப்படி அநியாயத்திற்கு ஒரு பழியைச் சொல்கிறதே என்ற ஆதங்கம். என்ன செய்வது? ஏதாவது எதிர்ப்பைக் காட்டியே ஆகவேண்டும். விடக்கூடாது. என்ன செய்யலாம் என்ற துடிப்பு. ஆனால் என்ன செய்ய முடியும்? தெரியவில்லை. அதனால் நான் முன்பு ஜெயின் கமிஷனுக்குப் போவதற்கு முன்பாக ஆலோசனை கேட்ட வழக்கறிஞரான பெரியவர் எம்.எஸ். வெங்கடாசலம் அவர்களிடம் பேசினேன். என் ஆதங்கத்தைக் கூறினேன். “இதற்கு ஏனப்பா கோபப்படுகிறாய். வந்திருப்பது இடைக்கால அறிக்கைதான். முழுவதுமாக வரட்டுமே. அதிலென்ன இருக்கிறது என பார்த்துக்கொண்டு யோசிக்கலாம்” என்றார்.

“இல்லை. ஜெயின் கமிஷன் இப்படி தமிழர்கள் மீது பழிபோடுவதைப்போல் அறிக்கை கொடுத்திருப்பதை விடக்கூடாது. அப்படி விட்டால் எதிர்ப்பே இல்லை என்று, நாளை என்னவேண்டுமானாலும் சொல்வார்கள்” என்றேன். “சரி என்ன செய்யலாம்.” என்றார். “இப்போதைக்கு ஒரு கடுமையான எதிர்ப்பைக் காட்டியாக வேண்டும். கண்டனப் பொதுக்கூட்டத்தையாவது நடத்தலாமே” என்றேன். அதுவும் சரிதான் நல்லயோசனைதான் என்றார். உடனே திருச்சி மலைக்கோட்டை அருகில் உள்ள சின்னகடைத் தெருவில் அந்தக் கூட்டத்தைக் கூட்டினேன். ‘ஜெயின் கமிஷன் இடைக்கால அறிக்கையும், தமிழர்கள் மீது சுமத்தப்பட்ட பழியும்’ என்ற தலைப்பிட்டு இடது பக்கம் பெரியார், வலது புறத்தில் காமராஜர் படத்தைப் போட்டு திருச்சி முழுவதும் கண்டனப் பொதுக் கூட்டம் என போஸ்டர் ஒட்டினேன். ஏற்பாட்டு வேலைகளை எல்லாம் என்னுடன் இருந்த புலமாடன் செய்தார். கூட்டத்தில் எம்.எஸ். வெங்கடாசலம் சுருக்கமாக பேசி அமர்ந்தார். நான் பேசும்போது ஜெயின் கமிஷனை கடுமையாக தாக்கினேன்.

மக்களிடம் பெரிய வரவேற்பு. கண்களுக்கு எட்டிய தூரம் வரை நல்ல கூட்டம். உண்மைகளை அறிந்துகொள்வதில் அவ்வளவு ஆர்வம் இருந்தது. துரதிர்ஷ்டம் என்னவென்றால் எங்களைப் போன்று மற்ற பிரதான கட்சிகள் ஏதும் வலுவான எதிர்ப்பைக் காட்டாமல் போனதுதான். உணர்வாளர்கள்கூட இதை முன்னெடுக்கவில்லை. யாரையும் குறைசொல்வது நோக்கமல்ல. இதுபோன்ற நேரத்திலாவது அனைவரும் ஒன்றுபடவேண்டும் என்பதற்காக கூறுகிறேன். தவிர அன்றைய அரசியல் சூழல் ஒரு அச்ச நிலையில் இருந்ததும் காரணம். இது முடிந்த சில நாட்களுக்குப் பிறகு ஜெயின் கமிஷன் இடைக்கால அறிக்கையை வைத்து 'விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை பிடித்து வந்து தூக்கில் போட வேண்டும்' என்று சுப்ரமணியசாமி ஒரு அறிக்கை கொடுத்தார். அவரை ஒட்டி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்த வாழப்பாடி ராமமூர்த்தியும் அதேபோன்றதொரு அறிக்கையை கொடுத்தார். கலவாணிகளுக்குள் என்ன ஒற்றுமை பாருங்கள்! அதைப் பார்த்ததும் கொதித்துப் போனேன்.


அந்த நேரத்தில் புதுக்கோட்டையைச் சேர்ந்த ஷெரீப் என்னைத் தேடி வந்தார். "பார்த்தீர்களா அண்ணே. தலைவர் பிரபாகரனை பிடித்து வந்து தூக்கில் போடவேண்டும் என்றளவிற்கு அறிக்கை கொடுக்கிறார்கள்" என ஆதங்கப்பட்டார். "ஆமாம்பா. தூக்கில்தான் போடனும். ஆனால் தலைவர் பிரபாகரனை அல்ல. அப்படி அறிக்கை கொடுத்த அந்த இரண்டு பேரையும் தான் பிடித்துத் தொங்கவிட வேண்டும்" என்றேன். உற்சாகமான ஷெரீப், "அண்ணே இதை அப்படியே மேடையில் பேசுவீர்களா?" என்றார். "எனக்கென்ன தயக்கம். எந்த மேடையில் வேண்டுமானாலும் நான் பேசத் தயார்" என்றேன். "அப்படியென்றால் நான் ஏற்பாடு செய்கிறேன். தயவுசெய்து வாருங்கள்" என்றார்.

அடுத்த இரண்டாவது நாளே புதுக்கோட்டையில் கூட்டம் ஏற்பாடானது. ஆனால் போலீஸ் மிகப்பெரிய அளவில் இடையூறு செய்தது. அந்த மாவட்ட போலீஸ் எஸ்.பி-.யே நேரில் வந்து மேடைக்கு முன்பாக நின்றுகொண்டார். கட்டுப்பாடு என்ற பெயரில் வேண்டும் என்றே தகராறு செய்தார். ஒரு கட்டத்தில் எஸ்.பி.-க்கும் தம்பி ஷெரீப் மற்றும் அவரது நண்பர்களுக்கும் வாய்த் தகராறு முற்றி சண்டை என்ற அளவிற்குப் போனது. கிட்டதட்ட கைகலப்பாகும் நேரம், நான் குறுக்கே புகுந்து அவரோடு ஏன் நாம் பேசவேண்டும். நாம் சொல்வதை

மேடையில் பேசுவோம். முடிந்தால் தடுத்துப் பார்க்கட்டும் என்று விளக்கினேன். அந்தக் கோபம் மேடையில் பற்றிக் கொண்டது.

இந்த ராஜீவ்காந்தி படுகொலையில் சுப்ரமணியசாமியின் பங்கு என்ன? களத்தில் நின்ற போலீஸாருக்கு தெரியும் முன்பாகவே ராஜீவ் இறந்துவிட்டார் என்பது சாமிக்கு எப்படித் தெரிந்தது. புலன் விசாரணைக்கு முன்பாகவே புலிகள்தான் கொலையைச் செய்தார்கள் என்று ஏன் சொன்னார், எனக்கு கொழும்பில் இருந்துதான் அந்தத் தகவல் கிடைத்தது என்று ஜெயின் கமிஷனில் சொல்கிறாரே சாமி. அந்த சிலோன் நபர் யார். புலன்விசாரணை செய்யும் அதிகாரிகள் ஏன் அதை விசாரிக்கவில்லை என்று தொடங்கி, நான் ஜெயின் கமிஷனில் முன்வைத்த குற்றச்சாட்டுகளை எல்லாம் புட்டுப்-புட்டு வைத்தேன். கூட்டம் என்றால் அப்படி ஒரு கூட்டம். பெரியளவில் ஆர்ப்பரித்து சாமி மீதான குற்றச்சாட்டை வரவேற்றார்கள்.


அடுத்து வாழப்பாடி ராமமூர்த்தி. தேசிய தலைவர், ஒரு மாநிலத்திற்கு வருகிறார் என்றால் மாநிலத் தலைவரான வாழப்பாடி ராமமூர்த்தி கூடவே இருக்க வேண்டுமா இல்லையா. எங்கோபோய் ஒளிந்துகொண்டாரே, அது ஏன் என்று தொடங்கி சுப்ரமணியசாமிக்கும் வாழப்பாடி ராமமூர்த்திக்கும் உள்ள தொடர்பு, நான் சாமிமீது குற்றம்சாட்டி ஜெயின் கமிஷனுக்கு போகக்கூடாது என்பதற்காகவே பேரம்பேசிய அயோக்கியத்தனம் என எல்லா யோக்கியதையும் பிரித்துப் பிரித்துக் கூறினேன். கடைசியாக ராஜீவ்கொலையில் தூக்கில் போடவேண்டியது பிரபாகரனை அல்ல. சதித்திட்டதை தீட்டி முடித்த சாமியையும் வாழப்பாடியையும்தான் தொங்கவிடவேண்டும். புலன்விசாரணை செய்த அந்த அதிகாரிகள் இவர்களைத்தான் கைது செய்து விசாரிக்க வேண்டும் என்று முடித்தபோது மொத்த கூட்டமும் கைதட்டி பெரும் ஆரவாரம் செய்தது. இப்படி ஒரு கூட்டம் தமிழ்நாட்டி-லேயே புதுக்கோட்டையில் மட்டுமே நடந்தது. அதற்குக் காரணமானவர் பின்னாளில் பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழ் மாநிலத் தலைவராக இருந்த தம்பி ஷெரீப்பும் அவரது நண்பர்களும்தான். அவர்களின் துணிவைப் பாராட்டியே தீரவேண்டும்.




ஆனால், இங்குள்ள வேறு எந்தக் கட்சியோ தலைவரோ பிரபாகரனை தூக்கில் போடவேண்டும் என்று சொன்ன அந்த இரண்டு பேருக்கும் எதிராக ஒரு கண்டனத்தைக்கூட தெரிவிக்கவில்லை. குறிப்பாக சுப்ரமணியசாமிக்கு எதிராக பேசவே பயந்திருந்தார்கள். ஒரே ஒருவரைத் தவிர. அந்த ஒருவர் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணிதான். ஒரு கட்டத்தில், 'திராவிடர் கழகம்தான் புலிகளின் ஆதரவு இயக்கம். அது ஒரு தேசத்துரோக இயக்கம். எனவே அதைத் தடை செய்தாக வேண்டும்'

என்று சாமி பேசினார். அதற்கு பதிலடி கொடுக்கும் விதத்தில் அவர் சுப்ரமணியசாமி மீது ஜெயின் கமிஷனில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டு என்ன, ஜெயின் கமிஷன் அவர்மீது சொன்ன குற்றச்சாட்டு என்ன என்பதை எல்லாம் ஆதாரத்தோடு பேசியும் எழுதியும் வந்தார். அந்தக் காலகட்டத்தில் அவர் ஒருவர் மட்டுமே அவ்வப்போது என்னிடம் பேசினார். ஜெயின் கமிஷனில் நடப்பவற்றை ஆர்வத்தோடு கேட்டறிந்தார். எனக்கு ஆதரவாக நம்பிக்கையூட்டும்படி கூறிவந்தார். அதே போன்று மாணவப் பருவத்திலிருந்தே எனக்கு நெருங்கிய உறவு இருந்ததால் அண்ணன் பழ. நெடுமாறன் உரிமையோடு அடிக்கடி என்னோடு பேசி உற்சாகப்படுத்தினார். அதை மறக்காமல் இந்த நேரத்தில் பதிவு செய்வது நியாயமான ஒன்றாகும்.

# இது அதிமுக்கிய இரகசியம்...



இந்தக் கட்டத்தில் மிக முக்கியமான மூன்று நபர்களின் பெயர்களை குறிப்பிட வேண்டும். அந்த மூன்று பேர் யார் யார் என்றால் ஈழத்தந்தை செல்வாவின் மகன் சந்திரகாசன். ஒரு போராளிக் குழுவின் தலைவராக இருந்து புலிகளின் இயக்கத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட ஸ்ரீசபாரத்தினத்தின் சொந்த அண்ணன் ஸ்ரீகந்தா. மூன்றாவது நபர் குறிப்பிட்ட அந்தக் காலகட்டத்தில் சுப்ரமணியசாமியோடு நெருக்கமாக இருந்தவர், அவர் எங்கு போனாலும் நிழல்போல் கூடவே இருந்தவர். பயிற்றுவிக்கப்பட்ட ஓர் இளம்பெண் போராளியாக தெரிந்தவர். பெயர் பிரியதர்ஷினி. அந்த பெயரைக்கூட சுப்ரமணியசாமியால் சொல்லப்பட்டு பத்திரிகைகளிலும் வந்திருந்தது. இந்த மூன்று பேருக்கும் ராஜீவ்காந்தி படுகொலை மர்மத்திற்கும் என்ன சம்பந்தம் என்ற முடிவை வாசகர்களாகிய உங்களிடம் விட்டுவிட்டாலும் இவர்கள் மீதான சந்தேகங்களை சொல்லவேண்டியது என்னுடைய கடமை.

ராஜீவ்காந்தியினுடைய கொலை நடப்பதற்கு முன்புவரை சுப்ரமணியசாமி, அவர் மத்திய அமைச்சராவதற்கு முன்புவரை எப்போது சென்னைக்கு வந்தாலும் சந்திரகாசனும் ஸ்ரீகந்தாவும் அவரைப் பார்ப்பதற்கு தவறுவதில்லை. ஒரு காலகட்டத்தில் சென்னை வேப்பேரி பக்கத்திலிருக்கக்கூடிய பெரியார் திடல் வழியாக போனால் ஈ.வி.கே. சம்பத் சாலை வரும். அந்த சாலையில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் சுப்ரமணியசாமி ஒரு வீட்டை வாங்கியிருந்தார். அந்த வீட்டில்தான் மேற்கண்டவர்கள் சந்திப்பது வழக்கம். அப்போது அவர்கள் இருவரும் சந்திக்க வரும்போது வறுமையின் பிடியில் இருந்தார்கள் என்பதை பார்த்தவுடனேயே தெரிந்துகொள்ளலாம். உண்மையிலேயே அன்று அவர்கள் வறுமையில்தான் இருந்தார்கள்.

ஸ்ரீகந்தா எப்போது வந்தாலும் பேருந்திலோ அல்லது நடந்தேதான் வருவார். பலமுறை பார்த்திருக்கிறேன். சந்திரகாசனோடு வரும்போது ஆட்டோவில் வருவார்கள். அப்படித்தான் வந்து அந்த வீட்டில் அடிக்கடி சந்திப்பார்கள். அப்படி இருக்கும்போது குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் எனக்கும் ஸ்ரீகந்தாவுக்கும் ஒரு நெருக்கம் ஏற்படுகிறது. அந்த சந்தர்ப்பம் என்னவென்றால், “காவிரி நதிநீர் பிரச்சனை பற்றி மக்களிடம் அரசியல் விழிப்புணர்வை உருவாக்குவதற்காக ஒரு வாகனப்பயணம் போவோம்” என்று சுப்ரமணியசாமியிடம் வற்புறுத்தினேன். “சரி போகலாம். அதற்கான ஏற்பாட்டை நீயே செய்” என்று சொன்னார்.

பூம்புகாரிலிருந்து தலைக்காவிரி வரை காரிலேயே செல்வது. ஆங்காங்கே பொதுக்கூட்டம், பிரச்சாரம் என்று செய்வது என ஒழுங்கு செய்தோம். அப்போது இந்த ஸ்ரீகந்தாவும் அவரோடு சேர்ந்து சில இளம் தோழர்களும் ஒரு காரில் எங்களோடு வந்தார்கள். எங்களோடு வந்தார்கள் என்பதைவிட சுப்ரமணியசாமிக்காக வந்தார்கள் என்பதே சரி. ஆக அவர்களும் அந்த விழிப்புணர்வு பிரச்சாரத்தில் பங்கேற்றார்கள்.

பிரச்சார ஊர்தி போகிற வழியில், ஈரோடு மாவட்டம் பவானியில் ஒரு பொதுக்கூட்டம். மாலை நேரத்தில் ஏற்பாடாகியிருந்தது. மேடையில் நானும் சுப்ரமணியசாமியும் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். அவசரம் அவசரமாக மேடையேறிய ஓர் ஈழத்து இளைஞர் சுப்ரமணியசாமியிடம் ஏதோ கிசுகிசுவென்று பதற்றத்தோடு சொன்னார். சாமிக்கு முகம் மாறியது. உடனே என்னிடம் தலை சாய்த்து மிகவும் ரகசியமாக, “சார் எப்படியாவது போய் ஸ்ரீகந்தாவைக் காப்பாற்றுங்கள்” என்றார். என்ன சொல்கிறீர்கள்? எனக்கொன்றும் புரியவில்லை என்றேன். “இல்லை வேலுசாமி, சந்தேகத்தின் பேரில் ஸ்ரீகந்தாவை போலீஸில் பிடித்து வைத்திருக்கிறார்கள். அவர் மாட்டிக்கொண்டால் சில விபரீதங்கள் நடந்துவிடும். அதனால் எப்படியாவது அவரை மீட்டுக்கொண்டு வந்துவிடுங்கள்” என்றார்.

நான், மேடையில் இருந்து இறங்கி வேகமாக ஓடினேன். கூட்டம் நடக்கும் கடைசி பகுதியில் ஸ்ரீகந்தாவையும் அவருடன் சில தோழர்களையும் போலீஸார் நிற்கவைத்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். ஸ்ரீகந்தாவும் அவரது தோழர்களும் அங்கே பேசிக்கொண்டிருந்தபோது இலங்கைத் தமிழில் ஏதோ பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்த போலீஸாருக்கு சின்ன சந்தேகம். அதற்காக பிடித்து விசாரித்தார்கள். வேகமாக ஓடிப்போன நான் போலீஸாரைப் பார்த்து “சார், இவர்கள் அனைவரும் எங்களோடு பிரச்சாரத்திற்காக வந்தவர்கள். பாருங்கள், நான் மேடையில் இருந்துதான் ஓடி வருகிறேன். இவர்களை விட்டுவிடுங்கள்” என்று சாமர்த்தியமாக பேசி என்னோடு அழைத்துக்கொண்டேன். நான் மேடையில் உட்கார்ந்திருந்ததை போலீஸாரும் பார்த்தபடிதான் இருந்தார்கள். அந்த நம்பிக்கையில் சிரித்தபடியே என்னுடன் அனுப்பிவிட்டார்கள்.

அப்படி அழைத்துவந்த பிறகுதான் ஸ்ரீகந்தா, “சார் நல்லவேளை. என்னை அழைத்துவந்துவிட்டீர்கள். இல்லை என்றால் கொஞ்ச நேரத்தில் எங்களை சோதனை போட்டிருப்பார்கள். அப்படி செய்திருந்தால்

மாட்டிக்கொண்டிருப்போம்” என்றார். “என்னய்யா சொல்கிறீர்கள்” என்றேன். “ஆமாம் சார், பாருங்கள்” என்று அவர் இடுப்பில் செருகி வைத்திருந்த துப்பாக்கியைக் காட்டினார். அவருடன் இருந்த தோழர்களும் துப்பாக்கி வைத்திருந்தார்கள். எனக்கு அதிர்ச்சிதான். ஆனாலும் காட்டிக்கொள்ளவில்லை. இந்த சமயத்தில் சுப்ரமணியசாமி மத்திய அமைச்சராக இருக்கவில்லை. அமைச்சராக இல்லாத அவருக்கு, துப்பாக்கியுடன் பாதுகாப்பு வீரர்களாக இந்த ஸ்ரீகந்தாவும் அவரது தோழர்களும் இருக்கிறார்கள் என்பது அப்போது விளங்கவில்லை.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு, ஸ்ரீகந்தா என்னுடன் மிக நெருக்கமாக பழக ஆரம்பித்திருந்தார். அவரும் அவருடைய மனைவியும் திருச்சியில் இருக்கக்கூடிய என்னுடைய வீட்டிற்கே மூன்று நான்கு முறை வந்து சென்றார்கள். அப்படி வருகிறபோதெல்லாம் ஸ்ரீகந்தாவின் ஆழ்மனதில் தன்னுடைய சகோதரன் ஸ்ரீசபாரத்தினத்தை, பிரபாகரனும் அவர்களது போராளிகளும் கொன்றுவிட்டார்கள் என்கின்ற ஆதங்கம், ஆத்திரம் இருப்பதை வெளிப்படுத்துவார். நான் பலமுறை கண்டித்திருக்கிறேன். உணர்ந்திருக்கிறேன். இது ஒரு சகோதரனை இழந்த எல்லோருக்கும் இருக்கக்கூடிய ஒன்றுதான் என்ற நினைப்பில் நானும் எடுத்துக்கொண்டேன். இப்படி அடிக்கடி என்னுடைய வீட்டிற்கும் மற்ற இடத்திற்கும் சென்று நடமாடிக்கொண்டிருந்த கணவன் மனைவி இருவரும், ராஜீவ்காந்தி படுகொலைக்குப் பிறகு திடீரென்று மாயமாய் மறைந்தே போனார்கள். இன்றுவரை ஸ்ரீகந்தா எங்கே இருக்கிறார் என்பதும் மர்மமாகவே இருக்கிறது.

சந்திரகாசனை எடுத்துக்கொண்டால், அந்த படுகொலை நடந்த கொஞ்ச காலத்திற்குப் பிறகு அவருடைய நடை உடை பாவனை எல்லாமும் மாறிப்போய் இருந்தது. ராஜீவ்காந்தி மறைவுக்கு முன்பு வறுமையில் இருந்தார். சென்னையில் அவர் இருந்த இடத்திற்கு வாடகையைக் கூட கொடுக்க முடியாமல் இருந்தார். கெஞ்சிக் கேட்டு அதே வீட்டின் மொட்டை மாடியில் ஒரு கீற்றுக்கொட்டகையைப் போட்டுக்கொண்டு காலத்தை ஓட்டினார். ஆனால் ராஜீவ் காந்தி மறைவுக்குப் பிறகு செல்வச் செழிப்பில் மிதக்கத் தொடங்கினார்.



மூன்றாவது, அந்த போராளிப் பெண்ணாகத் தெரிந்த பிரியதர்ஷினி. ராஜீவ்காந்தி கொலைக்கு முன்பிலிருந்து சுப்ரமணியசாமி எங்கு சென்றாலும் அவருடன் செயலாளர் போலவே உடன் இருந்தார். ராஜீவ்காந்தி கொலைக்குப் பின்னாலும் இது தொடர்கிறது. அப்போது ஜூனியர் விகடன் பத்திரிகையில் தனியாக ஒரு கட்டுரை எழுதியிருந்தார்கள். 'சுவாமியின் பக்கத்திலே வருகின்ற ஒரு மர்மப் பெண்' என்று நான்கைந்து படங்களைப் போட்டு, இவரது பெயர் பிரியதர்ஷினி என்று சொல்லப்படுகிறது என வெளியிட்டார்கள். பிறகுதான் வெளியுலகத்திற்கு இது தெரியத் தொடங்கியது. அந்தக் காலகட்டத்தில்தான் தேனாம்பேட்டையில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் சுப்ரமணியசாமி பேச வருகிறார். அந்தப் பொதுக்கூட்ட மேடையில் சுப்ரமணியசாமி, சந்திரலேகா, மர்மப்பெண் பிரியதர்ஷினி ஆகிய மூன்றுபேர் மட்டுமே. அந்தக் கூட்டத்தில் அண்ணா தி.மு.க.வை

சேர்ந்தவர்கள் பெரிய கலவரத்தை ஏற்படுத்தினார்கள். சரமாறியான கல்வீச்சு ரகளை எல்லாம் நடக்கிறது.

அப்போது மேடையில் உள்ள மூன்று பேருக்கும் பாதுகாப்பு தருவதற்கு போலீஸும் நிற்கிறது. கல்வீச்சு ரகளை படங்களை எல்லாம் குறிப்பாக நக்கீரன் பத்திரிகையில் போடுகிறார்கள். அந்தப் படங்களில்தான் ஒரு பெரிய வித்தியாசம் பாமரர்களுக்கும் புரியும்படி இருந்தது. என்னவென்றால் மேடையில் இருக்கும் சந்திரலேகாவின் முகத்தில் அச்சம் பீதி எல்லாம் அப்படியே தெரிகிறது. சுப்ரமணியசாமியின் முகமும் கலவரத்தில் சிக்கிய கவலை படிந்திருந்தது. ஆனால் இலங்கைப்பெண் பிரியதர்ஷினியின் முகத்தைப் பார்க்கிற போது மிகச் சர்வ சாதாரணமாக இருப்பது தெரியும். மிக மோசமாக கல்வீச்சு கலவரம் என்று நடக்கும்போது, அதைப்பற்றி கொஞ்சம்கூட கவலையில்லாமல் அசட்டையாக நிற்க முடிகிறதென்றால் அது சாதாரணமாக எல்லாருக்கும் வராது. நன்கு பயிற்றுவிக்கப்பட்ட ஒரு போராளியால்தான் முடியும். அதைப் பார்த்தவுடன் எனக்கு வியப்பு.

அடுத்தநாள் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில், நான் நக்கீரன் இதழில் வந்த அட்டைப்படங்களை உயர்த்தி பிடித்துக் காட்டி, “இந்தப் பெண் யார் என்பதை இதுவரை சி.பி.ஐ. சிறப்பு புலனாய்வுக் குழு பார்த்திருக்கிறதா? கார்த்திகேயன் தலைமையிலான சி.பி.ஐ டீம் இதை விசாரித்திருக்கிறதா? நான் பகிரங்கமாக இந்தப் பொதுக்கூட்டத்தின் வாயிலாக ஒன்றை சொல்லிக்கொள்கிறேன். ராஜீவ்காந்தியின் கொலையில் இங்கு சென்றோம், அங்கு பிடித்தோம், யார் யாரையெல்லாம் பிடித்தோம் என்று கதைவிடுவதைவிட இந்தப் பெண்ணை மட்டும் பிடித்து முறையாக விசாரித்தாலே படுகொலை பற்றிய மர்ம முடிச்சுகள் அவிழ்ந்துவிடும். பல ரகசியங்கள் தெரிந்துவிடும். சூத்ரதாரிகள் யார் யார்? உடந்தையாக இருந்தது யார்? என்பதெல்லாம் தெரிந்துவிடும்” என்று நான் மேடையிலேயே சொன்னேன்.

அப்படிச்சொன்ன அந்த நாளில் இருந்து இன்றுவரை, அந்த மர்மப்பெண் பிரியதர்ஷினி எங்கு இருக்கிறார் என்று தெரியவில்லை. அப்போது நினைத்திருந்தால்கூட அந்தப் பெண்ணை சி.பி.ஐ. மடக்கியிருக்க முடியும். சென்னையை விட்டு எப்படி வெளியேறினார். எந்த ஊரிலிருந்து இந்தியாவைவிட்டுத் தப்பினார் என்பதும் தெரியவில்லை. அந்தக் காரணத்திற்காகவே சுப்ரமணியசாமியை பிடித்து அப்போது விசாரித்திருக்கலாம். எதையுமே செய்யவில்லை. கண்களை

மூடிக்கொண்டு அந்த மர்மப் பெண்ணை தப்பவிட்டு கதை ஜோடிப்பதிலேயே கவனமாக இருந்தார்கள்.

ராஜீவ்காந்தி கொலையில் சில தமிழர்கள் பங்கெடுத்தார்கள் என்பதில் நான் ஆச்சரியப் படமாட்டேன். ஈழத்தைச் சேர்ந்த தமிழர்கள் என்றாலே, புலிகள் என்று உலகமே நினைத்துக் கொண்டிருக்கிறது. அதனால் புலிகளை நினைக்க வேண்டும் என்பதற்காக சுப்ரமணியசாமி திட்டமிட்டு சாமர்த்தியமாக ஸ்ரீகந்தா மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டவர்கள்தான் அந்த ஒரு சிலர் என்பதை இந்த உலகம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த ஒன்றை வைத்துக்கொண்டு, இன்று இருக்கும் சி.பி.ஐ-.யின் பல்முனைநோக்குப் புலன்விசாரணைக் குழு விசாரித்தால்கூட பல மர்மங்களை வெளிகொண்டு வந்துவிடலாம். உண்மையான குற்றவாளிகள் யார் என்பதை எளிதில் கண்டுபிடித்துவிடலாம். படுகொலைக் காரணங்களுக்கு விடை கிடைத்துவிடும். ஆனால் அவர்கள் செய்வார்களா என்பதுதான் கேள்விக்குறி.

இந்த பல்முனைநோக்கு சிறப்பு புலன்விசாரணைக் குழு அமைக்கப்பட்டு 13-ஆண்டுகள் ஓடிவிட்டது. மத்திய அரசுக்கு கொடுக்கப்பட்ட ஜெயின் கமிஷன் இறுதி அறிக்கையில் சந்திராசாமி, சுப்ரமணியசாமி ஆகியோர் மீது பல சந்தேகங்களை எழுப்பியது. கமிஷனுக்கு போதிய ஒத்துழைப்பை தராதவர்கள், விசாரணையையே திசைதிருப்பப் பார்த்தவர்கள் என்றெல்லாம் குற்றம் சாட்டியது. அதன் பேரில்தான் வாஜ்பாய் தலைமையிலான மத்திய அரசு நடவடிக்கையை எடுக்கும்படி சி.பி.ஐ.-க்கு ரிப்போர்ட் அனுப்புகிறது. அதையடுத்தே இந்த பல்முனைநோக்கு புலன்விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. இன்றுவரை ஒருமுறைகூட சந்திராசாமியையோ, சுப்ரமணியசாமியையோ அழைத்து விசாரிக்கவில்லை.

உலகத்தின் கண்களை மூடி மறைத்துவிட்டு கொலைகாரர்கள் சுதந்திரமாக திரிவதற்கும், அப்பாவிகள் சிறைக்கொட்டடியில் சிக்கி 21 ஆண்டு காலமாக வாடுவதற்கும் இந்த புலனாய்வு போக்குதான் காரணம். அவர்களின் கைகள் கட்டப்பட்டு வேண்டுமென்றே விசாரணையை திசைதிருப்ப அல்லது முடக்கிவைக்க இருந்தார்களோ என்ற சந்தேகத்தை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். இப்படி சந்தேகப்படுவதற்கான காரணங்களை எளிய வழியில் சொன்னால் புரிந்துகொள்வீர்கள்.

டாக்டர் சுப்ரமணியசாமி குமுதம் ரிப்போர்ட்டர் இதழுக்கு விரிவான பேட்டியளித்திருந்தார். அந்த நேர்காணலையும் தம்பி பா. ஏகலைவன் எடுத்திருந்தார். அதில் விடுதலைப் புலிகள்தான் ராஜீவ்காந்தியைக் கொன்றார்கள் என்று தொடங்கி கடுமையாக விமர்சித்திருந்தார். அவர்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள்தான் என்றார். அதைப் படித்த நான் பதிலடி கொடுக்கவேண்டி ஒரு பேட்டியை கொடுத்தேன். அந்தப் பேட்டியில் ஒரு சம்பவத்தை அழுத்தமாக குறிப்பிட்டேன். அதாவது அப்போது தருமபுரியின் ஒரு காவல் நிலையத்தில் சில கட்டைத் துப்பாக்கி காணாமல் போக பெரும் பரபரப்பாகியது. சிறப்பு விசாரணைக் குழுவை போட்டு விசாரித்தார்கள். கடைசியில் ஒரு இடத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்ததாக சொல்லி துப்பாக்கியை மீட்டார்கள். ஆக, துப்பாக்கி கிடைத்து விட்டது. ஆனால் அதை யார் எடுத்தார்கள், ஏன் பதுக்கினார்கள்?. தீவிரவாதிகளுக்காக பயன்படுத்த திட்டமா? என்ற கோணத்தில் எல்லாம் விசாரணை!. கடைசியில் அதிகாரிகள் உள்பட பதினெட்டு காவல்படையினரையும் நார்கோ அனலைசிங் டெஸ்ட் என்கிற உண்மையை கண்டறியும் சோதனைக்கு உட்படுத்தினார்கள். பெங்களூருக்கு அழைத்துச் சென்று அப்படி விசாரித்தார்கள்.

உயிரோ உணர்ச்சியோ இல்லாத ஒருசில கட்டைத் துப்பாக்கிகள் காணாமல் போய்விட்டது என்பதற்காக உண்மையை கண்டறியும் சோதனையை, பதினெட்டு போலீஸாரிடமே மேற்கொண்ட இந்தப் புலனாய்வு அமைப்புகள், உலகத்தின் பார்வையில் மிக கொடூரக் கொலையாக பார்த்த, இந்திய நாட்டின் மிக முக்கியமான ஒரு தலைவராக இருந்த ராஜீவ்காந்தி கொலையில் ஏன் அதைச் செய்யவில்லை?. எல்லோருடைய பார்வையிலும் சந்தேக நபர் என்று குற்றம் சாட்டப்பட்ட அந்த சந்திராசாமிக்கு மட்டும் ஏன் நார்கோ அனலைசிங் என்ற உண்மையை கண்டறியும் சோதனையை செய்யவில்லை?.

சுப்ரமணியசாமியை அப்படி செய்வதில் ஏன் தயக்கம்?. இதை சொல்வதற்கு உள்நோக்கம் ஏதுமில்லை. அப்படி யாராவது நினைத்தால் முதலில் என்னை அந்த உண்மை கண்டறியும் சோதனைக்கு உட்படுத்தட்டும். நான் முழுமனதோடு ஒத்துழைக்கத் தயார். அதன் பிறகாவது அந்த சுப்ரமணியசாமியை அப்படி விசாரிப்பார்களா? இனிமேலாவது அக்கறை காட்டுவார்களா? என்று அந்த பேட்டியில் கேள்வி எழுப்பியிருந்தேன்.



இன்றும் எனக்குப் புரியாத புதிராக இருப்பது, எல்லோருடைய சந்தேக வலையிலும் இருக்கக்கூடிய சுப்ரமணியசாமிக்கு, நாட்டின் முன்னாள் பிரதமர் படுகொலை வழக்கு விசாரணைக்கு ஒத்துழைப்பு தராதவர் என்று ஜெயின் கமிஷனால் குற்றம்சாட்டப்பட்ட சுப்ரமணியசாமிக்கு, இன்னும் ஏன் பூனை பாதுகாப்புப் படையை தருகிறார்கள் என்றுதான் தெரியவில்லை. வாரம் தோறும் விடுமுறை நாளில் கடற்கரை ஓரம் உள்ள பங்களாவில் அந்தவிதமான பொழுதுபோக்கிற்கும்கூட கறுப்பு பூனைப்படை பாதுகாப்பு என்றால், எனக்கு இந்த நாட்டின் பாதுகாப்புத்துறையை பார்த்து அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.. எப்படிப்பட்ட நல்ல மனிதர்கள் எல்லாம் இந்த நாட்டில் இருக்கிறார்கள்?. அவர்களுக்கு எல்லாம் பாதுகாப்பு இல்லை. எல்லாவிதமான தவறையும் செய்த சுப்ரமணியசாமிக்கு எதற்காக இந்த உச்சகட்ட பாதுகாப்பு. இந்தப் புதிருக்கான விடையை மத்திய அரசும்.

உள்துறை அமைச்சகமும்தான் நாட்டு மக்களுக்கு விளக்கவேண்டும். வரும் தலைமுறைக்கு கூறிவிட்டேன். அவர்கள் கேட்பார்கள்.?

# மிரட்டிய அட்டைக்கத்தி விசாரணை...

*உங்க சி.பி.ஐ. டீம் எங்கு போனது. இப்படி ஒருவன் பல சந்தேகங்களை முன்வைக்கிறானே என்று ஒரு முறையாவது என்னை அழைத்து விசாரித்தீர்களா?*



ஜெயின் கமிஷன் தனது விசாரணையை முடித்துக்கொண்டு இறுதி அறிக்கையை பிரதமர் வாஜ்பாய் தலைமையிலான மத்திய அரசிடம் கொடுத்தபிறகு அமைச்சரவை கூடி விவாதித்தது. அதனடிப்படையில் ஆக்ஷன் டேக்கிங் ரிப்போர்ட், என்று குறிப்பெழுதி சி.பி.ஐ.க்கு அனுப்பியது. அதன் பேரில்தான் சி.பி.ஐ. பல்முனைநோக்கு புலன் விசாரணைக் குழு ஒன்றை புதியதாக அமைத்தது. அதற்கென்று சிறப்பு அதிகாரிகளை கொண்ட தனி குழு அமைத்தது.

எம்.டி.எம்.ஏ என்கிற அந்த விசாரணைக் குழுவில் உள்ள பொன்னழகன் என்ற அதிகாரி ஒரு நாள் திருச்சியில் உள்ள என் வீட்டிற்கு வந்தார். அப்போது நான் வீட்டில் இல்லை. வெளியூரில் இருந்தேன்.

வீட்டிற்கு வந்த அந்த அதிகாரி, என் மனைவியிடம் நான் இந்த இடத்தில் இருந்து வருகிறேன். ராஜீவ்காந்தி கொலை சம்பந்தமாக உங்களது கணவரிடம் விசாரிக்க வேண்டும் என்று தனது விசிட்டிங் கார்டைக் கொடுத்து அறிமுகமானதோடு “ஏம்மா நீங்களாவது உங்கள் வீட்டுக்காரருக்குச் சொல்லக்கூடாதா. இந்தக் கொலையில் எப்பேர்ப்பட்டவர்கள் எல்லாம் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் தெரியுமா. தேவையில்லாமல் ஏன் அவர் இப்படியெல்லாம் செய்கிறார். அவரது உயிருக்கே ஆபத்து வரலாம் என்பது தெரியாதா? உன் தாலி பாக்கியத்திற்கே ஆபத்து என்பதை உணரவில்லையா” என்றெல்லாம் ஏகத்திற்கும் பேசியிருக்கிறார்.

பயந்துபோன என் மனைவி வெளியூரில் இருந்த என்னை வீட்டுத் தொலைபேசியில் அழைத்து இப்படி ஒரு அதிகாரி வந்திருக்கிறார். விசாரிக்க வேண்டும் என்கிறார் என்ற விஷயத்தை கலக்கத்தோடு கூறினார். உடனே அந்த அதிகாரியிடம் போனை கொடுக்கக் கூறினேன்.. “இப்படியெல்லாம் திடீரென்று வந்து விசாரிக்கப் போகிறேன் வா என்றால் எப்படி? முடியாது. முறைப்படி எனக்கு சம்மன் அனுப்புங்கள் பிறகு நான் வருகிறேன். அதுதான் முறை” என்று கூறினேன்.

“அப்படியே செய்கிறோம் சார். சென்னை வந்ததும் நீங்கள் எங்கு தங்கியிருக்கிறீர்கள் என்ற விவரத்தை போனில் சொன்னால், நானே வந்து அழைத்துச் செல்கிறேன்” என்றார். சொன்னபடி ஒரு நாள் சம்மன் வந்தது. நான் சென்னை சென்றேன்.

எழும்பூர் ரயில் நிலையத்திற்கு எதிரே உள்ள ஓட்டலில் தங்கி அந்த அதிகாரிக்குத் தகவலைச் சொன்னேன். அவரே ஒரு ஜீப் எடுத்துக்கொண்டு வந்தார். வந்தவரிடம் “நீங்கள் வழக்கை விசாரிக்க வந்தீர்களா, இல்லை வேறு ஆலோசனையைக் கூற வந்தீர்களா? எதற்காக என் மனைவியிடம் அப்படியெல்லாம் கூறினீர்கள். அப்படி சொல்வதற்கு நீங்கள் யார். அதுதான் உங்கள் விசாரணை முறையா?” என்று கடுமையாக எச்சரித்தேன்.

“மன்னிக்கனும் சார். மிகப்பெரிய தலைவரை கொலை செய்தவர்கள் உங்கள் உயிருக்கும் குறிவைக்கலாமே? தவிர இந்த விசாரணை போக்கு எப்படி போகிறது என்பது உங்களுக்கே தெரியும். நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் அப்படிக் கூறினேனே தவிர வேறு எந்த தவறான உள்நோக்கமும் கிடையாது. தயவுசெய்து மன்னித்துவிடுங்கள்” என்றார்.

பிறகு அவரது ஜீப்பிலேயே அடையாறில் உள்ள சி.பி.ஐ. சிறப்பு புலனாய்வுக் குழுவின் தலைமையிடமான மல்லிகை கட்டடத்திற்கு அழைத்துச் சென்றார். இப்படி நாங்களே வந்துதான் அழைத்துச் செல்வோம் அதுதான் முறை என்றார். மல்லிகை அலுவலகத்தில் இறங்கியதும் ஒரு மிரட்சி. எங்கு பார்த்தாலும் ராணுவ உடையணிந்து கையில் இயந்திரத் துப்பாக்கியேந்திய வீரர்கள் நின்றிருந்தார்கள். நேராக முதல் மாடிக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஒரு அறையில் உட்கார்ந்தோம்.

அங்கு ஒருவர் வந்தார். “இவர்தான் விசாரணை அதிகாரிகளில் ஒருவர். ஆந்திராவைச் சேர்ந்த ராஜு” என்று அறிமுகப்படுத்தினார் என்னை அழைத்துச்சென்றவர். கூடவே இன்னொருவரும் இருந்தார். அவர்கள் மூன்று பேரும், எனக்கு வலது இடது மற்றும் நேரெதிர் என்று உட்கார்ந்தார்கள். எல்லாம் அப்போதைய மர நாற்காலிதான். அந்த நேரத்தில் அங்கே ஒரு பெண் போலீஸ் அதிகாரி வந்தார். என்னைப் பார்த்ததும் சிரித்தார். எனக்கு குழப்பம். “என்ன சார் இவரை அடையாளம் தெரியவில்லையா” என்றார் ஒரு அதிகாரி. எனக்குத் தெரியவில்லையே என்றேன். அப்போதுதான், “சார் நான் அனுசூயா. அடையாளம் தெரியவில்லையா?” என்றார். எனக்கு வியப்பு.

ராஜீவ்காந்தி படுகொலை குண்டுவெடிப்பு சம்பவம் நடந்தபோது அருகில் இருந்தவர். பிறகு சுப்ரமணியசாமியோடு அரசு பொது மருத்துவமனையில் பார்த்தேன். அன்று உடல் எல்லாம் கருகிப்போய், அங்கங்கே சதை சிதறிய காயங்கள் இருந்தது. இவர் பிழைப்பாரா என்றுகூட அப்போது நினைத்தேன். அதிகாரிகள் உட்பட பல போலீஸார் இறந்ததில் இவரும் பிறகு இறந்திருக்கலாம் என்றுதான் நினைத்தேன். இப்போது பார்க்க குண்டு காயங்கள் ஏதுமின்றி இருந்தார்.

“என்னம்மா, ஆச்சரியமா இருக்கே. எப்படி?” என்று தயங்கியபடியே வார்த்தையை நிறுத்தினேன். “ஆமாம் சார், எப்படியோ

உயிர் பிழைத்து விட்டேன். அரசும் என் உயிர்மீது அக்கறை எடுத்துக்கொண்டது. பிளாஸ்டிக் சர்ஜரி மூலமாக தழும்பே இல்லாதபடிக்கு குணமாக்கிவிட்டார்கள்" என்று சிரித்தார். நானும் சிரித்தபடியே அவரை கவனித்தேன். கை கால்களில் நான்கைந்து விரல்கள் இல்லாமல் இருந்தது. குண்டுவெடிப்பில் சிதறியது, சிதைந்தது போக மீதம் இருந்தது. வருந்தினேன். "அன்றைக்கு நீங்கள் பிழைத்துக்கொள்வீர்கள் என்று ஆறுதல் சொன்னபோது, நானே அதை நம்பவில்லை".

"நீங்கள் சொன்னதைபோல பிழைத்துக் கொண்டேன். அந்த ஆறுதலை மறக்க முடியாது சார்" என்று சிரித்தார். இந்த நேரத்தில் என் எதிரே உட்கார்ந்திருந்தவர்கள் எல்லாம் எழுந்தார்கள். எனக்குப் பின்னால் வந்து நின்ற அதிகாரியைப் பார்த்து சல்யூட் வைத்தார்கள். அந்த அதிகாரி என்னைப் பார்த்தார். நானும் அவரைப் பார்த்தேன். ஒரே அதிர்ச்சி. அவர்தான் இந்தப் புதிய குழுவிற்கு தலைமை அதிகாரி என்று அறிமுகப்படுத்தினார்கள். பெயர் ராமலிங்கம். என்ன இது, இன்னும் கூடவா அந்தக் கொலைகார கும்பலின் ஆதிக்கம் இருக்கிறது. திரும்பவும் இப்படி ஒரு அதிகாரியை போட்டிருக்கிறார்களே என அதிர்ந்தேன். காரணம், நான் யாருக்கு இந்தக் கொலை வழக்கில் தொடர்பிருக்கிறது. யாருக்கு சுப்ரமணியசாமியோடு ரகசிய தொடர்பு இருக்கிறது என்று சந்தேகப்பட்டேனோ அந்த வாழப்பாடி ராமமூர்த்தியின் சம்பந்திதான் இந்த அதிகாரி.

என்னைப் பார்த்து "ஆர் யூ கம்பர்ட்டபிள்" என்றார். "புரியலையே" என்றேன். "இல்ல, எல்லாம் வசதியாக இருக்கிறதா என்று கேட்டேன்" என்றார். அதுதான் எனக்குப் புரியவில்லை என்றேன். அவர் முகம் மாறியது. "இல்லைங்க. வந்திருக்கிறீர்கள். உட்கார நாற்காலி மற்ற விஷயங்கள் எல்லாம் சரியா என்று கேட்டேன்" என்றார் மீண்டும். "அதைத்தான் சார் புரியவில்லை என்கிறேன். நீங்கள் விசாரணைக்கு அழைத்திருக்கிறீர்கள், வந்திருக்கிறேன். இங்கு வைத்துக் கேட்டாலும் சரி, வேறு எங்கு வைத்துக் கேட்டாலும் சரி. என்ன பதிலோ அதை சொல்லப்போகிறேன். நான் கிராமத்தான். பட்டு மெத்தையில் படுத்துக்கொண்டு உறக்கம் வராமல் இருப்பவர்களையும் பார்த்திருக்கிறேன். நல்ல வெயிலில் களைப்பாக உறங்கியவர்களையும் பார்த்திருக்கிறேன். வசதி சரியாக இருக்கிறதா என்றால் எப்படி. எங்கு வைத்துக்கேட்டாலும் என் பதில் ஒன்றுதான்" என்றேன் சிரித்தபடி.

உடனே அதிகாரி “சார் நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ, என்ன சந்தேகமோ அதையெல்லாம் தாராளமாக கூறலாம்” என்றார். உடனே நான் “அப்படியா. அது எப்படி சார். எனக்கு உங்கள் சம்பந்தி வாழப்பாடி ராமமூர்த்தி மீதே சந்தேகம் இருக்கிறது. அதை உங்களிடமே எப்படி கூறுவது. சங்கடமாக இருக்காதா. இது சரிவராதே” என்றேன்.

நான் முரண்டுபிடிப்பதைப் பார்த்து “அப்படியானால் சரி. நான் விசாரணை முடியும்வரை இந்த இடத்திற்கு வரவேமாட்டேன். என் அறையில் இருந்துகொள்கிறேன். எந்த தடையும் வேண்டாம்” என்று கிளம்பிப் போய்விட்டார்.

அதன் பிறகு மற்ற அதிகாரிகள், “சரி சாப்பிட என்ன வேண்டும். இங்கு நாங்கள்தான் உணவை வாங்கிவந்து தருவோம். வெளியில் போகவேண்டாம்” என்றார்கள். “வெறும் தயிர் சாதம் மட்டுமே போதும்” என்றேன்.

“இல்லை சார் நீங்கள் எதுவேண்டுமானாலும் கேளுங்கள். எந்த ஓட்டலில் இருந்து என்ன வேண்டுமானாலும் கேளுங்கள். வாங்கித் தருகிறோம்” என்றார். நான் சிரித்தபடியே “அதெல்லாம் ஒன்றும் வேண்டாம் சார். அரசாங்கப் பணம் எனக்கெதற்கு. வெளியே போகக்கூடாது என்பதால்தான் அந்த தயிர் சாதத்திற்கும் ஒப்புக்கொண்டேன்” என்று மறுத்துவிட்டேன்.

அன்றைய நாள் விசாரணை தொடங்கியது. சுற்றி மூன்று அதிகாரிகள். கையில் ஏற்கெனவே எழுதப்பட்டிருந்த கேள்விகளை வைத்துக்கொண்டு ஒருவர் மாறி ஒருவர் கேட்டார்கள். அப்படி ஒரு முக்கிய கேள்விகளும் இல்லை. மே 19-ம் தேதி சுப்ரமணியசாமியோடு பிரச்சாரம் போனதை பற்றி சின்ன சின்னதாய் கேட்டார்கள். அன்று அவர் என்ன மாதிரி சட்டை, என்ன கலர், நீங்கள் போட்டிருந்த சட்டை எப்படி, வழியில் என்ன சாப்பிட்டீர்கள் என்றுதான் நீடித்தது. எல்லாமும் முடிந்து மாலை ஆறு மணிக்கு என்னை அழைத்துச் சென்ற அதிகாரியே மீண்டும் கொண்டு வந்து லாட்ஜில் இறக்கிவிட்டார்.

அடுத்த நாள் காலை ஒன்பது மணிக்கு, அதே அதிகாரி வந்து அழைத்துச் சென்றார். இந்த இரண்டாவது நாளில்தான் கரடுமுரடாகிப் போனது. அன்று ராஜீவ்காந்தி இறந்தது பற்றி டெல்லியில் இருந்த சுப்ரமணியசாமி சொன்ன விவகாரம் பற்றி ஓடியது.

அப்போது ராஜீவ் இறந்த செய்தியை, உடனே நான் தி.மு.க.வில் இருந்த அன்பில் பொய்யாமொழியிடம் சொன்னேன் என்பது பற்றி கூறினேன். உடனே அந்த ஆந்திர மாநிலத்து அதிகாரி ராஜு, ஒரு சாதாரண லோக்கல் கைதியை விசாரிக்கும் தொணியில் "ஓ அவர்தான் இறந்துவிட்டாரே. செத்துப் போனவர் வந்து இப்போது சாட்சி சொல்லவா போகிறார்! அதான் அவர் பெயரைச் சொல்கிறீரோ?" என்று குற்றவாளியை மிரட்டுவது போன்று கேட்டார். எனக்கு சுளீர் என்று கோபம். பற்றிக்கொண்டு வந்தது.

"சார், ஒழுங்கு மரியாதையாக பேசுங்கள். இங்கு நான் குற்றவாளி இல்லை. நானாக முன்வந்து பிரமாண வாக்குமூலம் கொடுத்தவன். அந்த ஜெயின் கமிஷன் சொன்னதின் பேரில்தான் இந்த விசாரணை. மனதில் வைத்துக் கொள்ளுங்கள். ஏதோ லோக்கல் கைதியிடம் மிரட்டுவது போல் பேசும் வேலை என்னிடம் வேண்டாம். ஒழுங்காக கேட்டால் பதில் தருகிறேன். இப்படியெல்லாம் அநாகரிகமாக நடந்து கொண்டால் பதில் இல்லை. உங்களால் என்ன செய்யமுடியுமோ அதை செய்துகொள்ளுங்கள்" என்று எழுந்தேன். உடனே மற்றொரு அதிகாரியும், எழுந்தபடியே மிரட்டும் தொனியில் சத்தம் போட்டார்.

"இதோ பாருங்கள். நீங்கள் சி.பி.ஐ.யாக இருந்தாலும் சரி, அதற்கு மேலானவர்களாக இருந்தாலும் சரி. நான் கவலைப்பட மாட்டேன். ஒழுங்காக நடத்தினால் உங்களுக்கு நல்லது" என்று பதிலுக்கு சத்தம் போட்டேன்.

இந்த களேபரத்தில் உள்ளே இருந்த விசாரணைக் குழுவின் அதிகாரி ராமலிங்கம் ஓடிவந்து "என்ன, என்ன?" என்று பதறினார்.

அவரிடம் நடந்ததைச் சொல்லி "உங்கள் ஆட்களை ஒழுங்காக நடந்துகொள்ளச் சொல்லுங்கள். கொச்சைப்படுத்தும் விதமாக, 'அன்பில் பொய்யாமொழிதான் செத்துட்டாரே. அதான் அவர்மீது சொல்கிறீர்களா' என்று லோக்கல் ஆள் மாதிரி பேசுகிறாரே. என்ன சார் விசாரிக்கிறீர்கள்? அன்பில் பொய்யாமொழி இறந்துவிட்டார் என்றால் அடுத்து ஒரு ஆள் மலர்மன்னன் இருக்கிறாரே. அவரிடம் கேட்டுக்கொள்ளலாமே. நான் ஏதோ இப்பதான் இதை சொல்வதைப் போல் குறுக்குக் கேள்வியை கேட்கிறாரே. இதே விஷயத்தை, இத்தனை வருஷமும் தெருத் தெருவாக, தமிழகம் முழுவதும் மேடை போட்டு பகிரங்கமாக பேசியிருக்கிறேன். உங்கள் சி.பி.ஐ. டீம் எங்கு போனது. இப்படி ஒருவன் பல சந்தேகங்களை

முன்வைக்கிறானே என்று ஒரு முறையாவது என்னை அழைத்து விசாரித்தீர்களா? இல்லை நான் பகிரங்கமாக குற்றம் சாட்டிப் பேசிய சுப்ரமணியசாமியையதான் அழைத்து விசாரித்தீர்களா? இவருக்கு இன்றைக்குத்தான் சந்தேகம் வந்ததா? முன்னாடியே வரவில்லையா?. கொலைச் சதியை பற்றி தகவல் என்னிடம் இருக்கிறது என்று தெருத்தெருவா பேசியபோது உங்கள் சி.பி.ஐ.க்கு சந்தேகம் வரவில்லையே. அது ஏன்?" என்று கோபம், உச்சம் தலையேற பேசினேன்.

இதற்கு என்ன பதிலைச் சொல்ல முடியும்? என்னைத்தான் சமாதானப்படுத்தினார்கள். நான் "நாகரிகம் தெரியாத அந்த ராஜு என்பவர் இருந்தால் ஒத்துழைக்க மாட்டேன். இதுதான் முடிவு. உங்களால் என்ன செய்ய முடியுமோ அதை செய்துகொள்ளுங்கள்" என்றேன் உறுதியாக. அந்த ராஜு மீண்டும் சத்தம் போட்டார். நானும் சத்தம் போட்டேன். ஒருவழியாக தலைமை அதிகாரி சமாதானப்படுத்தி அந்த ராஜு-வை அங்கிருந்து வெளியேற்றினார். மற்றொருவர் வந்து உட்கார, மீண்டும் விசாரணை தொடங்கியது.

என் முரட்டு குணத்தை அவர்கள் புரிந்து கொண்டார்கள். பிறகு ஒவ்வொரு நாளும் அந்த விசாரணை தொடர்ந்தது. சுப்ரமணியசாமி மீதான அனைத்து சந்தேகங்களையும் விளக்கமாக கூறினேன். கூடவே சாமியோடு இருந்த இலங்கை மர்மப்பெண் பிரியதர்ஷினி பற்றி பத்திரிகையில் வந்திருந்த படங்களை எல்லாம் கொடுத்து விவரித்தேன். எட்டு நாள் விசாரணை இப்படித்தான் முடிந்தது.

அவர்களுடைய விசாரணை முறையே வேறுமாதிரி இருந்தது. சின்ன சின்னதாய் கேள்விகளைக் கேட்டு, கடைசியில் இறுக்குகிறார்கள். குறிக்கப்படாத கேள்விகளையும், குறுக்குக் கேள்விகளாக கேட்டார்கள். அவர்கள் எப்படி மடக்கி நெருக்கினாலும் என்னிடம் இருந்தது உண்மை மட்டுமே என்பதால், எங்குமே தடையில்லை.

கடைசி நாளில் ஒன்றைச் சொன்னார்கள். "எதுவேண்டுமானாலும் வாங்கித் தருகிறோம் என்று வற்புறுத்திய பிறகும் நீங்கள் கடைசி வரை சாதாரண தயிர் சாதத்தோடவே நின்றுகொண்டீர்கள். இதுநாள் வரையிலும் எத்தனையோ பேரை கொண்டுவந்து விசாரித்தோம். நீங்கள் வித்தியாசமாக இருந்தீர்கள்" என்றதோடு அனுப்பி வைத்தார்கள். எப்படி அழைத்துச் சென்றார்களோ அதே போன்று கொண்டுவந்து விட்டார்கள்.

# உயிரைத் திருப்பித் தருமா உச்ச நீதிமன்றம்?

*இதற்கடுத்து அந்த அதிசயம் நடந்தது. ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகளான அந்த மூன்றுபேருக்கும் தூக்கு தண்டனை நிறுத்திவைக்கப்பட்டது. இந்திய வரலாற்றிலேயே இதுதான் முதல்முறை*



என்னை சி.பி.ஐ. அலுவலகம் அழைத்துச் சென்று விசாரணை நடத்தி முடித்த நான்காவது நாள். நெஞ்சை உலுக்கும் அந்தச் செய்தி வந்தது. பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய மூன்று பேருக்கும் தூக்கு தண்டனை உறுதியாகிவிட்டது. ஏற்கெனவே உச்சநீதிமன்றம் தீர்ப்பைக் கொடுத்துவிட்டது. இவர்கள் ஜனாதிபதிக்கு கருணைமனு போட்டிருந்தார்கள். அந்த மனுவைத்தான் ஜனாதிபதி ஆர்.கே. நாராயணன் தள்ளுபடி செய்துவிட்டார்.

அதனையடுத்து மரண தண்டனை தேதியும் குறிக்கப்பட்டது. இதுதான் அவர்களை தூக்கிலிடப்போகும் மேடை. சரி செய்யபட்டிருக்கிறது என்று புகைப்படங்களோடு செய்தி எல்லாம்கூட வந்தது. கடைசியாக அந்த மூன்று பேருக்கும் டாக்டர்கள் மருத்துவப் பரிசோதனை நடத்திய செய்தியும் வெளியானது. இதற்குமேல் அதை யாரும் தடுக்க முடியாது. மரண தண்டனை கைதிகளுக்கு சட்டப்படி என்ன சம்பிரதாயங்கள் நடக்கவேண்டுமோ அதுவெல்லாம் முடிந்து விட்டது. இனியொன்றும் இல்லை.

உண்மையை சொல்லவேண்டுமானால், எதற்கும் கலங்காத நான் அப்போது உடைந்துபோனேன். சுப்ரமணியசாமி, சந்திராசாமி மீது நினைவு ஓடியது. என் மனம் அறிய ஒரு சதித்திட்டம் நடந்தது. அதை அம்பலப்படுத்தி முடிந்தவரை போராடினேன். இன்னும் நான் சுட்டிக்காட்டிய சதிகாரர்கள் மீது சந்தேகங்கள் விலகாமலேயே இருக்கிறது. அப்படியிருக்கும்போது அப்பாவிகள் தூக்கில். கொலையாளிகள் வெளியே என்று உடைந்து போயிருந்தேன். அப்போதுதான் விஜய் டி.வி.யிலிருந்து பிரசன்ன வெங்கடேசன் என்பவர் என்னைத் தொடர்பு கொண்டார். “ராஜீவ் கொலையாளிகளுக்கு மரண தண்டனை நிறைவேற்றப் போகிறார்கள். அதுபற்றிய ஒரு விவாதம், நேரடி ஒளிபரப்பிற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். நீங்கள் கலந்துகொள்வது சரியாக இருக்கும்” என்று அழைத்தார். இதற்கு மேல் என்ன செய்ய முடியும் என்று நினைத்தபடியே “சரி வருகிறேனே” என்றேன்.

அடுத்த நாள் காலை, திருவல்லிக்கேணியில் தங்கியிருந்த எக்ஸலன்ட் லாட்ஜ்க்கு வந்து அழைத்துச் சென்றார். இப்போது ஒவ்வொரு டி.வி. க்கும் இருப்பதை போன்ற தனித் தனியான நேரடி ஒளிபரப்பு வசதி அன்று கிடையாது. பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதி அருகே இருக்கும், சென்னை தூர்தர்ஷனில்தான் அப்படி நடத்த முடியும். அங்கிருந்துதான் நேரடி ஒளிபரப்பு. எனக்கு எதிராகப் பேச காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கௌரிஷங்கரும் எனது நண்பர் சக்திவேல் என்ற வழக்கறிஞரும் வந்திருந்தார்கள்.

என்னை அழைத்ததைப் போன்றே கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் டி.கே. ரங்கராஜனையும் ம.தி.மு.க. சார்பாக வைகோவையும் அழைத்திருக்கிறார்கள். கடைசி நேரத்தில் வேறு ஏதோ வேலை என்று டி.கே.ரங்கராஜன் வரமுடியவில்லை என கூறியிருக்கிறார். வைகோ அவர்களும் முக்கிய வேலை காரணமாக கே.எஸ். ராதாகிருஷ்ணனை

அனுப்பி வைப்பதாக தெரிவித்திருக்கிறார். கடைசியில் அவராலும் வரமுடியாத நிலை. பிறகுதான் எங்களை வைத்து இந்த ஏற்பாடு என்பதை அறிந்து கொண்டேன். எல்லாம் முடிந்து, நேரலை தொடங்கியது. நேர்காணலை எடுத்தவர் சுதாங்கன்.

பேட்டி தொடங்கியதுமே, என்னைக் கேட்டார் சுதாங்கன். “மனித நாகரீகம் வளர்ந்துவிட்ட இந்தக் காலத்தில் தூக்குதண்டனை என்பதை ஏற்க முடியாது. வளர்ந்துவிட்ட பலநாடுகளில் இன்றைக்கு மரண தண்டனையை ரத்து செய்திருக்கிறார்கள். உலகின் பெரிய ஜனநாயக நாடு, வளர்கின்ற நாடு என்கிற இந்தியாவும் இப்படியான தண்டனையை நீக்க வேண்டும்” என்று விளக்கி என் கருத்தைச் சொன்னேன்.

உடனே காங்கிரஸ் கட்சி சார்பாக வந்திருந்த கௌரிஷங்கர், அதற்கு எதிரான கருத்தை முன்வைத்தார். “நாட்டின் மிகப்பெரிய தலைவர். எங்கள் கட்சியின் தலைவரை கொன்றவருக்கு சட்டப்படி என்ன தண்டனையோ அதை செய்யக்கூடாது என்கிறீர்களா” என்ற போக்கில் எதிர் வாதம் வைத்தார்.

பிறகு நான் பேசினேன். “தனிநபர் செய்த கொலைக்கு, அரசாங்கமும் மரணதண்டனை கொடுப்பதில் என்ன நியாயம்? அரசாங்கமும் தண்டனை என்ற பெயரில் கொலைதானே செய்கிறது. அப்படி என்றால் எது சரி. குற்றவாளிகளை சிறைச்சாலையில் வைத்து சீர்திருத்த வேண்டியது சரியே ஒழிய, தண்டனை என்று கொன்று போடுவது சரியல்ல. சரி நான் இந்த விஷயத்திற்கு எல்லாம் வரவில்லை. அவர்கள் குற்றவாளிகளாகவே இருக்கட்டும். விடுங்கள். நான் கேட்கின்ற கேள்விக்கு பதிலை தாருங்கள்.

இந்த ராஜீவ்காந்தி கொலை வழக்கில், மத்திய அரசுதான் ஒரு நீதிபதியை வைத்து கமிஷனைப் போடுகிறது. அப்படிப் போடப்பட்ட ஜெயின் கமிஷன்தான் நூற்றுக்கணக்கான நபர்களிடம் விசாரணை நடத்தி, கடைசியாக ஒரு அறிக்கையை மத்திய அரசுக்குக் கொடுத்தது. அந்த அறிக்கையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? நடத்தப்பட்ட விசாரணையில் உண்மைக் குற்றவாளிகளை இன்னும் கண்டுபிடிக்கவில்லை. உண்மைக் குற்றவாளிகளை கண்டறியப்பட வேண்டுமானால் கீழ்க்கண்டவர்ளை எல்லாம் விசாரித்தாக வேண்டும் என்று ஒரு பட்டியலை கொடுத்தது. அதன் பேரில்தான் இப்போது

பல்முனைநோக்கு புலன்விசாரணைக் குழு என ஒன்றை போட்டிருக்கிறார்கள்.

ஐந்து நாட்களுக்கு முன்புதான், என்னிடம் தொடர்ந்து எட்டு நாட்கள் விசாரணை நடத்தி இருக்கிறார்கள். இன்னும் சந்திராசாமி, சுப்ரமணியசாமி உட்பட ஒரு பதினேழு பேரை விசாரித்தாக வேண்டும். சி.பி.ஐ.-யின் பல்முனைநோக்கு புலனாய்வு விசாரணைக் குழுதான் அவர்களையும் விசாரணை நடத்தியாக வேண்டும். அப்படி விசாரித்து மத்திய அரசுக்கு அறிக்கைகளை தரவேண்டும். இப்படி ஒரு பக்கம் விசாரணையை நடத்திக்கொண்டே மற்றொரு பக்கம் நீங்கள் தண்டனையை நிறைவேற்றுவீர்களா? உலக நாடுகள் இந்தியாவின் இந்த சட்டதிட்டங்களைப் பார்த்து கைகொட்டி சிரிக்குமே, அதற்கு என்ன பதில்?. சரி அதுவும் போகட்டும். நாளைக்கோ அல்லது சில மாதங்கள் கழித்தோ என்னை விசாரித்ததைப் போன்று மற்றவர்களையும் விசாரிப்பார்கள். அப்படி விசாரிக்கும்போது ஏதோ ஒரு சாட்சியத்திற்காக அந்த மூன்று பேரும் தேவைப்படுவார்கள். உண்மைக் குற்றவாளிகள் சிக்கியபிறகு அதை உறுதிப்படுத்துவதற்கு இந்த மூன்று பேரிடமும் சாட்சியம் வாங்க வேண்டியிருக்கும்.

இப்போது இவர்களை தூக்கில் போட்டுவிட்டால், நாளைக்கு அவர்களின் உயிரை யார் திருப்பித் தருவார்கள்? ஜனாதிபதி தருவாரா? தூக்கில் போடச்சொன்ன உச்சநீதிமன்றம் தருமா? பிரதமர் தருவாரா? இந்தக் கேள்விக்கு யார் என்ன பதிலை சொல்லப்போகிறீர்கள். அந்தப் படுகொலை விசாரணை முழுதுமாக இன்னும் முடியவில்லை. அதற்கு முன்பாகவே அவர்களை தூக்கில் போடுகிறீர்கள் என்றால், பெரிய ஜனநாயக நாடு என்கிற இந்தியாவின் சட்டதிட்டத்தைப் பார்த்து, விசாரணை முறையை பார்த்து உலகமே கைகொட்டி சிரிக்கும். இன்றில்லாவிட்டாலும் வரும் காலத்தில் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும் என்று என்னையும் அறியாமல் உணர்ச்சிவசப்பட்டு பொங்கினேன். எதையும் நான் திட்டமிட்டுப் பேசவில்லை. பட்டென்று, நியாயமான ஆதங்கத்தில் வெடித்த கேள்விகள் அது! அந்த நேரடி ஒளிபரப்பு தளத்திலிருந்தவர்களின் முகமெல்லாம் மாறியது. அதிர்ச்சியில் நிற்கிறார்கள். பேட்டியை எடுத்த சுதாங்கன் மேற்கொண்டு எந்த கேள்வியையும் கேட்க முடியாமல் அப்படியே ஸ்தம்பித்து வெறித்தபடியே உட்கார்ந்திருக்கிறார். எதிர்கருத்தை முன்வைத்த கௌரிஷங்கரும் அப்படியே உட்கார்ந்துவிட்டார்.

அறிவிப்பு ஏதுமின்றியே நேரடி ஒளிபரப்பு நிறுத்தப்பட்டது. தளத்தில் இருந்தவர்கள் எல்லாம் ஓடிவந்து கட்டிப்பிடிக்கிறார்கள். பேட்டியில் கலந்துகொண்டவர்கள் உட்பட அனைவருமே சிலாகித்துப் பேசுகிறார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அப்போது அந்த தளத்தில் இருந்த ஒரு ஆங்கிலப் பத்திரிகையின் நிருபரான வெங்கடேசன் என்பவர் ஓடிவந்து கையைப் பிடித்து, "நீங்க என்ன கேள்வியை கேட்டீர்கள் தெரியுமா? எப்படிப்பட்ட கேள்வி தெரியுங்களா? சட்டத்தில் இதற்கு என்ன வேல்யூ தெரியுங்களா?" என்றெல்லாம் கூறினார். சுதாங்கனோ, அதற்கு மேற்கொண்டு என்ன கேள்வியை கேட்பதென்று தெரியவில்லை. விசாரணை நடக்கும்போதே தூக்கில் போட்டுவிட முடியுமா? என்ற கேள்விக்கு என்ன பதிலைச் சொல்ல முடியும்?. இது சாதாரண விஷயமா என்ன என்றவர்கள், அங்கேயே அப்போதே பரபரப்பானார்கள். இந்த நேரலையில் சொன்னதை அப்படியே ஜனாதிபதிக்கு மனுவாக அனுப்பவேண்டும் என்று பறந்தார்கள். பிறகு நான் பேட்டியில் கேட்ட கேள்விகளை எல்லாம் சொல்லச் சொல்ல, அந்த நிருபர் அப்படியே ஆங்கிலத்தில் எழுதினார். ஒருமுறைக்கு பலமுறை படித்துப் பார்க்கப்பட்டது. பிறகு அவசரமாக ஓடி, அங்கிருந்த பேக்ஸ் மூலமாகவே ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதன் பிறகுதான் சுதாங்கன் உட்பட படப்பிடிப்பு தளத்தில் இருந்த அனைவரும் நிதானத்திற்கு வந்தார்கள்.

இதற்கடுத்து அந்த அதிசயம் நடந்தது. ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகளான அந்த மூன்றுபேருக்கும் தண்டனை நிறுத்திவைக்கப்பட்டது. இந்திய வரலாற்றிலேயே இதுதான் முதல்முறை. காரணம் எதையுமே அரசு சொல்லவில்லை. இப்படி ஒரு புகார் மனு வந்தது. அதன் பேரில் நிறுத்திவைக்கப்பட்டது என்று சொல்வதில் நாகரிகம் இருக்காது என்று விட்டிருக்கலாம். எப்படியோ அப்போதைக்கு என் மனம் சற்று ஆறுதல் அடைந்தது.

# தகிக்கும் பொய்கள்,
# தவிக்கும் உண்மைகள்!



இந்த இடத்தில் ஒன்றைக் கூறவேண்டும். நான் இந்த ராஜீவ் கொலைக் குற்றவாளிகள் என்று குற்றம் சாட்டப்பட்ட பேரறிவாளன், நளினி, முருகன், சாந்தன் உட்பட யாரையுமே நேரில் பார்த்ததில்லை. கைது செய்தபோது செய்தித்தாள்களில் பார்த்ததோடு சரி. 20 ஆண்டுகள் கழித்து ஒரு சந்தர்ப்பம். சரியாக நினைவில்லை.

தமிழ்ஒளி இதழின் ஜெயதேவன், ஆண்டிமடம் தம்பி ரவி உள்ளிட்ட இன்னும் சிலபேர் உடன் இருந்தார்கள். வேலூர் சிறைச்சாலையில் இருக்கும் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரை நான் பார்க்கச் சென்றேன். ஒரு அறையில் அற்புதம் அம்மாள் அவரது மகள் உள்ளிட்டவர்கள் குடும்பத்தோடு உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களோடு ஒரு இளைஞர் பேசிக்கொண்டிருந்தார். அவர்தான் பேரறிவாளன் என்றார்கள். நான்தான் திருச்சி வேலுசாமி என்றதும் அவர் அப்படியே என்னைக் கட்டிப்பிடித்து மார்பில் சாய்த்துத் தழுவினார். அவர் முகத்தை உற்றுப்பார்க்கிறேன். இடி என் தலையில் விழுந்து உள்ளங்கால்வரை தாக்கிய அதிர்வு. அச்சு அசப்பில் என் மகனைப் போலவே இருந்தார். அதே முகம். அதே நிறம் உயரம் என்று எல்லாமும் என் மகனைப் போலவே இருந்தார். எனக்கு வார்த்தைகள் வரவில்லை. கண்கள் கலங்கியது. அதற்கு முன்பாகவே பேரறிவாளனின் கண்களிலிருந்து கண்ணீர்.. பேச வார்த்தைகளின்றி கட்டிப்பிடித்தபடியே.. உடல்மட்டும் குலுங்கியது.

“அண்ணே உங்களை யார் என்றே தெரியாது. முன்னபின்ன உங்களை பார்த்ததுகூட இல்லை. எந்தவிதத்திலும் தொடர்பில்லை. ஆனால் எங்களுக்காகவேண்டி நீங்கள் எவ்வளவோ செய்திருக்கிறீர்கள். உங்களால்தான் அன்று தூக்கிலிருந்து தப்பினோம். இல்லையென்றால் அப்போதே செத்துப்போயிருப்போம். அதற்கு நாங்கள் என்ன கைமாறு செய்வோம் என்று தெரியலண்ணே. ஒண்று மட்டும் சொல்லனும்ணே. அடுத்த ஜென்மத்தில் நான் உங்களுக்குப் பிள்ளையாக பிறக்கனும்ணே. அது ஒரு ஆசை எனக்கிருக்குண்ணே என்று அதற்கு மேலும் பேசமுடியாமல் தடுமாறினார். எனக்கும் வார்த்தைகள் வரவில்லை.

முருகன் வந்து நின்றார். குள்ளமான, மெலிந்த தேகம். முகத்தில் தாடி. “நளினி முருகனா” என்று கேட்டேன். திருச்சி வேலுசாமி என்று அறிந்துகொண்டதும், அண்ணே நீங்கதான் வேலுசாமியா என்றபடி பட்டென்று. கட்டிப்பிடித்துக் கொண்டார். கண்களில் கண்ணீர். நிறைய பேசினார்.

சாந்தன் என்கிற சின்ன சாந்தன். அப்பாவியான முகம். பேரறிவாளன் முருகன் வயதுதான் என்றாலும் அவரது தலைமுடி நரைத்துப்போய்விட்டது. அவரும் கட்டிப்பிடித்து கொண்டார். எங்களை யாரென்றே தெரியாது. ஆனால் இப்போது உயிரோடு இருப்பதற்கு நீங்கள் காரணமாக இருந்திருக்கிறீர்கள். உங்களை அப்பாவாகத்தான் பார்க்க முடிகிறது என்றுகூறி அழுதார். 20 ஆண்டுகள் ஓடிவிட்டது. அப்பா அம்மா உள்ளிட்ட எந்த உறவுகளும் இதுவரை வந்து அவரை பார்த்ததில்லை. பெற்றோர் வயதானவர்கள். வீணாக இங்கு வந்து சிரமப்பட வேண்டாம் என்று கூறிவிட்டிருக்கிறார். எந்த உறவுகளுமே இல்லாமல், இத்தனை ஆண்டுகளாய்... நினைத்தபோதே மனம் நொறுங்கியது.

இதற்குமேல் அவர்கள் பேசியதையெல்லாம் கூறுவது தற்பெருமை அல்லது அநாகரிகம் என்பதால் மனம் அனுமதித்ததை மட்டுமே கூறினேன்.


கொஞ்ச நேரத்திற்குப் பிறகு சகஜநிலைக்கு வந்து எல்லோரும் பேசிக்கொண்டிருந்தோம். பேரறிவாளன் குடும்பத்தாரோடு பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்து, “என்னப்பா குடும்பமே வந்திருக்கிறதே” என்றேன். பட்டென்று என்பக்கம் திரும்பியவர், “என்ன சொல்றதண்ணே. நினைச்சா வேதனையாதான் இருக்கு. நாங்க சிறைபட்டு பத்தொன்பது ஆண்டுகள் முடிந்து இன்று இருபதாவது ஆண்டு தொடங்குகிறது. அதான் இன்றைக்கு எல்லாரும் வந்திருக்கிறார்கள். செத்துப்போயிருந்தா ஒரு ஆறு மாசமோ ஒரு வருஷமோ அழுது தீர்த்து மறந்து போயிருப்பாங்க. இப்ப பாருங்க இந்த வயசான காலத்தில் எங்களுக்காக இன்னும் அலைந்து கொண்டேயிருக்கிறார்கள். எங்களின் நிலை யாருக்கும் வரக்கூடாது. எங்கள் மூன்று பேருக்கும் வாழவும் முடியாத, சாகவும் முடியாத ஒரு வாழ்வு. உத்தரவு இன்று வருமோ நாளை வருமோ என்று ஒவ்வொரு நாளும் ஓடுகிறது. பொழுது விடிந்தால் இன்று தூக்கிலிடச்சொல்லி உத்தரவு வருமே என்ற நினைப்போடவே அந்த பொழுதும் மறையுது....”

அவர் சொல்லச் சொல்ல எனக்கு என்னவோபோல் இருந்தது. மனதைப்போட்டு யாரோ அழுத்தி பிசைவதான உணர்வு. மேற்கொண்டு எதுவுமே பேசிக்கொள்ளாமல் இருந்துவிட்டு வெளியே வந்தேன். உள்மனம் அழுதபடியே இருந்தது. குற்றவாளிகள் வெளியே சுதந்திரமாக, உல்லாச வாழ்க்கையோடு சுற்றித்திரிய, ஒன்றுமறியா இந்த அப்பாவிகள்

ஒவ்வொரு நாளும் செத்துப்பிழைக்கும் மரணதண்டனை வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே, இதற்கு யார் பதிலைச் சொல்வது. பொய்கள் தகிக்கின்றன. உண்மை தவிக்கிறது. ..

# முன்னாள் மத்திய அமைச்சர் பிரபு...

*சோனியா அவர்கள் என்ன காரணத்திற்காக என்னைத் தேடினார். சந்திக்க விரும்பினார் என்பது இன்றுவரை தெரியவில்லை*



வேலூர் சம்பவம் முடிந்து சிலநாள் கழிந்திருக்கும். திருச்சியில் இருந்தேன். ஒருநாள் காலைப்பொழுது தொலைபேசி வந்தது. மறுமுனையில் திருச்சி குரு ஓட்டலின் குருநாதன். அவரும் காங்கிரஸ்காரர்தான். வயதில் பெரியவர். “என்னண்ணே திடீரென்று அழைப்பு” என்றேன். வீட்டில்தானே இருக்கின்றீர்கள். அப்படியே இருங்கள். நானே வருகிறேன். முக்கியமான விஷயம் என தொடர்பைத் துண்டித்தார்.

சொன்னபடி அடுத்த சில நிமிடங்களில் பரபரப்புடனேயே வந்தார். அவர் வருவதைப் பார்த்து, "என்னண்ணே'. அப்படி என்ன முக்கிய விஷயம்" என சிரித்தபடி கேட்டேன்.

"ஆமாம் தம்பி. ரொம்ப முக்கியம்தான். நம்ம கட்சியோட முன்னாள் மத்திய அமைச்சர் பிரபு உங்களை அவசியம் சந்திக்கவேண்டும் என்கிறார். பார்த்தாக வேண்டும் எப்படியாவது அழைத்துவர பாருங்கள் என்று வற்புறுத்தினார். நான் எனக்குத் தெரிந்த தம்பிதான். அழைத்துவருகிறேன் என கூறிவிட்டேன். ஏதோ முக்கிய விஷயம் போல் இருக்கு. என்னவென்று தெரியவில்லை. நான் உங்களை அழைத்து வருவதாக வாக்குக் கொடுத்து விட்டேன். எதையாவது சொல்லி மறுத்துடாதீங்க தம்பி. கார் எடுத்துகிட்டுதான் வந்திருக்கேன். அப்படியே சென்னைக்குப் போகலாம்" என்றார்.

இவர் இப்படி தேவையில்லாமல் எதையும் செய்யக்கூடியவர் இல்லை. ஏதோ முக்கியம் போல், சரி வருகிறேன் என்று சம்மதித்தேன். அப்போதே இருவருமாக சென்னைக்குப் பயணமானோம். சேத்துப்பட்டில் அவருக்குச் சொந்தமான வீடு இருக்கிறது. அங்கு சொஞ்ச நேரம் இருந்துவிட்டு பாலாஜி நகரில் உள்ள பிரபு வீட்டிற்கு அழைத்துச்சென்றார். எங்கள் கார் வாசலில் நின்றதும், அங்கு தயாராய் நின்றிருந்த கலிவரதன், தாமோதரன் ஆகிய இரண்டு பேர் "அண்ணே, வாங்க வாங்க. உங்களுக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கோம்" என்று படபடத்தார்கள். அந்த இரண்டு பேரும் எனக்கு ஏற்கெனவே அறிமுகமானவர்கள். பிரபு மட்டும்தான் இதில் அறிமுகமில்லாதவர்.

அதனால், அப்படி என்ன முக்கிய விஷயம் என நினைத்தபடியே உள்ளே சென்றேன். என்னைப் பார்த்ததும் 'வாங்க வாங்க' என்று அழைத்து அருகில் உட்காரச் சொன்னார். சற்று நேரம் பொதுவான நலன் விசாரிப்புகள் முடிந்தவுடன் மற்றவர்களை வெளியே இருக்கும்படி கூறினார்.

அவர்கள் சென்றதும், "ஒரு தப்பு நடந்துபோச்சு. அதை சொல்லத்தான் உங்களை அழைத்துவரச் சொன்னேன். என்னை மன்னிச்சுடுங்க" என்றார். "என்ன தப்பு நடந்தது" என்று குழப்பத்தோடு கேட்டேன். "இல்லைங்க, போன வாரம் சோனியா மேடம் என்னை அவசரமாக அழைத்தார். முக்கிய விஷயம் என்றார்கள். வேலுசாமி உங்கள் ஊர்க்காரர்தானே. அவரை சந்திக்க வேண்டும். உங்களுக்குத்

தெரியுமா?" என்று கேட்டார். அவர் அப்படி திடீர் என்று கேட்டதும் நான் தயங்கினேன். "என்ன பிரபு அவரை உங்களுக்குத் தெரியுமா தெரியாதா சொல்லுங்கள்" என்று கேட்டார். நானும் வேறு வழியின்றி வேலுசாமியை எனக்கு நேரில் தெரியாது. அறிமுகம் இல்லை என்று கூறிவிட்டேன். அதைக் கேட்டுவிட்டு யோசனையோடு என்னைப் பார்த்தார். அதற்கு மேல் அவர் ஒன்றும் பேசவில்லை. சரி போய்வாருங்கள் என கூறிவிட்டார்.

"வெளியே வந்த பிறகுதான் உங்களைப் பற்றி கேட்டேன். நிறைய சொன்னார்கள். நான் தப்பு செய்துட்டேன். தெரியாமல் போனாலும் உங்களை அழைத்து வருகிறேன் என்றாவது அவரிடம் தெரிவித்திருக்க வேண்டும். அதன் பிறகு என்னிடம் ஏதும் கூறவில்லை. உங்களை அழைத்து வாருங்கள் என்ற தகவலும் வரவில்லை. இப்ப என்ன செய்வது?. முக்கியத்துவம் தெரியாமல் நான் இருந்து விட்டேன். சோனியா அவர்கள் மீண்டும் உங்களை அழைத்துவரச் சொன்னால் நீங்கள் என்னோடு வருவீர்களா" என்றார்.

அவர் அப்படி கேட்டதற்குக் காரணம் இருந்தது. நான் காமராஜரின் மாணவர் அமைப்பில் இருந்து அரசியலுக்கு வந்தவன். கடைசிவரை காமராஜரோடவே இருந்துவிட்டவன். முன்னாள் அமைச்சர் பிரபுவோ, பிறகு கட்சிக்கு வந்து இந்திரா காங்கிரஸில் இருந்தவர். ஒருவருக்கு ஒருவர் அறிமுகமே கிடையாது. அந்த தயக்கத்தில்தான் அப்படிக் கேட்டார் என்பதை புரிந்துகொண்டேன். "பரவாயில்லை. அவர்கள் அழைத்தால் நான் உங்களுடன் டெல்லி வருகிறேன். எனக்கொன்றும் தயக்கம் இல்லை" என்றுகூறி விடைபெற்றேன்.

ஆனால், அதன் பிறகு பிரபு அவர்களிடம் இருந்தோ அல்லது டெல்லியில் இருந்து மற்ற நபர்கள் மூலமாகவோ எனக்கு அழைப்பு ஏதும் வரவில்லை. சோனியா அவர்கள் என்ன காரணத்திற்காக என்னைத் தேடினார். சந்திக்க விரும்பினார் என்பது இன்றுவரை தெரியவில்லை. எனக்குத் தெரிந்து ஏற்கெனவே ஒருமுறை நான் சோனியா அவர்களை சந்தித்தேன். அதுபற்றி முன் அத்தியாயத்தில் கூறியிருக்கிறேன். ஒருவேளை அதுபற்றி பேசத்தான் அழைக்க நினைத்தாரோ தெரியவில்லை. நான் அதோடு அந்த சம்பவத்தை மறந்துபோனேன்.

# கம்யூனிஸ்டுகளின் பெருந்தன்மை...

*நீங்களே கூறுங்கள். ‘அடுத்து அவர்தான் பிரதமர் என்ற நிலையில். அவரை நேரில் சந்தித்துப் பேசி நம்பிக்கையான ஆதரவை பெற்றபிறகு அவரைக் கொன்றுவிடவேண்டும் என் முடிவெடுக்க விடுதலைப் புலிகள் என்ன முட்டாள்களா*



2007ம் ஆண்டு தொடக்கம் என்று நினைக்கின்றேன். அப்போது ஈழத்தில் சிங்களவரின் இன அழிப்புப் போர் தொடங்கியிருந்த காலகட்டம். உலகம் முழுவதும் அதுபற்றி பேச்சு பற்றியிருந்தது. எனவே அதுபற்றி ஒரு விவாத நேர்காணலுக்கு வின் டி.வி ஏற்பாடு செய்து என்னை அழைத்தது. அப்போது நான் சென்னையில் தங்கியிருந்தேன். உடனே கலந்துகொள்ளச் சென்றேன். எனக்கு முன்பாக அங்கே இலங்கை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சிவாஜிலிங்கம்

அவர்கள் இருந்தார். “அடடே நீங்கள்தான் வந்திருக்கிறீர்களா. நல்லது” என்று பேசினேன்.

“ஆமாம் அண்ணே” என்று அவரும் அப்போதைய இலங்கையின் இன அழிப்பு குறித்துப் பேசினார். கடைசி நேரத்தில் அவசரமாக வந்தார் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் சி. மகேந்திரன். நேர்காணல் தொடங்கியது. அப்போது எல்லாம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு விடுதலைப் புலிகளின் தனித் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக இருந்தது. அதனால் அவர் எதிர்நிலை எடுத்துப் பேச வந்திருக்கிறார் என புரிந்து கொண்டேன். நேர்காணல் தொடங்கியதும் முதலில் தோழர் மகேந்திரன்தான் பேசினார்.

“இலங்கையில் தமிழர்களின் சமஉரிமை, அரசியல் அங்கீகாரம் ஆகியவற்றிற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எதிராக இல்லை. ஆனால் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். அது அவர்களின் உள்நாட்டுப் பிரச்சனை. அவர்கள் இரண்டு பேரும் மேஜைக்கு முன்பாக உட்கார்ந்து பேச்சுவார்த்தையின் மூலமாகத்தான் அதைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். அதற்கு வெளிநாட்டின் தலையீடு ஏதும் இருக்கக்கூடாது, அது ஏற்கக்கூடியதல்ல என்பதே எங்களின் நிலைப்பாடு. தமிழர்களுக்கான உரிமைகளையும் அங்கீகாரங்களையும் பேச்சுவார்த்தையின் வழியாக பெற்றுக்கொள்வதுதான் சரியே ஒழிய, அதற்காக வேண்டி தனிநாடு கேட்டு ஆயுதப்போராட்டம் நடத்துவதை நாங்கள் ஆதரிக்கவில்லை. விடுதலைப் புலிகளின் போராட்டத்தை ஆதரிப்பதற்கில்லை” என்ற கருத்தை முன்வைத்தார்.

அடுத்து நான் பேசினேன். தோழர் மகேந்திரன் அளவிற்கு நான் உலக நாடுகளின் போராட்டம் பற்றியோ வரலாறு பற்றியோ படித்தவனில்லை. அறிந்தவனில்லை. என்றாலும் நானறிந்த வரையில் ஒரு விஷயத்தைக் கூறியாகவேண்டும். உலகத்தில் எந்தவொரு நாடும் தன் நாட்டு மக்கள்மீதே விமான குண்டுவீச்சு நடத்தியதில்லை. என்ன மாதிரியான உள்நாட்டுப் போராட்டம் என்றாலும் விமான குண்டுவீச்சு நடத்துவதில்லை. அப்படியான குண்டுவீச்சு என்பது எதிரி நாட்டுமீதுதான் நடத்தியிருக்கிறது. காஷ்மீரில்கூட தனிநாடு கேட்கும் மக்கள் போராட்டம் நடந்து வருகிறது. இந்தியா அங்கு போராட்டத்தை ஒடுக்க கலவரத்தை அடக்குகிறோம் என்று ராணுவத்தை அனுப்பியிருக்கிறதே ஒழிய, விமானத்தின் மூலமாக குண்டுவீச்சு நடத்தியதில்லை. ஒரு நாட்டின் ராணுவம் என்பது எதிரிநாட்டின் மீதுதான் போர்தொடுக்க வேண்டும்.

ஆனால் இலங்கை அரசு என்ன செய்கிறது?. சிங்கள ராணுவத்தை அனுப்புகிறது. விமானத்திலிருந்து குண்டுகளை வீசுகிறது. போராளிகள் மட்டும் இறக்கவில்லை. கூடுதலான அப்பாவி தமிழ் மக்களும் இறக்கிறார்கள். நம்நாட்டு மக்கள் இறந்துபோகிறார்களே என்று இலங்கை அரசு இதுவரை கவலைப்பட்டதுண்டா. போகட்டும். குண்டுகளை எங்கே வீசுகிறார்கள். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, வவுனியா என்று எல்லாமும் தமிழர்கள் வாழும் பகுதியில் மட்டுமே. ஆக தமிழர்கள் வாழும் பகுதிகளை எதிரி நாடாக பாவிக்கிறது சிங்கள அரசு. தமிழர்களை எதிரிகளாக நடத்துகிறது. இதற்கு என்ன சொல்வது என்றேன்.

மீண்டும் பேசிய தோழர் மகேந்திரன், "உங்கள் வாதத்தில் ஓரளவு நியாயம் இருக்கிறது என்பதை ஏற்கிறேன். அதற்காக நம் நாட்டின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியை படுகொலை செய்த விடுதலைப் புலிகளை எப்படி ஆதரிக்க முடியும்?. அவர்களின் போராட்டத்தை எப்படி ஆதரிக்க முடியும்?" என்ற கருத்தை முன்வைத்தார்.

அதற்கு பதிலளித்த நான், "ராஜீவ்காந்தியை விடுதலைப் புலிகள்தான் கொன்றார்கள் என்ற முடிவுக்கு எப்படி வருகிறீர்கள் என்று புரியவில்லை. ஒரு விஷயத்தை இங்கே தெளிவுபடுத்தக் கூறுகிறேன். தலைவர் ராஜீவ்காந்தி இறப்பதற்கு ஒண்ணரை மாதங்களுக்கு முன்பு, அதாவது 1991. மே நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு ஒரு சந்திப்பு நடந்தது. புலிகளின் பிரதிநிதிகளாக கவிஞர் காசி ஆனந்தனும் சச்சிதானந்தமும் சென்று ராஜீவ் அவர்களை சந்தித்தார்கள். ஈழப்பிரச்சனை என்ன. சிங்களவர்கள் செய்தது என்ன, தமிழர்களின் உரிமைகளை ஒவ்வொன்றாக பறித்துவந்தபோது அதற்கு எதிராக நடந்த காந்தியவழி போராட்டத்தை எப்படி எல்லாம் ஒடுக்கினார்கள். இன்றைய ஆயுதவழி போராட்டத்திற்கு எப்படி தமிழர்களை தள்ளினார்கள் என்பதை எல்லாம் விளக்கியதோடு, எந்தக் காலத்திலும் இந்தியாவுக்கு எதிராக ஈழத்துத் தமிழர்கள் இருக்கமாட்டார்கள் என்று அதற்கான காரணத்தையும் கூறியிருக்கிறார்கள்.

அதற்கு பதிலளித்த ராஜீவ்காந்தி அவர்கள், 'எனக்கு அந்தப் போராட்டம் பற்றி சரியாக ஏதும் தெரியவில்லை. திடீரென்று ஆட்சியில் அமர்ந்த நிலையில், பக்கத்தில் இருந்தவர்களின் ஆலோசனையின்படி அப்படி முடிவெடுக்க வேண்டியதாயிற்று. உங்களின் பிரச்சனை எனக்குத் தெரியவில்லை. அதனால் அங்கு தமிழர்களுக்கு பாதகமான சில

முடிவுகளை எடுத்துவிட்டேன். இப்போதுதான் எனக்கு எல்லாமும் புரிகிறது. மீண்டும் நான் பிரதமராக வருவேன். அப்போது உங்களின் போராட்டத்திற்கு துணையாக உறுதியாக நிற்பேன்' என்றெல்லாம் தெரிவித்தார். அந்த சந்திப்பு முடிந்து புறப்பட்டபோது அந்த இருவரையும் வீட்டிற்கு வெளியே, கார்வரை வந்து அரசியல் மரியாதையோடு அனுப்பி வைத்தார். அந்தளவிற்கு அங்கீகாரம் கொடுத்தார். கடைசியாக அப்படி அனுப்பிவைக்கும்போது மீண்டும் ஒருமுறை, 'நான் உங்கள் சகோதரன். உங்களுக்கு துணையாக நிற்பேன். நம்பிக்கையோடு போய்வாருங்கள்' என்று கூறினார்.

நீங்களே கூறுங்கள். 'அடுத்து அவர்தான் பிரதமர் என்ற நிலையில், அவரை நேரில் சந்தித்துப் பேசி நம்பிக்கையான ஆதரவை பெற்றபிறகு, அவரைக் கொன்றுவிடவேண்டும் என முடிவெடுக்க விடுதலைப் புலிகள் என்ன முட்டாள்களா?' என்று கேட்டேன்.

இந்த நேரத்தில் இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் துள்ளி எழுந்தபடி, "நான் டெலோ அமைப்பைச் சேர்ந்த முன்னாள் போராளி. எங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஆகாது எதிரிகள். வேலுசாமி அவர்கள் சொன்னது மிகச் சரியான ஒன்று. கிட்டத்தட்ட அதே காலகட்டத்தில்தான் நாங்களும் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியை சந்தித்தோம். என்னுடன் மேலும் இரண்டு தமிழ் எம்.பி.க்களை அழைத்துக்கொண்டு அந்த சந்திப்புக்குச் சென்றோம். இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராக செய்யும் இன அழிப்பு பற்றியெல்லாம் விவரித்தோம். வேலுசாமி அவர்கள் இப்போது என்ன சொன்னாரோ அந்த பதிலைத்தான் எங்களிடமும் சொன்னார் ராஜீவ் அவர்கள். கடைசியாக கிளம்பும்போது, அடுத்தமுறை பிரதமரான உடனே உங்களுக்கு ஏற்பட்ட பின்னடைவை நான் சரிசெய்வேன். நம்பிக்கையோடு இருங்கள் என்றுகூறி வழியனுப்பினார்" என்ற தகவலையும் அங்கே சொன்னார்.

ஒரு மணிநேர அந்த நேர்காணல் முடிந்தது. அதன் பிறகு தோழர் மகேந்திரன் என்னிடமும் சிவாஜிலிங்கம் அவர்களுடனும் பேசினார். இறுதியாக தோழர் மகேந்திரன் பேசும்போது, "ஈழப்பிரச்சனையை இதுவரை நாங்கள் இந்த கோணத்தில் பார்க்கவில்லை, விவாதிக்கவில்லை. இதுபற்றி கட்சியின் மாநிலக்குழுவில் நான் பேசுகிறேன். விவாதிக்கின்றேன்" என்றார். கட்டாயம் இதுபற்றி ஒரு முடிவெடுப்போம் என்றுகூறி சென்றார். நான் திருச்சிக்கு வந்துவிட்டேன்.

ஒருவாரம் கடந்திருக்கும். தொலைபேசியில் வந்த நண்பர் ஒருவர் “விஷயம் தெரியுங்களா. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஈழப்பிரச்சனையில் இறங்கியிருப்பதாக தெரிகிறதே” என்றார். என்னவென்று கேட்டேன். தோழர் மகேந்திரன் அவர்கள் இன்றைய தினமணி நாளேட்டில் ஈழப்பிரச்சனை பற்றி நல்ல கட்டுரை ஒன்றை எழுதியிருக்கிறாரே பார்த்தீர்களா என்றார். எனக்கும் ஆர்வம் பற்றிக்கொண்டது. உடனே கடைக்குச் சென்று தினமணி நாளேட்டை வாங்கிப் பார்த்தேன். அரைப் பக்கத்திற்கு, மிக விரிவாக ஈழப்போராட்ட ஆதரவு நிலையில் ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். உடனே தோழர் மகேந்திரன் அவர்களுக்கு தொலைபேசி எடுத்தேன். “ஆமாம் வேலுசாமி. ஈழப்பிரச்சனை குறித்து பேசினோம். மாநிலக்குழுவில் அவர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறோம். அதை மத்தியகுழுவுக்கு அனுப்பிவைத்துள்ளோம். அடுத்த மாதம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு ஐதராபாத்தில் நடக்க இருக்கிறது. அந்த மாநாட்டிலும் இந்தத் தீர்மானத்தை முன்வைக்க இருக்கின்றோம்” என்ற விவரத்தை எல்லாம் சொன்னார். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

சொன்னபடி அடுத்த ஒரு மாதத்தில் அவர்களின் அகில இந்திய மாநாடு ஐதராபாத்தில் நடந்தது. அங்கே ஈழபிரச்சனை குறித்து விவாதித்தார்கள். கட்சியின் அகில இந்திய கமிட்டியும் ஆதரித்தது. அவர்களும் ஈழப்போராட்டத்திற்கு ஆதரவாக தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். அந்தத் தீர்மானத்தின் நகலை உலகத்தில் உள்ள கம்யூனிஸ்டு கட்சிகளுக்கு எல்லாம் அனுப்பினார்கள். பிறகுதான் உலக கம்யூனிஸ்டுகளிடையே பரவியது. என்பதையெல்லாம் பிறகு செய்தித்தாள்கள் வழியாக அறிந்து கொண்டேன். சாதாரணமான ஒருவன் சொன்ன ஒரு கருத்தை கவனத்தில் எடுத்துக்கொண்டு அதை விவாதித்து, தமிழகத்தில் இருந்து தேசிய அளவில் ஆதரவு தீர்மானம் நிறைவேற்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அதன் மாநிலக்குழு உறுப்பினர்களின் முயற்சி பெருந்தன்மையான ஒன்றே.

மறக்க முடியாத மனிதர்..



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவு நிலைப்பாடு சம்பவம் நடந்து மூன்று மாதங்கள் இருக்கும். மூத்த வழக்கறிஞர், பார் கவுன்சில் முன்னாள் தலைவரான கருப்பன் அவர்களின் தொலைபேசி அழைப்பு.

இவருக்குச் சொந்த ஊர் தஞ்சாவூர் பக்கம். திருச்சி செஞோசப் கல்லூரியில்தான் படித்தார். அதே காலகட்டத்தில் நான் யு.டி.சி கல்லூரியில் படித்தேன். இருவருக்கும் சமவயதுதான். சரியான போராட்டக்காரர். அவ்வப்போது சந்தித்துக்கொள்வோம். நான் இந்தப் பக்கம் காமராஜரிடம் அரசியலுக்கு வந்தேன். அவர் வழக்கறிஞரானார். பின்னாளில் ஈழப்போர் ஆதரவு நிலைப்பாட்டில் நிறைய களப்பணிகளில் ஈடுபட்டவர். நீண்டகாலம் சந்திக்காமலேயே இருந்துவிட்டோம். அப்படியானவர் அழைத்து. “எங்கிருக்கிறீர்கள்” என்றார். “சென்னையில்தான்” என்றேன். “எந்த இடத்தில்” என்றார். “நாகேஸ்வரராவ் பூங்கா அருகில் நண்பரின் வீட்டில்” என்றேன். முகவரியை கேட்டுக்கொண்டவர் நேரிலேயே வந்துவிட்டார்.

வந்தவர் கட்டித்தழுவிக்கொண்டார். “என்னசார், சொல்லியிருந்தால் நானே உங்களை வந்து பார்த்திருப்பேனே. நீங்கள் ஏன் வந்தீர்கள்” என்றேன். “உங்களுக்கு மரியாதை செய்யனும், அதற்கு நான் தேடிவந்து பார்ப்பதுதான் சரி. அதான் வந்தேன். இணையத்தில் ஒரு நேர்காணலைப் பார்த்தேன். ராஜீவ்காந்தி படுகொலை பற்றி அவ்வளவு விவரத்தையும் அதில் பதிவு செய்திருக்கிறீர். முழுதும் பார்த்த பிறகுதான் நீர் எந்தளவிற்குப் போராடியிருக்கிறீர் என்பதை அறிந்துகொண்டேன். தவிர உங்களின் தொடர் போராட்டம் பற்றி எங்களது வழக்கறிஞர்கள் இரண்டு பேர் என்னிடமே பேசினார்கள். எனக்குத் தெரிந்த நண்பராக இருந்துகொண்டு இதையெல்லாம் அறிந்துகொள்ளாமல் இருந்து விட்டோமே என்று எனக்கே வெட்கமாக இருந்தது. அதான் நேரில் சந்தித்தாக வேண்டும் என்று வந்தேன்” என்றார்.

என்ன செய்வது நண்பரே, இப்படி என்னால் முடிந்ததை செய்துகொண்டுதான் இருக்கேன். பலரும் செய்கிறார்கள். அந்த மூன்று பேரின் உயிரை தற்காலிகமாக நிறுத்த முடிந்ததே தவிர, வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை. அந்த மூன்றுபேரும் 20 வருடமாக சிறைக்கொடுமையை அனுபவித்து வருகிறார்கள். அவர்களை வெளியில் கொண்டுவரும் சட்டப்படியான வழிதான் தெரியவில்லை என்றேன்.

“என்ன அப்படி சொல்கிறீர். அதற்காகத்தான் இப்போது வந்திருக்கிறேன். சட்டப்படி என்ன நடவடிக்கையோ அதை நான் செய்கிறேன். நானும் பங்கெடுக்கிறேன்” என்றார்.

அடுத்தடுத்த சந்திப்பு விவாதத்திற்குப் பிறகு, பேரறிவு, முருகன், சாந்தன் ஆகியோரைவிட நளினியை மீட்கும் நடவடிக்கையில் இறங்கலாமே என்ற முடிவுக்கு வந்தோம். மற்ற மூன்றுபேரும் தூக்குதண்டனை கைதிகள். நளினி ஆயுள்தண்டனை கைதி. 20-ஆண்டுகளாக சிறையில் இருக்கிறார். ஆயுள் தண்டனை காலத்தையும் தாண்டி சிறையில் இருக்கிறார். அதனால் அவரை முன்வைத்து இப்போது சட்ட நடவடிக்கையில் இறங்கலாம் என்றார். அதன்படி சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கை பதிவு செய்தார். என் பெயரில் தாக்கலான அந்த வழக்கு, நளினி மீதான ஆள்கொணர்வு மனு. ஆயுள் தண்டனை காலம் சுமார் 14-ஆண்டுகள். என்பதையும் தாண்டி, அவர் 20 ஆண்டுகளாக சிறையில் இருக்கிறார். விடுவிக்க வேண்டும் என்பதுதான் மனுவின் கருத்து. நீதிபதிகள் எலிப்பி தர்மாராவ், செல்வம் ஆகியோர் அடங்கிய அமர்வு அதை விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. சி.பி.ஐ-க்கு நோட்டீஸ் போனது. நாடு முழுக்க அது பரபரப்பை ஏற்படுத்தியது.

வழக்கு விசாரணைக்கு வந்தபோது சி.பி.ஐ.-யின் வழக்கறிஞர் நேரில் வந்து ஆஜரானார். சி.பி.ஐ.-யின் பல்முனைநோக்கு புலனாய்வுக் குழுவின் அப்போதைய தலைவரான ஈஸ்வரமுர்த்தி ஐ.பி.எஸ். அதிகாரியும் வந்திருந்தார்.

முதல்நாள் விசாரணையில், வழக்கறிஞர் கருப்பன் அவர்கள் “இந்த பல்முனைநோக்கு புலனாய்வு விசாரணைக்குழு அமைக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆகிறது. அதன் வேலைகள் என்ன. இதுவரை எத்தனை நபர்களை அழைத்து விசாரித்திருக்கிறீர்கள். ஜெயின் கமிஷன் விசாரிக்கவேண்டிய முக்கிய நபர்கள் என்று சுட்டிக்காட்டிய சந்திராசாமியையும் சுப்ரமணியசுவாமியையும் அழைத்து விசாரித்தீர்களா? அப்படி விசாரித்தீர்கள் என்றால் எத்தனை முறை அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது” என்ற கேள்விகளை அடுக்கடுக்காக எழுப்பினார். சி.பி.ஐ. தரப்பு வழக்கறிஞர் இதற்கு வாய்வழியான பதிலையே சொன்னார். முழு விவரத்தையும் நாளை அறிந்துகொண்டு வருவதாகவும் சொன்னார். அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், எதுவும் வாய்வழி பதிலாக இருக்கக்கூடாது. எழுத்துபூர்வமான பதிலாக வேண்டும் என்று கூறினார்கள்.


அடுத்தநாள் விசாரணை வந்தது. சி.பி.ஐ. வழக்கறிஞர் எழுத்து மூலமான பதிலை கோர்ட்டுக்கு அளித்தார். ஜெயின் கமிஷனில் சுட்டிக்காட்டிய நபர்களான சந்திராசாமியையும் சுப்ரமணியசாமியையும் இதுவரை ஒருமுறைகூட விசாரிக்கவில்லை. விசாரணைக்கான அழைப்பையும் (சம்மன்) கொடுக்கவில்லை என்று எழுதப்பட்டிருந்தது. அதைப் படித்துப்பார்த்த வழக்கறிஞர் கருப்பன், இந்த எம்.டி.எம்.ஏ விசாரணை குழு அமைக்கப்பட்டு ஒன்பதாண்டுகள் ஆகிறது. இந்தநாள் வரை சந்தேகத்திற்கு உள்ளான அந்த முக்கிய இரண்டு நபர்களை அழைக்கவும் இல்லை, விசாரிக்கவும் இல்லை, அதற்கான முயற்சியும் இல்லை என்றால் எப்படி.? நாட்டின் மிகப்பெரிய விசாரணை அமைப்பே சி.பி.ஐ. தான். அந்த அமைப்பே இப்படி நடந்துகொள்கிறது என்றால் இந்த விசாரணையின் போக்கு எப்படிப்பட்டதாக இருக்கும் என்று மிகக் கடுமையாக சாடினார்.

ஆனால் கருப்பன் அவர்களின் அந்தக் கேள்விகளுக்கு எல்லாம் சி.பி.ஐ. தரப்பிலிருந்து ஒரு பதிலும் இல்லை. அப்படியே தலைகுனிந்தபடி நின்றிருந்தார்கள். இறுதியில் தீர்ப்பளித்த நீதிபதிகள் இப்படி ஒரு வழக்கைத் தொடர உங்களுக்கு உரிமை இல்லை என்று எங்கள் வழக்கைத் தள்ளுபடி செய்தார்கள். ஆனாலும் இதில் ஒரு பலன் இருந்தது. ஜெயின் கமிஷன் சந்தேக நபர்கள் என்று சுட்டிக்காட்டி, அவர்களை விசாரிக்க வேண்டும் என்று சொன்ன சந்திராசாமி, சுப்ரமணியசாமி ஆகியோரை இதுவரை நாங்கள் அழைத்து விசாரிக்கவே இல்லை என்று சி.பி.ஐ. எழுத்துபூர்வமாக பதில் கொடுத்ததுதான் அது.

இப்படி ஒரு சம்பவத்திற்குப் பிறகு, நான் சென்னையில் கூட்டம் நடத்த போலீஸிடம் அனுமதி கேட்டபோதெல்லாம் மறுக்கப்பட்டது. அப்போது தி.மு.க. ஆட்சி. ஒவ்வொரு முறையும் நீதிமன்றம் சென்றுதான் அனுமதியைப் பெறவேண்டியிருந்தது. இப்படி ஒவ்வொன்றுக்கும் நீதிமன்றம் சென்றால்தான் முடியும் என்றால் பிறகு எதற்கு முதல்வர் பதவி, ஆட்சி, அதிகாரம், போலீஸ்துறை. பேசாமல் நீதிமன்றமே ஆட்சி செய்யட்டுமே என்று ஒரு கூட்டத்தில் கடுமையாக பேசினேன். இப்படி நளினி மீதான ஆள்கொணர்வு மனுவில் தொடங்கி, கருணாநிதியின் போலீஸ் மறுத்த ஒவ்வொரு பொதுக்கூட்டத்திற்கும், நீதிமன்றத்தில் அனுமதி வாங்கியது வரை எல்லாமும் வழக்கறிஞர் கருப்பன்தான் செய்தார். எதற்கும் என்னிடம் பணம் வாங்கவில்லை. அவரது சொந்த பணம் பல லட்சங்களை செலவு செய்தார். இப்போது மறைந்துவிட்ட

அந்தப் பெரிய மனிதரின் குணத்தைப் போற்ற வார்த்தைகள் இல்லை. இப்படியும் மனிதர்கள் வாழ்ந்து மறைகிறார்கள்.

# டெல்லியில் இருந்து
# வைகோ!



கடந்த 2011ம் ஆண்டு இறுதியில் ஒரு திடீர் திருப்பம். பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோர் போட்டிருந்த கருணை மனு குடியரசுத்தலைவர் பிரதீபா பாட்டீலால் மீண்டும் நிராகரிக்கப்பட்டது. அதனையடுத்து அவர்களுக்கான தூக்குதண்டனை நாளும் அறிவிக்கப்பட இருந்தது. மக்களிடம் கொந்தளிப்பு. அடுத்து என்ன செய்வது என்று ஆளாளுக்கு ஒன்றைச் செய்தார்கள். தண்டனையை தடுத்து நிறுத்தக்கோரி வைகோ, சீமான் எல்லாம் உயர் நீதிமன்றம் சென்றார்கள். கண்டன ஆர்ப்பாட்டங்களும் நடந்தேறியது. எனக்கு வேதனை ஆதங்கம் என்று மனதை அழுத்தியது. நான் தனிமனிதன். என்ன செய்ய முடியும் என்று கலங்கியபடி இருந்தேன். அப்போதுதான் ஒரு யோசனை. மீண்டும் பரிசீலிக்கச் சொல்லி போட்ட இரண்டாவது கருணை மனு ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதி அப்படி செய்வதில் நிறைய நடைமுறை இருக்கிறது.

மரண தண்டனை கைதிகளின் எந்தவொரு கருணை மனுவையும் ஜனாதிபதியே நிராகரித்துவிட முடியாது. செய்யவும் கூடாது. மத்திய உள்துறை அமைச்சர்தான் கருத்தெழுதி அனுப்பவேண்டும். அதன் பேரில்தான் ஜனாதிபதி நிராகரிப்பார். அதுவும் உள்துறை அமைச்சர் மட்டுமே முடிவெடுக்கக்கூடாது. கவுன்சில் ஆப் மினிஸ்டரிதான் முடிவெடுக்க வேண்டும். அதாவது மத்திய உள்துறை அமைச்சரோடு ஒன்றுக்கு மேற்பட்ட கேபினெட் அமைச்சர்கள் கூடி விவாதித்து முடிவெடுக்க வேண்டும். அந்த முடிவைதான் ஜனாதிபதிக்குப் பரிந்துரைக்க வேண்டும். இதுதான் முறை. எனக்கு இதில் ஒரு சந்தேகம். இதில் என்ன நடைமுறையைக் கடைப்பிடித்தார்கள்? தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் யார் அதில் கலந்துகொண்டார்கள் என்ற கேள்வி. அதனால் தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி கேள்விகளை எழுப்பி மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு கடிதம் அனுப்பினேன். இப்படி ஒரு கடிதம் அனுப்புவதற்கு உதவியாக இருந்தவர் விழுப்புரத்தைச் சேர்ந்த வழக்கறிஞரான தம்பி கண்ணன்.

முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் விவகாரத்தில் மத்திய உள்துறை ஜனாதிபதிக்கு பரிந்துறையை அனுப்பியதா?

அப்படி அனுப்பியது என்றால், அமைச்சரா அல்லது அமைச்சகமா? உள்துறை அமைச்சர் மட்டுமே முடிவெடுத்தாரா அல்லது கவுன்சில் ஆப் மினிஸ்டர் முடிவா? கவுன்சில் ஆப் மினிஸ்டர்ஸ் என்றால் எந்தெந்த கேபினெட் அமைச்சர்கள் கலந்துகொண்டார்கள்? அவர்களின்

பெயர் விவரம் என்ன? என்ற கேள்விகளை எல்லாம் அதில் கேட்டிருந்தேன். கொஞ்சம் இழுத்தடிப்பு நடந்தது. இறுதியாக பதிலைக் கொடுத்தார்கள். அந்த பதிலில் உள்துறை அமைச்சரோ, அல்லது கவுன்சில் ஆப் மினிஸ்டரியோ முடிவெடுக்கவில்லை. அமைச்சகம்தான் முடிவெடுத்தது. அமைச்சகம்தான் ஜனாதிபதிக்கு பரிந்துரைத்தது என்ற பதிலை தெளிவாக அனுப்பியிருந்தார்கள். எனக்கு இன்ப அதிர்ச்சி. சட்டப்படி பார்த்தால் இந்த நடைமுறை தவறு. தவறாக எடுத்த முடிவை வைத்து ஜனாதிபதி கருணை மனுவை நிராகரித்தது செல்லாது என்று முதலில் பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்தேன். அது மத்திய உள்துறைக்கும் நெருக்கடியை ஏற்படுத்தியது.

இந்த சூழ்நிலையில்தான். மூன்று பேரின் வழக்கிற்காக டெல்லியில் இருந்த வைகோ அவர்கள் நான் பத்திரிகைகளில் பேட்டி கொடுத்ததைப் பார்த்திருக்கிறார். அடுத்தநாள் நடக்கப்போகும் விவாதத்திற்கு நான் உள்துறையிடம் இருந்து கேட்டு வாங்கிய பதில் இருந்தால் தடுப்பு நடவடிக்கை எளிதாக முடியும் என்று வேகமானார். டெல்லியில் இருந்து ஜூனியர் விகடன் பத்திரிகை திருமாவேலனிடம் பேசினார். அந்தக் கடிதத்தின் நகல் அவசியம் தேவை என்ற முக்கியத்துவத்தைக் கூறி உடனடியாக அனுப்பிவைக்கக் கேட்டிருக்கிறார். திருமாவேலன் குமுதம் பா. ஏகலைவனிடம் பேசினார். ஏகலைவன் என்னிடம் தொடர்புகொண்டு அந்தக் கடிதத்தின் அவசியத்தைக் கூறி உடனடியாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொண்டார்.

எனக்கு அப்படியான வசதி எல்லாம் தெரியாது என்பதைவிட இல்லை என்றுதான் கூறவேண்டும். அனாலும் அந்த இரவு நேரத்தில் ஒரு கடையை தேடிப்போய் கடிதத்தின் நகலை ஏகலைவனுக்கு அனுப்பிவைத்தேன். வைகோ அவர்கள் எதிர்பார்த்தபடி, திருமாவேலன் மூலம் அவரது கைக்குக் கிடைத்தது. அவரும் துரிதமாக செயல்பட்டார். அடுத்தநாள் விவாதத்தில் அந்தக் கடிதத்தை வைத்து வாதாடி மூன்று பேரின் தூக்கு தண்டனையை தற்காலிகமாக நிறுத்தி வைக்க முடிந்தது. தெரிந்தோ தெரியாமலோ இரண்டாவது முறையாக நான் அந்த மூன்று பேரின் தூக்கு தண்டனையை நிறுத்திவைக்க காரணமாயிருந்திருக்கிறேன். ஆனால் பெருமைப்பட முடியவில்லை. சிறைச்சாலையில் சந்தித்தபோது பேரறிவாளன் சொன்ன வார்த்தைகள்தான் மனதை அழுத்தியபடி இருந்தது, ஒவ்வொரு நாளும் செத்து வாழும் அவர்களின் வாழ்க்கை யாருக்கும் வரக்கூடாது என்று உலுக்கியது.

# நேர்மைக்கும் உண்மைக்கும் மிரட்டல்!

*ராஜீவ்காந்தியின் வாழ்த்துச் செய்தி பிரபாகரனிடம் உடனடியாக தெரிவிக்கப்பட்டது. முன்னாள் இந்திய பிரதமருடன் மீண்டும் நட்புறவு ஏற்படுவது குறித்து அவரும் மகிழ்ச்சி அடைந்தார்*



திருமதி மாலினி பார்த்தசாரதி. பொதுவாக சொன்னால் தெரியாது. ‘இந்து’ நாளேட்டின் மாலினி பார்த்தசாரதி என்றால் தெரியும். மெத்த படித்தவர்கள் மத்தியில் பெயர்போனவர். இந்து குழும முதலாளி குடும்பத்தில் ஒருவர். டெல்லி இந்து நாளேட்டின் துணை ஆசிரியராக இருந்தவர். நல்ல திறமைமிக்கவர்.

ராஜீவ்காந்தி படுகொலையாவதற்கு முன்பாக அவரை புலிகளின் பிரதிநிதிகளான கவிஞர் காசி ஆனந்தனும், சச்சிதானந்தமும் சந்தித்துப் பேசினார்கள் என்பதை முந்தைய அத்தியாயத்தில் பார்த்தோம். 1991ம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடந்தது. அதே போன்று இலங்கைத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சந்திப்பும் நடந்தது. அதற்கு பாலம் அமைத்துக்கொடுத்தவர் மாலினி பார்த்தசாரதி என்ற பேச்சு அப்போது ரகசியமாக இருந்தது. புலிகளின் பிரதிநிதிகளிடமும் சரி, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் சரி, இனி ஈழவிடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகவே இருப்பேன் என்ற உத்தரவாதத்தை கொடுத்திருந்தார் ராஜீவ்.

இந்த நிலையில்தான், அடுத்த மாதமே மே-21 அன்று அவர் படுகொலை செய்யப்படுகிறார். அந்த நேரத்தில் ராஜீவ்காந்தியும் புலிகளும் சந்தித்துப்பேசி அவர்களுக்குள் சுமூக உறவை ஏற்படுத்திக் கொண்டார்கள். எனவே புலிகளுக்கும் இந்தப் படுகொலைக்கும் சம்பந்தமே இல்லை. என்று மிக துணிச்சலாக செய்தியை வெளியிட்டது இந்து குழும ஏடுகள். அதுவும் படுகொலைச் சம்பவம் நடந்த ஒரு வாரத்திலேயே அப்படி வெளியிட்டது.

இதுதான் அந்த செய்தி

“கடந்த மார்ச் ஐந்தாம் தேதி விடுதலைப் புலிகளின் மத்திய கமிட்டி முக்கிய உறுப்பினர்களில் ஒருவர் ராஜீவ்காந்தியை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார். இந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளிவரவில்லை. விடுதலைப் புலிகள் தரப்பிலே முயற்சி எடுத்து இந்த சந்திப்பு நடந்தது. இந்த சந்திப்பின் மூலம் புலிகள் இயக்கத்திற்கும் ராஜீவ்காந்திக்கும் இடையே நல்லுறவு உருவானது. இந்திய அமைதிப்படையை ராஜீவ் அனுப்பிய பிறகு இப்போதுதான் முதன் முதலாக ராஜீவ்காந்தியும் விடுதலைப் புலிகளும் சந்தித்து நல்லுறவுகளை உருவாக்கிக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சந்திப்பு மிகவும் சுமூகமாக இருந்தது. ராஜீவ்காந்தியுடன் நல்லுறவை புலிகள் இரண்டு மாதங்களுக்கு முன் ஏற்படுத்தியுள்ள நிலையில், ராஜீவ்கொலையை புலிகள் எப்படி கொலை செய்திருப்பார்கள் என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறது.

மாறிவரும் அரசியல், ராஜாங்க சூழல்களைத் தொடர்ந்து புலிகள் ராஜீவ்வோடு சுமூகமாக போகும் முடிவை எடுத்தனர். இலங்கைத் தமிழர்

பிரச்சனையில் இந்தியா தனது தலையீட்டை விலக்கிக்கொண்டதால், இலங்கை அரசின் ராணுவத் தாக்குதல் அதிகரித்து வருவதாக புலிகள் கருதுகின்றர். இதை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ராஜீவிடமே நேரில் தெரிவித்ததோடு ஈழத் தமிழர் பிரச்சனையில் சுமூகமான தீர்வை தங்களால் உருவாக்க முடியும் என்று தாங்கள் உறுதியாக நம்புவதாக ராஜீவ்காந்தியிடமே தெரிவித்துள்ளனர். ராஜீவ்காந்தியும் புலிகளின் பிரதிநிதிகளை சந்திக்க சம்மதித்து தனது இல்லத்திலேயே அவர்களின் சந்திப்புக்கு அனுமதியும் அளித்தார்.

“கடந்தகால கசப்பான சம்பவங்களை மறந்துவிடுவோம். நமது உறவில் புதிய அத்தியாயத்தை துவக்குவோம். எங்கள் இயக்கம் இந்தியாவுக்கு எதிராக ஒருபோதும் செயல்படாது என்று புலிகள் ராஜீவிடம் கூறினர். அவரும் இதற்கு முழுமையான ஆதரவு தெரிவித்தார். பிரபாகரனுக்குத் தனது வாழ்த்துகளை கூறுமாறு தெரிவித்த ராஜீவ், போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துமாறும் தனது சார்பில் பிரபாகரனிடம் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொண்டார். ராஜீவ் கூறிய கருத்துகள் உடனே பிரபாகரனுக்குத் தெரிவிக்கப்பட்டன. பிரபாகரனும் மகிழ்ச்சி அடைந்தார். இந்த நிலையில் ராஜீவை விடுதலைப் புலிகள் கொலை செய்திருப்பார்கள் என்று கூறப்படுவதில் அடிப்படை இல்லை” என்ற துணிச்சலான கட்டுரையை இந்து நாளேடு **28.05.91** அன்று வெளியிட்டிருந்தது.

அதேபோன்று அப்போது ‘ஃப்ரண்ட்லைன்’ என்ற ஆங்கில இதழும் ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தது.

“ராஜீவ்காந்திக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதிநிதி கவிஞர் காசி ஆனந்தனுக்கும் இடையே மார்ச் ஐந்தாம் தேதி புதுடெல்லியில் நடைபெற்ற சந்திப்பு மிக முக்கியமானதாகும். ராஜீவ்காந்தி உயிரோடு இருந்திருப்பாரானால் இந்த சந்திப்பின் விளைவுகள் எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு பல நன்மைகளை ஏற்படுத்தியிருக்கும்.”

ராஜீவ்காந்தியை சந்திக்க வேண்டும் என விடுதலைப் புலிகள் இயக்கம் மிகவும் விரும்பியது. இந்த இயக்கத்தின் மத்தியகுழு உறுப்பினரான காசி ஆனந்தன் இதற்காக அனுப்பி வைக்கப்பட்டார். ராஜீவ் வீட்டில் அந்த சந்திப்பு **30** நிமிடம் மிக நல்ல முறையில் நடந்தது.

மக்களவைத் தேர்தல் முடியும்வரை பொருத்திருக்கும்படி ராஜீவ்காந்தி காசி ஆனந்தனிடம் தெரிவித்தார். கடந்த காலத்தில்

நடந்தவற்றை மறந்துவிட்டு அவருடன் புதிய நட்புறவை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் இயக்கம் விரும்புவதாக காசி ஆனந்தன் ராஜீவ் இடம் தெரிவித்தார். மேலும் இந்தியாவிற்கு எதிரான நடவடிக்கைகளில் ஒருபோதும் விடுதலைப் புலிகள் ஈடுபடமாட்டார்கள் என்றும் உறுதி கூறினார். ராஜீவ்காந்தி மீண்டும் பிரதமராவதன் மூலம், இலங்கைத் தமிழர் பிரச்சனையில் தீர்வு காண்பதற்கு உறுதியான முயற்சிகளை செய்ய முடியும் என விடுதலைப் புலிகள் நம்புவதாகவும் அவர் கூறினார்.

ராஜீவ்காந்தியும் மிக மகிழ்ச்சியுடன் கீழ்க்கண்டவாறு பதில் அளித்தார். தனது வாழ்த்துகளை பிரபாகரனுக்குத் தெரிவிக்கும்படியும் போராட்டத்தை பிரபாகரன் தொடர்ந்து நடத்துமாறும் அவர் கூறினார். இலங்கையில் தற்போது நடைபெறுவது பற்றியும் விடுதலைப் புலிகளின் இறுதி லட்சியம் பற்றியும் அவர் விவரமாக கேட்டுத் தெரிந்துகொண்டார்.

எதிர்காலத்தில் தொடர்ந்து தன்னுடன் தொடர்பு வைத்துக்கொள்ளும்படியும் இறுதியாக ராஜீவ்காந்தி கூறினார். என்றவாறு அவ்விருவரும் தெரிவித்திருந்தார்கள்.

ராஜீவ்காந்தியின் வாழ்த்துச் செய்தி பிரபாகரனிடம் உடனடியாக தெரிவிக்கப்பட்டது. முன்னாள் இந்திய பிரதமருடன் மீண்டும் நட்புறவு ஏற்படுவது குறித்து அவரும் மகிழ்ச்சி அடைந்தார்.

இந்த சந்திப்புக்குப் பிறகு, காசி ஆனந்தன் விடுத்த அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார். விடுதலைப் புலிகள் இந்தியாவின் பக்கம் இருப்பார்கள். அதைப்போல் இந்தியாவும் எங்கள் பக்கம் இருக்கும். நாங்கள் ஒருபோதும் இந்தியாவுக்கு எதிராக செயல்படவில்லை. இந்திய அமைதிப் படைக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே மூண்டெழுந்த மோதல் எங்கள் வரலாற்றில் துரதிர்ஷ்டவசமான அத்தியாயமாகும். இதை இருதரப்பினரும் முழுவதுமாக மறந்துவிட வேண்டும். எங்களை பொறுத்தவரையில் இந்தியப் படைகளை எதிர்த்து நாங்கள் போராடிய காலகட்டத்தில்கூட பாகிஸ்தானிடமோ, சீனாவிடமோ நாங்கள் எத்தகைய உதவியையும் கேட்கவுமில்லை. பெறவுமில்லை.

ராஜீவ்காந்தி- காசி ஆனந்தன் சந்திப்பைப் தொடர்ந்து, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேச செயலகப் பொறுப்பாளர் தளபதி, கிட்டு லண்டனில் இருந்து விடுத்த அறிக்கை ஒன்றில், “இலங்கைத் தமிழர் பிரச்சனை தீர இந்தியா முயற்சி செய்ய வேண்டும். தமிழர்களுக்கு எதிராக சிங்கள ராணுவம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை

நிறுத்தும்படி சிங்கள அரசுக்கு இந்தியா நிர்ப்பந்தம் கொடுக்க வேண்டும். சிங்கள அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை நடத்தும்போது, இந்தியா நடுவராக இருக்கவேண்டும். சர்வதேசப் பாதுகாப்பு நியதிகளுக்கு ஏற்ப தமிழர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கும் ஏற்பாடுகளை செய்வது பற்றி, சிங்கள அரசு இந்திய அரசுக்கு உறுதி தரவேண்டும். தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்கும்படி சிங்கள அரசை இந்தியா வற்புறுத்தவேண்டும்" என்று தெரிவித்திருந்தார்.

ராஜீவ்காந்தி சந்திப்புக்குப் பிறகு 'ரா' உளவுத்துறை அதிகாரிகளை சந்தித்தார் காசி அனந்தன். இதன் விளைவாக இலங்கையின் போர்க்களத்தில் படுகாயம் அடைந்த விடுதலைப் புலிகளை தமிழகத்திற்குக் கொண்டுவந்து சிகிச்சை அளிக்க அனுமதி தரப்பட்டது. தமிழ்நாட்டில் அப்போது ஆளுநர் ஆட்சி இருந்ததும் வசதியாக இருந்தது. இதைத் தொடர்ந்து முன்னாள் பாதுகாப்புத் துறை இணை அமைச்சரும் ராஜீவ்காந்திக்கு மிக நெருக்கமான காங்கிரஸ் தலைவருமான ப.சிதம்பரம் **5.5.91** அன்று விடுத்த அறிக்கையில்.

"இலங்கையில் இருந்து அகதிகளாக வரும் தமிழர்களுக்கு பாதுகாப்பும் புகலிடமும் அளிப்பது நம்முடைய கடமை. காயமடைந்த போராளிகளுக்கு அடைக்கலம் கொடுக்க வேண்டியது அவசியமாகும்" என்று குறிப்பிட்டார்.

காசி ஆனந்தன், கிட்டு, ப.சிதம்பரம் ஆகியோர் விடுத்த அறிக்கைகளை கண்டு சிங்கள அரசு பதற்றம் அடைந்தது. ராஜீவ்காந்தி மீண்டும் பிரதமராவதற்கு வாய்ப்பு உருவானது குறித்து அது அச்சமடைந்தது. ராஜீவ்காந்தி மீண்டும் பிரதமரானால் இந்தியா- இலங்கை உடன்பாட்டை தீவிரமாக அமல் செய்வதற்கான முயற்சிகளை எடுப்பார் என்று சிங்கள அரசு கருதியது. இலங்கையின் ஜனாதிபதியான பிரேமதாசா அந்த உடன்பாட்டை தொடக்கம் முதலே எதிர்த்து வருபவர். இந்த உடன்படிக்கை கையெழுத்தானபோது அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள மறுத்தார். அவர் ஜனாதிபதியானவுடன் இந்திய அமைதிப்படையை உடனடியாக திரும்பப் பெறுமாறு வற்புறுத்தினார் என்றும் 'ஃப்ரண்ட்லைன்' எழுதியிருந்தது.

இந்து மற்றும் ஃப்ரண்ட்லைன் இதழில் வந்திருந்த கட்டுரை பெரிய அதிர்ச்சியை மட்டுமல்ல திருப்புமுனையை ஏற்படுத்துவதாகவும் இருந்தது.

காரணம், கார்த்திகேயன் தலைமையிலான சி.பி.ஐ. சிறப்பு புலனாய்வுக் குழு இந்தப் படுகொலைக்குக் காரணம் புலிகள்தான் என்று முடிவு செய்துவிட்டு விசாரணையில் இறங்கியது. அந்த விசாரணைப் போக்கு பாதிக்கப்படுமோ என்ற அச்சம். யாருக்கு என்றால் ராஜீவ் கொலைச் சதித்திட்டத்தில் ஈடுபட்ட பெரிய குற்றவாளிகளுக்கு. அதிரடியாக களத்தில் இறங்கினார்கள்.

எனக்குத் தெரிந்து அப்போது சுப்ரமணியசாமி திருமதி மாலினி பார்த்தசாரதியுடன் தொடர்பில் இருந்தார். சென்னையாக இருந்தாலும சரி, டெல்லியாக இருந்தாலும் சரி. வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அவரை நேரில் சந்திப்பார் சாமி. இந்த நட்புறவோடு சங்கரமடத்தின் பெரியவர் நட்பும் சேர்ந்திருந்தது. அதன் பலனாக தொடர்ந்து அப்படியான உண்மைக் கட்டுரைகள் வெளிவருவது தடுக்கப்பட்டது. அது ஒருபுறம் இருந்தாலும் திரைமறைவில் நடந்த வேறு முக்கிய காரணமும் இருக்கிறது. ‘இந்து’, ‘ஃப்ரண்ட்லைனில்’ வந்த உண்மைக் கட்டுரைகள் சி.பி.ஐ. சிறப்பு புலனாய்வுக் குழுவுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. உடனே அவர்கள் பாணியில் மாலினி பார்த்தசாரதியை விசாரணை என்ற பெயரில் மிரட்டி உருட்டத் தொடங்கினார்கள். ராஜீவ் படுகொலைத் திட்டத்திற்காக புலிகளுக்கு உதவியதாக, துணை இருந்ததாக மிரட்டியது. அதன் பிறகுதான் அந்தப் பத்திரிகைக் குழுமம் புலிகளுக்கு எதிரான செய்திகளை வெளியிடத் தொடங்கியது. அதுமட்டுமல்ல, பிரதான எந்த தேசிய நாளேடுகளிலும் அம்மாதிரியான உண்மைகள் வெளிவராதபடிக்குப் பார்த்துக்கொண்டது. அதற்கு முக்கிய காரணகர்த்தா சுப்ரமணியசாமிதான். படுகொலையை செய்தது புலிகள்தான் என்று திரும்பத் திரும்ப அவர் கூறிக்கொண்டிருந்தது பொய்யாகிவிடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார்.

# யார் இந்த சந்திராசாமி?

*சந்திராசாமி தன் நெருங்கிய நண்பர்களிடம் கோபப்பட்டு பேசும்போது. அவங்க அம்மாவை எப்படி கொலை செய்தேனோ அதே போன்று ராஜீவ்காந்தியையும் கொலை செய்து விடுவேன்...*



அட்னன் கஷ்யோகி. லண்டனில் இருக்கும் சர்வதேச ஆயுத வியாபாரி. உலகில் உள்ள அனைத்து தீவிரவாத இயக்கங்களுடனும் ரகசிய தொடர்பு வைத்திருப்பவர். சட்ட விரோதமாக ஆயுதங்களைக் கடத்துபவர். அந்த கஷ்யோகியின் நெருங்கிய கூட்டாளிதான் சந்திராசாமி. சர்வதேச தீவிரவாதக் குழுக்களுடன் சந்திராசாமிக்கும் நட்பு உண்டு. இவருக்கு பிரதமர் பி.வி. நரசிம்மராவ் மிக நெருங்கிய நண்பர். எப்படியாவது அவரை பிரதமர்

நாற்காலியில் வைத்து அழகு பார்க்கவேண்டும் என்ற ஆசை சந்திராசாமிக்கு. காரணம், சர்வதேச பெருமுதலாளிகளின் வியாபார நலன்.

அப்போது இந்திராகாந்தி பிரதமர். நரசிம்மராவ் வெளிவிவகாரத்துறை அமைச்சர். கட்சியில் சீனியர். இந்திராகாந்திக்கு அடுத்து அவர்தான் அந்தப் பதவியில் உட்கார தகுதியானவர் என்பது சந்திராசாமியின் கணிப்பு. சீக்கிய தீவிரவாத இயக்கத்தை ஒழிக்க 'ஆபரேஷன் புளூஸ்டார்' என்ற ராணுவ நடவடிக்கையை எடுத்தார் இந்திராகாந்தி. சீக்கியர்களின் புனித இடமான பொற்கோயிலுக்குள் ராணுவம் புகுந்ததை அந்த மதத்தினரால் சகித்துக்கொள்ள முடியவில்லை. கொதித்து எழுந்தார்கள். பல்வேறு வெளிநாடுகளில் வலுவாக இருந்த சீக்கிய தீவிரவாத அமைப்புகள் இந்திராகாந்தியின் மீது கோபத்தில் இருந்தது. சந்திராசாமி அதை சரியாக பயன்படுத்திக்கொண்டார். அந்தப் பின்னணியில்தான் இந்திராகாந்தி சீக்கிய மெய்காப்பாளர்களாலேயே சுட்டுக்கொள்ளப்படுகிறார். விசாரணைகளில் அது எல்லாமும் மறைக்கப்பட்டது.

நான், ராஜீவ்காந்தி படுகொலை விவகாரத்திற்கு வருகிறேன். அந்தப் படுகொலையில் அந்நிய நாட்டின் சதி பற்றி அறிய ஜெயின் கமிஷன் போடப்பட்டது. அதில் சாட்சி சொல்ல ஒருவர் வருகிறார். பெயர் லக்குபாய் பகத். உலகின் பெரிய ஊறுகாய் வியாபாரி.

"1984-ம் ஆண்டு ஜூன் மாதம் என்னைத் தேடி பி.வி. நரசிம்மராவும், சந்திராசாமியும் வந்தார்கள். அப்போது நரசிம்மராவ் வெளிவிவகாரத்துறை அமைச்சராக இருந்தார். என்னிடம், இந்தியாவில் இருந்துகொண்டு சர்வதேச அளவில் ஏற்றுமதி இறக்குமதி லைசன்ஸ் பெற்றுத் தருவதாக சொன்னார்கள். கூடவே ஒரு மில்லியன் டாலர் நன்கொடை வேண்டும் என்றார்கள். எனக்கு நம்பிக்கை இல்லை. காரணம் அப்போது இந்திராகாந்தி சக்திவாய்ந்த பிரதமராக இருந்தார். அவரைத் தாண்டி ஏதும் நடக்காது. அதனால் யோசித்தேன். நான் தயங்கியதை கவனித்த சந்திராசாமி, "வருகிற டிசம்பர் 84-ல் நரசிம்மராவ்தான் பிரதமராக இருப்பார். அதனால் நன்கொடை கொடுப்பதில் தயக்கம் வேண்டாம். தாராளமாக கொடுங்கள்" என்றார். "அதெப்படி சாத்தியம். இந்திராகாந்தி சக்திமிக்கவராக இருக்கிறாரே. நரசிம்மராவ் எப்படி பிரதமராக வரமுடியும்? என்று கேட்டேன்." அதைப் பற்றிய கவலை உங்களுக்கு ஏன். வரும் டிசம்பரில் நரசிம்மராவ்தான் பிரதமர் தாராளமாக

பணத்தைக் கொடுங்கள் என்றார் சந்திராசாமி". இதுதான் லக்குபாய் பகத் சொன்ன சாட்சியம்.

இந்திராகாந்தி இறந்த அன்றே அடுத்த பிரதமர் யார் என்ற போட்டி தொடங்கியது. சந்திராசாமி தலைமையில் ஒரு குழு நரசிம்மராவை பிரதமராக்க வேண்டும். அவர்தான் கட்சியில் சீனியர் என்று வேகம் காட்டியது. அப்போதுதான் தமிழக காங்கிரஸின் சக்திமிக்க தலைவராக இருந்த ஜி.கே. மூப்பனார், ஒரு முடிவை துணிந்து எடுத்தார். ராஜீவ்காந்தி மற்றும் சிலரை கலந்தாலோசித்தார். நாற்பது எம்.பி.க்களை திரட்டிச் சென்று ராஜீவ்காந்திதான் பிரதமர் என்று ஆதரவு தெரிவித்தார். அங்குதான் திருப்புமுனை. மூப்பனாரின் முடிவைப் பார்த்து மற்ற கட்சிகளின் முன்னணித் தலைவர்கள் சிலரும் அதற்கு ஆதரவு தெரிவித்தார்கள். அந்த ஆதரவு பெருகியது. வேறு வழியின்றி நரசிம்மராவ் பின்னுக்குத் தள்ளப்பட்டார். ராஜீவ் பிரதமரானார். அன்றிலிருந்து அரசியலில் ஆர்வம் காட்டாமல் ஒதுங்கி உட்கார்ந்து கொண்டார் நரசிம்மராவ்.

அப்படி நரசிம்மராவ் ஒதுங்கி ஓய்வெடுத்துக்கொண்டு உட்கார்ந்தாலும், சந்திராசாமி சும்மா இருக்கவில்லை. ராஜீவ்காந்திக்கு எதிராக பல சதித்திட்டங்களை தீட்டுகிறார். பிரதமர் ராஜீவ்காந்தியும் சும்மா இருக்கவில்லை. தன் தாய் இந்திராகாந்தியைக் கொன்ற சூத்ரதாரி யார் என்பதை தெரிந்துகொண்டு, சந்திராசாமியை கண்காணிக்கத் தொடங்குகிறார். சி.பி.ஐ, ரா, ஐ.பி, பிரதமர் அலுவலகம் என பலவும் சந்திராசாமி நடவடிக்கையை கவனித்து வந்தது.

அப்போது, பிரதமர் ராஜீவ்காந்தியின் செயலாளராக இருந்தவர் சர்லா கிரேவல். அவர் 23.9.89 அன்று உளவுத்துறையின் தலைவராக இருந்த எம்.கே.நாராயணனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தார். அந்தக் கடிதத்தில் 'சந்திராசாமி, பிரதமர் ராஜீவ்காந்தியை கொலைசெய்ய சதித்திட்டம் தீட்டிவருகிறார்' என்றும் அப்படியான தகவல் பிஜி, டொராண்டோ, சிட்னி, துபாய் ஆகிய இடங்களில் உள்ள 'ரா' உளவுத்துறை மூலம் வந்திருக்கிறது என்றும் எழுதப்பட்டிருந்தது. எம்.கே. நாராயணன் அதன்மீது என்ன நடவடிக்கையை எடுத்தார் என்று தெரியவில்லை?

ஆனாலும் சந்திராசாமியின் சதித்திட்டம் முன்னேறியபடியே இருந்தது. அதை நாமே கூறவில்லை. சந்திராசாமியின் தீவிர பக்தராகவும் நீண்டகால நண்பராகவும் இருந்த ரமேஷ்தலால் என்பவர் கூறியதுதான்.

சந்திராசாமியோடு இருந்துவிட்டு பிறகு தனியே வந்து, நேதாஜி சுபாஷ் சேனா என்ற அமைப்பைத் தொடங்கி நடத்தி வந்தார். "1989-ம் ஆண்டு இந்த சந்திராசாமி, ராஜீவ்காந்தியின் எதிர்ப்பாளர்களை எல்லாம் ஒன்று சேர்த்து ரகசிய கூட்டத்தை நடத்தினார். காங்கிரஸ் கட்சியின் தலைவர்களான பிரனாப் முகர்ஜி, பி.வி.நரசிம்மராவ், எ.பி.சர்மா, பிரகாஷ் மெஹ்ரோத்ரா, எஸ்.எஸ்.மகாபத்ரா, குண்டுராவ் ஆகியோர் அந்தக் கூட்டத்தில் இருந்தார்கள். டெல்லியில் உள்ள எண்.18 வில்லிங்டன் கிரசெண்ட் இடத்தில்தான் அந்தக் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில் ராஜீவ்காந்திக்கு பதில் காங்கிரஸில் புதிய தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று பேசினார் சந்திராசாமி. ஆனாலும் ஒருமித்த கருத்து இல்லை. அங்கேயே நரசிம்மராவுக்கும் பிரனாப் முகர்ஜிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அப்போது குண்டுராவ் தலையிட்டு அடுத்த பிரதமர் ஆகவேண்டும் என்றால் அதற்கு அதிக பணத்தை செலவழிக்க வேண்டும். யாரால் அப்படி செலவழிக்க முடியும் என்றார். உடனே நரசிம்மராவ்ஜி பிரதமராவதற்கு நான் எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்கத் தயார் என்றார் சந்திராசாமி. அதற்கு பதிலளித்த பிரனாப் முகர்ஜி எனக்கு திருபாய் அம்பானி செலவு செய்யத் தயார் என்றார்.

இந்த போட்டிக்கிடையே கமலபதி திரிபாதி தலையிட்டு, அதிக எம்.பி.க்கள் தென் மாநிலங்களைச் சேர்ந்தவர்கள்தான். நரசிம்மராவ் தென் மாநிலத்தைச் சேர்ந்தவர். அதுமட்டுமின்றி கட்சியில் சீனியர். ஆதரவை திரட்டுவது சிரமம் இருக்காது எனவே அவர்தான் பொருத்தமானவராக இருப்பார் என்ற ஆலோசனையை கூறினார்.

அடுத்து ராஜீவ்காந்தியை நீக்கிவிட்டு புதிய பிரதமரை தேர்ந்தெடுக்க வேண்டும். அதற்கு ஜனாதிபதியின் ஒத்துழைப்பு வேண்டும். உடனே குடியரசுத் தலைவரான கியானி ஜெயில்சிங்கை சந்திராசாமியும், மகாபத்ராவும் நேரில் சந்தித்தார்கள். ராஜீவ்காந்தியை பிரதமர் பதவியில் இருந்து இறக்குவதற்காக 40 கோடி தருவதாக பேரம் பேசினார்கள்.

இந்தத் தகவல்கள் எல்லாம் உளவுத்துறை மூலம் ராஜீவ்காந்திக்குச் சென்று சேர்ந்தது. ராஜீவ்காந்தி கோபப்பட்டார். சந்திராசாமியின் தொடர்புள்ள நிறுவனங்கள், ஆசிரமங்கள் எல்லாம் சோதனைக்கு உள்ளானது. அவர்மீது அன்னிய செலாவணி சட்டம் பாய்ந்தது. கூடவே வருமானவரி முறைகேடு வழக்குகளும் பாய்ந்தது. சந்திராசாமி கொதித்துப்போனார். சந்திரசேகர், உண்ணிகிருஷ்ணன், அஜித்சிங்,

தேவிலால் ஆகியோரை அழைத்து பேசிய சந்திராசாமி என்ன செய்யலாம் என்று ஆலோசனை கேட்டார்.

அப்போது சந்திரசேகர், நாம் ஒரு குழுவாக சென்று குடியரசுத் தலைவர் ஜெயில்சிங்கை சந்திப்போம். நமக்கு உதவும்படி கேட்போம் என்றார். இந்தக் கட்டத்தில் சந்திராசாமி கோபத்தின் உச்சிக்குச் சென்று, தன்னிலை மறந்து பேசினார். ராஜீவ் எனக்கு பிரச்சனைகளை கொடுக்கிறார். அவர் மிக கொடூரமான முடிவை சந்திப்பார். நான் நினைத்தால் நேரு பரிவார் தொண்டர்களே அதை செய்துவிடுவார்கள் என்று கொதித்தார்.

அதன் பிறகுதான் **1991-** மே. தேர்தல் நடக்க இருந்தது. அப்போது மும்பையில் இருந்து வந்த சிலர் சந்திராசாமியிடம் தேர்தல் நிதி கேட்டார்கள். அவர்களிடம் சந்திராசாமி, தேர்தலே தள்ளிப்போகும். எனவே இப்போது நிதி தர முடியாது என்று கூறினார். அதே போன்று ராஜீவ் கொலை செய்யப்பட்டு, தேர்தலும் தள்ளிப்போனது. அப்போது என்னை அழைத்த சந்திராசாமி, ராஜீவ் கொலையில் எனக்குத் தொடர்பிருப்பதாக யாரிடமும் நீ கூறக்கூடாது என்று மிரட்டினார்.

"அதுமட்டுமல்ல, **1985-**ம் ஆண்டு அமெரிக்காவில் வைத்து கொல்லத் திட்டமிட்டார். முடியவில்லை. **1985-**அக்டோபர் **14-**ம் தேதி இங்கிலாந்தில் வைத்து கொல்லத் திட்டமிட்டார். தொடர்புடைய தீவிரவாதிகளை லண்டன் போலீஸ் கைதுசெய்ததால் அப்போது தடுக்கப்பட்டது. கடைசியில் ஸ்ரீபெரும்புதூரில் நடந்தது" என்று ரமேஷ்தலால் ஜெயின் கமிஷனில் சாட்சி கூறினார்.

இவரின் சாட்சி சந்திராசாமிக்கு நெருக்கடியாக, பொய்முகத்தை கிழிப்பதாக இருந்தது. அதனால் ரமேஷ்தலாலை மிரட்டத் தொடங்கினார். அவர் மிரண்டு போகிறார். சந்திராசாமி யார்? என்ன செய்வார் என்று அறிந்தவர். உடனே அப்போது உள்துறை அமைச்சராக இருந்த எல்.கே. அத்வானிக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில்...

"சென்ற இரவு, சந்திராசாமி கும்பலிடம் இருந்து எனக்கு மிரட்டல் தொலைபேசி வந்தது. நான் ஜெயின் கமிஷனில் சொன்ன சாட்சியத்தை பொய்சாட்சி என்று உடனே விலக்கிக்கொள்ள வேண்டும். தவறினால் உன்னையும் உன் குடும்பத்தையும் வெடிகுண்டு வைத்து கொன்று விடுவோம் என்று மிரட்டுகிறார்கள். சந்திராசாமி ஏற்கெனவே பல சாட்சிகளை தீர்த்துக் கட்டிவிட்டார். இரண்டு தினங்களுக்கு முன்புதான்

ராஜேந்தர் ஜெயின் என்ற சாட்சியை சந்திராசாமியின் ஆட்கள் கொன்றிருக்கிறார்கள். ஆகவே எனக்கும் என் குடும்பத்திற்கும் சந்திராசாமியிடம் இருந்து பாதுகாப்பு தேவை" என்று எழுதியிருந்தார் **(14/18/98)**

அதேபோன்று மஹந்த் சேவா தாஸ் சிங் என்பவரும் ஜெயின் கமிஷனில் வந்து சாட்சியம் அளித்தார்.

"லண்டனில் இருக்கும் சர்வதேச ஆயுத வியாபாரி அட்னன் கஷ்யோகி வீட்டில் ஒரு ரகசியக் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்திற்கு நீங்கள் போக வேண்டும். அங்கு என்ன நடக்கிறது என்ற விவரத்தை வந்து கூறுங்கள் என்று பி.வி. நரசிம்மராவ் என்னை அனுப்பிவைத்தார். அதன்படி நானும் அங்கே சென்றேன். அங்கு நடந்த ரகசியக் கூட்டத்தில்,

காலிஸ்தான், எல்.டி.டி.ஈ உட்பட பல தீவிரவாத அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். (இது ஆசிரியர் கருத்தல்ல. ஜெயின் கமிஷனின் நேர்நின்ற சாட்சியாளரின் பதிவு. அந்தக் காலகட்டத்தில் அனைத்து ஈழ இயக்கங்களையும் எல்.டி.டி.ஈ. என்றுதான் பொதுவாகக் கூறி வந்தார்கள்.) அவர்களிடம் பேசிய அட்னன் கஷ்யோகி, உங்களில் யார் ராஜீவ்காந்தியை கொலை செய்வீர்கள் என்று கேட்டார். எல்லோரும் அவரவர் பகுதிக்கு ராஜீவ் வந்தால் கொலைசெய்துவிடுவோம் என்று உறுதியளித்தார்கள். இந்த விவரங்களை எல்லாம் நான் நரசிம்மராவிடம் தெரிவித்துவிட்டேன்" என்று தெரிவித்துள்ளார் மஹந்த். ஆக இதன் பின்னணியில் இருந்தவர் சந்திராசாமி என்பது மறைக்க முடியாத உண்மையாக தெரிகிறது. எப்படி? ராஜீவ் படுகொலைக்குப் பிறகு ஒரு கட்டத்தில் சி.பி.ஐ., ரா, பொருளாதார குற்றப்பிரிவு ஆகியவை எல்லாம் சந்திராசாமியின் ஆசிரமங்களில் சோதனை நடத்தி நிறைய ஆவணங்களை எடுத்தது. ஆராய்ந்தது. அதில் லண்டனில் உள்ள ஆயுதவியாபாரி அட்னன் கஷ்யோகிக்கு மட்டும் **11** மில்லியன் டாலரை அனுப்பியிருக்கிறார் சந்திரிசாமி. பேங்க் ஆப் கிரட் அண்டு காமர்ஸ் இண்டர்நேஷனல் வங்கி மூலமாக மூன்று தவணைகளில் அப்படி அனுப்பியிருக்கிறார். எதற்காக அவ்வளவு பெரிய தொகை என்பது இன்னும் விசாரிக்கப்படாமலேயே இருக்கிறது. அதே போன்று பல அமைப்புகளுக்கும் பணத்தைக் கொடுத்திருக்கிறார்.

இந்த சந்திராசாமி தன் நெருங்கிய நண்பர்களிடம் கோபப்பட்டு பேசும்போது, "அவங்க அம்மாவை எப்படி கொலை செய்தேனோ, அதே

போன்று ராஜீவ்காந்தியையும் கொலை செய்து விடுவேன்” என்று ஆவேசமாக சொல்வாராம். இப்படி சந்திராசாமிக்கு எதிராக ஜெயின் கமிஷனில் சாட்சியம் அளித்த ராஜேந்தர் ஜெயினும், நரசிம்மராவுக்கு எதிராக சாட்சியம் அளித்த மஹந்த் சேவா தாஸ் சிங்கும் மர்மமான முறையில் இறந்துவிட்டார்கள் என்று டைம்ஸ் ஆப் இந்தியா வெப்சைட் **(11/07/1998)** செய்தியை வெளியிட்டிருந்தது என்றால் சந்திராசாமியின் மறுபக்கம் புரியாமல் இருக்காது.

ஒரு கட்டத்தில் ஜெயின் கமிஷனின் விசாரணை வேகம் சூடு பிடித்தது. அப்போது பிரதமராக இருந்த நரசிம்மராவுக்கு பதற்றம். சந்திராசாமி மாட்டிக்கொண்டாரானால் அது தமக்கும் பிரச்சனையாகிவிடும் என்று அஞ்சுகிறார். இது பற்றி ஜெயின் கமிஷன் தமது அறிக்கையில் குறிப்பிடும்போது, நரசிம்மராவ் பிரதமராக இருந்தபோது தமக்குக் கீழே இருந்த ஒரு அமைச்சரை அழைத்து, “ஜெயின் கமிஷனில் சந்திராசாமிக்கு எதிரான ஆதாரங்களை தரச்சொல்லி யாரையும் நீங்கள் கட்டாயப்படுத்தக் கூடாது” என்று கண்டித்திருக்கிறார் என்பதை பதிவு செய்திருந்தார். அமைச்சரை கண்டித்தாலும் வரவேண்டிய தகவல்கள் வந்தபடிதான் இருந்தது.

அதாவது என்போர்ஸ்மெண்ட் டைரக்டரேட், ரா, சி.பி.ஐ.-யின் தலைமை போன்ற அமைப்புகள் மூலம் ஜெயின் கமிஷனுக்கு ஆதாரங்கள் வரத்தொடங்கியது. அமெரிக்க செனட் மெம்பர் ஜான் கீரி, சந்திராசாமியின் பணப் பரிவர்த்தனை பற்றிய **130** பக்க அறிக்கையை ரா உளவுத்துறை அதிகாரிகளிடம் கொடுக்க அவர்கள் ஜெயின் கமிஷனிடம் கொடுத்துவிட்டார்கள்.

அடுத்து ஒரு அதிர்ச்சி. அமித் வர்மா என்ற ஐ.பி.எஸ் அதிகாரி, ராஜீவ்கொலை விசாரணை நடத்திய சிறப்பு புலனாய்வுக் குழுவில் இருந்தார். ஒரு கட்டத்தில் கார்த்திகேயனின் அனுகுமுறை இவருக்குப் பிடிக்கவில்லை. ஏற்கெனவே ஒரு முடிவுக்கு வந்து, அதன்பேரில் விசாரணையை நடத்துகிறார் கார்த்திகேயன் என்பதே அமித்வர்மாவின் குற்றச்சாட்டு. உள்நாட்டு பிரமுகர்கள் யாருமே இதில் பங்கெடுக்கவில்லை என்பது கார்த்திகேயனின் முடிவு. ஆனால் அமீத் வர்மாவோ உள்நாட்டு முக்கிய பிரமுகர்களின் பங்களிப்போடுதான் படுகொலை நடந்தது என்ற முடிவில் விசாரித்தார். தேடுதல் வேட்டையின்போது பல முக்கிய சாட்சிகள் கொல்லப்பட்டார்கள். அல்லது தற்கொலைக்குத் தள்ளப்பட்டார்கள். முக்கிய உள்நாட்டு பிரமுகர்கள் சிக்கிவிடாதபடிக்கு

இது நடந்ததாக நம்பினார் அமீத்வர்மா. ஒரு அதிகாரி லண்டன் வரை சென்று, அங்கிருந்த ஒரு சாட்சியத்தை களைத்துவிட்டு வந்தார். அந்தப் போக்கு அமீத் வர்மாவுக்கு சரிவரவில்லை. அதனால் இருவருக்கும் மனக்கசப்பு. கார்த்திகேயன் பிரதமர் நரசிம்மராவ் வரையிலும் செல்வாக்கு பெற்றிருந்தார். அதனால் அமீத்வர்மா வெளியேறினார்.

அப்படி வெளியேறியவரை, ஜெயின் கமிஷன் தன் ரகசிய அதிகாரியாக வைத்துக்கொண்டது. "ராஜீவ்காந்தி மரணத்தை நோக்கி விரட்டப்பட்டார் என்றே கூறவேண்டும். அவர் கொலை செய்யப்படுவதற்கு முன்பாகவே கொலைச்சதி பற்றிய தகவலை அப்போதைய தென்பிராந்திய கடற்படைத் தளபதி ராமதாஸ் பிரதமர் சந்திரசேகரிடம் தெரிவித்தார். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை" என்ற தகவலையும் அமீத்வர்மா வெளியிட்டார். இந்தப் போக்கு சந்திராசாமி வட்டாரத்திற்குப் பிடிக்கவில்லை என்பதால்தான் அமீத்வர்மா ஓரம்கட்டப்பட்டார். பின்னாளில் முத்திரைத்தாள் மோசடி வழக்கில் சிக்கவைக்கப்பட்டதும் நடந்தது.

இன்னும் சொல்லப் போனால் 1985-ம் ஆண்டிலேயே லண்டனில் வைத்து படுகொலை செய்வதற்கான முயற்சி நடந்தது. ரகசிய தகவல் கிடைத்து லண்டன் போலீஸ் நடவடிக்கை எடுத்ததால் திட்டம் தவறியது. குருநானக் குருத்துவாரின் துணைத் தலைவரான ஜெர்மைல்சிங் ரதுவாலா, பரமாத்மா சிங், மார்வின் அக்விந்தர் சிங் உட்பட 15 பேரைக் கைது செய்தார்கள். ராஜீவ்காந்தியை படுகொலை செய்தால் 60,000 பவுண்ட் பரிசு அளிப்பதாகவும் லண்டனிலேயே பாதுகாப்பான ஒரு வீடு தருவதாகவும், ஆசை வார்த்தைகள் கூறியிருக்கிறார்கள். இதுபற்றி முன்னாள் மத்திய அமைச்சர் கே.கே.திவாரி கூறும்போது, "ராஜீவ்காந்தியை கொலை செய்வதற்கு தொடர்ந்து அந்நிய சக்திகள் முயற்சி செய்தன. ராஜீவ் கொலைக்கான சதித்திட்டத்தை அந்நிய சக்திகளுடன் சேர்ந்து சந்திராசாமிதான் வகுத்தார். இன்னும் சொல்லப் போனால் இந்திராகாந்தி கொலைக்கும், ராஜீவ்காந்தி கொலைக்கும் இடையே நிச்சயமாக தொடர்பு உள்ளது. இந்த இரு கொலையிலும் தொடர்புடைய நபர்களும், நாட்டவர்களும் ஒரே தரப்பினர்தான்" என்று (அவுட்லுக்- 01.12.97) தெரிவித்திருக்கிறார்.

மற்றொரு நபர் பெங்களூரு ரங்கநாத். ராஜீவ்கொலையில் 26-வது குற்றவாளியாக சேர்க்கப்பட்டவர். சிவராசன், சுபா உள்ளிட்டவர்களுக்கு பெங்களூருவில் தங்குவதற்கு வீட்டை ஏற்பாடு செய்தவர். தூக்கு

தண்டனை கிடைத்து உச்சநீதிமன்றத்தில் விடுதலை பெற்றபோது பத்து ஆண்டுகள் சிறையில் கழித்திருந்தார். அவரும் நானும் சேர்ந்து குமுதம் இணையதளத்திற்கு ஒரு நேர்காணல் கொடுத்திருந்தோம். அதில் ரங்கநாத் சந்திராசாமி பற்றி..

“சுரேஷ் மாஸ்டர்தான் அவர்கள் தங்குவதற்கு வாடகை வீடு கேட்டிருந்தார். அவர்தான் சிவராஜனையும் சுபா உள்ளிட்ட சிலரையும் அழைத்து வந்தார். 21 நாட்கள் தங்கியிருந்தார்கள். அப்போதெல்லாம் பரவலாக எஸ்.டி.டி. போன் பூத் வசதி கிடையாது. சிவராசனும் சுரேஷ்மாஸ்டரும் எம்.ஜி ரோட்டில் உள்ள காமதேனு ஓட்டலுக்கு போன்பேச செல்வார்கள். நான், நான்கு முறை அவர்களோடு சென்றிருக்கிறேன். ஒருமுறை பேசி முடித்ததும், “சந்திராசாமிக்குதான் போன் செய்தோம். நாங்கள் தமிழில்தான் பேசுவோம். அதை அங்குள்ள ஒருவர் அவருக்கு இந்தியில் மொழிபெயர்த்துச் சொல்வார். இந்தக் கொலைக்கு முக்கிய காரணமே சந்திராசாமிதான். நேபாளம் வழியாக நாங்கள் தப்பிச்செல்ல அவர்தான் வழி உருவாக்கித் தரப்போகிறார்” என்று என்னிடம் சுரேஷ் மாஸ்டர் சொன்னார். பின்பு அவரே தொடர்ந்து ‘நாங்கள் முன்பு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்தோம். பயிற்சி எடுத்தோம். பிறகு இயக்கத்தில் இருந்து விலகிவிட்டோம். எல்லோருக்கும் பொது எதிரியான ராஜீவ்காந்தியை கொல்ல சந்திராசாமிதான் எங்களுக்கு உதவி செய்தார். என்றார். “நான் அதிர்ந்து போனேன்” என்ற அதிர்ச்சியை அம்பலப்படுத்தினார்.

“அதுமட்டுமல்ல அந்த ரகசியங்களை எல்லாம் சி.பி.ஐ சிறப்பு புலனாய்வுக் குழுவின் தலைவரான கார்த்திகேயன் என்னிடம் விசாரணை நடத்தியபோது அப்படியே ஒன்றுவிடாமல் சொன்னேன். எனது வீட்டிற்கு வருவதற்கு முன்பே, சிவராசனும் சுபாவும் வேறு ஒரு முக்கிய பிரமுகர்கள் வீட்டில் தங்கியிருந்தார்கள். அந்த வீடு சந்திராசாமியின் ஏற்பாட்டில் பிடித்திருக்கிறார்கள். தவிர, சிவராசன் கொலை செய்யப்படுவதற்கு முன்பாக இரண்டு முறை டெல்லிக்குச் சென்று வந்திருக்கிறார். “மனித வெடிகுண்டே சந்திராசாமியின் ஹரித்துவார் ஆசிரமத்தில் வைத்து சிறப்பு பூஜை செய்து கொடுக்கப்பட்டதுதான்” என்று சிவராசன் சிரித்தபடியே சொன்னதையும் சொன்னேன். அவற்றையெல்லாம் விசாரித்து உண்மையை அறியவேண்டிய சி.பி.ஐ அதிகாரி கார்த்திகேயன், என்னை கோரமாக முறைத்துவிட்டு, “சந்திராசாமி பற்றிய விஷயமெல்லாம் உனக்கு எப்படி தெரியும். இதை வேறு

யாரிடமும் சொல்லக்கூடாது. அப்படிக் கூறினால் கோடியக்கரை சண்முகத்திற்கு ஏற்பட்ட சாவுதான் உனக்கும் வரும்" என்று கடுமையாக எச்சரித்ததோடு டேபிள்மீது இருந்த பேப்பர் வெயிட்டை எடுத்து என் முகத்தின்மீது ஆவேசமாக தாக்கினார். அதில் என் பல் உடைந்தது. அதோடு என்னை தடிகொண்டு கடுமையாக அடித்தார். அந்தப் படுகாயம் இன்னும் தழும்பாக இருக்கிறது என்றதோடு. இதையெல்லாம் சி.பி.ஐ. சிறப்பு புலநனாய்வுக் குழு விசாரிக்கவே இல்லை என்பதன் நோக்கம்தான் தெரியவில்லை" என்றார்.

பெங்களூரு ரங்கநாத் அதோடு நின்றுவிடவில்லை. மேற்கண்ட தகவலை ஜெயின் கமிஷனில் அபிடவிட்டாக தாக்கல் செய்தார். விடுதலைக்குப் பிறகு சோனியாவின் அழைப்பின் பேரில் ரகசியமாக டெல்லிக்குச் சென்றார். அழைத்துச் சென்றது உளவுப் பிரிவின் சில அதிகாரிகளும், காங்கிரஸின் முக்கிய தலைவரும்தான். சிவராசன்,-சந்திராசாமி தொடர்பு பற்றி ஒன்றுவிடாமல் அனைத்தையும் சோனியாவிடம் எடுத்துக்கூறினார். இந்தப் படுகொலையில் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பில்லை. அங்கே பல போராளிக் குழுக்கள் இருக்கிறது. சிவராசன் புலிகள் இயக்கத்தில் இருந்து எப்போதே விலகிவிட்டதாக கூறினார். இவர்களை எல்லாம் சந்திராசாமியும் சுப்ரமணியசாமியும்தான் வழிநடத்தியிருக்கிறார்கள் என்று அழுத்தம் திருத்தமாக விளக்கியிருக்கிறார்.

'இல்லஸ்டிரேட்டட் வீக்லி ஆப் இந்தியா' என்ற முக்கியத்துவம் வாய்ந்த (21.06.91) இதழில் 1991-மே தேர்தல் வந்ததும், நரசிம்மராவ் பிரதமராவதற்கு, தனக்கு வேண்டிய அரசியல்வாதிகள், பெரும் வியாபாரிகள் மூலம் சந்திராசாமி செயல்பட்டார். ராஜீவ் படுகொலை நடந்த ஒரு மாதத்திலேயே அந்த இதழ் உட்பட பலவும் சந்திராசாமியை குற்றம்சாட்டியிருந்தது. ஆனாலும் விசாரணை அதிகாரிகள் அந்தப் பக்கம் திரும்பிக்கூட பார்க்கவில்லை.

ஐ.கே.குஜ்ரால் பிரதமராக இருந்த நேரம். 21.05.97 அன்று காங்கிரஸ் காரியகமிட்டி உறுப்பினர் அர்ஜுன்சிங் ஒரு ரகசிய கடிதத்தை பிரதமருக்கு எழுதுகிறார். என்னவென்றால்...

"ராஜீவ்காந்தி கொலைக்கு வெளிநாட்டு சதியும் ஒரு காரணம் என சந்தேகம் எழுகிறது. அந்த சந்தேகம் பாராளுமன்றத்திலும் ஜெயின் கமிஷனிலும் அவ்வப்போது எழுப்பப்பட்டது. மத்திய கிழக்கு நாடுகளில்

எழுந்த பிரச்சனை தொடர்பாக ராஜீவ் தெரிவித்த கருத்து என்ன என்பது பற்றியும் கமிஷன் அறிந்துகொள்ள விரும்புகிறது. அந்தத் தகவல்களை மத்திய அரசிடம் ஜெயின் கமிஷன் கேட்டிருப்பதாக தெரிகிறது. ஆனால் அரசுத் தரப்பிலிருந்து இதுவரை எந்த பதிலும் கொடுக்கப்படவில்லை.


ராஜீவ்காந்தியை பிரதமர் பதவியில் இருந்து அகற்ற **1985-**லிருந்து சில உள்நாட்டு அரசியல் சக்திகள் முயன்றன. என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் உளவுத்துறை நிறுவனங்கள் அவற்றைக் கூர்ந்து கவனித்து நடவடிக்கை எடுத்து அவற்றை பதிவு செய்து வைத்திருக்கும். இப்படி நடவடிக்கை எடுத்த தகவல்களை பற்றிய பதிவுகளையும் ஜெயின் கமிஷனுக்குக் கொடுக்க வேண்டும்.

**1990.-91** காலகட்டத்தில் சந்திராசாமியின் நடவடிக்கைகள் பற்றி கமிஷன் ஏற்கெனவே விசாரித்துள்ளது. அதனால் உளவுத்துறை, வருமான வரித்துறை, அமலாக்கப்பிரிவு, வருவாய் அமலாக்கப் பிரிவு, பிரதமர் அலுவலகம் இப்படி பல இடங்களிலும் சந்திராசாமி பற்றி உள்ள தகவல்களை கமிஷனுக்குக் கொடுக்க வேண்டும்" (தமிழன் எக்ஸ்பிரஸ் **30.09.97)** என்றெழுதியதுதான் அது.

மேற்கண்ட பதிவுகள் எல்லாம் சந்திராசாமி மீது நாமாக கூறுவதல்ல. பொறுப்பில் உள்ள தலைவர்கள் சொன்னதை ஆதாரத்தோடு கொடுத்துள்ளோம். இந்தப் பின்னணியில்தான் எனது குற்றச்சாட்டும் அமைந்தது. அதன் பேரில்தான் ஜெயின் கமிஷன் சந்திராசாமியை விசாரிக்க வேண்டும் என்றது. அந்த விசாரணை, இந்த தேதி வரையில் நடத்தவேயில்லை என்பதுதான் ஒரு பெரிய ஜனநாயக நாட்டின் வெட்கக்கேடு.

# யார் இந்த சுப்ரமணியசாமி?

*ஒரு அரசியல் கொலைக்காக மேற்கத்திய நாட்டிலிருந்து, ஒரு நுட்பமான வேதியல் வெடி மருந்துகள் இந்தியாவுக்கு கடத்தப்பட்டுள்ளதோடு, சி.ஐ.ஏ. இஸ்ரேல் மொசாட் உளவு நிறுவனங்களின் உளவாளிகள் அதிக அளவிற்கு இந்தியாவிற்குள் நுழைந்துள்ளார்கள். தென்னாட்டில் ஊடுருவியிருக்கிறார்கள்*



1991ம் ஆண்டு ராஜீவ் படுகொலை சம்பவத்திற்குப் பின் சுப்ரமணியசாமி மீதான எனது சந்தேகம் ஊர்ஜிதமான பிறகு நான் தமிழகம் முழுவதும் ஒற்றை நபராக சுற்றி பிரச்சாரம் செய்தேன். அப்போது பிரபலமான வார ஏடாக இருந்த 'தராசு' பத்திரிகையின் ஆசிரியர் ஷ்யாம் 'சாமியின் மறுபக்கம் என்ன' என்பது பற்றி கேட்டார். வியந்தார். அதையே ஒரு தொடராக எழுத வாய்ப்பளித்தார். அப்படி எழுதிய சாமியின் மறுபக்கம் தொடரில் எதேச்சையாக ஒரு வார்த்தை

வந்து விழுந்தது. மகாபாரத சகுனியும், ராமாயண கூனியும் ஒன்றாக சேர்ந்து ஒரு குழந்தையை பெற்றெடுத்தால் எப்படியிருக்குமோ அதுதான் சுப்ரமணியசாமி என்று எழுதினேன். அது மிகச் சரியானது என்று சாமியை பற்றி மேலும் நன்கு அறிந்த பிரமுகர்கள் கருத்துத் தெரிவித்திருந்தார்கள்.

அப்படிப்பட்ட சுப்ரமணியசாமி மீதான சந்தேகம் என்ன.? குற்றச்சாட்டு என்ன என்பதை என்னுடைய பதிவிலேயே கூறியிருக்கின்றேன். இந்தப் படுகொலையில் சந்திராசாமிக்கு என்ன தொடர்பு இருந்ததோ அதே அளவிலான தொடர்புதான் சுப்ரமணியசாமியினுடையது. இன்னும் சொல்லப் போனால் விடுதலைப் புலிகள் என்ற பெயரில் மற்ற தமிழர்களை தேடி ஒருங்கிணைத்து காரியத்தை முடிக்க வைத்தது சாமிதான் என்பதே என் குற்றச்சாட்டு.

ராஜீவ் படுகொலை நடந்த மே.21 அன்று ஒருநாள் முழுவதும் சாமி மர்ம நபராக தலைமறைவில் இருந்தார் என்பதை ஏற்கெனவே கூறியிருந்தேன். அன்றைய நாள் சந்திராசாமியும், சுப்ரமணியசாமியும் சென்னையிலிருந்து கார் மூலமாக பெங்களூருவிற்குச் சென்றார்கள். அன்று மாலையில், அங்கிருந்து வேறு இரு நபர்களின் பெயரில் எடுக்கப்பட்ட விமான டிக்கெட்டில் டெல்லி சென்றார்கள்.

அப்படியென்றால், பெங்களூருவில் அவர்கள் யாரை சந்தித்தார்கள். ராஜீவ் கொலையாளிகளான சிவராசனும் சுபாவும் டேங்கர் லாரி மூலமாக தப்பி பெங்களூரு சென்றதும், ஒரு முக்கிய பிரமுகர் வீட்டில் தங்கியிருந்தார்கள். அந்த பிரமுகர் யார்? மார்க்ரெட் ஆல்வா மூலமான தொடர்பு, சந்திராசாமி ஏற்பாட்டில் கிடைந்த தொடர்புதான் அந்த பிரமுகர் என பெங்களூரு ரங்கநாத் கூறியதையும் இங்கே பொருத்திப் பார்க்க வேண்டும். அந்தப் பகுதியை எல்லாம் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரிக்கவேயில்லை. விசாரித்திருந்தால் சுப்ரமணியசாமியின் மர்மத்தொடர்புகள் வெளிவந்திருக்கும்.

1995 ஜூன், ஜூலையில் சந்திராசாமியும், சுப்ரமணியசாமியும் லண்டனுக்குப் போயிருக்கிறார்கள். இவர்களின் லண்டன் பயணத்தின் நோக்கம் குழப்பத்தையும், சந்தேகத்தையும் ஏற்படுத்துகிறது. காலிஸ்தான் விடுதலைப் படையைச் சார்ந்த ஜெக்ஜித்சிங் சவுகான் என்பவர் - அகாலிதளம் கட்சியைச் சார்ந்த சேவா தாஸ் என்பவரிடம், ராஜீவ் காந்தியைக் கொல்லத் திட்டம் இருப்பதாகக் கூறி இருக்கிறார். இதை சேவா தாஸ் என்பவர் ஜெயின் கமிஷன் முன் தெரிவித்தார். லண்டனில்

உள்ள சவுகான் வீட்டில் - தீவிரவாதிகள் பங்கு கொண்ட ஒரு கூட்டம் நடந்தது என்றும், அதில் இந்தக் கொலைத் திட்டம் பற்றி கூறப்பட்டது என்றும் அவர் மேலும் கூறினார். இந்த நிலையில், சவுகானை அப்ரூவராக மாறும்படி வலியுறுத்தவே, சந்திராசாமியும், சுப்ரமணியசாமியும் லண்டன் சென்றார்களா என்று, கமிஷனில் கேள்வி எழுப்பப்பட்டது. ஜெயின் தனது அறிக்கையில் இதைக் குறிப்பிட்டு, சுப்ரமணிய-சாமிக்கு எதிராக சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறார். கமிஷன் முன்பு சுப்ரமணியசாமி நடந்து கொண்ட முறையையும் கமிஷன் குறை கூறியுள்ளதோடு, பல தேவையான பொருத்தமுள்ள கேள்விகளுக்கு, சுப்ரமணியசாமி பதிலளிக்க மறுத்து விட்டதால், உண்மையைக் கண்டறிய அவர் ஒத்துழைக்கவில்லை என்றும் கமிஷன் தனது அறிக்கையில் 8-வது பகுதியில் 231-வது பக்கத்தில் சுட்டிக் காட்டியுள்ளது.

ஜெயின் கமிஷன் பரிந்துரைப்படி அவர் பல கேள்விகளுக்கு சரியாக பதில் அளிக்கவில்லை. மூடி மழுப்பி மறைத்துள்ளார், பொய்யான கருத்துகளையும் சம்பவங்களையும் இட்டுக்கட்டி கூறியுள்ளார். அதற்காக வேண்டி இந்திய குற்றவியல் சட்டம் (இ.பி.கோ.) 179,193 ஆகியவைகளின்படி அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கூறியுள்ளது. வழக்கு நடந்து, இதன்படி சரியான தீர்ப்புக் கிடைத்தால் இவர் பத்தரை ஆண்டு தண்டனையும், அபராதமும் செலுத்தி ஜெயிலில் தள்ளப்பட வேண்டிய நபர் ஆவார்.

அடுத்து, அமெரிக்காவிலிருந்து வெளிவரும் ‘இந்தியா அப்ராட்’ (வாஷிங்டன் நாள் 22.10.1990) என்ற ஏட்டிற்கு சுப்ரமணியசாமி பேட்டி அளித்தார். அந்தப் பேட்டியில் விடுதலைப் புலிகளுக்கு முதன் முதலாக, இஸ்ரேலியர்களிடம் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்து, மொசாட் என்ற இராணுவ அமைப்பிடம் இராணுவப் பயிற்சி பெற, தான் உதவியதாக கூறினார். அதுமட்டுமின்றி ஏற்கெனவே எல்.டி.டி.யிடம் அனுதாபம் காட்டி வந்ததாகவும், ஈழப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஆண்டன் பாலசிங்கம், தன்னை அமெரிக்க உளவு நிறுவன உளவாளி என்று கூறியதால் புலிகள் ஆதரவை தான் விலக்கிக் கொண்டதாகவும் கூறியுள்ளார்.

இதுபற்றி ஜெயின் கமிஷனில், முதலமைச்சர் ஜெயலலிதா சார்பில் வாதாடிய பிரபல வழக்கறிஞரும், முன்னாள் மத்திய சட்ட அமைச்சருமான ராம்ஜெத்மலானி கூறும்போது “சுப்ரமணியசாமி நீண்ட கால விடுதலைப் புலிகளின் நண்பர். இந்தியா அப்ராட் பத்திரிகையின் செய்தியே அதற்குச் சான்று. விடுதலைப் புலிகள் இயக்கத்தில், தன்

நண்பர்கள் ஊடுருவி இருப்பதாக வேறு சாமி கூறினார். நான் அடுத்தடுத்து குறுக்கு விசாரணை செய்தபோது, அவர் தடுமாறி, அப்படி ஏதும் இல்லை என்று தன் கருத்தை மாற்றிகொண்டார்” என்றார்.

“ராஜீவ் காந்திக்குப் போதிய பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை இருந்த காலகட்டத்தில், எஸ்.பி.ஜி பாதுகாப்பை மீண்டும் ராஜீவுக்கு வழங்க வேண்டும். ஆனால் சுப்பிரமணிய சாமி அமைச்சராக இருந்தபோது தக்க ஏற்பாடு எதுவும் செய்யவில்லை. இந்தப் பாதுகாப்பை ராஜீவுக்கு வழங்க வேண்டும் என்று, அவர் பிரதமர் சந்திரசேகரிடம் விவாதிக்கவில்லை. சுப்பிரமணிய சுவாமி அமைச்சராக இருந்த காலகட்டத்தில்தான் ராஜீவ் படுகொலை செய்யப்பட்டார். எனவே அவர்தான் இதற்குப் பொறுப்பு.

இங்கே மற்றொன்றை சுட்டிக்காட்ட வேண்டும். “இந்திய பிரதமராக சுப்பிரமணியசாமி பொறுப்பு ஏற்க வேண்டும் என்று ராஜீவ் விரும்பினார்” என்று சாமியே கூறியிருந்தார். அப்போது, நான் சுவாமியின் நிழல்போல் இருந்தவன். நான் அறிய அப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை. ராஜீவும் கூறவில்லை. ஆனால் சாமி கூறினார். அதுவும் எப்படி? 91ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் காலகட்டத்தில் அடுத்த பிரதமர் ராஜீவ்தான் என்று எதிர்க் கட்சிகள் உட்பட அனைவருமே பேசிக்கொண்டிருந்த போதுதான் சாமி அப்படி பொய்கூறினார். ஆக சுப்ரமணியசாமிக்கு பிரதமராக வேண்டும் என்ற நோக்கம் இருந்திருக்கிறது? அப்படி என்றால் என்ன செய்வார்?”-என்று ராம்ஜெத்மலானி ஜெயின் கமிஷனிலேயே கேள்வி எழுப்பினார். சாமியிடமிருந்து பதில் இல்லை. இங்கே கொஞ்சம் யோசிக்க வேண்டும்.

பொதுவாக, நாம் அமெரிக்காவின் தலையீட்டையும் அதிகாரத்தையும் ஏற்பதில்லை. விரும்புவதில்லை. எதிர்க்கின்றோம். அதே போன்றுதான் இலங்கையில் உள்ள சிங்களவர்கள் இந்தியாவின் தலையீட்டையும் அதிகாரத்தையும் ஏற்காதவர்களாக இருந்தார்கள். குறிப்பாக 1987 காலகட்டத்தில், இலங்கையின் பிரதமராக இருந்த பிரேமதாசா தலைமையில் இருந்த அணியினர் இந்திய எதிர்ப்பில் கடுமையாக இருந்தார்கள். 1987-ம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்காக பிரதமர் ராஜீவ்காந்தி இலங்கை சென்றார். அந்த நாட்டின் பிரதமரான பிரேமதாசாவும் பத்துக்கும் மேற்பட்ட அமைச்சர்களும் ராஜீவ்காந்திக்கு எதிரான கண்டன அறிக்கையை

வெளியிட்டார்கள். வரவேற்பையே புறக்கணித்தார்கள். இந்தியாவிற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள்.

ஒப்பந்தக் கையெழுத்து முடிந்த பிறகு, ராஜீவ்காந்திக்கான வழியனுப்பு நிகழ்ச்சி நடந்தது. ராணுவ அணிவகுப்பு மரியாதை. பார்வையிட்டபடியே சென்றவர்மீது விஜயமுனி ரோகன டி.சில்வா என்ற ராணுவ வீரன் ஆவேசத்தோடு பலம்கொண்டு துப்பாக்கியின் அடிக்கட்டையால் அடித்தான். அதிர்ஷ்டவசமாக அதிலிருந்து தப்பினார் ராஜீவ். அப்படி அடிபட்டு விழும் ராஜீவ்காந்தி மீது உடனே மேலும் இரண்டு ராணுவ வீரர்கள் பாய்ந்து தாக்கி கதையை முடிப்பதுதான் திட்டமாக இருந்தது. பிறகு அங்கே 1989ல் ஜனாதிபதிக்கான தேர்தல் நடந்தது. பிரேமதாசா ஜனாதிபதியாக பதவியேற்றார். முதல் வேளையாக அங்கிருந்த இந்திய ராணுவத்தை வெளியேற வேண்டும் என்று பிரதமர் ராஜீவ்காந்திக்கு கடிதம் எழுதியதுதான். இந்தியப் படை தொடர்ந்து இங்கே இருப்பது இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் அத்துமீறிய தலையீடு என்றும். சர்வதேச சட்டங்களையும் மரபுகளையும், அப்பட்டமாக மீறும் செயல் என்றும் பிரேமதாசா குற்றம் சாட்டியிருந்தார்

அதுமட்டுமல்ல, ராஜீவ்காந்திக்கு எதிரானவன்தான் இந்த பிரேமதாசா என்பதை காட்டுவதற்கு. ராஜீவை தாக்கிய அந்த சிங்கள ராணுவ விஜயமுனியை சிறையில் இருந்து விடுவித்தார். மனநோயாளி, அதனால்தான் அப்படி நடந்துகொண்டான் என்று தொடக்கத்தில் கூறினார்கள். அப்படியானவனை விடுவித்து, தென்மாகான பாராளுமன்ற உறுப்பினராகவும் அவனை தேர்ந்தெடுக்க உதவினார் பிரேமதேசா.

இதனிடையே, விடுதலைப் புலிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையும் முறிந்தது. அதாவது பிரேமதாசாவே அப்படி ஒரு முறிவுக்குத் தள்ளினார். அந்த நேரத்தில்தான் புலிகளின் தரப்பில் தலைவர் ராஜீவ்காந்தியை சந்திக்க அனுமதி கேட்கப்பட்டது. உடனடியாகவே அனுமதி தரப்பட்டது. ஈழத்து கவிஞர் காசி ஆனந்தன், சச்சிதானந்தன் ஆகியோர் நேரில் சந்தித்தார்கள்.

அதற்கடுத்த ஏப்ரல் மாதத்தில், லண்டனைச் சேர்ந்த ஈழத் தமிழர் அர்ச்சனா சிற்றம்பலம் ராஜீவ்காந்தியை சந்தித்தார். அவரிடமும் ராஜீவ் மனம்விட்டு பேசினார். ஈழத் தமிழர்களின் போராட்டத்தைப் புரிந்து கொண்டிருப்பதாகவும், மீண்டும் பிரதமரானால் கட்டாயம் அவர்களுக்கு உதவுவேன் என்றும் தெரிவித்திருந்தார். இந்தவித சந்திப்புகளையும், சந்திப்பின் ஆழத்தையும் சிங்கள உளவு அமைப்புகள் ஜனாதிபதி

பிரேமதாசாவுக்குக் கொடுத்தது. அவர் அதிர்ச்சியடைந்தார். ஏற்கெனவே ராஜீவ்மீது கடும் கோபத்தில் இருந்த அவர் புலிகளுடன் இந்தியா சமரசமாக போகக்கூடிய அரசியலைக் கண்டு திடுக்கிட்டார். ராஜீவ்-புலிகள் நட்புறவு வலுப்பெற்றால்... ராஜீவ் பிரதமராகி புலிகளுக்கு உதவும் நிலை வந்தால்... அது தனக்கு பெரிய நெருக்கடியை தரும். தமக்கு அரசியல் வீழ்ச்சியாகக்கூட போகும் என்று அஞ்சினார் பிரேமதாசா.

இப்படி நினைத்து நடுங்கிய பிரேமதாசா, படுகொலை செய்யும் அளவிற்கு துணிவுள்ளவரா என்ற கேள்வி எழும். அதுலத் முதலி என்பவர் பிரேமதாசா அமைச்சரவையில் முக்கிய நபராக இருந்தார். ஒரு கட்டத்தில் பிரேமதாசாவுக்கும் அதுலத் முதலிக்கும் கருத்து வேறுபாடு. கடும் மோதல். பிரேமதாசாவுக்கு எதிராக தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அப்படியான நேரத்தில், தேர்தல் பிரச்சார மேடையில் வைத்தே அவர் சுட்டுக்கொள்ளப்பட்டார். வழக்கம்போல் கொலைப்பழி விடுதலைப் புலிகள் மீது விழுந்தது. பிறகு நடந்த அந்த நாட்டின் விசாரணை கமிஷன், படுகொலையை திட்டமிட்டு செய்தது பிரேமதாசாதான், விடுதலைப் புலிகளுக்கு சம்பந்தமே இல்லை என்ற அறிக்கையை கொடுத்தது.

அதன் பிறகு சந்திரிகாவின் கணவர் விஜயகுமார ரணதுங்கா படுகொலை செய்யப்பட்டார். அதற்கான சூத்ரதாரியும் பிரேமதாசாதான் என்பதும் பின்னாளில் நிரூபிக்கப்பட்டது.

தவிர, அந்தக் காலகட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு போட்டியாக இருந்த பல தமிழ்க் குழுக்கள் எல்லாம் பிரேமதாசாவின் அரவணைப்பிலும், பாதுகாப்பிலும் இருந்தன. அப்படியான போராளி இயக்கத்தைச் சேர்ந்த யாராவது சிலரை ராஜீவ்காந்தி படுகொலையில் ஈடுபடுத்தியிருக்கலாம். அதற்கு அமெரிக்காவின் சி.ஐ.ஏ. உளவு அமைப்புகளை பயன்படுத்தியிருக்கலாம் என்ற சந்தேகங்கள் இன்னும் தீர்க்கப்படாமலேயே இருக்கிறது. இப்படி கூறுவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. அன்னை இந்திராகாந்தியின் மறைவுக்குப் பிறகு, ராஜீவ் பிரதமராக பதவியேற்றதில் இருந்து, அவர் மரணமடையும் வரையிலும் அமெரிக்க எதிர்ப்பு நிலையிலேயே இருந்தார். ஐக்கிய நாடுகள் சபை என்பது அமெரிக்காவின் ஆதிக்கத்தில் இருக்கிறது. அதை விடுவிக்க வேண்டும். மீண்டும் பிரதமரானால் அணிசேரா நாடுகளின் அமைப்பை வலுப்படுத்த வேண்டும். அமெரிக்காவின் சார்பிலிருந்து

இந்தியாவை விடுவித்துக்கொள்ள வேண்டும் என்ற நினைப்பில் இருந்தார். அதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

ராஜீவ்காந்தி இறப்பதற்கு முன்பாக ஒரு பேட்டியளித்தார். அந்த பேட்டியில் "தெற்காசிய பகுதியில் இந்தியா ஆற்றவேண்டிய பங்கு அதிகரித்துவிட்ட நிலையில், இந்தியாவும், இந்தியத் தலைவர்களும் வெளிநாட்டு சக்திகளின் இலக்கிற்கு உள்ளாகக்கூடும்" என்றார். அந்த வெளிநாட்டு சதி எது என்று செய்தியாளர் கேட்டபோது "நிச்சயமாக அது சோவியத் நாடு அல்ல" என்றார். அப்படியானால் அமெரிக்காவின் சி.ஐ.ஏ உளவு நிறுவனத்தைக் கூறுகிறீர்களா என்று கேட்டபோது. ராஜீவ்காந்தி ஒரு நமட்டுச் சிரிப்பையே பதிலாக தந்தார். (ராஜீவ் மரணமடைந்த நான்காவது நாளில் **25.05.91** அன்று **'இந்து'** நாளேட்டில்) ராஜீவ் மரணத்தை அடுத்த பதினைந்தாவது நாளில் மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசு அவர்கள் பேட்டி ஒன்றைக் கொடுத்தார். அந்தப் பேட்டியில் நான் ராஜீவ்காந்தியை சந்தித்த போது முக்கிய கருத்துக்கள் சிலதைப் பகிர்ந்துகொண்டார். "அமெரிக்க - ஈராக் நாடுகளுக்கிடையே நடக்கும் வளைகுடாப் போரில், சந்திரசேகர் அரசு எந்த முயற்சியும் எடுக்காமல் இருக்கிறது என்றும், எனவே சமாதான முயற்சி எடுக்கவேண்டி கோர்பச்சேவை சந்திக்க இருப்பதாகவும்" ராஜீவ் என்னிடம் தெரிவித்தார். அமெரிக்க தூதர் தன்னை வந்து சந்தித்ததை குறிப்பிட்ட அவர், 'அமெரிக்கர்கள் மிகவும் ஆபத்தானவர்கள். அவர்கள் ஆதிக்கம் செலுத்துவதை தான் விரும்பவில்லை' என்றார். "அமெரிக்காவின் பிடியில் உள்ள உலக நிதி நிறுவனத்தைச் சார்ந்து நில்லாமல், ஜெர்மனியிடமும் ஜப்பானிடமும் ஏன் உதவியை பெறக்கூடாது என்றும் ராஜீவ் ஆலோசனை தெரிவித்தார். "அமெரிக்க - ஈராக் போரான வளைகுடா போரில், அமெரிக்காவின் சார்பில் நிற்கும் ஜெர்மனியும் ஜப்பானும் முழுமனதுடன் நிற்கவில்லை. தயக்கத்துடன்தான் ஆதரிக்கிறார்கள்" என்றும் ராஜீவ் என்னிடம் கூறினார் என்று **08.06.91** தேதியிட்ட ஃபிரண்ட்லைன் பத்திரிகை செய்தி வெளியிட்டது.

அதுமட்டுமல்ல, அதே **08.06.91** தேதியிட்ட ஃப்ரண்ட்லைன் ஏட்டில் பாகிஸ்தான் அதிபர் ஜியா விமான விபத்து ஒன்றில் இறந்தார். இது பற்றி கூறிய ராஜீவ்காந்தி, "அது விபத்து அல்ல. திட்டமிட்ட கொலை. நானும் ஜியாவும் காஷ்மீர் பிரச்சனையில் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்து, சமரசத்திட்டம் முடிவடையும் நேரத்தில் ஜியா கொல்லப்பட்டுவிட்டார். இந்தியா - பாகிஸ்தான் நல்லுறவை விரும்பாத

வெளிநாட்டு சக்திகள்தான் இப்படி செயல்பட்டிருக்கின்றன" என்றார் என்ற செய்தியையும் வெளியிட்டிருந்தது. இதையெல்லாம் கவனத்தில் எடுத்துகொள்ள வேண்டும்.

1991 மே தேர்தல் காலகட்டத்தில் ஒரு சம்பவம். ஆழமாக ஆய்வு செய்தால் ஆபத்து விளங்கும். அந்தத் தேர்தலில் வெற்றி பெறப்போவது யார்? ராஜீவ்காந்தியா? என்று அறிந்துகொள்ள அமெரிக்கா உட்பட பல வெளிநாடுகள் ஆர்வம் காட்டியிருந்தது. பாகிஸ்தானில் ராபர்ட் ஓகலே என்பவர் அமெரிக்கத் தூதராக உட்கார்ந்து கொண்டிருந்தார். பாகிஸ்தான், வங்கதேச நாடுகளில் தேர்தல் நடந்தபோது அதில் தலையிட்டு அமெரிக்காவிற்கு சாதகமான ஆட்சியை கொண்டுவருவதற்கான முயற்சி எடுத்தவர் இந்த ஓகலே. இந்த அதிகாரி 1991 -மே மாதத் தேர்தலுக்கு முன்பு ஏப்ரல் மாதத்தில், இந்தியாவில் வந்து தங்கினார். அதே காலகட்டத்தில் அமெரிக்காவில், இந்தியாவை பற்றிய கொள்கையை நிர்ணயிக்கும் துறையைச் சேர்ந்த ஜார்ஜ்ஷெமன் என்பவர் இந்தியாவில் தங்கினார். தொழில்,வியாபாரம், அரசியல், நிர்வாகம் உள்ளிட்ட அனைத்து துறைகளின் முக்கிய புள்ளிகளை எல்லாம் சந்தித்தார். (தி வீக்-19.05.91) ஏன் என்ற கேள்வியில் சிறப்பு புலனாய்வுக்குழு விசாரித்திருக்க வேண்டும். அப்படி விசாரிக்கவில்லை. வைகோ, பழ. நெடுமாறன், கி. வீரமணி உள்ளிட்ட தமிழ் உணர்வாளர்கள், தி.மு.க, விடுதலைப் புலிகள் என்பதிலேயே குறியாக இருந்தார்கள்.

அப்போதிருந்த இன்னொரு சூழலையும் பார்க்க வேண்டும். வளைகுடா போருக்குப் பிறகு மேலை நாடுகள் எல்லாம் இந்தியாவின் மீது ஆர்வம் காட்டியது. இஸ்லாமியர்களுக்கு எதிராக அமெரிக்கா பொய்யான காரணத்தைக் கூறி ஈராக்மீது படையெடுத்தது. வளைகுடா நாடுகளின் எண்ணெய் வளத்தின்மீது குறிவைத்து போர் நடத்தியது. அப்போது இந்தியாவின் பிரதமராக இருந்த சந்திரசேகரும் இந்த விஷயத்தில் அமெரிக்காவுக்கு ஆதரவாக இருந்தார். நடுநிலை முடிவைக்கூட எடுக்கவில்லை. அமெரிக்கப் போர் விமானங்களுக்கு இந்தியாவின் திருவனந்தபுரத்தில் பெட்ரோல் நிரப்பும் உதவியையும் செய்தது இந்தியா. அது ராஜீவ்காந்திக்குப் பிடிக்கவில்லை. "அமெரிக்க வல்லாதிக்கப் போக்கிற்கு பிரதமர் சந்திரசேகர் துணை போகிறார்" என்று குற்றம் சாட்டினார். அமெரிக்காவிற்கு எதிராக பாராளுமன்றத்திலேயே பேசினார். அதனால் அரபு நாடுகள் எல்லாம் ராஜீவ் பிரதமராக வேண்டும் என்ற ஆதரவு மனநிலையில் இருந்தது.

அதுவெல்லாம் அமெரிக்காவுக்கு அதிர்ச்சியை கொடுத்தது. தன்னிச்சையான முடிவை எடுக்கும் ஒரு தலைவரை பாரத பிரதமாக விட்டால், வரும்காலத்தில் அமெரிக்காவிற்கு எதிரான போக்கினை மேற்கொள்வார்கள். அணி சேரா நாடுகள் என சேர்ந்துகொண்டு அமெரிக்காவிற்கு தலைவலியை கொடுக்கலாம். ஐக்கியநாடுகள் அமைப்பில் அமெரிக்காவிற்கு எதிர்ப்பைக் கூட்டலாம் என்று கருதியிருக்கிறது. அப்படி ஒரு தொல்லை தரக்கூடிய அரசு இந்தியாவில் வந்துவிட்டால், வளைகுடா போரில் தலையிட்டதுபோல் இந்தியாவில் அமெரிக்கா நேரடியாக தலையிட்டாக வேண்டிய கட்டாயம் அதற்கு இருக்கிறது என்று ஒரு அமெரிக்க ஆயுத உற்பத்தியாளர் தெரிவித்தார். இது மிகவும் ஆபத்தான அறிகுறியாகும், (அதாவது ராஜீவ்காந்திக்கு) என்று ராஜீவ் இறப்பதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு 19.05.91 அன்று தி வீக் ஏடு செய்தி வெளியிட்டிருந்தது.

மற்றொரு அதிர்ச்சி சம்பவத்தையும் பதிவு செய்தாக வேண்டும். ராஜீவ் கொலை நடப்பதற்கு ஒரு வாரம் முன்பாக வந்திருந்த செய்தி அது. புது டெல்லியில் உள்ள அமெரிக்கத் தூதரகம், இந்தியாவின் பொதுத் தேர்தலில் அளவு கடந்த ஆர்வத்தைக் காட்டுகிறது. இந்த தூதரகத்தில் முதன்மை அரசியல் செயலாளராக இருப்பவர் பாரதிய ஜனதா கட்சிக்கு மிகவும் நெருக்கமானவர். ஆர்.எஸ்.எஸ் பற்றி புத்தகம் ஒன்றையும் எழுதியிருக்கிறார். ஓய்வு பெறவேண்டிய அவர் 1991- மே மாதம் நடக்கும் தேர்தலுக்காக வேண்டியே பணி நீடிப்பு பெற்றிருந்தார். அவர் ஒரு நாளைக்கு 1200 ரூபாய் சம்பளம் கொடுத்து இந்தியா முழுவதும் 100 பிரதிநிதிகளை அனுப்பி, தேர்தலுக்கு முந்தைய நிலவரம் பற்றிய கள ஆய்வு அறிக்கைகளை பெற்று வைத்திருந்தார் என்று 12.05.91 தேதியிட்ட சண்டே நாளேடு பதிவு செய்திருக்கிறது.

இப்படி பலவகையிலும் ராஜீவ்காந்திக்கு இருக்கும் ஆபத்தை மறைமுகமாக பல ஏடுகளும் சுட்டிக்காட்டி பதிவு செய்திருக்கிறது. அவர் அமெரிக்க எதிர்ப்பு நிலையை உறுதியாக மேற்கொண்டு விட்டதால், அடுத்த பிரதமராக ராஜீவ் வந்துவிடக்கூடாது என்பதில் அமெரிக்கா இருந்திருக்கிறது என்பதை சுட்டிக்காட்டியது. இன்னொரு முக்கிய சம்பவத்தைக் கூறவேண்டும். ராஜீவ் படுகொலையாவதற்கு நான்கு மாதங்கள் முன்பாகவே பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசர் அராபத் எச்சரித்திருந்தார். 91 -ம் ஆண்டு பிப்ரவரி மாதம் தனது இந்திய பிரதிநிதியிடம் தகவலைக் கூறி, ராஜீவ்காந்தியிடம் தெரிவித்துவிடுமாறு கூறியிருந்தார். அந்த பிரதிநிதியும் ராஜீவை சந்தித்து "ஆபத்து

இருக்கிறது. எச்சரிக்கையாக இருங்கள்” என்று தெரிவித்தார். பிறகு இந்தியா வந்திருந்தபோது பிரதமராக இருந்த சந்திரசேகரிடமும் அந்தத் தகவலை தெரிவித்திருந்தார் அராபத்.

அதன் பிறகு தேர்தல் பிரச்சாரம் சூடு பிடிக்கத் தொடங்கியிருந்தது. அப்போது ஒருநாள் யாசர் அராபத் தன் நண்பர்களோடு அமர்ந்து சி.என்.என். தொலைக்காட்சி நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருந்தார். பார்த்ததும் அதிர்ச்சி!. ராஜிவ்காந்தி மிக சர்வ சாதாரணமாக மக்களோடு மக்களாக நின்றுகொண்டு கை குலுக்கியபடி இருந்த காட்சி அராபத்தை வியப்படைய செய்தது. ராஜீவிற்குப் போதிய போலீஸ் பாதுகாப்பு இல்லாமலிருந்தது. உடனே தனது இந்திய பிரதிநிதியை தொலைபேசியில் அழைத்தார். “வரவிருக்கும் ஆபத்து பற்றி ராஜீவிடம் எச்சரிக்கவில்லையா” என்று கேட்டார். அந்த அதிகாரி எச்சரித்துவிட்டதாக பதில் கூறினார். உடனே ராஜீவ்காந்தியிடம் நேரடியாகவே தொடர்புகொண்டார் யாசர் அராபத். அவர் சுற்றுப்பயண நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு வரும்வரை தொலைபேசியை துண்டிக்காமல் காத்திருந்தார். தொடர்பில் வந்ததும், “ஒரு அரசியல் கொலைக்காக மேற்கத்திய நாட்டிலிருந்து, ஒரு நுட்பமான வேதியல் வெடி மருந்துகள் இந்தியாவுக்கு கடத்தப்பட்டடுள்ளதோடு, சி.ஐ.ஏ, இஸ்ரேல் மொசாட் உளவு நிறுவனங்களின் உளவாளிகள் அதிக அளவிற்கு இந்தியாவிற்குள் நுழைந்துள்ளார்கள். தென்னாட்டில் ஊடுருவியிருக்கிறார்கள் என்ற தகவல் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் புலனாய்வுப் பிரிவு உயர் அதிகாரிகளுக்கு கிடைத்துள்ளன” என்ற விவரத்தை அராபத் தெரிவித்தார் என்று **1991** ஜூலை மாத புரோப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்து. மற்ற சில நாளேடுகளிலும் வந்திருந்தது.

இப்படி வந்த செய்திகளுக்குப் பிறகுதான், தேர்தலை முன்னிட்டு ராஜிவ்காந்திக்கு அளிக்கப்பட்டிருந்த என்.எஸ்.ஜி பாதுகாப்பை விலக்கிக்கொள்ள டி,என். சேஷன் உத்தரவிட்டிருந்தார். அதுவும் ஜாதகத்தில் நம்பிக்கை இருக்கிறது, ராஜீவ்காந்திக்கு ஜாதகப்படி ஆபத்து இருக்கிறது என்று சொன்ன சேஷன்தான் அப்படி செய்தார். அதற்கான நெருக்கடியை கொடுத்தது யார் என்பதுதான் கேள்வி. இதே டி.என்.சேஷன் சுயசரிதை ஒன்றை எழுதினார். அதில் “ராஜீவ் கொலைக்குக் காரணம் இஸ்ரேலின் மொசாட் படையாகத்தான் இருக்க முடியும். அவர்களின் சதிவேலையாகத்தான் இருக்க முடியும் என்று நான் சுப்ரமணியசாமியிடம் சொன்னபோது, அவர் கோபத்தின் உச்சிக்குப்

போனார். அவர்களுக்குத் தொடர்பில்லை என்று பிடிவாதமாக, எரிச்சலோடு மறுத்தார். அதுதான் புரியவில்லை” என்று எழுதியிருந்ததைப் பார்க்கும்போது சுப்ரமணியசாமி மீது பலமான சந்தேகம் எழுகிறதா இல்லையா.

மேலே சொன்ன வெளிநாட்டு சதி தொடர்புகள் பற்றி நாளேடுகள் வெளியிட்ட செய்தியை சி.பி.ஐ. புலனாய்வுக்குழு சரியாக விசாரித்திருந்தால் அதன் பின்னணி சுப்ரமணியசாமியிடம்தான் வந்து நின்றிருக்கும். இதைத்தான் ஜெயின் கமிஷனும் சுட்டிக்காட்டியது. டாக்டர் சுப்ரமணியசாமி விசாரிக்கப்பட வேண்டிய மனிதர் என்று.

# வாழப்பாடி ராமமூர்த்தி?

*ஆனால் தங்க இருந்த அறைக்கு நேர் கீழே வெடிமருந்துகளை சேகரித்து வைக்கும் கிடங்கு இருந்தது. இதை சுட்டிக்காட்டிய பிறகுதான் ராஜீவ் சென்னைக்கே திரும்புவது என முடிவானது*



இவர்மீது உள்ள சந்தேக மர்மங்கள் விலகாமலே இருக்கிறது. பல இடங்களில் பதிவு செய்துள்ளேன். இந்த மனிதர் எதற்கு என்னை வலுக்கட்டாயமாக அழைத்தார்? சுப்ரமணியசாமிக்காக வேண்டி ஏன் என்னிடம் துருவித் துருவி விசாரித்தார்? நான் ஜெயின் கமிஷனுக்குப் போகக்கூடாது, சுவாமிமீது புகார் அளிக்கக்கூடாது என்பதில் ஏன் ஆர்வம் காட்டினார்? எதுவுமே தெரியவில்லை.

அவர்கள் இருவருக்குமான தொடர்பு என்ன என்பதும் மர்மம். நான் தமிழகத்தின் வீதிகளில் நின்று பகிரங்கமாக கேட்டுப்பார்த்துவிட்டேன். பதில் இல்லை. சம்பந்தப்பட்ட போலீஸ் புலனாய்வு அதிகாரிகள் கேட்டிருந்தால் பதில் கிடைக்க வாய்ப்பிருந்திருக்கும்? நீதிபதி வர்மா கமிஷன் விசாரணையின் போது ஒரு உண்மை வெளியானது. ராஜீவ்காந்தியின் படுகொலைக்குத் திட்டமிட்ட சிவராசன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வாழப்பாடி கே. இராமமூர்த்தியுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார். அவருடன் புகைப்படமும் எடுத்திருந்தார். அந்தப் புகைப்படத்தை சி.பி.ஐ. அடியோடு மறைத்துவிட்டது. புதுடெல்லியில் இருந்த காங்கிரஸ் கமிட்டியின் தலைமை அலுவலகத்தில் இருந்த ஒரு நபருடனும் சிவராசனுக்கு தொடர்பு இருந்தது.

ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவரான பாக்கியநாதன் என்பவர், சிறப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனு விசாரணையின் போது, தன்னிடம் சி.பி.ஐ., சிவராசனின் டைரியை காட்டி பல கேள்விகளை கேட்டதாகவும், அந்த டைரியில் சென்னை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைமை அலுவலகத்தில் வாழப்பாடி ராமமூர்த்தியை சிவராசன் அடிக்கடி சந்தித்ததாகவும் கூறப்பட்டுள்ளது என்ற செய்தியும் வெளிவந்திருந்தது. தவிர ராஜீவ்காந்தி இறந்த அந்த நேரத்தில் மற்ற தலைவர்கள் எல்லாம் அங்கே ஓடிவந்துவிட சம்பவ இடத்திலேயே இல்லாமல் போனார் வாழப்பாடி. 30 நிமிடங்கள் கழிந்த பிறகே அங்கு ஓடிவந்தார். அந்த முப்பது நிமிடமும் எங்கே இருந்தார். என்ன செய்தார் (இல்லஸ்டிரேடட் வீக்லி 15.06.91). என்ற கேள்விக்கு பதில் ஏதும் இல்லை. அதுமட்டுமல்ல. ராஜீவ் கொலையை திட்டமிட்ட சர்வதேச சதி நிறுவனம், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மேல்மட்டங்களில் ஊடுருவியிருந்தது என்பதில் சந்தேகமேயில்லை என்று 15.06.91 தேதியிட்ட பிளிட்ஸ் நாளேடு வெளியிட்டிருந்தது. அப்போது வாழப்பாடி ராமமூர்த்திதான் தலைவர். எதிர்ப்பும் கண்டனமும் தெரிவித்து மறுப்பறிக்கை விட்டிருக்க வேண்டியவர் இந்தக் குற்றச்சாட்டிற்கு பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாகவே இருந்தார். ஏன்?. மறுப்பு வெளியிட்டால் அந்த பத்திரிகை மேலும் ஆதாரத்தைப் போடும். அல்லது நீதிமன்றத்திற்கு இழுக்கும். பிறகு எல்லாமும் வெட்டவெளிச்சமாகும் என்ற பயமே காரணம்.

மரகதம் சந்திரசேகருக்காக ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ஒருவர் வீட்டில் ராஜீவ் தங்கும் ஏற்பாட்டின் பின்னணியிலேயே ஒரு சதி திட்டம்

இருந்தது என்ற தகவலும் வெளியாகியிருந்தது. ராஜீவ்காந்தி உயிருக்கு ஆபத்து என்று எடுத்துக் கூறப்பட்டாலும், பல காங்கிரஸின் முக்கிய புள்ளிகள் வற்புறுத்தியதால்தான் ராஜீவ் ஸ்ரீபெரும்புதூருக்கு வந்தார். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் ஒருவர் ராஜீவ் அன்று இரவு ஸ்ரீபெரும்புதூரில் ஒரு பணக்கார காங்கிரஸார் வீட்டிலேயே தங்கவைக்க விரும்பினார். ஆனால் தங்க இருந்த படுக்கை அறைக்கு நேர் கீழே வெடிமருந்துகளை சேகரித்து வைக்கும் கிடங்கு இருந்தது. இதை சுட்டிக்காட்டிய பிறகுதான் ராஜீவ் சென்னைக்கே திரும்புவது என முடிவானது. இன்று ராஜீவ் மரணத்திற்காக முதலைக் கண்ணீர் வடித்துக்கொண்டு உரத்த குரலில் பேசிவரும் பல காங்கிரஸ் தலைவர்கள் அன்று ராஜீவ் ஸ்ரீபெரும்புதூர் போகவேண்டும் என பிடிவாதம் காட்டியவர்கள்தான். அதில், மார்க்ரெட் ஆல்வாவும் ஒருவர் என்று 'தி டைம்ஸ் ஆப் இந்தியா' 18.11.97 அன்று செய்தி வெளியிட்டிருந்தது. ஆளுநரிடம் வலியச் சென்று ராஜீவ்காந்திக்கு ஆபத்து இருக்கிறது. அந்த வீடு சரிவராது. இன்னும் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும் என்றெல்லாம் பேசி மனு கொடுத்து, தமிழக போலீஸ் டி.ஜி.பி-யை வரவழைத்து கேள்விகளை கேட்ட இந்த வாழப்பாடி ராமமூர்த்தி என்ன காரணத்திற்காக அப்படி செய்தார் என்பதை கடைசிவரை கூறவில்லை. விசாரிப்பவர்களும் விட்டுவிட்டார்கள்.

# எம்.கே. நாராயணன்?



ராஜீவ்காந்தி மரணத்தின் போது இந்திய உளவுத் துறை தலைவராக இருந்த மனிதர். இவரின் நடவடிக்கைகள் அனைத்தும் சந்தேகத்திற்கு இடமாகவே இருந்தது. 17 ஆண்டுகளுக்கு முன்பாகவே நான் பகிரங்கமாக குற்றம் சாட்டியிருந்தேன். பெயரளவிற்காவது ஒரு வழக்கு என்மீது போட்டிருக்க வேண்டும். எப்படி ஏதும் செய்யவில்லை. என்பதைவிட முடியவில்லை.காரணம் என் சந்தேகங்கள் உண்மையானது. நான் சொல்வதைவிட இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சி.பி.ஐ.யின் தலைமை புலனாய்வு அதிகாரி ரகோத்தமன் 18 ஆண்டுகள் கழித்து புத்தகம் எழுதியிருந்தார். அந்த புத்தகத்தில் ஒரு பகுதி..

“ராஜீவ் கொலையில் பாதுகாப்புக் குளறுபடிகள் குறித்து விசாரித்த வர்மா கமிஷனில், இந்திய உளவுத் துறை தலைவர்கள் முதற்கொண்டு பலபேர் சாட்சி சொல்லியிருக்கிறார்கள். பல அதிமுக்கிய ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அவற்றில் ஒன்று, ஐ.பி.யின் தலைவராக இருந்த எம்.கே. நாராயணன் மே 22 அன்று கேபினெட் செகரட்டரிக்கு அனுப்பிய ஒரு கடிதம். அந்தக் கடிதத்தில் எம்.கே. நாராயணன், ‘எங்களுக்கு ஒரு வீடியோ கேசட் கிடைத்திருக்கிறது. ஸ்ரீபெரும்புதூர் சம்பவம் நிகழ்ந்த அன்று எடுக்கப்பட்ட அந்த வீடியோ கேசட்டை நாங்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். விரைவில் அது பற்றிய தகவல்களை அளிக்கிறோம்” என்று குறிப்பிட்டிருக்கிறார்.

“ஆனால் வர்மா கமிஷன் விசாரணைகள் முடிகிற வரை, சி.பி.ஐ.யின் புலன் விசாரணைகள் முழுவதுமே முடிகிறவரை அப்படி எந்த ஒரு வீடியோ கேசட்டையும் ஐ.பி. வெளியிடவேயில்லை. ராஜீவ் கொலை வழக்கின் தலைமைப் புலனாய்வு அதிகாரி என்னும் முறையில் இது பற்றி என்னால் உறுதியாக சொல்ல முடியும். அப்படி ஒரு வீடியோ கேசட் ஐ.பி.யின் வசம் அப்போது கிடைத்திருக்குமேயானால், அது விசாரணைக்கு மிக முக்கிய ஆதாரமாக உதவி செய்யக்கூடியதாக இருக்குமானால் எங்களுக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் இறுதிவரை அந்த கேசட் வரவேயில்லை. சற்று யோசித்துப் பாருங்கள். கொலை வழக்கு விசாரணையை தொடங்கும்போது ஹரிபாபு எடுத்த புகைப்படங்களைத் தவிர எங்களுக்கு வேறு எந்த ஆதாரமும் கிடையாது. இருட்டில்தான் நடக்கத் தொடங்கியிருந்தோம். ஐ.பி. தலைவர் குறிப்பிட்ட கேசட்டை எங்களுக்குத் தந்திருந்தால் வழக்கில் ஒரு சிறு வெளிச்சம் புலப்பட்டிருக்கலாம் அல்லவா?

அன்றிரவு ஏழரை மணியிலிருந்து பத்து மணி வரை சிவராசன் குழுவினர் அந்தப் பொதுக்கூட்ட மைதான வளாகத்தில்தான் சுற்றிக் கொண்டிருந்திருக்கிறார்கள். யார் யார் இருக்கிறார்கள். அவர்கள் யாருடன் பேசுகிறார்கள் என்பது அந்த கேசட்டில் பதிவாகியிருந்தால் அது வழக்கை தொடங்க எத்தனை உதவியாக இருந்திருக்கும்?. எங்கள் விசாரணையில், சிவராசன், லதா கண்ணனுடன் சென்று லதா பிரியகுமாருடன் பேசினார். அவர் மூலமாகத்தான் மாலையிட அனுமதியே கிடைத்தது என்று தெரிந்திருந்தது. இந்த விஷயத்தை அந்த கேசட் ஒருவேளை உள்ளங்கைக் கனி ஆதாரமாகக் காட்டியிருக்குமல்லவா? சிவராசனும் மற்றவர்களும் சம்பவ இடத்தில் யார் யாருடன் பேசினார்கள், அவர்களுக்கு எப்படி அனுமதி கிடைத்தது என்பதையெல்லாம் அந்த கேசட் அவசியம் சுட்டிக்காட்டியிருக்கும்.

ஆனால், அந்த வீடியோ கேசட் சி.பி.ஐ இடம் கிடைத்தால் மரகதம் சந்திர சேகருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் பிரச்சனை வரும் என்று கருதி முழுப்பூசணியை மறைத்துவிட்டது ஐ.பி. இறந்த தலைவரைவிட இருக்கும் பிரமுகர்கள் முக்கியமாகிவிடுகிறார்கள்." என்று பதிவு செய்திருக்கிறார். சொல்வது நாம் அல்ல. சி.பி.ஐ.யின் தலைமைப் புலனாய்வு அதிகாரி ரகோத்தமன்.

ஊரில் ஒரு கொலை நடக்கிறது. அது சம்பந்தமான ஆதாரத்தை ஒருவர் வைத்துக்கொண்டிருக்கிறார். என்னிடத்தில்தான் இருக்கிறது என்கிறார். ஆனால் விசாரணை செய்யும் போலீஸ் அதிகாரியிடம் தரமாட்டேன் என்கிறார். என்ன செய்வார்கள்? நம் ஊர் ஏட்டையாவிடம் கேட்டாலே போதும். 'கட்டி தொங்கவிட்டு உரிச்சுடுவோம் இல்ல' என்று கூறுவார். ஆனால் எம்.கே. நாராயணன் என்பவர் கடவுளுக்கும் மேலானவர். சட்டமாவது நீதியாவது? பின்னாளில், அவருக்குதான் நாட்டின் அதிஉச்ச பதவிகளை தூக்கிக் கொடுத்தார்கள். என்ன செய்வது?

ஒருவேளை அந்த வீடியோ கேசட் கிடைத்திருந்தால் மரகதம் சந்திரசேகர் தொடங்கி, வாழப்பாடி ராமமூர்த்தி, சுப்ரமணியசாமி, சந்திராசாமி என்று ஒருவருக்கு ஒருவர் தொடர்பில்லாதது மாதிரி இருந்த ரகசியம் உடைந்திருக்கும். கொலைக்காரர்கள் யார் யாருடனெல்லாம் பேசினார்கள் என்பதை வைத்தே சதிவலைப் பின்னலை அறுத்திருப்பார்கள். புலிகளுக்கும் இந்தக் கொலைக்கும் சம்பந்தமில்லை என்பது வெளிச்சமாகியிருக்கும். துரதிர்ஷ்டம், அது மறைக்கப்பட்டதுதான் புலிகளை நோக்கியே விசாரணை நகர்ந்தது. ஒருவேளை அதற்காகத்தான்

திட்டமிட்டு அது மறைக்கப்பட்டதா என்ற சந்தேகமும் வலுவாக எழுகிறது. அந்தக் காலகட்டத்தில் பல்வேறு ஊடகங்களிலும், ராஜீவ் காந்திக்கு ஆபத்து இருப்பதாக செய்திகள் வந்தது. அவரே ஒரு செய்தியாளரின் கேள்விக்கு “அந்திய சக்திகள் இந்திய தலைவர்களுக்கு குறிவைக்கிறது” என்று சூசகமான பதில் தந்தார். தவிர பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவரான யாசர் அராபத் எச்சரித்தார். இதுவெல்லாம் இந்திய உளவுத் துறைத் தலைவராக இருந்த எம்.கே. நாராயணனுக்குத் தெரியாமலே போய்விட்டது என்பதை நாம் நம்பித்தான் ஆகவேண்டும்? உளவுத் துறையின் தலைவரான இந்த நாராயணன் மத்திய அரசுக்கு, ராஜீவ் குறித்து என்ன பாதுகாப்பு நடவடிக்கையை பரிந்துரைத்தார் என்பதும் மறைக்கப்பட்டது.

எம்.கே. நாராயணன் பற்றி வர்மா கமிஷன் தெரிவித்த ஒரு கருத்து மிக முக்கியமான ஒன்றாகும். “ராஜீவ்காந்திக்கு அளிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் எம்.கே. நாராயணனுக்கு திருப்தியை அளிக்கவில்லை என்பதை இந்த ஆணையம் உணர்கிறது. ஆனால், வெளியே சொல்ல முடியாத காரணங்களால், அவர் இதற்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இது பற்றி இந்த நாள்வரை எம்.கே. நாராயணன் வாய்மூடி மௌனம் சாதிக்கிறார். உயர்மட்டத்தில் நடக்கும் இந்தக் குறைபாடுகளுக்கான காரணங்களை கண்டறிந்து உடனே களைய வேண்டும்” என்பதே அந்தக் கருத்து.

புதுடெல்லியில் இருந்து வெளிவரும் ‘அவுட்லுக்’ பத்திரிகை **24.11.97** தேதியிட்ட இதழில் ஒரு அதிர்ச்சி தகவலை வெளியிட்டது. “உளவுத்துறை வசம் இருந்து பிரதமர் அலுவலகத்திற்கு வந்திருந்த அதி முக்கியத்துவம் வாய்ந்த ரகசிய கோப்புகள் எல்லாம் மறைக்கப்பட்டுவிட்டது. காணாமல் போய்விட்டது” என்பதே அந்தச் செய்தி.

**1989-**லிருந்து ராஜீவ்காந்தி பாதுகாப்பு குறித்து உளவுத்துறை அதிகாரிகள் எழுதிவந்த குறிப்புகளைக் கொண்ட கோப்பு.

சந்திராசாமி, சுப்ரமணியசாமி ஆகியோருடன் வெளிநாட்டு உளவுநிறுவனங்கள் தொடர்புகொண்டு பேசியபோது இடைமறித்துக் கேட்கப்பட்ட தகவல்களை கொண்ட கோப்பு.

**1987-**ம் ஆண்டிலேயே ராஜீவ்காந்தியை கவிழ்ப்பதற்கு சந்திராசாமி முயற்சி எடுத்து குடியரசுத் தலைவர் ஜெயில்சிங்கை சந்தித்தது வரை

எடுக்கப்பட்ட உளவுத் தகவல்கள், ஐ.பி. கண்டறிந்த உண்மைகள் அடங்கிய கோப்பு

ராஜீவ் கொலை சம்பந்தமாக உளவு நிறுவனங்கள் உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவானிடம் தெரிவித்த கருத்துக்கள், அது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் அடங்கிய கோப்பு

கடைசியாக 1991-ஏப்ரல் 20-ம் தேதி, ராஜீவை சென்னையில் கொலை செய்யலாமா? அல்லது டில்லியில் கொலை செய்யலாமா? என்ற அர்த்தத்தில் இருவர் பேசிக்கொண்ட ஒயர்லெஸ் தகவலை இடைமறித்து உளவுத் துறை பதிவு செய்தது. அந்த விவரங்கள் அடங்கிய கோப்புகளும் காணவில்லை.

என்று அவுட்லுக் வார ஏடு வெளியிட்ட இந்தத் தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஆனால் பதில் சொல்ல வேண்டிய எம்.கே. நாராயணனும், பிரதமர் நரசிம்மராவும் கடைசிவரை வாய்திறக்கவேயில்லை. ஏன்? கடைசிவரை ஜெயின் கமிஷனுக்கு அது கிடைக்கவேயில்லை. யார் இந்த எம்.கே. நாராயணன் என்பதை இப்போதாவது புரிந்துகொள்ளுங்கள்.

மற்றொரு அதிர்ச்சியையும் பார்ப்போம். இந்திய உளவுத்துறைகளில் ஒன்றான "ரா" அமைப்பின் முன்னாள் கூடுதல் செயலாளர் பி. ராமன். அவர் 'கௌபாய்ஸ் ஆப் ரா' என்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார். அதில் ராஜீவ்காந்தி படுகொலையில் ஈடுபட்ட தற்கொலைப் பெண் தனு, ஒரு காங்கிரஸ் தலைவரின் வீட்டில்தான் வாடகைக்குத் தங்கியிருந்தார். அந்த தனு ராஜீவ்காந்தியை கொல்ல வரும்போது அந்த காங்கிரஸ் தலைவியுடன் வந்துதான் காரில் இறங்குகிறார். அந்தத் தலைவி ராஜீவ்காந்தி கொலைக்குப் பிறகும் காங்கிரஸ் எம்.எல்.ஏ ஆகிறார் என்று எழுதியுள்ளார் (1.1.2004) ஆக ஒரு முன்னாள் உளவுத்துறை அதிகாரிக்குத் தெரிந்திருந்த இந்த ரகசியம், அப்போதய உளவுத்துறையின் தலைவராக இருந்த எம்.கே. நாராயணனுக்குத் தெரியாமல் போனதேன்? அவர் அந்த வீடியோ கேசட்டை மறைத்த ரகசியம் இப்போது மேலும் புரிகிறதல்லவா?

# வாய்மையை வென்ற கார்த்திகேயன்?



## “வாய்மையே வென்றது”

ராஜீவ் கொலையாளிகள் 26 பேருக்கும் தூக்கு தண்டனை என்று பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியபோது திருவாளர் கார்த்திகேயன் வாயிலிருந்து உதிர்த்த வார்த்தைகள் இது. உண்மையில் வாய்மை வென்றதா என்ற கேள்வி. அதை நாம் சொன்னால் பிரச்சனை. அதனால் அவர்கள் துறையைச் சார்ந்தவர்களின் குரலிலேயே பார்ப்போம்.

அமீத் வர்மா என்ற வடநாட்டு ஐ.பி.எஸ் போலீஸ் அதிகாரி. ராஜீவ் கொலை வழக்கு விசாரணையில் அவரும் ஒரு அதிகாரியாக இருக்கிறார். ஒரு கட்டத்தில் கார்த்திகேயனின் ஒருதலைப்பட்சமான முடிவைக் கண்டு அதிர்ந்து போகிறார். “முடிவை செய்து விட்டு அதை நோக்கி மட்டுமே விசாரணை என்று போகிறார். சம்பந்தப்பட்ட அரசியல் தலைவர்களை விசாரிக்க மறுக்கிறார்” என்றெல்லாம் குற்றம் சாட்டிவிட்டுச்சென்றார். அந்தக் காலகட்டத்தில் பிரதமராக இருந்த நரசிம்மராவுக்கு மிகவும் செல்லப்பிள்ளையாக இருந்த கார்த்திகேயனை எதிர்த்து அந்த அதிகாரியால் ஏதும் செய்ய முடியவில்லை. இதிலிருந்து விலகிச் சென்றார்.

அவருக்கு அடுத்த நிலை அதிகாரியான தலைமைப் புலனாய்வு அதிகாரி ரகோத்தமன் எழுதிய புத்தகத்தில்...

“நீதிபதி வர்மா கமிஷன் விசாரணைகள் முடிந்து, பாதுகாப்பு .ஏற்பாடுகள் படுமோசம், அதைவிட உளவுத்துறையின் செயல்பாடுகள் மோசம் என்று அறிக்கையை எழுதி இந்திய அரசுக்கு அனுப்பியது. பிறகு முறைப்படி உளவுத்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. 1995-ம் ஆண்டு இந்த வழக்கை விசாரிக்கும் பொறுப்பையும் சி..பி.ஐ.யின் சிறப்பு புலனாய்வுப் பிரிவின் வசமே ஒப்படைத்தது அரசு. முன்னதாக பாதுகாப்பு குளறுபடிகளுக்காக மாநில போலீஸார் மீது விசாரணை மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட தமிழக போலீஸ் அதிகாரிகள் மீதான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

உளவுத்துறை அதிகாரிகள் மீதான விசாரணையை மட்டும் சி.பி.ஐ. மேற்கொள்ள உத்தரவிடப்பட்டு, வழக்கு எஸ்.பி அளவிலான ஓர் அதிகாரியின் பொறுப்பில் விடப்பட்டது. (பொதுவாக டி.எஸ்.பி. அளவிலான விசாரணைகள்தான் நடக்கும்)

ஆனால் அந்த விசாரணை என்ன ஆனது, யார் யார் விசாரிக்கப்பட்டார்கள், விசாரணையில் என்ன தெரிந்தது, என்ன முடிவெடுத்தார்கள், விசாரணை முடிவு அரசுக்கு அனுப்பப்பட்டதா என எதுவும் தெரியாது. சொல்லப்போனால் அந்த கேஸ் டயரிகளே இன்று இருக்குமா என்பது சந்தேகம்.

அந்த விசாரணை ஒழுங்காக நடந்திருக்குமேயானால் உளவுத்துறை அதிகாரிகள் எங்கெங்கே கோட்டை விட்டார்கள், எதனால் ஸ்ரீபெரும்புதூர் சம்பவம் குறித்த ஒரு தகவல்கூட உளவுத்துறைக்கு முன்கூட்டியே தெரியாமல் போனது என்று ஆரம்பித்து அனைத்து வினாக்களுக்கும் விடை வந்திருக்கும்.

ஆனால் எம்.கே. நாராயணன் தொடங்கி, அத்தனை ஐ.பி. அதிகாரிகளையும் காப்பதற்காகவே அவதரித்த மாதிரி சிறப்பு புலனாய்வுப் பிரிவின் தலைமை இந்த வழக்கில் நடந்துகொண்டு, மூடி மறைத்துவிட்டது. இதன் மூலம் சில தனிநபர்கள் காக்கப்பட்டிருக்கலாம். ஆனால் தேசத்திற்கு எத்தனை இழுக்கு?" (பக்கம் 206, 207,208)

யார் யாரை சொல்கிறார் என்று தெரிகிறதா? சி.பி.ஐ. சிறப்பு புலனாய்வுக் குழுவின் தலைவரான கார்த்திகேயன் பற்றி தலைமைப் புலனாய்வு அதிகாரி ரகோத்தமன் சொல்கிறார். என்ன ஒரு வெட்கக்கேடு பார்த்தீர்களா?

போகட்டும் அதே ரகோத்தமன் அதிகாரி அடுத்து என்ன சொல்கிறார் என்பதைப் பார்ப்போம்.

"சிறப்பு புலனாய்வுப் பிரிவின் தலைவராக இருந்த கார்த்திகேயன் அன்றைக்கு பிரதமர் நரசிம்மராவ் தொடங்கி பல அமைச்சர்கள், மிக உயர்ந்த அதிகாரிகள் வரை எளிதில் அனுகக்கூடியவராகவும் பழகக்கூடியவராகவும் இருந்தார். அவர் மனம் வைத்தால் எந்த வழக்கையும் எடுக்கலாம், முடிக்கலாம். அவரது பணியில் குறுக்கிட ஒருத்தரும் கிடையாது. இதனை என்னால் நிச்சயமாக சொல்ல முடியும். சி.பி.ஐ.யின் இயக்குனரே, கார்த்திகேயன் விஷயத்தில் தலையிட மாட்டார்.

அப்படி இருந்து, அவர் வழக்குகளில் பட்டும் படாமலும் நடந்துகொண்டது, சி.பி.ஐ. எடுத்திருக்க வேண்டிய வழக்குகளை வேண்டுமென்றே தவிர்த்தது, தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் கசப்பிற்கு ஆளாகாதிருப்பதே முக்கியம் என்று நினைத்ததை என்னால் ஜீரணிக்கவே முடியவில்லை. நான் உட்பட அன்று சிறப்புப் புலனாய்வுக் குழுவில்

பணியாற்றிய அத்தனை பேரும் அவருக்குக் கீழே இருந்தவர்கள். எங்கள் அபிப்பிராயங்களை சொல்ல முடியுமே தவிர, அவரை நிர்ப்பந்தம் செய்ய முடியாது. எந்த விஷயத்திலும் அவர் சொல்வதுதான் இறுதி" என்றிருந்தது.( பக்கம் 208-209)

சொல்பவர் யார் ரகோத்தமன். எப்போது சொல்கிறார். 2009-ம் ஆண்டில்.

ஆனால், இதைத்தான் நான் தொடக்கத்தில் இருந்து கூறிவந்தேன். தமிழகத் தலைவர்களை எல்லாம் விசாரித்திருந்தால் உண்மை அம்பலமாகியிருக்கும். இதில் தி.மு.க, தி.க, மற்றும் உணர்வாளர் தலைவர்கள் என்று விசாரிக்க வேண்டும் என்பதையும் நான் மறுக்கவில்லை. விசாரித்தால் அவர்களிடம் கொலைச்சதி தகவல்கள் ஏதும் இருக்க வாய்ப்பில்லை என்பது என் கருத்து. ஆனால் சுப்ரமணியசாமி, வாழப்பாடி ராமமூர்த்தி, மரகதம் சந்திரசேகர், அவரது மகன், மகள் உள்ளிட்ட இன்னும் சில காங்கிரஸ் தலைவர்களை எல்லாம் அழைத்து விசாரித்திருந்தால்..? சதித்திட்டத்தின் பல அதிர்ச்சி தகவல்கள் வெளிவந்திருக்கும். இதைத்தான் அன்றே நான் கார்த்திகேயனுக்கு எதிராக பேசிவந்தேன்.

அடுத்ததைப் பார்ப்போம். ரகோத்தமனின் அதே புத்தகத்தில் (பக்கம் 209,210,211) இன்னொரு அதிர்ச்சியும் பதிவாகியிருக்கிறது.

"இவை ஒருபுறமிருக்க, நீதிபதி வர்மா, சதித்திட்டம் குறித்த விசாரணைகளை தங்களால் செய்ய முடியாது என்று சொல்லிவிட்ட பிறகு, அதற்காக நியமிக்கப்பட்ட ஜெயின் கமிஷனுக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் தந்து உதவ வேண்டிய பொறுப்பு, சிறப்புப் புலனாய்வுக் குழுவுக்கு இருந்தது.

ஏனென்றால், ராஜீவ் கொலை வழக்கைப் பொறுத்தவரை, சிறப்புப் புலனாய்வுக் குழுதான் இன்வெஸ்டிகேடிங் ஏஜென்சி. ஜெயின் கமிஷன் என்பது அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு விசாரணை கமிஷன். முறைப்படி நாங்கள் விசாரணையில் கண்டுபிடித்த விவரங்கள் அனைத்தையும் கமிஷனிடம் சமர்ப்பிப்பதுதான் முறை.

அப்படித்தான் நடந்து கொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் நடந்ததே வேறு. புலன் விசாரணையில் தெரியவந்த அனைத்து விஷயங்களையும் கமிஷனுக்கு, சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவர் (கார்த்திகேயன்)

அனுப்பிவைக்கவேயில்லை. இதற்குச் சாதகமாக தடா கோர்ட்டில், வழக்கின் முக்கிய ஆதாரங்கள் வெளியே கொடுக்கக்கூடாது என்று ஒரு வழக்கு தொடர்ந்து தீர்ப்பு வாங்கியிருந்ததை சாதகமாக்கிக் கொண்டுவிட்டார்கள்.

தடா சட்டத்தில் ஒரு பிரிவு (பிரிவு 16) உண்டு. அதிகாரபூர்வமில்லாத யாருக்கும் வழக்கு விவரங்களைச் சொல்லக்கூடாது என்பதே அது. ஆனால் ஜெயின் கமிஷன் அதிகாரபூர்வமற்ற அமைப்பா? அரசாங்கம் நியமித்த விசாரணை கமிஷன் அல்லவா?

ஆயினும், ஏன் வழக்கின் எந்த ஆவணங்களையும் சி.பி.ஐ. ஜெயின் கமிஷனுக்குத் தரவேயில்லை?

விசாரணையின் இடையே பல தமிழக அரசியல்வாதிகள், முக்கியஸ்தர்கள் எதிர்பட்டதும், அவர்களை விசாரிக்க அனுமதி கோரியபோது அது கொடுக்கப்படாமல் தட்டிக் கழிக்கப்பட்டதும் ஜெயின் கமிஷனுக்குத் தெரிந்துவிடுமே?

இது ஒன்றைத் தவிர எனக்கு வேறு எந்தக் காரணமும் தெரியவில்லை. எப்படியானாலும், ஜெயின் கமிஷனுக்கு சிறப்பு புலனாய்வுக் குழு ஒத்துழைப்பு அளிக்காமல் தவிர்த்ததை என்னால் இறுதிவரை ஜீரணிக்கவே முடியவில்லை.

ஏனெனில், எஸ்.ஐ.டி. புலனாய்வு முடிகிறவரை தனது விசாரணையை ஆரம்பிக்கப் போவதில்லை என்று சொல்லி, நீதிபதி ஜெயின் எங்களுக்காக காத்திருந்தார். சி.பி.ஐ. விசாரணை நடந்துகொண்டிருக்கும்போது தன்னுடைய விசாரணை ஆரம்பித்தால் குழப்பங்கள் வரும் என்று நினைத்தே அவர் அப்படி செய்தார். அப்படிப்பட்ட மனிதருக்கு, அவருக்குத் தரவேண்டிய நியாயமான உதவிகளைக் கூட சிறப்புப் புலனாய்வுக் குழு செய்யாமல் தவிர்த்தது தவறில்லாமல் வேறென்ன?

கார்த்திகேயன், ஜெயின் கமிஷனுக்குத் தகவல் தராதிருந்ததற்கு இன்னொரு காரணம் இப்போது தோன்றுகிறது. ஜெயின் கமிஷன் விசாரணை தொடங்குவதற்கு முன்னால் ஓர் அறிக்கை வெளியிட்டது. சிறப்புப் புலனாய்வுக் குழுவின் விசாரணைகள் சரியாக நடைபெற்று இருக்கின்றனவா என்பதை ஆராயவும் கமிஷனுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதே அந்த அறிக்கையின் சாரம்.

இது கார்த்திகேயனுக்கு கவலையளித்திருக்கலாம். ஏனெனில் எங்கள் வழக்கு விசாரணை ஓட்டத்தில், எங்கெல்லாம் நாங்கள் தமிழக அரசியல்வாதிகளை விசாரிக்க வேண்டி வந்ததோ, அங்கெல்லாம் முட்டுக்கட்டை போடப்பட்டிருந்தது. இந்த விவரங்கள் ஜெயின் கமிஷனுக்குப் போனால் நிச்சயம் கேள்விக்குள்ளாக்கும். என்ன சொல்லியும் நியாயப்படுத்த முடியாத அத்தகைய உத்தரவுகளுக்கு என்ன விளக்கம் தர முடியும்?

பின்னர், நீதிபதி ஜெயினே தனது விசாரணைக்கு சிறப்புப் புலனாய்வுக் குழுவினரை அழைத்தபோது அவர் மனம் திறந்து பேசிய சிலவற்றை நானே கேட்டேன்.

“கார்த்திகேயன். நீங்கள் இந்த விசாரணையை மிகச் சிறப்பாகச் செய்து முடித்திருக்கிறீர்கள். குறுகிய காலத்தில் எந்த ஆதாரத்தையும் விட்டுவிடாமல் ஒழுங்காக சேகரித்துக் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தியிருக்கிறீர்கள். ஆனால் வழக்கு விவரங்களை மட்டும் எனக்குத் தராமல் மறைத்து விட்டீர்கள். விசாரணையின் போது பத்திரிகைகளுக்கு கசிந்த அளவு செய்திகள் கூட, ஜெயின் கமிஷனுக்கு கிடைத்துவிடாதபடி நீங்கள் கவனமாக பார்த்துக்கொண்டதை அறிந்த பிறகுதான், நானே சுயமாக மீண்டும் அனைத்து தரப்பையும் விசாரிக்க வேண்டும் என்று முடிவு செய்தேன்.” என்று சொன்னார்.

கார்த்திகேயனின் கீழ் இருந்த அதிகாரியே அப்படி கூறியிருக்கும் போது நாம் என்ன சொல்வது. இப்படி வாய்மையை வென்று? கார்த்திகேயன் பொய்யிக்கும் பித்தலாட்டத்திற்கும் முடிசூடியதை அவரது நண்பர் ரகோத்தமனே புட்டுப்புட்டு வைத்திருக்கிறார்

போகட்டும். அடுத்து ஒரு அதிகாரி. பெயர் மோகன்ராஜ். சி.பி.ஐ.-யின் சிறப்பு புலனாய்வுக் குழுவின் தலைமை விசாரணை அதிகாரியான ரகோத்தமனுக்கு கீழே இருந்த இன்ஸ்பெக்டர். இவர் சுதந்திரப் போராட்ட தியாகியும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான திரு.நெல்லை ஜெபமணியின் மகன். அவர் என்ன சொல்கிறார்:

“ராஜீவ் கொலையுண்ட இடத்தில் இருந்த மரகதம் சந்திரசேகரின் மகன் லலித் சந்திரசேகர், அம்மாவை ஆஸ்பத்திரியில் சேர்க்கப் போய்விட்டேன் என்று சொன்னார். ஆனால் எங்கள் விசாரணையில் லலித் சந்திரசேகர் அந்த மருத்துவமனைக்குப் போகவில்லை என தெரியவந்தது. ஒரு காங்கிரஸ்காரர்தான் மரகதம் சந்திரசேகரை மருத்துவமனையில்

சேர்த்திருக்கிறார். பதிவேட்டிலும் அப்படி இருந்தது. லலித் சந்திரசேகர் முரணாக சொல்கிறார் என்று தெரிந்தது. அவரது தவறான வாக்குமூலத்தை மேலும் விசாரிக்கவில்லை. இந்த முரண்பாடு குறித்து நான்கூட கேட்டேன். ஆனால் யாரும் சீரியஸாக எடுத்துக்கொள்ளவில்லை. லலித் சந்திரசேகர் முதலில் பார்க்கும் போது அடிபடாமல் இருந்திருக்கிறார். பிறகு நான்கு நாள் கழித்து காலில் பெரிய கட்டுப்போட்டுக்கொண்டு இருந்திருக்கிறார். எப்படி? ஆனால் விசாரிக்க அனுமதி கிடைக்கவில்லை.

இந்த நேரத்தில், மல்லிகை ஆபீஸ் முன்பு சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்ற ஒருவரை பிடித்தோம். அவரை விசாரித்ததில், 'அமெரிக்காவில் ஒரு அம்மா மல்லிகை (அதாவது எங்கள் அலுவலகம் செயல்பட்ட மாளிகை) முகவரியைக் கேட்டார்கள். அதனால் முகவரியை குறிக்க வந்தேன்' என்றான்.

அமெரிக்காவில் இருந்த அந்தப் பெண்மணியின் கணவர் பெயர் டேனியல் பீட்டர். இவர் மரகதம் சந்திரசேகரின் மகன் லலித் சந்திரசேகருடன் திருப்பெரும்புதூர் வந்து அங்கு நடந்த விபத்தில் பலியானவர்.

பிடிபட்டவனின் வீட்டை சோதனை செய்தோம். அங்கு ஒரு கடிதம் கிடைத்தது. அதில், "இந்த லலித்தால்தான் இந்த நிலைமை. இந்த கார்த்திகேயனிடம் சொல்லனும்" என்று அமெரிக்காவிலிருந்த பெண்மணி குறிப்பிட்டிருக்கிறார். இதற்காகத்தான் எங்கள் முகவரியையும் கேட்டிருக்கிறார். எங்கள் ஐ.ஜி. ஸ்ரீகுமாரும், இன்னொரு அதிகாரி ரகோத்தமனும் அப்போது அமெரிக்காவில் இருந்தார்கள். உடனே இந்த கடிதங்களை அவருக்கு அனுப்பி விசாரித்துவிடலாம் என்று பேச்சு எழுந்தது.

அமெரிக்காவில் இருந்து திரும்பி வந்த ரகோத்தமனிடம் இது பற்றி நான் கேட்டேன். அதற்கு அவர், எனக்கு இந்த கடிதம் பற்றி ஒன்றுமே தெரியாது என்றார்.

"பிடிபட்ட கடிதங்கள் அடங்கிய கோப்பு, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த பிறகுதான் என்னிடம் திரும்பி வந்தது. ஆனால் அந்தக் கோப்பில், அமெரிக்காவில் இருந்து அந்தப் பெண்மணி எழுதியதாக சொல்லப்படும் முக்கியமான கடிதம் இல்லை. லலித் சந்திரசேகர், டேனியல் பீட்டர்

மனைவி, மரகதம் சந்திரசேகர் ஆகியோர் விவகாரம் முறையாக விசாரிக்கப்படவில்லை." **(03.09.97.** தமிழன் எக்ஸ்பிரஸ்)

இது மேலோட்டமாக சொன்னது. ஒரு உயர் அதிகாரியை அதற்கு மேல் விமர்சனம் செய்ய முடியாது என்று அந்தக் காலகட்டத்தில் நினைத்திருக்கலாம். ஆனால் இதே மோகன்ராஜ் என்ற அதிகாரி சமீபத்தில் ஒரு இணையதளம் ஒன்றுக்கு நேர்காணல் கொடுத்துள்ளார். எடுத்த எடுப்பிலேயே கார்த்திகேயன் ஒரு சி.பி.ஐ. அதிகாரியே அல்ல என்று கடுமையாக தாக்கி, கார்த்திகேயனின் விசாரணை போக்கு ஒவ்வொன்றையும் ஆதாரத்தோடு கூறி பேட்டியளித்துள்ளார்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் நான் ஒரு புதுக்கவிதை படித்தேன். 'நியாயத்தின் சமாதிகளை நீங்கள் கண்டதுண்டா? எங்கள் ஊரில் அதற்குப் பெயர் நீதிமன்றங்கள்' என்று. எழுதியவர் யாரோ? எனக்குத் தெரியவில்லை. இந்த நேரத்தில் அந்தக் கவிதை நினைவுக்கு வருகிறது. ஏனென்று புரியவில்லை.

# இறுதியாக ஒன்று!

*தமிழால் இணைவோம்! தமிழராய் எழுவோம்*



உலக வரலாற்றில் எந்த நாட்டிலும் நடக்காத ஓர் இனப்படுகொலை முள்ளிவாய்க்காலில் நடந்தேறிவிட்டது. இந்தப் பேரழிவு என்பது எதிர்காலத்தில் தொடர்கதையாக வளராமல் முள்ளிவாய்க்கால் சம்பவமே முற்றுப்புள்ளியாக அமைய வேண்டும்.

பணத்திற்காகவும் பதவிக்காகவும் ஆசைப்படாமல் மண்ணையும் மானத்தையும் காப்பதற்காக உயிரையும் தயங்காமல் தருபவந்தான் ஈழத் தமிழன் என்று வரலாற்றில் பதிய வைத்துவிட்டான். ஆனால், பணத்திற்காகவும் பதவிக்காகவும் எவன் காலிலும் அல்லது எவள் காலிலும் விழத் தயங்காதவன் ஈனத்தமிழன் நாம் என்று நம்மைப் பார்த்து உலகம் சிரிக்கிறது. நாம் என்னச் செய்யப் போகிறோம்?

நம்முடைய அரசியல் சுயநல சபலத்தினால், மானத்தோடு வாழ்ந்த நம் தமிழ்ச் சொந்தங்களை இழந்துவிட்டு நிற்கிறோம். இந்த மாபெரும் இழப்பை நியாயப்படுத்துவதற்காக நம் இனப்பகைவர்கள் பயன் படுத்திய சதிவலைதான் ராஜீவ்காந்தி படு கொலை. இந்த சதியை தெளிவுபடுத்தாத வரையில் இங்கே தமிழினம் ஒன்றுபடவும் முடியாது. வளம்பெறவும் முடியாது என்பதே என்னுடைய இந்த தீவிர முயற்சி.

இந்தக் கட்டத்திலாவது நாம் சரியாக புரிந்துகொண்டு தமிழ் இனத்தின் மானம் காக்கும் போராட்டத்தில் ஒன்றுபட்டு நிற்கவேண்டும்.

இளைஞர்களும் முதியவர்களும் சுயநல அரசியல் நல தந்திரங்களுக்கு மயங்காமல் ஒன்றுபட்டு போராடும் முடிவுக்கு வந்தால், மறைந்த மாவீரன் முத்துக்குமார் உள்ளிட்ட 21 ஆன்மாக்கள் நம்மை வாழ்த்தும்.

இல்லையேல் வரலாறு நம்மை பழிக்கும். என்ன செய்யப்போகிறோம்?

நம் இனத்தின் மீது சுமத்தப்பட்ட ஒரு பழியின் சதிவலையை இங்கே, இந்த புத்தகத்தின் வாயிலாக அம்பலப்படுத்தியிருக்கிறேன். படியுங்கள். நண்பர்களோடு விவாதியுங்கள். காரணம் தெரியும். அந்த காரணத்தின் மீது கேள்வியை வீசி நியாயத்தைக் கேளுங்கள். பழியைத் துடைப்பதற்கான காரண காரியங்களைத் தேடுங்கள். மக்களிடம் எடுத்துச் செல்லுங்கள். தலைவர்களை நம்பி போராட்டத்தை தேர்ந்தெடுப்பதற்கு பதிலாக, தமிழக இளைஞர்களே, இந்தப் போராட்டத்தை கையிலெடுங்கள். களமிறங்குங்கள். தலைவர்கள் பின்தொடரட்டும். நமது குரல் நியாயத்தின் குரலாக எதிரொலிக்கட்டும். அது ஈழ மண்ணில் எஞ்சியிருப்பவர்களை காக்கட்டும். மிஞ்சியிருக்கும் அவர்களின் துயர வாழ்வின் அவலங்களை அறுக்கட்டும். சுதந்திரமான வாழ்க்கைக்கு கொண்டு வரட்டும்.

இதுவே என் வேண்டுகோள்.

என் ஆசை!

# ஆசிரியர் அறிமுகம்

## திருச்சி வேலுசாமி



**1.10.1949**-ம் வருடம் திருச்சிக்கு மிக அருகில் உள்ள நச்சலூர் எனும் அழகிய கிராமத்தில் என்.பி. எராச்சி சின்னப்பொண்ணு தம்பதியினருக்குத் தலைமகனாய் பிறந்த திருச்சி வேலுசாமி, பெருந்தலைவர் காமராசரால் ஈர்க்கப்பட்டு மாணவப் பருவத்திலேயே அரசியலில் நுழைந்தவர். அரசியல் பொதுக்கூட்டங்கள், பட்டிமன்றங்கள் வாயிலாக தமிழகம் முழுவதும் அறிந்த பேச்சாளர். உலகம் முழுவதும் வருகின்ற தமிழ்த் தொலைக்காட்சிகளில் இவருடைய பேச்சும், நேர்காணலும் வந்துகொண்டிருக்கின்றன. ஆரம்பக் கல்வியை சொந்த கிராமத்திலும் உயர்நிலைப்பள்ளி, கல்லூரிப் படிப்புகளை திருச்சியிலும் படித்தவர். புஷ்பம் என்கிற மனைவியும் சங்கீதாவிஜய் என்கிற மகளும், ரஞ்சித்பெனிதா என்கிற மகனும் உண்டு. செந்தூரி, இனியா என்கிற பேத்திகளும், தர்சன் எனும் பேரனும் இவர் குடும்பத்தின் புதிய வரவுகள்.